அ. சீவில்க்கோர்ட்டு கூடாத தினத்தில் அப்பீல் கெடு நிரமித்தால் அதற்கடுத்த மறுகோர்ட்டிலை அப்பீலைத் தாக்கல்செய்யவேண்டும். (ச-டு-க அசுக ஜூன்-நவம்பர் ரூo ௨.)

ரூ. அப்பீல் கெடு நிர்மிக்கிறதற்கு முன் புநர்விமரிசைக்காக மறுக்கொடுக்கப்பட்டால் அந்த மறுவுக்கு உத்தரவாகிறவரையில் செல்லுகிற காலத்தை அப்பீல் கெடுவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். (ச-டு-க அசுo ஜூன்-செப்டம்பர் ரூ ௨.)

க0. அப்பீல் தயார்செய்வதற்காக அப்பீல் கெடுவுக்குமேல் அநிகமாய் முந்திக் கெடுக்கொடுக்கக்கூடாது. அப்பீல் கெடுநிரமித்தபிற்பாடு அப்பீல் மிமோராண்டம் கொடுக்கிறவன் தாமசத்துக்கு முகாந்தரங்கண்டு முத்திரைக்காகிதத்தில் மறுவுங் கொடுக்கவேண்டும். (ச-டு-க அசுo ஜூன்-ஏப்பிரல்மீ ௨ ௨.)

கக. தாழ்ந்த கோர்ட்டுத் தீர்ப்பு அப்பீலாகத் தகுந்ததா அல்லவா வென்பதை நிச்சயிப்பதற்கு வியாச்சியச்செலவை நீக்கி வியாச்சியந்தொகையைமட்டுங் கணக்குப்பார்க்கவேண்டும். (ச-டு-க அசுக ஜூன்-நவம்பர் ரூ ரூ-க அசுரூம் ஜூன்-ஜூலைமீ கரூ ௨.)

கஉ. சீவில்க்கோர்ட்டு மூடியிருக்கும்போது அப்பீல்கெடு நிரமித்துப்போனால் கோர்ட்டு எந்தத்தினத்தில் திறக்கப்படுகிறதோ அந்தத்தினத்தில் அப்பீல் மிமோராண்டத்தைத் தாக்கல் செய்யவேண்டும். (ச-டு-க அசுகம் ஜூன்-நவம்பர் ரூo ௨.)

கஙூ. கஅருகூஙுவ அ-வது ஆக்ட்டு நடநசூ-வது பிரிவுப்படி பிழை திருத்தத்துக்காக வாப்சுசெய்யப்படுகிற அப்பீல் மிமோராண்டத்தைப் பிழைதிருத்தமானவுடனே மறுபடியுங் கோர்ட்டார் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக வேறே புதிதான முத்திரைக்காகிதம் வேண்டியதில்லை. (ச-பு-கஅசூ0ஙுவ-அக்டோபர் மீ கஉ.)

கச. ஷை அ-வது ஆக்ட்டு நடநசூ-வது பிரிவுப்படி யாதொரு அப்பீல் மிமோராண்டந் தள்ளுபடியானல் அது உபயோகமற்றதாய்ப் போய்விடும். ஆனல் அப்பீல் கெடுவுக்குள்ளாக வேறே முத்திரைக் காகிதத்தின்மேல் கட்சிக்காரன் புதிதாய் மிமோராண்டங் கொடுக்கலாம். (ச-பு-கஅசூ0ஙுவ-அக்டோபர் மீ கஉ.)

கஞ. ஸாமான்யமாய் எல்லா அப்பீல் வாதிகளிடத்திலும் அப்பீலில் நேரிடுஞ் செலவுக்காக ஜாமீன் கேட்கக்கூடாது. ஆனல் ஷை அ-வது ஆக்ட்டு நடசஉ-வது பிரிவுப்படி யாதொரு அப்பீல் வாதியிடத்தில் ஜாமீன் வாங்கவேண்டியது அவசியமாகத்தோற்றினல் கோர்ட்டார் கெடுநிச்சயித்து அந்தக்கெடுவுக்குள் அப்பீல்வாதி ஜாமீன் கொடுக்கத் தப்பிப்போனல் அவனுடைய அப்பீலைத் தள்ளிவிடவேண்டும். (ச-பு-கஅசூ0ஙுவ-ஏப்பிரல்மீ உகஉ.)

கசூ. ஷை அ-வது ஆக்ட்டு நடசஅ-வது பிரிவுப்படி ஆன்சரும் கஉஉ-வது பிரிவுப்படி விபூரபத்திரிகையும் அப்பீல் பிரதிவாதியிடத்தில் வாங்கக்கூடாது. (ச-பு-கஅசூ0ஙுவ-மார்ச்சுமீ ககூஉ.)

கள. அப்பீல் பிரதிவாதிகள் அவர்களுடைய ஆட்சேபனைகளை விசாரணைக்காலத்தில் வாய்மொழியாய்த் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டும். அந்த ஆட்சேபனைகளை நியாயாதிபதி எழுதிக்கொண்டு அப்பீலில் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களுடனே அந்த ஆட்சேபனைகளுஞ் சித்தாந்தத்தில் குறிக்கப்படவேண்டும். (ஷை.)

கஅ. கஅருகூஙுவ அ-வது ஆக்ட்டு உபயோகத்துக்கு வருகிறதற்கு முன் கொடுக்கப்பட்டபிரியாது அந்த ஆக்ட்டு உபயோகத்துக்கு வந்த தேதிக்குப் பிற்பாடு சாராம்சவிசாரணையில்லாமல் தள்ளப்பட்டால் அதைப்பற்றி ஷை ஆக்ட்டு நடஅள-வது பிரிவுப்படிக்கும் பழையசட்ட விதிகளின்படிக்கும் வாதிசூசகம அப்பீல்செய்து கொள்ளலாம். (ச-பு-கஅசூகஙுவ-மார்ச்சுமீ ககூஉ.)

ககூ. ஜீவநாம்சங்கொடுக்கும்படி தாலூகாமுன்சீப்செய்த தீர்ப்புக்காக ரூ-உ0-க்குமேல் அதிகத்தொகை நாளாவர்த்தியில் வசூலாக

வேண்டியிருக்குமானதால் அந்தத் தீர்ப்பு அப்பீலாகத் தகுந்தது தான். (ச-பு-கஅசo(வ)ல சூன்மீ கஉஉ.)

உo. நிலத்தைத்தவிர மற்ற ஸ்தாவர ஸ்திதிகளைப்பற்றின ரூ-உo-க்கு மேற்படாத வியாச்சியங்களில் தாலூகா முன்சீப்களுடைய தீர்ப்புகள் அப்பீலுக்கு யோக்கியமானவைகள் அல்ல. புளியமரத்தில் பாகங்கிடைக்கவேண்டுமென்று செய்யப்படுகிறவியாச்சியம் ரூ-உo-க்கு மேற்படாமலிருந்தால் அந்த விஷயத்திலும் தாலூகா முன்சீபினுடைய தீர்ப்பின்மேல் அப்பீல் இல்லை. (ச-பு-கஅசூo(வ)ல நவம் பர்மீ கஉஉ.)

உக. மறுவிசாரணையில் செய்யப்பட்ட தீர்ப்புக்குச் சம்மதிக்காதவன் அதன்மேல் அப்பீல்செய்து கொள்ளலாம். (ச-பு-கஅசச(வ) டிசம்பர்மீ கஉ.)

உஉ. அப்பீலில் தீர்ப்பு செய்யப்படுகிறதற்குமுன் கட்சிக்காரர்கள் சமாதானமாய்ப்போனல் எந்தக்கோர்ட்டில் அப்பீல் வியாச்சியமிருக்கிறதோ அந்தக் கோர்ட்டில் சமாதான ஏற்பாட்டின் பத்திரிகையை அவர்கள் தாக்கல்செய்யவேண்டும். (ச-பு-கஅசூக(வ)ல மேமீ கஉ.)

உங. தீர்ப்பின் எந்தப்பாகத்தைப்பற்றியாவது அல்லது தீர்ப்பில் விட்டுவிட்ட சங்கதிகளைப்பற்றியாவது கீழான கோர்ட்டானை முகாந்தரங்கேட்டு அவர்கள் சொல்லுகிற முகாந்தரங்களையும் அப்பீல்க் கோர்ட்டார்யோசித்து அப்பீல் தீர்ப்புசெய்யலாம். (ச-பு-கஅசூo(வ)ல-அக்டோபர்மீ கஉ.)

உச. அசல் தீர்ப்பைப்பற்றி அப்பீல் பிரதிவாதி ஆட்சேபிக்காவிட்டால் அப்பீல் வாதிக்குப் பிரதிகூலமாய் அசல் தீர்ப்பை அப்பீல்க்கோர்ட்டார் திருத்தக்கூடாது. (கஅநு அ(வ)ல-ப-கஅ.)

உ(ரு). அப்பீல்வாதி அசலில் எதிர்வழக்காடவும் எதிர்வழக்காடத் தப்பிப்போனதற்குத் தகுந்தகாரணஞ்சொல்லவுந் தப்பிப்போனன் என்கிற ஆதாரங்களைக்கொண்டு அவனுடைய அப்பீலைத் தள்ளக் கூடாது. (கஅநுஅ்(வ)ல-ப-ஙஉ.)

உசூ. பிரதிவாதிகளில் ஒருவன்மட்டும் அப்பீல்செய்து வாதியும் மற்றப்பிரதிவாதிகளும் அப்பீல்செய்யாமலிருக்கும்போது அப்பீலில் கட்சிக்காரனுயிராத பிரதிவாதிக்குப் பிரதிகூலமாய் அசல்தீர்ப்பை மாற்றக்கூடாது. (கஅநுஅ(வ)ல-ப-கூக.)

உள. கலெக்ட்டருந் தகுந்தவயது இல்லாத பிள்ளையினுடைய காரியங்களை மேல்விசாரணைசெய்கிறவனும் மோசஞ்செய்திருப்பதாக அவர்கள்மேல் நேராய் குற்றஞ்சாட்டித் தகுந்தவயதில்லாத பிள்ளையால் கிரமமாய் நியமிக்கப்பட்ட காரியஸ்தன் பிரியாதுகொடுத்தால்மட்டும் குழந்தைகளின் ஸம்ரக்ஷணைக் கோர்ட்டாருடைய நீர்மானத்தின்மேல் சதர்க்கோர்ட்டார் அப்பீல் அங்கீகரிக்கலாம். அப்படி இல்லாதவனையில் அப்பீல் அங்கீகரிக்கக்கூடாது. (கஅருகூஹ நம்-அ-ப-கஅ0.)

உஅ. அப்பீல்செய்யாத கட்சிக்காரனுக்கு அநுகூலமாக வியாச்சியச்செலவுகளின் விஷயத்தில் அசல் தீர்ப்பை மாற்றக்கூடாது. (கஅருகூஹ-நம்-கஙக-ப-உசூஅ.)

உக. வாதி அப்பீல்செய்யாமலும் அசல் தீர்ப்பின் தொகையை ஆட்சேபிக்காமலும் இருக்கப் பிரதிவாதிசெய்த அப்பீலில் வாதிக்குப்பிரதிவாதி அசல் தீர்ப்பிற்கண்ட தொகைக்குமேல் அதிகத்தொகை கொடுக்கும்படி அப்பீல் கோர்ட்டார் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅருகூஹ-நம்-ககக-ப-உஉஎ.)

ஙo. ஒருவன் அப்பீல்செய்யாமல் இருக்கவேண்டியதற்காக அவனுக்குச் சிலதொகைகொடுப்பதாக அவனுடைய எதிரி ஒப்புக்கொண்டிருந்தால் அந்த ஏற்பாடு கிரமமானதுதான். (கஅசளஹ-நம்பர்-உஅ.)

ஙக. அசல்க்கோர்ட்டில் பேசப்படாமல் அப்பீலில்மட்டுஞ் சொல்லப்படுகிற ஆட்சேபனைகளை அப்பீல்க்கோர்ட்டார் கவனிக்கக்கூடாது. (கஅசளஹ-நம்-ரு.)

ஙஉ. எந்தவிஷயங்களைப்பற்றி அப்பீல் செய்யப்படவில்லையோ அந்தவிஷயங்கள் சம்பந்தப்பட்டவனையில் அந்தத்தீர்ப்பை அப்பீல்க் கோர்ட்டார் வேறுபடுத்தக்கூடாது. (கஅருருஹ-நம்-சூள.)

ஙஙூ. கிரமமாய் ஒன்றுக்கொன்று எதிரிடையாயிராத, உ-அப்பீல்களில் வெவ்வேறே தீர்ப்புகள் செய்யவேண்டுமேதவிர ஒரே தீர்ப்பாகச்செய்யக்கூடாது. (கஅருகஹ நம்-கக-நம்-சசூ.)

ஙச. ருஜுப்படுத்தவேண்டிய விஷயம் இன்னதென்று அசல்க்கோர்ட்டார் விவரமாய்த் தெரிவிக்காவிட்டபோதிலும் அந்தக் கோர்ட்டாரால் குறிக்கப்பட்ட விவாதநிச்சயங்களைக்கொண்டே ஒரு கட்சிக்காரன் ஒரு விஷயத்துக்கு ருஜுக்கொடுக்கக்கூடுமானவனையிரு

ந்து அந்தப்படி அவன் ருஜு-க்கொடுக்கத்தப்பிப்போயிருந்தால் அந்தவிஷயத்தை ருஜு-ப்படுத்தும்படி தனக்குக் கீழ்க்கோர்ட்டார் வியக்தமாய் உத்தரவுகொடுக்கவில்லையென்று அவன் அப்பீலில் கட்சி பேசக்கூடாது. (கஅருஐ0ஹல-நம்-உஅ.)

கூரு. அப்பீல் வாதி கீழ்க்கோர்ட்டில் எதிர்வழக்காடாமல் சும்மா இருந்துவிட்டதற்குத்தகுந்த மூகாந்தரஞ்சொல்லத்தப்பிப்போனல் அவனுடைய வியவகாரசங்கதிகளைப்பற்றி அப்பீலில் ருஜு-வை வற்றுக்கொள்ளக்கூடாது. (கஅருகஹல-நம்-கச.)

கூசூ. அசல் தீர்ப்பின்மேல் அப்பீல்செய்வதற்கு ஆதாரமாக அசலில் பேசப்படாத நூதன கட்சியை அப்பீல் வாதிபேசக்கூடாது. (கஅருகஹல-நம்-அஉ.)

கூள. கஅஉஉ-ஹல ரு-வது சட்டப்பிரகாரம் ரிவினியூ அதிகாரிகள் செய்த தீர்மானங்களின்மேல் அப்பீலாகச்செய்யப்பட்ட வியாச்சியங்களில் சபார்டினேட் கோர்ட்டார்செய்த தீர்ப்புகளின்மேல் சீவில்க்கோர்ட்டில் நேரம அப்பீல் செய்யப்படவேண்டும். (கஅருகூஹல நம்-அஅ-கூக.)

கூஅ. ரூ-உ00-க்கு மேற்பட்ட வியாச்சியங்களில் "கோர்ட்டு ஆஃப்ரிக்குவெஸ்ட்" என்கிற நியாயஸ்தலத்தாரால் செய்யப்பட்ட தீர்ப்புகளின்மேல் டிரிக்கேடியர் என்னும் அதிகாரி அப்பீல் ஏற்றுக்கொண்டு மறுவிசாரணைக்கனுப்புவது-கஅசகஹ) கக-வது ஆக்ட்டு கள-வது பிரிவுக்கு விரோதமாயிருக்கின்றது. மேற்கண்ட விஷயங்களில் சதர்க்கோர்ட்டார்மாத்திரம் அப்பீல் ஏற்றுக்கொள்ளலாம். (கஅருகூஹல-நம்-அக.)

கூகூ. சாராம்ச விசாரணையில்லாமல் அசல்க்கோர்ட்டாரால் தள்ளப்பட்ட வியாச்சியத்தில் சாராம்சத்தைப்பற்றி விசாரிக்கவேண்டியது நேரமென்று அப்பீல்க்கோர்ட்டாருக்குத் தோற்றினால் அந்த வியாச்சியத்தை அசல்க்கோர்ட்டுக்கு மறுவிசாரணைக்காக அனுப்பவேண்டுமே அல்லாமல் அப்பீல்க்கோர்ட்டாரே விசாரணைசெய்யக்கூடாது. (கஅருகூஹல-நம்-கூஅ.)

சஅ. நேரமான அசல் வியாச்சியத்தில் செய்யப்பட்ட தீர்ப்பின்மேல்மட்டும் நேர அப்பீல்வாங்கலாமே அல்லாமல் ரிவினியூ அதிகாரத்தைக்கொண்டு கலெக்ட்டர்செய்த உத்தரவின்மேல் அப்பீல் வியாச்சியம் அங்கீகரிக்கக்கூடாது. (கஅருருஹல-நம்-கூகூ.)

சக. அசல்க்கோர்ட்டில் எதிர்வழக்காடத் தப்பிப்போன பிரதிவாதி அப்பீல்செய்கிற பட்சத்தில் வியாச்சியத்தின் சாராம்சங்களையெல்லாம் அப்பீல்க்கோர்ட்டாரே யோசித்துக் கிரமப்படி தீர்மானஞ்செய்யவேண்டுமே அல்லாமல் அவன் எதிர்வழக்காடத் தப்பிப்போன நிமித்தியத்தைக்கொண்டு சாராம்சத்தில் பிரவேசிக்காமல் அவனுடைய அப்பீலைத் தள்ளக்கூடாது. (கஅருஙஞ-நம்-கஉசு-கஙஉ.)

சஉ. கீழ்க்கோர்ட்டில் பிரதிவாதி எதிர்வழக்காடத் தப்பிப்போயிருந்தாலும் அல்லது அவனுடைய ஆன்சனை அங்கீகரிக்கக்கூடாதென்று கீழ்க்கோர்ட்டார்செய்த உத்தரவின்மேல் அவன் உடனே அப்பீல்செய்யாமல் இருந்துவிட்டாலும் அந்தக்குறைவுகளுக்குப் பிரதிவாதி செய்த கிரம அப்பீலில் பரிஹாரங்கிடைக்கமாட்டாது. அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிசெய்யவேண்டியது அப்பீல்க்கோர்ட்டாருடையகடமை. (கஅருஙஞ-நம்-அசு.)

சஙு. அசல் வியாச்சியத்தின் கட்சிக்காரர்களையெல்லாம் அப்பீலில் சேர்க்கப்படாமற்போனால் கிரமப்பிசகாமல் அந்த அப்பீலைத்தள்ளிவிடவேண்டும். அல்லது அப்பீலில் சேர்க்கப்பட்ட கட்சிக்காரர்கள் சம்பந்தப்பட்டவனையில்மட்டும் அப்பீல்க்கோர்ட்டார் யோசித்துத் தீர்மானஞ்செய்யவேண்டும். (கஅருஎஞ-நம்-கசுஙு.)

சசு. வியாச்சியசங்கதிகளைப்பற்றிக் கோர்ட்டார் யோசிக்கும்போது ஒருவனுடைய கட்சியைப்பற்றி அவர்களுக்குத் தோற்றப்பட்ட ஆட்சேபனைகளையெல்லாம் அந்தக்கட்சிக்காரனுக்குத் தெரியப்படுத்தாமலே சித்தாந்தத்தில் கோர்ட்டார் எடுத்துப்பேசலாம். அந்த ஆட்சேபனைகளை முன்னடிக் கட்சிக்காரனுக்குத் தெரியப்படுத்தி அவன்சொல்லுந்த சமாதானங்களைக் கோர்ட்டார் கேட்காமற்போனதைக்கொண்டு அசல்த்தீர்ப்பு தோஷகிரஹணத்துக்குப் பாத்தியப்படமாட்டாது. (கஅருசஞ-நம்-சுகு.)

சஙு. தான் ஜமீன்தாருடைய பட்டஸ்திரீ புத்திரனென்கிற ஆதாரத்தின்மேல் ஜமீனைப்பற்றி அசல்க்கோர்ட்டில் வழக்குத்தொடர்ந்தவாதி அந்தவிஷயம் ருஜுவாகாமற்போனதின்பு தான் ஜமீன்தாருடைய ஜேஷ்ட புத்திரனென்கிற கட்சியை அவன் அப்பீலில்பேசக்கூடாது. (கஅருகூஞ-நம்-உகச-கஅசுபஞ-ப-கஙுசு.)

௮௯. அசல்க்கோர்ட்டாருடைய அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் தான் வாசஞ்செய்யவில்லையென்றுமாத்திரம் அந்தக்கோர்ட்டில் கட்சிபேசின பிரதிவாதி ஷெ கோர்ட்டாருடைய அதிகாரஸ்தானத்துக்குள்ளாகத் தனக்கு பூஸ்திதிகிடையாதென்கிற கட்சியையும் கூட்சேர்த்து அவன் அப்பீலில் பேசக்கூடாது. (கஅசு0வுஐ-நம்பர்-உ-ப-கங௯.)

சுள. தப்பிப்போன கெடுவின் தொகையும் தப்பிப்போகாத பிந்தினகெடுக்களின் தொகையும் கிடைக்கவேண்டுமென்று வாதிசெய்த வழக்கில் தப்பிப்போகாதகெடுக்களின் தொகையைப்பற்றி வாதி தொடர்ந்தது அக்கிரமமென்று அசல்க்கோர்ட்டில் பிரதிவாதி பேசத்தப்பிப்போய்விட்டால் அந்த ஊட்சேபனையை அவன் அப்பீலில் பேசக்கூடாது. (கஅநகூவுஐ-நம்-உகஅ-கஅசு0வுஐ-ப-கநுள.)

சுஅ. ஸ்வீகார பாத்தியத்தின்பேரில் இறந்துபோனவனுடைய சொத்தைப்பற்றி அசல்க்கோர்ட்டில் வழக்கிட்ட வாதி அவனுக்கும் இறந்துபோனவனுக்கும் உண்டாயிருந்திர ஸ்வபாவ பாந்தவியத்தை ஆதாரமாய்க்காட்டி அப்பீலில் பேசக்கூடாது. (கஅசு0வுஐ-நம்-அச-ப-கஎக.)

சுசு. கோமுட்டிகளுக்குத் தான் குருவென்றும் அந்த உத்தியோகத்தினுடைய வருமானங்களுக்குத் தான் பாத்தியஸ்தனென்றும் அசல்க்கோர்ட்டில் கட்சிபேசின பிரதிவாதி ஷெ குருத்தொழில் வாதிக்குச் சொந்தமானதென்று ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு அந்தக் குருத்தொழிலுக்காகத் தான் பெற்றுக்கொண்ட வருமானங்கள் ஜனங்கள் இஷ்டப்படி தனக்குக் கொடுத்ததென்றும் அந்த வருமானங்களைத் தான் வாதிக்கு உத்தரிக்கவேண்டியதில்லையென்றும் அப்பீலில் வாதிக்கக்கூடாது. (கஅசு0வுஐ-நம்-சு0-ப-உசுங.)

நுப. வாதியின் வியாச்சிய விஷயம் வேறொரு கோர்ட்டாரால் முன்னமே தீர்மானிக்கப்பட்ட விஷயமென்று பிரதிவாதிசொல்லி முந்தின தீர்ப்புச்செய்த கோர்ட்டாருடைய அதிகாரத்தைப்பற்றி வாதிக்கு ஆட்சேபம் உண்டானால் அவன் அசல்க்கோர்ட்டில் அந்த ஆட்சேபனையைச் சொல்லியிருக்கவேண்டும். அசல்க்கோர்ட்டில் சொல்லப்படாத ஆட்சேபனையை அப்பீலில் ஏற்றுக்கொள்ளக்கூடாது. (கஅஉஙவுஐ-நம்-கஉ.)

நுக. பிரதிவாதி அசல்க்கோர்ட்டில் கொடுத்த விபரப்பத்திரிகை

களிற் சொல்லப்படாத நூதனமான கட்சியை அவன் அப்பீலில் பேசக்கூடாது. (கஅசு0 (வரு)-நம்-சு0-ப-உசாந.)

நுஉ. வாதிக்குப் பலபிரதிவாதிகள் தொகைகொடுக்கும்படி அசல்க்கோர்ட்டாரால் தீர்ப்புச்செய்யப்பட்டு அதின்மேல் சில பிரதிவாதிகள்மட்டும் அப்பீல்செய்தால் அப்பீல்செய்யாத பிரதிவாதிகளை தீர்ப்பின் உத்தரவாதத்திலிருந்து அப்பீல்க்கோர்ட்டார் நீக்கக் கூடாது. (கஅசு0 (வரு)-நம்-கூ02-கஅசுக (வரு)-ப-உகூ.)

நுகூ. வாதிக்கு முதற் பிரதிவாதிமட்டும் தொகை கொடுக்கும்படி அசல்க்கோர்ட்டாரால் தீர்ப்பு செய்யப்பட்டு அதைப்பற்றி முதற்பிரதிவாதி அப்பீல்செய்யாமல் வாதிமட்டும் அப்பீல் செய்திருந்தால் வாதிவழக்கை அடியோடே அப்பீல்க்கோர்ட்டார் தள்ளக்கூடாது. (கஅசு0 (வரு)-நம்-கூசூரு-கஅசுக (வரு)-ப-சூக.)

நுசூ. வியாச்சியத்தின் முக்கியசாராம்சத்தைப்பற்றி அசல்க்கோர்ட்டார் விசாரிக்கத் தப்பிப்போயிருந்தால் அந்த வியாச்சியத்தை அப்பீல்க்கோர்ட்டார் மறு விசாரணைக்கனுப்பவேண்டுமே அல்லாமல் அந்தவிஷயத்தைப்பற்றி அப்பீல்க்கோர்ட்டாரே சாட்சியம் விளங்கக்கூடாது. (கஅருஉ (வரு)-நம்-உஉ.)

நுருு. வாய்க்காலைப்பற்றிச் செய்யப்படும் வழக்கில் நிலமுழு சம்பந்தப்பட்டிருப்பதால் அது ரூ-உ0-க்குட்பட்டிருந்தபோதிலும் அந்தவிஷயத்தில் தாலூகா முன்சீப் செய்த தீர்ப்பின்மேல் அப்பீல் உண்டு. (கஅருள (வரு)-நம்-கஊரு.)

நுசூ. பிரன்சுப்பால் சதரமீனுடைய தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்யப்பட்டு அந்தவியாச்சியம்மறுவிசாரணைக்கனுப்பப்பட்டபிற்பாடு பிரன்சுப்பால் சதரமீன்கோர்ட்டு எடுபட்டு அந்தக்கோர்ட்டு சிவில் கோர்ட்டுடன் ஐக்கியப்பட்டுப்போனால் அந்த மறுவிசாரணையில் சிவில்க்கோர்ட்டாரால் செய்யப்பட்ட தீர்ப்பு அசல் தீர்ப்பாகவும் அதின்மேல் சதர்க்கோர்ட்டுக்குச் செய்யப்பட்ட அப்பீல் நிரம அப்பீலாகவும் யோசிக்கப்படுமேதவிர அதை விசேஷ அப்பீலாக எண்ணக்கூடாது. (கஅசுக (வரு)-நம்-உக-ப-கசாசு.)

நுள. விவாதஸ்தலத்தைப் பரிசோதிக்கவேண்டியிருந்தால் அதற்காக அப்பீல்க்கோர்ட்டார் ஒரு அமீனாவை நியமகம் செய்யவேண்டியதேதவிர அதற்காக அந்தவியாச்சியத்தைக் கீழ்க்கோர்ட்டின் மறுவிசாரணைக்காக அனுப்பக்கூடாது. (ஷை)

நிஅ. ஒரு வியாச்சியத்துக்கு மூலாதாரமான தஸ்தாவேஜுகள் அசலில் தாக்கலாகாமல் அப்பீலில் தாக்கலானல் அந்த வியாச்சியத்தை அப்பீல்க்கோர்ட்டார் அசல்க்கோர்ட்டாருக்கு மறுவிசாரணைக்கு அனுப்பவேண்டும். (கஅருகூஙல-நம்-சுஉஉ.)

அபாதம்-க.....
உத்தரவின்மேல் அப்பீல் முழுமையும்.....
கலெக்ட்டர்-சு-ள-அ-கஉ-கள....
கவரன்மென்று வக்கீல்-சு.....
காலநிர்ணயம்-உக.....
சாட்சியம்-எகூ.....
சித்தாந்தமுந்தீர்ப்பும்-சு-அ-உரு உசு-உஅ-உகூ-ங்ச-ஙசு.....
செலவு-உரு..... .....
பஞ்சாயத்து-ரு-ள-அ.....
டிகர்விமரிசை-சு-அ.....
இவைகளோப்பார்க்க... .....

அவதிக்கிரயம்.

க. அவதிக்கிரய சாஸநம் எழுதிக்கொடுத்தவன் நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக வியாச்சியஞ்செய்கிற பட்சத்தில் காலாவதிக்குள் சாஸநத்தொகையைக்கொடுக்க அவன் சந்தர்ப்பமிருந்ததை அவன் நிரூபிக்கவேண்டும். (கஅருகூஙல)-நம்-ருச.)

உ. சொத்தின் யதார்த்தகிரயமானது அவதிக்கிரய சாஸநத்தொகைக்கு மிகவும் அதியாயிருந்ததால் ஷ அவதிக்கிரயத்தை ஒற்றியென்றே பாவிக்கப்பட்டது. (கஅருருஙல)-நம்-கoச.)

ஈ. அவதிக்கிரய சாஸநத்தொகைக்குமேல் நிலம் அதிகக்கிரயம் பெறுமானதென்று அந்த சாஸநத்தை எழுதிக்கொடுத்தவன் சொன்னவாதம் சாட்சிய ஹீநமாய்ப்போய்விட்டதால் அந்த அவதிக்கிரயமே ஸ்தாபிக்கப்பட்டது. (கஅருருஙல-நம்-அச-அரு-அஅ-கூச.)

ச. ஒருவன் தன்னுடைய சொத்தையும் பாலனை தன் பாகஸ்தனுடைய சொத்தையும் சேர்த்து அவதிக்கிரய சாஸநஞ்செய்துகொடுத்திருக்கிற பட்சத்தில் அந்தப்பாலனுக்குத் தகுந்தவயது வந்தது முதல் அந்த சாஸநத்தின் கெடுக்காலத்தைக்கணக்கிட்டு அந்தக் காலாவதிக்குள்ளாக அவன் பணங்கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டுமே அல்லாமல் பிற்பாடு தொடரக்கூடாது. (கஅருளஙல)-நம்-கசஉ.)

ரு. கடனுக்காகப்பிறந்த அவதிக்கிரய சாஸநத்தில் அந்தக்கடன்

கெடுவில்கொடுக்கப்படாத பட்சத்தில் சாஸநக்காரனுக்கு சொத்து சிக்கித்துப்போகிறதென்று நிபந்தனை கண்டிருந்தால் அப்படிப்பட்ட அவதிக்கிரய சாஸநஞ்செல்லாது. (கஅருகஹ-நம்-எகூ.)

கிரயம்-கூ-உஎ-உஅ-சஉ-இவ்வகளைப்பரிக்க.

அவிபக்ததகுடும்பம்.

க. அவிபக்ததகுடும்பத்தின் பாகஸ்தர்கள் ஒருவர்மேலொருவர் கோர்ட்டுக்கட்டளைகளைப் பிரயோகஞ் செய்யக்கூடாது. ஒரு அவிபக்தபாகஸ்தனுக்கு மற்றப் பாகஸ்தன்கொடுக்கவேண்டிய கடனுக்காக அந்த அவிபக்த குடும்பஸ்திதியையே ஏலம்போடக்கூடாது. (கஅருசஹ-நம்-சகூ.)

உ. அவிபக்த குடும்பஸ்தர்கள் பாகத்துக்காகமட்டும் ஒருவர்மேல் ஒருவர் வியாச்சியஞ் செய்யலாமே யல்லாமல் அவர்கள் சமுதாயஸ்தர்களாயிருக்கிறவனையில் பொதுவான யாதொரு பொருளைப் பற்றி ஒருவனை ஒருவர் தொடரக்கூடாது. எப்படியென்றால் அவிபக்தசோதரர்களில் ஒருவன் மாஜிஸ்திரேட்டார் உத்தரவுப்படி பொதுவான வீட்டைத் தான் பழுதுபார்த்ததாகவும் அந்தச்செலவில் மற்றொரு சோதரனுடைய விகிதங்கிடைக்கவேண்டுமென்றும் வியாச்சிக்கக்கூடாது. (கஅசுo ஹ-நம்-கூள-ப-ககூக.)

கூ. ஏகயோகட்சேமமாயிருக்கிற பலபிரதிவாதிகளின் மேல்வியாச்சியஞ் செய்யப்படுகிற பட்சத்தில் அவர்களில் ஒருவன்மட்டும் எதிர்வழக்காடுவதே போதும். மற்றவர்கள் எதிர்வழக்காடாமல் இருந்துவிட்டதைக்கொண்டு அவர்கள் வாதியின்வழக்கை ஒப்புக்கொண்டதாக நிர்ணயிக்கக்கூடாது. (கஅசுo ஹ-நம்-கஅ-ப-ககச.)

அங்கீகாரம்-ககூ..... .....
கடன்-ரு-எ-கங-உங-உச-உ ரு...
காலநிர்ணயம்-ஙகூ.....

கிரயம்-யஅ..... .....
சாட்சியம்-சஉ.....
பாரதீநம்-சூ-கங-கச-கள-ககூ...
பாத்தியம்-ரு.....

இவைகளைப்பார்க்க.

ஆசாரம்.

க. யாதொரு தேசாசாரமானது சட்டங்களினுல் ஆக்கியாபிக்கப்படாவிட்டபோதிலும் அது பராநுகூலமாயிருக்குமானுல் அந்த ஆசாரத்தை சாஸ்திர சமானமாகவே பாவனை செய்யவேண்டும். (கஅகசூஹ-நம்-உ.)

உ. சாஸ்திரோக்தமான விஷயங்களைப்போலவே தேசவழக்கங்களையுங் கோர்ட்டார் நிச்சயிக்கவேண்டும். (கஅ௯எஹ-நம்-எ.)

௯. ஒருகிராமத்தின் தரிசுநிலம் மலைகள் முதலியனவைகளின்பலன்களை அந்தக்கிராமத்தார் அநுபவிக்கவேண்டியது கிரமமேதவிர அந்தியகிராமத்தார் அநுபவிக்கும்படி செய்வது சாமாந்தியபுத்திக்கு ஒவ்வாததாகவும் கேவலம் அசம்பிரதாயமாகவும் இருக்கின்றது. (கஅஉ௯ஹ-நம்-கஉ.)

கடன்பத்திரம்-சச..... | சாட்சியம்-௯அ-சஅ.....

இவைகளைப்பார்க்க.

ஆலயம்.

க. தேவாலயத்தின் பூஜைமுதலான செலவுகளுக்காக ஞாபகத்துக்கு எட்டாத அநேகவருஷகாலமாய் நிலங்களின் வருமானத்தில் இருந்து யாதொரு தொகை கொடுக்கப்படுவது வழக்கமாயிருந்தால் அதை நிறுத்தாமல் எப்போதும் அந்தப்படிக்கே கொடுத்துவரவேண்டும். (கஅகளஹ-நம்-கக.)

உ. கோவிலில் தர்மகர்த்தர் முதலான உத்தியோகங்களைத் தலைமுறை தலைமுறையாய் நடப்பித்து வந்தவர்களே அந்த உத்தியோகங்களுக்குச் சர்வசுதந்தரம் உள்ளவர்கள். தேவஸ்தானங்கள் கலெக்ட்டர் விசாரணையில் இருந்தகாலத்தில் ஷே உத்தியோகஸ்தர்களுக்குப் பிரதிகூலமாய்க் கலெக்ட்டர் செய்த யாதொரு செய்கையானது அவர்களுடைய பிதுரார்ஜித பாத்தியங்களை மாற்ற மாட்டாது. கோவிலின் பிதுரார்ஜிதமான உத்தியோகங்களைப் பற்றின வியாச்சியங்களைக் கோர்ட்டார் அங்கீகரிக்கலாம். (கஅ௫0ஹ-நம்-௯௯.)

௯. சில கோவில்கள் சகலஜனங்களுக்கும் பொதுவாகவும் சில கோவில்கள் அவைகளைக் கட்டினவர்கள் முதலான சிலருக்குமட்

டுஞ் சொந்தமாகவும் இருப்பதால் சிலருக்குமட்டுஞ் சொந்தமான கோவில்களைப்பற்றி அவர்கள்மட்டும் ஏகதேசத்தில் வியாச்சியங் கொண்டுவரலாம். (கஅருகூ ஹரு-நம்-உரு.)

ச. தென்கலை வைஷ்ணவர்களுடைய கோவிலின் எல்லைக்குள் வடகலை வைஷ்ணவர்களுக்கு நிலஞ் சொந்தமாயிருந்தாலுங் கூட அந்த நிலத்தில் வடகலையார் அவர்களுடைய வேதாந்தாசாரி விக்கிரகத்தைவைத்துப் பூஜைசெய்யக்கூடாது. ஆனல் அவர்களுடைய விக்கிரகங்களில் விக்கிரகங்களை வைத்துப் பூஜைசெய்வதில் ஆட்சேபம் இல்லை. வடகலை வைஷ்ணவர்களுடைய கோவிலின் எல்லைக்குள் தென்கலையாரும் விக்கிரகங்களை வைக்கக்கூடாது. (கஅருகூஹரு நம்-ருரு-கஅருகூஹரு-நம்.)

ரு. பிதுராார்ஜிதமான மிராசு பாத்தியமுள்ள கோவிலின் குருக்கள் பிரபலமான தர்மார்க்கஞ் செய்தால்மட்டும் அவனைத் தர்மகர்த்தா அந்தவேலையிலிருந்து தள்ளலாமே அல்லாமல் அற்பக்காரணங்களுக்காகத் தள்ளக்கூடாது. நிஷ்காரணமாய்த் தள்ளப்பட்ட மிராசு பாத்தியமுள்ள குருக்கள் கோர்ட்டில் வியாச்சியமூலமாய் ஞாயம் பெற்றுக்கொள்ளலாம். (கஅருசுஹரு-நம்-அ)

சூ. கோவிலின் ஸ்தானிகர்கள் முதலான மிராசு பாத்தியமுள்ள வேலைக்காரர்களின் பிரபலமான தர்தடக்கையினிமித்தம் அவர்களை அலுவலில் இருந்து தர்மகர்த்தா நீக்கிவிடலாம். (கஅருசூஹல நம்-சுசூ.)

எ. கோவிலுக்குச் சொந்தமான பணங்கள் முதலான ஸ்திதிகளை தர்மகர்த்தா முதலானவர்கள் அபகரித்துக்கொண்டு துர்விநியோகஞ்செய்தால் அதைப்பற்றிக் கோவில் வேலைக்காரர்களும் மற்றப் பொது ஜனங்களைச்சேர்ந்தவர்களும் தகுந்த அதிகாரஸ்தர்கள் இடத்தில் தெரியப்படுத்திக்கொள்ளலாம். (டீ.)

அ. ஹிந்துக்களின் கோவிலைச்சேர்ந்த நிலமுதலான ஸ்திதிகளின் விஷயத்தில் நடக்கப்பட்ட அக்கிரமங்களைப்பற்றி விசாரிக்கிறதற்கு கஅகளஹல-எ-வது-சட்டப்படி ரிவினியூபோர்டாரே தகுந்த அதிகாரிகள். அந்தவிஷயங்களிற் பிரவேசிக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (கஅருசூஹல)-நம்-சுசூ-கநடந - கஅருளஹர)-நம்-நடள.)

கூ. கோவிலின் அர்ச்சகன் முதலான வேலைக்காரர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் உடனே அவர்கள்வசத்தில் இருக்கிற

கோவிலின் சொத்துக்களைக் கோவில் விசாரணைக்கர்த்தன் இடத்தில் கொடுத்துவிடவேண்டும். அந்தச் சொத்துக்களிற் சிலது அவர்களால் கோவிலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலுங் கூட அந்தச் சொத்துக்களையும் விசாரணைக் கர்த்தனிடத்தில் அவர்கள் கொடுத்துவிடவேண்டும். (கஅருங்கூ வரு-நம்-உஉசூ-கஅசூ0 வநு-ப-ருஉ.)

க0. கோவிலின் விசாரணைக்கர்த்தன் கோவிலின் ஜன்ம பாத்தியத்தை ஸ்தாபிக்கவேண்டியதற்காக வியாச்சியஞ் செய்யலாம். (கஅருஅ வரு-நம்-க0கூ-க0ச.)

கக. சடகோபம் சாதிக்கும்போது திருச்சின்னம் ஊதாமல் இருக்கவேண்டியதற்காக வியாச்சியம் அங்கீகரித்து அந்தப்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருஅ வரு-நம்-கஉரு-ட-உருசூ.)

கஉ. கோவிலின் மிராசு பாத்தியமுள்ள வேலைக்காரனை நிர்வாகஸ்தர் தள்ளுகிறது தர்மகர்த்தாவிடது. அந்த வேலைக்காரன் வியாச்சியஞ்செய்யலாம். (கஅருரு வரு-நம்-ருள.)

கங. கோவில் முதலான கட்டடங்களைக் கட்டினவரால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா இறந்துபோனால் அவனுடைய பாத்தியமும் இறந்துபோகும். ஷை கட்டடங்களைக் கட்டினவன் மரணபிராப்தியான தர்மகர்த்தாவுக்குப் பதிலாய் வேறு யாரையாவது நியமஞ்செய்யலாம். (கஅருளை வரு-நம்-ருஉ.)

கச. தர்மகர்த்தாவை நியமிக்கிற அதிகாரமானது கோவில் இருக்கிற இடத்தில் வாசஞ்செய்யப்பட்ட ஜனங்களைச்சேர்ந்ததாயிருக்கின்றது. ஷை தர்மகர்த்தா சட்டங்களையும் தர்மசாஸ்திரங்களையும் அநுசரித்துக் கோவிலைச்சேர்ந்த சகலகாரியங்களையும் அவனுடைய இஷ்டப்படி நடத்தலாம். கோவில் வேலைக்காரர்களில் வேலைபார்க்க சக்தியில்லாதவர்களையும் நல்ல நடக்கையில்லாதவர்களையும் ஷை தர்மகர்த்தா சுதாவாய்த் தள்ளிப்போடலாம். அவர்களைத் தள்ளவேண்டியதற்காக அவன் வியாச்சியஞ் செய்யவேண்டியதில்லை. போதுமான காரணம் இல்லாமல் தள்ளப்பட்ட கோவில் வேலைக்காரர்கள் கோர்ட்டில் வியாச்சியஞ் செய்து நியாயம் பெற்றுக்கொள்ளவேண்டும். (கஅசஅ வரு-நம்-நுள.)

கஞ. போர்டாரால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாவும் அவனுடைய சந்ததிகளும் நள வரு-காலங் கோவிலில் வேலைபார்த்து வந்

தனினல் அவர்களே அந்தத்தர்மகர்த்தா வேலைக்குப் பாத்தியஸ்தர்க ளென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசகூ ஹூ-நம்-உகூ.)

ககூ. கோவில் கட்டப்பட்டால் அதற்கு நிலமுதலான ஸ்திதிகள் கொடுப்பதாக ஒருவன் உடம்படிக்கை செய்து அந்தப்படி கோவி லுங் கட்டப்பட்டால் அவன் அந்த உடன்படிக்கைப்படி கோவிலு க்கு ஸ்திதிகள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறன். (கஅருஎஹூ நம்-களச.)

கள. கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை அநுபவிக்கிறவனை அப்புறப்படுத்தவேண்டியதற்காக அந்தக்கோவிலின் விசாரணைக்கர் த்தன் வியாச்சியஞ்செய்யலாம். (கஅருஅஹூ-நம்-கரு-கசூ-ப-அக.)

கஅ. போதுமான காரணம் இல்லாமல் தள்ளப்பட்ட ப்ரம்பனை பாத்தியமுள்ள கோவில் ஊழியக்காரன் விசாரணைக்கர்த்தர்கள் மேல் வியாச்சியங் கொண்டுவரலாம். (கஅருருஹூ-நம்-ருள.)

ககூ. கோவில் நிலங்களை நீண்டகாலமாய்ச் சாகுபடி செய்து அ நுபவிக்கிற பிறக்குடிகள் கோவிலுக்குக் கொடுக்கவேண்டிய ஸ்வா மிபோகத்தைச் செலுத்தத் தப்பிப்போனல் கஅ0உஹூ-உள-வது சட்டம்-உ-வது பிரிவின் படிக்கும், கஅ0உஹூ-ரு-வது சட்டப்படி க்கும் கோவிலின் விசாரணைக்கர்த்தர்கள் ரிவினியூ அதிகாரஸ்தர்கள் இடத்தில் முறையிட்டுக்கொண்டு அவர்கள் மூலமாக ஷை ஸ்வாமி போகத்தைமட்டும் வசூல் செய்யவேண்டுமேதவிர நிலத்தை ஷை புறக்குடிகளுக்கு அஸ்வாதினஞ் செய்யவேண்டுமென்று ஷைவிசார ணைக்கர்த்தர்கள் வியாச்சியஞ் செய்யக்கூடாது. (கஅசூ0ஹூ-நம்-சுசகூ-கஅசூகஹூ)-ப-கஙகூ.)

உ0. சேலத்தில் கோவிலின் மௌவாத்திய மிராசு பரம்பனைபா த்தியமாயிருப்பதால் ஒருவன் இறந்துபோனல் அந்தமிராசு அவனு டைய பாத்தியஸ்தனைச்சேரும். அந்தப்பாத்தியஸ்தன் பாலனயிருந் தால் அவன் குமாஸ்தா மூலமாக வேலைபார்க்கலாம். (கஅருஙஹூ நம்-ருக.)

உக. யாதொருவருமானமாவது திரவிய நஷ்டமாவது சம்பந்தப் படாமல் கேவலம்-மந்திரம்-ஆராதனை-ரதோத்சவம்-விக்கிரக எழுந் தருளுபடி-ஸ்ரீசைலேச தயாபாத்திரம்-வாழித்திருநாமம்-ஆளவந்தா ர்ஸ்தோத்திரம்-சாதித்தருள-முதலிய மதாசாரத்தைப்பற்றின வியா

ச்சியங்களைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (கஅசுக வரு-நம்-சுசு-ப-கரூ உ.)

உ உ. விக்கிரகங்களைக் கோவிலைவிட்டு அப்புறப்படுத்தவேண்டிய தற்காகப் பொதுஜனங்களிற் சிலபெயர்மட்டும் வியாச்சியஞ்செய்யலாம். (கஅருஅ வரு-நம்-சுசு-ப-கசுக-கஅருக வரு-நம்-ருசுசு.)

அங்கீகாரவிபரீதம்-எ.....	ஸ்தாங்கிகம்-க.....
அதிகாரவரம்பு-கக-கஉ.....	தர்மவிஷயம்-ரு.....
ஒற்றி-ஙஙு.....	பாத்தியம்-உக.....
கிராமப்பிரதட்சணம்-ஙு.....	மிராசுதாரும் புறக்குடியும்-உசு.
சித்தாந்தமும் தீர்ப்பும்-சுசு-சுக.	

இலைகளைப்பார்க்க.

ஆறு.

க. ஆற்றங்கரை ஓரத்தில் உண்டாகப்பட்ட பதினைந்திலம் அதற்கு கடுத்த நிலக்காரனுக்கே சொந்தமாகும். (கஅருசு வரு-நம்-அசு. (கஅருஅ வரு-ப-கஅஅ.)

காலநிர்ணயம்-ருஎ.

இதைப்பார்க்க.

இஜாராதார்.

க. தாங்கள் ஒரு கிராமத்து இஜாராதார்களானதால் தங்களுக்கு அந்தக் கிராமத்தின் குடிகள் கொடுக்கவேண்டிய மேல்வாரங் கிடைக்கவேண்டுமென்று வாதிகள் வியாச்சியஞ்செய்தால் அந்த விஷயத்தைப்பற்றிமட்டுங் கோர்ட்டார் விசாரணை செய்யவேண்டியதேதவிர வாதிகள் அந்தக்கிராமத்து மிராசுதார்களா என்பதையும் அவர்களுக்கு வேறேவருமானங் கிடைக்கவேண்டியதா என்பதையும் அந்தவியாச்சியத்தில் கோர்ட்டார் பரிசீலனைஞ் செய்யக்கூடாது. (கஅசுO வரு-நம்-ருசுசு-கஅசுக வரு-ப-அசு)

உ. மேல்வாரங் கிடைக்கவேண்டுமென்று குடிகள்மேல் கிராமத்தின் இஜாராதார்கள் வியாச்சியஞ்செய்தார்கள். அந்த மேல்வாரத்தைக்கொடுக்கப் பிரதிவாதிகள் ஆட்சேபிக்காதபடியால் அவர்களை வாதிகள் கோர்ட்டுக்கு இழுத்தது அநீதியென்றும் எந்த மாசூலிலி

குந்து வீடி மேல்வாரங் கிடைக்கவேண்டியதோ அந்த மாசூலக் களத்தில் அடிக்கவொட்டாமல் பிரதிவாதிகளை வாதிகள் தடுத்து அந்த மாசூல் நஷ்டமாய்ப்போய்விட்டதால் வாதிகளுக்கு மேல்வாரங்கிடைக்க நிமித்தம் இல்லையென்றும் வாதிகளுக்குப் பிரதிகூலமாய்த் தீர்மானிக்கப்பட்டது. (வீ.)

கூ. இஜாராதாருக்குள்ளாக நிலத்தை அநுபவிக்கிற குடியான வன் அதைச்சாகுபடி செய்யாமல் விட்டுவிட்டால் இஜாராதாருடைய இஷ்டாநுசாரம் அந்த நிலத்துக்கு வேறே யாருக்காவது அவன் பட்டாக்கொடுக்கலாம். (கஅசுஅ துஉ-நம்-எகக-கஅசுக வநு-ப-கஅச.)

இனம்.

க. கவர்ன்மென்றாருடைய உத்தரவு இல்லாமல் இனம் நிலத்தைப்பற்றிச் செய்யப்பட்ட வழக்கைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக் கூடாது. (கஅருஅ வரு-நம்-உஅசு-கஅருக வரு-ப-சசு-கஅருக வநு-நம்-ருஅ-ப-உருள.)

உ. கவர்ன்மென்றாருடைய உத்தரவு இல்லாமல் மானிய நிலத்தின் வருமானங்களில் பாகங்கிடைக்கவேண்டுமென்று செய்யப்படுகிறவழக்கைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (கஅருஅ வரு-நம்-உஅசு-கஅருக வரு-ப-சசு.)

ஊ. இனம் நிலத்தின் பாத்தியத்தைப்பற்றி வியாச்சியந்தொடராமல் இனம்தாருடைய உத்தரவுப்படி கண்டு முதல்செய்யப்பட்ட வருமானத்தைப்பற்றிமட்டுஞ் செய்யப்பட்டவழக்கைக் கோர்ட்டார் அங்கீகரிக்கலாம். (கஅருஅ வரு-நம்-ககஞ-கஉள-ப-உஉ-ச-உசுஅ.)

எ. ஒருவஞற்செய்யப்பட்ட உத்தியோகத்தொழிலுக்காகவாவது கர்மவிஷயமாகவாவது இங்கிலீஷ் துணாத்தனத்காராலாவது அல்லது பூர்வீக ராஜாக்களாலாவது கொடுக்கப்பட்ட இனங்களைப்பற்றின வழக்குகளை கஅஙக வநு ச-வது சட்டப்படி கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (ச-பு-கஅருரு வநு-சூலபீ கஉஉ.)

ஏ. கஅஙக வரு சு-வது சட்டப்படி உத்தியோகத்துக்காகச் சம்பளமாக ஏற்படுத்தப்பட்ட இனங்களைப்பற்றின வழக்குகளைக் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளக்கூடாது. (வீ.)

கூ. கோர்ட்டாரால் ஜப்திசெய்யப்பட்ட நிலம் தீர்வையில்லாத இனம் நிலமென்று ரிவினியூ அதிகாரிகளால் தெரியவந்தால் உடனே வேறே விசாரணையில்லாமலே அந்த நிலத்தைக்கோர்ட்டார் ஜப்தி விடுதலைசெய்யவேண்டும். (ச-பு-கஅருஈ வரு ஏப்பிரல்-மீ ஈ0ஊ.)

எ. இனம் நிலத்தைப்பற்றி வியாச்சியம் இல்லாமல் அதின் பகுதியைப்பற்றிமட்டும் வியாச்சியம்வந்தால் கவர்ன்மென்ரூர் உத்தரவு இல்லாமல் அந்த வியாசசியத்தை அங்கீகரிக்கலாம். (ச-பு-கஅருகூ வரு-ஜூன்மீ உகூஉ-கஅருகூ ஊரு-நம்-உச.)

அ. மதவிஷயமாக அல்லது பொதுஜன உபகாரார்த்தமாகக் கொடுக்கப்பட்ட இனங்களுக்குச் சம்பந்தமான வழக்குகளை-கஅகள வரு எ-வது சட்டம் கச-வது பிரிவுப்படி கோர்ட்டார் எற்றுக்கொள்ளலாம். (ச-பு-கஅருஈ வரு-ஜூலீ கஉ0 .)

கூ. சுலபமான படிவு கொடுத்துக்கொண்டு ஒரு அக்கிரகாரத்தை அநுபவிக்கிறவன் அக்கிரமமாய்க் கலெக்ட்டரால் வசூல் செய்யப்பட்ட தொகையைப்பற்றி அவர்பேரில் கவர்ன்மென்ரூருடைய உத்தரவில்லாமல் வியாச்சியஞ்செய்யலாம். (ச-பு-கஅருகூ வரு அக்ட்டோபர்மீ உளஉ.)

கo. ஒரு ஜாகிர்தாரால் விடப்பட்ட நிலத்தைப்பற்றிக் கோர்ட்டார் வியாச்சியம் பிடிக்கலாம். (கஅருo வரு-நம்-உகூ-ப-சூரு.)

கக. இனம் நிலத்தைப்போக்கியம் வைப்பது கிரமமானதால் அந்தப்போக்கிய நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக இனம்தார் வியாச்சியஞ்செய்யலாம். (ச-பு-கஅருகூ வரு அக்ட்டோபர்மீ உஉஉ.)

கஉ. ஆதியில் இனம் நிலமாயிருந்து பிற்பாடு இனம்ரூல்-உகூ-வது பிரிவுப்படி சர்வ ஸ்வதந்தரமாயிருப்பதாக ருசுவானால் அந்த நிலத்தைப்பற்றிக் கோர்ட்டார் வியாச்சியம் வாங்கலாம். (ச-பு-கஅசுக வரு ஆகஷ்டுமீ கசஉ.)

கஊ. இனம் நிலங்களுடைய வருமானத்தைப்பற்றின வழக்குகளையும் கவர்ன்மென்ரூருடைய உத்தரவு இல்லாமல் கோர்ட்டார் பிடிக்கக்கூடாது. ஆனால் இனம்தார் தன வருமானத்தின் பாத்தியத்தைத் தாழ்த்த நீக்கிக்கொண்டால் அப்போது அந்த வழக்கைப் பிடிக்கலாம். (ச-பு-கஅருஅ வரு அக்ட்டோபர்மீ உ0உ.)

கச. இனம் நிலங்களில்கண்டு முதலான மாசூலினிருந்து யாதொரு வருமானங்கிடைக்கவேண்டுமென்று செய்யப்பட்ட வழக்

கைக்கவர்ன்மென்ரூர் உத்தரவில்லாமல் வாங்கக்கூடாது. (கஅருசு வஅ-நம்-உச-ப-கஉ-அ.)

கரு. சாசுவதபோரிஜ் ஏற்படுத்தப்படாமல் நீக்கப்பட்டுப்போன மானிய நிலத்தைப்பற்றி ஒரு ஜமீன்தார் செய்தவழக்குத் தள்ளப் பட்டது. (கஅகக ஙஅ-நம்-கக)

கசு. சாசுவத போரிஜ் ஏற்படுத்தப்பட்டபோது ஒருவஞல் மானி யமாய் அநுபவிக்கப்பட்ட நிலத்தின் பாத்தியத்தை ரிவினியூ போர்டாருடைய உத்தரவுப்படி ஆட்சேபிக்க கஅoஉஙஅ-நக-வது சட் டப்படி கலெக்ட்டர்மாத்திரம் அதிகாரியாயிருக்கிரூர். (கஅகரு வஅநம்-கச.)

கள. சாசுவதபோரிஜ் ஏற்படுத்தப்பட்ட காலத்துக்குப் பிற்பாடு இணம் நிலத்தைக் கவர்ன்மென்ரூர் கிரகித்துக்கொள்ளவேண்டிய தாயிருந்தால் சாசுவதபோரிஜின் கணக்குகளில் ஷை நிலத்தின் தீர் வை உட்பட்டிருப்பதாக அவர்கள் நிரூபணஞ் செய்யவேண்டும். (கஅகசு வஅ-நம்-அ.)

கஅ. கஅoஉவஅ-நக-வது சட்டம் எ-அ-வது பிரிவுகளின்படி. கவர்ன்மென்ரூர் கோர்ட்டில் வியாச்சியஞ் செய்து தீர்ப்பு பெற்றுக் கொண்டால் மட்டும் மானியநிலத்தை அநுபவிக்கிறவஜை அந்நில த்தைவிட்டு அப்புறப்படுதலாம். (கஅகசு ஙஅ)-நம்-உ.)

கசு. கஅநகஙஅ)-ச-வது சட்டப்படி கவர்ன்மென்ரூருடைய உத்தரவு இல்லாமல் பென்சியன் சம்பளத்தில் பாகங் கிடைக் கவேண்டுமென்று செய்யப்படுகிற வழக்கைக் கோர்ட்டார் அங் கீகரிக்கக்கூடாது. (கஅருசு வஅ)-நம்-கசுசு-கஅசுo வஅ)-ப-உசு.)

உo. அக்கிரமமாய் இணம்தார்கள் அநுபவிக்கிற நிலத்தைக் கவர்ன்மென்ரூர் வாங்கிக்கொள்வதற்கும்பட்டும் கஅoஉவஅ)-நக-வது சட்டம் அ-வது பிரகரணம் உபயோகமேதவிர ஜமீன்தார் முதலான மிராசுதார்களுக்குள் நிலத்தை மாறியமாய் அநுபவிக் கிற இணம்தார்களுக்கு ஷை பிரகரணம் அநுபயோகம். பிரதிவாதி கரு-வருஷகாலம் நிர்விவாதமாய் அநுபவித்த மாறியநிலங் கிடை க்கவேண்டுமென்று ஜமீன்தாரான வாதி செய்தவியாச்சியம் காலா திக்கிரமணதோஷக்கிரஸ்தமென்று தள்ளப்பட்டது. (கஅசுo வஅ-நம்-கஅசு-கஅசுக வஅ)-ப-ச.)

உக. இனம் நிலங்களுக்கு வீட்டுவரி வாங்கக்கூடாது. (கஅருள வுப-நம்-ககக.)

அங்கீகாரம்-க..... | ரொஜீஸ்டர்-ங..... | நிர்வை-உ..... | விசேஷ அப்பீல்-க.....

இவைகளைப்பார்க்க.

ஈடு.

ஒற்றியைப்பார்க்க.

உடன்படிக்கை.

க. காமன் பண்டிகைச் செலவுக்காக ஒவ்வொரு வருஷமுஞ் சில தொகை கொடுப்பதாக உடன்படிக்கை யெழுதிக்கொடுத்த பிரதிவாதிகள் அந்தப்படி கடக்கத் தப்பிப்போனதினால் அந்தத் தொகை கிடைக்கவேண்டுமென்று வாதிகள் வழக்குச்செய்தார்கள். யாதொரு பிரதிப்பிரயோஜனமும் இல்லாமல் அந்த உடன்படிக்கையைப் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்திருப்பதால் அது செல்லாதென்றும் பிரதிவாதிகளுக்கு இஷ்டம் இருந்தால்மட்டும் ஷை காமன்பண்டிகைக்கு உதவிசெய்யவேண்டியவர்களேதவிர அவர்களுக்கு இஷ்டம் இல்லாதவனையில் அவர்கள் யாதொரு உதவியுஞ் செய்யவேண்டிய தில்லையென்றும் வாதிகளுக்கு விரோதமாய்த் தீர்ப்பு செய்யப்பட்டது. (கஅருகூ வநு-நம்-அள-ப-கருச.)

உ. உபயவாதிகளுக்கும் பொதுவான சுவரில் அவர்களில் எவனாவது தாவாரம் வைத்துக் கட்டிக்கொள்ளலாமென்று உடன்படிக்கை பிறந்திருக்கிற விஷயத்தில் அவர்களில் ஒருவன் மற்றொருவனுக்கு அசௌகர்யம் இல்லாதவரையில் அந்தச் சுவரின்மேலே மெத்தை முதலானதும் வைத்துக் கட்டிக்கொள்ளலாம். (கஅருகூவநு நம்-ககஅ-ப-கஎகூ.)

ங. அ-ஆ-என்பவர்கள் கடையை அநுபவித்துக்கொண்டு அவர்கள் கூட்டாளியாகிய இ-என்பவனுக்குக் கொடுக்கவேண்டிய கட்டினப் பிரதிமாதமுங் கொடுக்கிறதென்று உடன்படிக்கை செய்துகொண்டார்கள். பிற்பாடு இ-என்பவன் ஷை கடையை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பக்கத்தில்வரவேண்டிய கடன்களையும் வசூல் செய்துகொண்டபடியால் அவனுக்கு அ-ஆ-என்பவர்கள் ஷை உடன்ப

டிக்கைப்படி பாத்தியப்பட்வேண்டியதில்லையென்று தீர்மானிக்கப் பட்டது. (கழருகூஹல-நம்-கஉரு-ப-உளசு.)

சு. வாதியிடத்தில் பிரதிவாதி சிலதொகை வாங்கிக்கொண்டு அதற்காக கெடுவில் வாதிக்குச் சரக்குக்கொடுப்பதாகவும் அப்படிச் செய்யத்தப்பினல் அவன் பெற்றுக்கொண்ட தொகைக்கு ரூ-க00-க்கு ரு0-விகிதம் அபராதங் கொடுப்பதாகவும் பிரதிவாதி உடன்ப டிக்கை எழுதிக்கொடுத்து அதை அவன் உல்லங்கனஞ்செய்து போட்டால் பிரதிவாதி பெற்றுக்கொண்டதொகையும் வட்டியும் மே அபராதமும் கிடைக்கவேண்டியதைப்பற்றி வாதி வியாச்சியஞ் செய்யலாம். (கழசுகஹல-நம்-சூ-ப-கஙூசு.)

ரு. ஒரு மொகாசாதாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட உடன் படிக்கை அவனுடைய பாத்தியஸ்தனைப் பத்தப்படுத்தமாட்டாது. (கழருஅஹல-நம்-எசூ-கழருகூஹல-ப-சூ.)

சூ. ஒரு உடன்படிக்கையின் வாக்கியப்பிரயோகங்களைக்கொண்டு உபயத்திராளருடைய மநோபாவம் இன்னதென்பதைக் கண்டறிய வேண்டும். அவர்களுடைய எண்ணத்துக்கு மேற்பட்டவியாக்கியா னங் கோர்ட்டார் செய்யக்கூடாது. (கழ்உசுஹல-நம்-எ.)

அங்கீகாரவிபரீதம்-கசூ.....	சாக்ஷியம்-சூள..... .....
களவு-க.....	ஜீவநாம்சம்-நூசூ..... .....
கிராமக்காவற்காரன்-க.....	ஸ்வீகாரம்-ரு-சூ.....

இவைகளைப்பார்க்க.

உண்டி.

க. உண்டி யார்பெயருக்கு அனுப்பப்படுகிறதோ அவன் அதை அங்கீகரித்துக்கொண்டால் அதின்தொகைக்கு மகமதுசாஸ்திரப் படி அவனே பாத்தியப்படவேண்டும். அவன் அந்தத்தொகையைக் கொடுக்க ஆட்சேபித்தாலும் அல்லது அவன் கடன்கொடுக்க நிர் வாகம் இல்லாமல் இறந்துபோனலும் தான் பாத்தியப்படுவதாக அந்த உண்டியை எழுதிக்கொடுத்தவன் பரிஷ்காரமா யொப்புக்கொ ண்டிருந்தால் அப்போது அவனைப் பாத்தியப்படுத்தலாம். (கழருரு]-நம்-ரு.)

உ. கிராசு என்பவருக்குத் தொகைகொடுக்கும்படி மக்கிஸ் என்பவரால் பின்னி என்பவருக்கு ஒரு உண்டி அனுப்பப்பட்டது.

கிராசு என்பவர் அதைப் பிரதிவாதிக்கு இன்ஸூர்சுசெய்து அனுப்பி னர். பிரதிவாதி அதை வாதிக்கு இன்ஸூர்சுசெய்ததினல் வாதி கிராசு என்பவருக்கு அந்த உண்டியின் தொகையைக்கொடுத்து விட்டான். பிற்பாடு ஷே உண்டி வாதியால் ராமசாமிசெட்டிக்குச் சாட்டிவிடப்பட்டது. ராமசாமிசெட்டி பின்னி என்பவரிடத்தில் அதைக்கொடுத்து பணங்கேட்டதற்கு அவர் பணங்கொடுக்கிறதில் லையென்று மறுத்துவிட்டார். அதின்தொகையை ராமசாமிசெட் டிக்கு வாதி கொடுக்கும்படி நேரிட்டதால் அந்தத்தொகையைப்பற் றிப் பிரதிவாதிமேல் வாதி வழக்கிட்டான். ஷே உண்டி பிரதிவாதி யால் வாதிக்கு இன்ஸூர்சு செய்யப்பட்டதினல் வாதிக்குப் பிரதி வாதி தொகைகொடுக்கவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅருசுஹூ-நம்-கஉக.)

ங. ஒரு உண்டி யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவன் அதை அங்கீகரித்துக்கொண்டு ங-வது மனுஷனுக்குச் சாட்டிவிட்டு அந்த ங-வது மனுஷன் தொகை கொடுக்காமலும் அந்த உண்டி பரி கரிக்கப்படாமலும் இருந்தால் அந்த உண்டி ஆதியில் யாருக்கு அனுப்பப்பட்டதோ அவனும் அதை எழுதி அனுப்பினவனும் அதி ன்தொகைக்குப் பாத்தியப்படவேண்டும். (கஅருகூஹூ-நம்-ககச ப-உசஅ.)

ச. ஒருவனல் அனுப்பப்பட்ட உண்டியைப் பெற்றுக்கொண்டு கையெழுத்துவைத்துக்கொடுத்தவன் அந்த உண்டியின் தொகைக் குப் பாத்தியப்படவேண்டும். (கஅருசுஹூ-நம்-கஉக.)

காரியஸ்தன்-ரு.

இதைப்பார்க்க.

உத்தரவின்மேல் அப்பீல்.

க. ஒரு உத்தரவின்மேல் அப்பீல்செய்கிறவன் அந்த உத்தரவு க்கும் அதற்குச்சம்பந்தமான சகல உத்தரவுகளுக்கும் கையெ ழுத்து முத்திரையுட்ன் சகல்களுங்கூடக் கொடாதவனையில் அவ னுடைய அப்பீலை அங்கீகரிக்கக்கூடாது. (ச-பு-கஅருசஹூ-அக்ட் டோபர்மீ ஙஉ-நம்-கஙஙூ.)

உ. கஅருகூஹூ-அ-வது ஆக்ட்டு உபயோகத்துக்கு வந்தபிற் பாடு செய்யப்பட்ட உத்தரவின்மேல் அப்பீல்செய்யப்பட்டால்

(கஅசுகஙல-உசூ-வது ஆக்ட்டு உ-வது பிரிவிற் கண்டவிஷயங்களைத்தவிர) கட்சிக்காரர்களில் ஒருவனுடைய முன்னிலையில் அந்த அப்பீலைக் கோர்ட்டார் விசாரிக்கக்கூடாது. ஆனல் சுசச-சுசரு-வது பிரிவுகளிற் சொல்லப்பட்ட ஸாங்கங்களை எல்லாங் கோர்ட்டார் அநுஷ்டிக்கவேண்டும். (ச-பு-கஅசுஙஙல-அக்ட்டோபர்மீ கஎ.)

சூ. யாதொரு உத்தரவின்மேல் அப்பீல்செய்யலாமென்று அ-வது ஆக்ட்டில் பிரகாசமாய்ச் சொல்லப்படாமலிருந்தால் அப்படிப்பட்ட அப்பீலை அங்கீகரிக்கக்கூடாது. (ச-பு-கஅசுகஙல-சூலைமீ கசூஎ.)

ச. ஷை ஆக்ட்டு உசள-வது பிரிவுப்படி தீர்ப்புக்காக ஜப்தியாயிருக்கிற சொத்தின்மேல் பாத்தியமனுவந்து அந்த பாத்தியமனுவின் சாரணையின்பேரில் செய்யப்பட்ட உத்தரவின்மேல் அப்பீல்செய்யக்கூடாது.

ரு. அப்பீல்வியாச்சியத்தை அப்பீல் வாதி நடப்பிவித்துக்கொள்ளாததினிமித்தம் அந்த அப்பீல் தள்ளுபடியாகி அந்த அப்பீலை மறுபடியும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அப்பீல் வாதி கொடுத்தமனுவும் அப்பீல் கோர்ட்டாரால் தள்ளப்பட்டிருந்தால் அந்த உத்தரவு முடிவானதாயிருக்கிறது. (ச-பு-கஅசுஙஙல-ஜனவரிமீ கஎஉ.)

சூ. தீர்ப்பு நிறைவேற்றுகிற விஷயத்தில் ஒரு கோர்ட்டாரால் செய்யப்பட்ட உத்தரவு தீர்ப்பினுடைய வாசகங்களுக்கும் அந்தக் காலத்தில் ஊர்ஜிதமாயிருக்கிற சட்ட சாஸ்திரங்களுக்கும் விரோதமாயிருந்தாலுங்கூட அந்த உத்தரவின்மேல் அப்பீல்வாங்கலாமென்று ஷை ஆக்ட்டில் கண்டோக்தமாய் சொல்லியிருந்தால்மட்டும் அப்பீல் அங்கிகரிக்கலாமே அல்லாமல் அப்படி இல்லாதவனையில் சுசூச-வது பிரிவுப்படி அந்த உத்தரவின்மேல் அப்பீல் வாங்கக்கூடாது. ஆனல் அந்த உத்தரவிலுள்ள கிரமப்பிசகை அப்பீல்க்கோர்ட்டார் எடுத்துக்காட்டி இனிமேல் அப்படிப்பட்ட பிசகு நேரிடாதபடி அந்த உத்தரவுசெய்த கோர்ட்டாருக்கு எச்சரிக்கை செய்யலாம். (ச-பு-கஅசுஙஙல-ஆகஸ்டுமீ எஉ.)

எ. தீர்ப்பு நிறைவேறுகிற விஷயத்தில் தாழ்ந்த கோர்ட்டார் அதிகாரவரம்பை மீறி யாதொரு உத்தரவுசெய்து அந்த உத்தரவு அப்பீலுக்கு யோக்கியம் இல்லாததாயிருந்தால் அந்த உத்தரவு

நிஷ்பலமானதென்றுந் செல்லாதென்றும் அந்தக்கோர்ட்டாருக்கு அப்பீல்க்கோர்ட்டார் தெரிவிக்கலாம். ஆனல் அந்த உத்தரவின் ஸாராம்சத்தில் அப்பீல்க்கோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாது. (ச-பு-கஅசுகஙஅ-ஏப்பிரல்மீ-ரு-சஎ.)

அ. நீர்ப்பு பெற்றுக்கொண்டவன் இறந்துபோய் அவனுடைய பாத்தியஸ்தன் சர்ட்டிபிக்கெட்டு பெற்றுக்கொள்ளாமல் நீர்ப்பு நிறைவேற்ற மனுக்கொடுத்து அந்தப்பிரகாரந் நீர்ப்பை நிறைவேற்றும்படி தாலூகாமுன்சீப் உத்தரவு செய்திருந்தால் அந்த உத்தரவின்மேல் அப்பீல் இல்லை. (ச-பு-கஅசுகஙஅ-மேமீ களஎ.)

சு. அசல்க்கோர்ட்டாருடைய உத்தரவின்மேல் அப்பீல்செய்யப்பட்டு அந்த அப்பீலில் அப்பீல்க்கோர்ட்டார் செய்த உத்தரவின்மேல் விசேஷ அப்பீல்மிடையாது. (ச-பு-கஅசுஙஅ-ஏப்பிரல்மீ-கஉஎ.)

கஙு. புநர்விமரிசைக்காகக் கொடுக்கப்பட்ட மனுவைத் தள்ளுகஎ-வது பிரிவுப்படி தாலூகா முன்சீபுசெய்த உத்தரவு முடிவானதால் அதின்மேல் ரிவிஸ் ஜட்ஜ் அப்பீல் வாங்கக்கூடாது. (ச-பு-கஅசுகஙஅ-ஜனவரிமீ உகஎ.)

கக. கூஎஅ-வது பிரிவுப்படி கீழ்க்கோர்ட்டாரால் செய்யப்பட்ட உத்தரவு முடிவானதால் அந்த உத்தரவின் விஷயத்தில் யாதொரு கட்சிக்காரனுடைய மதுவின்மேல் அப்பீல்க்கோர்ட்டாரால் செய்யப்பட்ட உத்தரவு பலப்பிராப்தியுள்ளதல்ல. அந்த உத்தரவுப்பிரகாரம் நடக்கக் கீழ்க்கோர்ட்டாருக்குக் கடமை இல்லை. (ச-பு-கஅசுகஙஅ-ஏப்பிரல்மீ கஙஎ.)

நீர்ப்பு நிறைவேற்றல்-கூஎ..... | வக்கீல்-கக.....

இவைகளைப்பார்க்க.

உபகாரச்சம்பளம்.

க. ஒரு தீவான்செய்த ஊழியத்துக்காக அவனுடைய யாவத் ஜீவபரியந்தம் அவனுக்கு ஜமீன்தாரால் ஏற்படுத்தப்பட்ட பென்சியன் அல்லது உபகாரச்சம்பளமானது சாஸ்திரீயமானதால் அதைப் பிற்பாடு நிறுத்தக்கூடாது. (கஅருஙஅ-நம்-சரு.)

இறை-ககூ..... | ஜீவநாம்சம்-கக.....
கடன்-உசு..... | நீர்ப்பு நிறைவேற்றல்-சக.....

இவைகளைப்பார்க்க.

உயில்.

மரணசாஸநத்தைப்பார்க்க.

உற்சவம்.

ஆலயத்தைப்பார்க்க.

உள்வலம்.

கிராமப்பிரதட்சணத்தைப்பார்க்க.

எஜமானன்.

க. காரியஸ்தரல் எழுதிக்கொடுக்கப்பட்ட கடன்பத்திரத்தை ஆட்சேபிக்காமல் அதின்தொகையைக் கொடுப்பதாய் யஜமானன் ஒப்புக்கொண்டதால் அந்தத்தொகையை யஜமானன் கொடுக்கும் படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருருவஎ-நம்-உஅ-ப-கஙருரு.)

உ. யஜமானனுக்காகப் பாத்தியப்பட்டுக் காரியஸ்தன் எழுதிக் கொடுத்த பத்திரத்தின் தொகையைப்பற்றி யஜமானன்மேல் வியாச்சியஞ்செய்யலாம். (ஷ.)

ங. காரியஸ்தன்பெயரால் பிறந்திருக்கிற பத்திரத்தின் தொகையைக்குறித்து யஜமானன் வியாச்சியஞ்செய்யலாம். (ஷ நம்பர்-கஅருருவஙப-நம்-சுஙக-ப-அசு.)

காரியஸ்தனைப்பார்க்க.

எல்லை.

க. பிரியாதிற்கண்ட நான்கெல்லைக்குட்பட்ட நிலம்மட்டும் வியாச்சியத்திற்சேர்ந்திருப்பதாக எண்ணவேண்டியதேதவிர அந்த நான்கெல்லைகளும் வியாச்சியத்திற்சேர்ந்திருப்பதாக எண்ணக்கூடாது. (கஅசுஐவஎ-நம்-ருஅஅ-கஅசுஙவஎ-ப-சுசூ.)

உ. விவாதநிலங்களின் பெயர்களையும் அவ்வகளின் பிரசித்தமான நான்கெல்லைகளையும் வாதி பிரியாதில் விவரிக்கவேண்டும். (கஅகசூவஎ-நம்-கச.)

ங. எல்லைத் தகராறைப்பற்றின வியாச்சியங்களில் விவாதநிலம் வாதிகளின் கிராமத்தைச்சேர்ந்ததென்று பரிஷ்காரமாய் ருஜுவாகா

தவணையில் அளவுகணக்குகளைமட்டும் ஆதாரமாய்க்காட்டி வாதி கள்பட்சந் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅருகூஙஐ-நம்-கருசூ-கஅசூ0 ஙஐ-ப-உள.)

தீர்ப்பு நிறைவேற்றல்-கூ..... | பட்டா-ரு.....

இவைகளைப்பார்க்க.

எல்லை ஓடல்.

க. நிலத்தைப்பற்றின வழக்கில் கட்சிக்காரர்களில் ஒருவன் எல்லை ஓடுகிறதென்றும் அந்தப்பிரகாரம் வியாச்சியத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறதென்றும் உபயவாதிகளும் பேசிக்கொண்டு வழக்கமான நிபந்தனைகளுடன் குறிக்கப்பட்ட கட்சிக்காரன் எல்லை ஓடின பிற்பாடு அதை அநுசரித்துக்கோர்ட்டார் தீர்ப்புசெய்யவேண்டும். கட்சிக்காரர்களும் அந்தச்சங்கேதத்துக்கு உட்படவேண்டும். (கஅகச ஙஐ-நம்-ச.)

ஏலம்.

க. பேரிற் ஏற்படாத தாலூகாவில் மிஷினரியூபோர்டாருடைய உத்தரவில்லாமல் சர்க்கார் பாக்கிக்காக யாதொருநிலத்தைக் கலெக்டர் ஏலம்போட்டால் அந்த ஏலத்தை கவர்ன்மென்றார் சூட்சம விசாரணையின்பேரில் ரத்துசெய்யக்கூடாது. (கஅகருஙஐ-நம்-க0.)

உ. நிலத்தைக்கோர்ட்டார் ஏலம்போடுங்காலத்தில் அதின் ஸ்வான் காரனுக்கு எவ்வளவுபாத்தியமோ அவ்வளவுபாத்தியமட்டுந்தான் அதை ஏலத்தில் வாங்குகிறவனுக்கும் உண்டாகுமேதவிர அதற்கு மேல் அதிகபாத்தியம் உண்டாகமாட்டாது. (கஅகஅஙஐ-நம்-கக.)

ங. குத்தகை ஒப்புக்கொண்ட புறக்குடியின்சொத்தை ஜமீன் தார் அவசரம் இல்லாமல் ஏலம்போட்டு உபத்திரவஞ்செய்ததால் ஏலத்தானையில் ஜமீன்தாரைச்சேரவேண்டிய பகுதித்தானை யானதுபோக பாக்கித்தானையை அந்த ஜமீன்தாருக்குக் கொடுக்கக்கூடாதென்றும் வேறேகுடிகள் இடத்தில் கிராமங்களைக்குத்த கைக்குவிட்டதினால் ஜமீன்தாருக்கு நேரிட்ட நஷ்டமும் அவனுக்குக் கிடைக்கமாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கஅஉசூ ஙஐ நம்பர்-க.)

ச. உ-ம் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தீர்ப்பின்தானைக்காக அவனுல் தனக்குச்சொந்தமானதென்று காட்டப்பட்ட சொத்தை

ஏலம்போடப்பட்டது. பிற்பாடு அந்தச்சொத்து உ-ம் பிரதிவாதிக்குச்சொந்தம் அல்லவென்று ருஜுவானதினால் அவனிடத்தில் ஏலக்காரன் ஏலத்தொகையைப் பெற்றுக்கொள்ளப் பாத்தியஸ்தன் என்று தீர்மானிக்கப்பட்டது. (கஅருருவல-நம்-ச.)

ஒற்றி-ன.....
கிராம உத்தியோகங்கள்-சூ.....
சாட்சியம்-சச.....

தீர்ப்பு நிறைவேற்றல்-உரு-கக-கஉ-கங-கச-கரு-கசூ.....

இவைகளைப்பார்க்க.

ஒப்புக்கொள்ளுதல்.

அங்கிகாரத்தைப்பார்க்க.

ஒற்றி.

க. சொந்தக்காரன் நிலத்தைத் திரும்பச்செய்யுமிடத்தில் அதை ஒற்றிபெற்றவனுக்கே விற்கவேண்டுமென்று ஒற்றிப்பத்திரத்தில் நிபந்தனை கண்டிருந்தால் அந்த நிபந்தனையை அநியாயமானதென்று கோர்ட்டார் தள்ளக்கூடாது. (கஅருஅவல-ப-உக.)

உ. கடன்வாங்கினவன் கெடுவில் தொகைகொடுக்கத்தப்பினால் ஈடுவைக்கப்பட்ட நிலமுதலான ஸ்திதிகள் கடன்கொடுத்தவனுக்குச் சொந்தமாய் சித்திக்குப்போகுமென்று பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிறபட்சத்தில் அந்த அபராதநிபந்தனையைக் கோர்ட்டார் நிறைவேற்றக்கூடாது. கடன்கொடுத்தவன் அசலையும் வட்டியையும் மட்டும் பெற்றுக்கொள்ளப்பாத்தியஸ்தன் (கஅருஅவல-நம்-ககூ0, கஅருகூவல-ப-ருகூ-கங0-களஅ. கஅருகூவல-நம்-எரு-எஅ-கூ0-க0ச-க0ரு-கருரு-ப-கூங-கந0-களஅ-உருக. கஅசூ0வல-நம்-உரு-ப-உசூ-ச0. கஅசூ0வல-நம்-உ0அ-உளஉ-ஙகூக. கஅசூகவல-ப-எ-உ0-அச.)

ங. கரு-வருஷம் வரையில் நிலத்தை மீட்டுக்கொள்ளக்கூடாதென்று ஒற்றிப்பத்திரத்தில் வெளிப்படையாய் நிபந்தனைகண்டிருந்தால் உபயவாதிகளுடைய சம்மதமில்லாமல் அந்தக்காலத்துக்குள்ளாகவே அந்தநிலத்தை மீட்டுக்கொள்ளக்கூடாது. (கஅருஅவல-நம்-ககூ0-கஅருகூவல-ப-உஅ.)

சு. வட்டியைப்பற்றின கடனிலிரு உபு-வது ஆக்ட்டு உண்டாகிறதற்குமுன் நிலத்தை ஒற்றிவாங்கி அநுபவிக்கிறவன் அப்போதிருந்த நிரமமானவட்டிக்குச் சரியான வருமானத்தைமட்டும் அநுபவிக்கப் பாத்தியஸ்தனாயிருக்கிறான். (கடனிலிரு-நம்-சுகூ ப-ரு உ.)

ரு. ஒருவனுக்கு நிலம் ஒற்றிவைக்கப்பட்டிருக்கிற சங்கதியை அறியாமல் வேறொருவன் அதைக் கிரயத்துக்கு வாங்கினாலுங்கூட அந்தக்கிரயத்தினால் ஒற்றிக்காரனுடைய பாத்தியத்திற்கு யாதொரு குறைவும் உண்டாகமாட்டாது. (கடனிலிரு-ப-சுசு.)

சூ. ஒருவன் தான் ஒற்றிவாங்கின நிலத்தை வேறொருவனுக்குக் குத்தகைக்குவிட்டு அந்தக் குத்தகைக்காரன் இடத்திலிருந்து வேறு நிலத்தைச் சொந்தக்காரன் மீட்டுக்கொண்டபோதிலும் வேகுத்தகைக்காரன் யாரிடத்திலிருந்து குத்தகை ஒப்புக்கொண்டானோ அவனுக்குக் கொடுக்கவேண்டிய தானியத்தை உத்தரிக்கவேண்டியவனாகயிருக்கிறான். (கடனிலிரு-நம்-கங.உ-ப-சுரு.)

எ. ஒற்றிவைத்தவன் ஒற்றித்தானத்தையும் கெடுவிற் கொடுக்காமற்போனாலுங்கூட அவன் ஒற்றிநிலத்தை இழந்துபோகமாட்டான். அனால் ஒற்றித்தானத்தையும் கொடுக்கும்படி தீர்ப்பான பிற்பாடு அவன் கொடுக்கத் தப்பிப்போனால் வே ஒற்றிநிலத்தைக் கோர்ட்டார் ஏலம்போடலாம். (கடனிலிரு-நம்-எஅ-ப-கரு0.)

அ. மலையானதேசத்தில் ஒருவன் ஒற்றிவாங்கி யநுபவிக்கிற நிலத்தைச் சொந்தக்காரன் கிரயஞ் செய்யவேண்டியிருந்தால் அந்த ஒற்றிக்காரனுக்கு முந்தித் தெரியப்படுத்தி அவன் வாங்கிக்கொள்ளாமற்போனால்மட்டும் வேறொருவனுக்குக் கிரயஞ்செய்யலாம். (கடனிலிரு-நம்-சுகூ-ப-கசுசு.)

கூ. ஒற்றிப்பத்திரத்தின் கெடுத் தப்பிப்போனாலுங்கூட அந்தக் கெடுவுக்குப்பின்பு ஒற்றித்தானகையையும் வட்டியையுங் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ள ஒற்றிவைத்தவன் சுதந்தாமுள்ளவனாயிருக்கிறான். (கடனிலிரு-நம்-எ0-க0ரு-ப-கசுக-உருக.)

கப. நிலத்தை ஒற்றிபெற்றவன் அதின் வருமானத்தினால் அசலும் வட்டியுந் தீர்ந்தபிற்பாடு நிலத்தைச் சொந்தக்காரன் இடத்தில் விட்டுவிட ஆட்சேபித்தால் அந்த ஆட்சேபனையின் காலமுதல் கஉ-வருஷத்துக்குள்ளாகச் சொந்தக்காரன் நிலத்திற்காக வியாச்

சியஞ் செய்யவேண்டும். அப்படி அவன்செய்யத்தப்பிப்போனல் ஒற்றிவாங்கினவனுக்கே நிலம் சித்தித்துப்போகும். (கஅருகூஹ நம்-எ0-ப-ககூக.)

கக. ஒற்றிபெற்றவன் வசத்தில் இருக்கிறநிலத்தை ஒற்றித்தொ கையைக் கொடாமற் சொந்தக்காரன் ஸ்வாதீனப்படுத்திக்கொண் டால் ஒற்றித்தொகை கொடுக்கப்படுகிற காலம்வரைபில் அவன் ஒற்றிக்காரனுக்கு ஸ்வாமிபோகங் கொடுக்கவேண்டும் அல்லது நிலத்தையாவது ஒற்றிபெற்றவன் வசத்தில் விட்டுவிடவேண்டும். (கஅருகூ ஹ-நம்-க0கூ-ப-களக.)

கஉ. மலையாளதேசசத்தில் கூகூ-வருஷத்துக்குமுன் நிலத்தை ஒற் றிவைத்தவன் அந்தத்தேசவழக்கப்படி கஉ-வருஷத்துக்கு ஒருகாரம் ஒற்றியைப் புதுப்பித்துக்கொள்ளாமல் இருந்தபோதிலும அவ்வ ளவு காலத்துக்குப்பிற்பாடு அவன் தெ நிலத்தை மீட்டுக்கொள் வதில் விக்கிரமில்லை இந்தவிஷயத்தில் காலநிபந்தனை தோஷமு மில்லை. (கஅருஅ ஹ-நம்-ககூ அ-கஅருகூ ஹ-ப-கூக.)

கங. எந்தத்தேதியில் பந்தகச்சொத்து ஒற்றிக்காரனுக்குச் சொந் தமாய்ச் சித்தித்துப்போகிறதென்று பந்தகப்பத்திரத்தில் நிபந்த னை கண்டிருக்கிறதோ அந்தத்தேதிமுதல் கஉ-வருஷத்துக்குமேல் அதிககாலமாய்விட்டாலுங்கூடச் சொந்துக்குடையவன் பணத்தை க்கொடுத்து மீட்டுக்கொள்ளப் பாத்தியப்படுகையிருக்கிறான். இந்த விஷயத்தில்காலநிபந்தனை தோஷம் கிடையாது. (கஅசூ ஹ-நம்-உநி-ப-கூகூ.)

கச. பிரதிவாதிக்கு ஒற்றிவைக்கப்பட்ட நிலங் கிடைக்கவேண்டு மென்று வாதி வியாச்சியஞ்செய்தான். பிரதிவாதி அந்த ஒற்றியிலை யத்தை ஒப்புக்கொண்டு பிற்பாடு தனக்கு ஷை நிலம் கிரயமா ய்விட்டதாக எதிர்வழக்காடினான். பிரதிவாதியாற் சொல்லப்ப டும் கிரயம் ருசுவாகாதிருந்தாலும் ஆதியில் தனக்கு நிலம் ஒற்றியா யிருந்ததை அவன் ஒப்புக்கொள்வதாலும் அவன் தொகை பெற்றுக் கொண்டு நிலத்தை வாதிக்கு விட்டுவிடவேண்டியதென்றும் வா தி வழக்குக்கு ஆதாரமான ஒற்றி எதிர்கடைச்சீட்டு சுற்பனையா யா தென்று ருசுவானபோதிலும் அதினல் ஷை நிலத்தை மீட்டுக்கொ ள்ளும்படியான பாத்தியத்தை வாதி யிழந்துபோகவில்லையென்றுந் தீர்மானிக்கப்பட்டது. (கஅருகூஹ-நம்-உ0நி-கஅகூ0ஹ-ப-கூகூ.)

கரு. ஒற்றித்தொகையைக்கொடுத்து நிலத்தையும் ஒற்றிப்பத்திரத்தையும் மீட்டுக்கொண்டதாகக் கட்சிபேசுகிறவன் உத்தமசாட்சியமாகிய அந்த ஒற்றிப்பத்திரத்தையே கோர்ட்டில் தாக்கல்செய்யவேண்டும். அதைத் தாக்கல்செய்யாமற்போனதற்கு அவன் தகுந்தகாரணஞ்சொல்லாவிட்டால் அந்தவிஷயத்தைப்பற்றி சாட்சிகளின்சுவை அங்கீகரிக்கக்கூடாது. (கஅசுஂ0ஙப-நம்-ககஉ-ப-கசள.)

ககூ. ஒற்றிவைத்தவன் ஒற்றித்தொகையைக் கெடுவிற் கொடுக்கிறதென்றும் கொடுக்கத்தப்பிப்போல் ஒற்றிவாங்கினவனிடத்தில் இன்னம் சிலதொகையை அதிகமாய்ப் பெற்றுக்கொண்டு நிலத்தை அவனுக்கே கிரயஞ்செய்துகொடுத்துவிடுகிறதென்றும் பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிற பட்சத்தில் அந்தக்கெடுவில் ஒற்றித்தொகையைக் கொடுக்கத்தப்பிப்போனால் அதற்குப் பிற்பாடு நிலத்தை மீட்டுக்கொள்ளும்படியான சுதந்திரம் ஒற்றிவைத்தவனுக்கில்லை. அவன் ஒற்றிவாங்கினவனிடத்தில் அதிகமாய்த் தொகை பற்றிக்கொண்டு நிலத்தை அவனுக்கே கிரயஞ்செய்யவேண்டும். (கஅருஙஏ-நம்-ஙஉ-கஅசுஂ0ஙஏ-நம்.ஙஙஉ-ப-கருக.)

களூ. ஒற்றித்தொகை செலுத்தவேண்டிய கெடுவில் அந்தத்தொகைக்குப்பதிலாய் ஸ்வாமின்காரனே மனப்பூர்வமாய் நிலத்தை ஒற்றிபெற்றவன்வசத்தில் விட்டு ஒற்றிப்பத்திரத்தின் வாசகத்தை அநுஷ்டானத்துக்குக் கொண்டிவந்திருப்பாரானால் பிற்பாடு அந்நிலத்தை மீட்டிக்கொள்ள ஸ்வாமின்காரனுக்குப் பாத்தியமில்லை. (கஅசுஂ0ஙஏ-நம்-ருருஉ-ப-உகஉ.)

கஅ. மலையாளதேசத்தில் அதிகத் தொகைகொடுத்துப் பந்தகம் வாங்கினவன் சொற்பத்தொகைக்குப் பந்தகம் வாங்கினவனுடைய முன்பாத்தியத்தைத் தீர்த்து நிலத்தைப் பெற்றுக்கொள்ளப்பாத்தியஸ்தரல்ல யிருந்திருன். (கஅசுஂ0ஙஏ-நம-கஅ0அ-ப-ககூஅ.)

கஙூ. மலையாளதேசத்தில் நிலத்தை ஒற்றிவைத்தவனுக்கு மறுபடியும் பணம்வேண்டியிருக்கிறபட்சத்தில் ஒற்றிபெற்றவனிடத்திலே அவன் முந்திப் பணங் கேட்கவேண்டும். அவன் கொடாமற்போனால்மட்டும் அதிகத்தொகைக்கு வேறொருவனிடத்தில் ஷீநிலத்தை ஒற்றிவைக்கலாம் முந்தின ஒற்றிக்காரனுடைய மனோரதத்தை அறியாமல் வேறொருவன்போரால் செய்யப்பட்ட உ-வது ஒற்றிசெல்லாது. (கஅசுஂ0ஙஏ-நம்-களூ-ப-உசஙூ.)

உ0. நிலத்தை ஒற்றிவைத்தவர்கள் எல்லாருஞ் சேர்ந்து வியாச்சியஞ் செய்யாமல் அவர்களிற் சிலர்மட்டுங் தங்களுடைய விகநிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டியதற்காக வியாச்சியஞ் செய்தார்கள். ஒற்றியாயிருந்த வீடு நிலத்தைப் பிற்பாடு பலசாஸநங்கள்மூலமாய்த் தாங்கள் கிரயம்பெற்றுக்கொண்டதாகப் பிரதிவாதிகள் எதிர்கட்சி சொன்னார்கள். வீடு சாஸநங்கள் ருசுவாகவில்லையென்றும் ஒற்றிவைத்த எல்லாநிடத்திலும் ஒரேசாஸநமாய் வாங்காமல் தனித்தனியே வெவ்வேறே சாஸநங்கள் பெற்றுக்கொண்டதாகப் பிரதிவாதிகள் சொல்வதைக்கொண்டே ஒற்றிவைத்தவர்களிற் சிலர்மட்டும் அவர்களுடைய விதநிலத்தைப்பற்றி வியாச்சியஞ்செய்தது கிரமமானதென்றும் நிர்ணயிக்கப்பட்டது. (சுஅருகூஹ-நம்-உஅ-உங.)

உக. ஒருவனுக்குப் பந்தகம் வைக்கப்பட்டிருக்கிற பூஸ்திதியை ஸ்வான்காரன் வேறொருவனுக்குக் கிரயஞ்செய்யலாம். அப்படிக்கிரயம் வாங்குகிறவன் ஸ்வான்காரனுடைய ஸ்தானத்தில் இருப்பதால் அவன் கெடுக்காலத்தில் பந்தகத்தானையைக்கொடுத்து வீடு பூஸ்திதியை மீட்டுக்கொள்ளப் பாத்தியஸ்தனாயிருக்கிறான். (சுஅருசு ஹ்-நம்-உ0-)

உஉ. பத்திரநிபந்தனைக்கு விரோதமில்லாதபட்சத்தில் பந்தகக்காரன் பந்தகத்தானையைப்பற்றி அவனுக்கு இஷ்டமானபோது தொடரப்பாத்தியஸ்தனாயிருக்கிறான். (சுஅருருஹ-நம்-உசு.)

உங. மலையாளதேசவழக்கப்படி நிலத்தை ஒற்றிவைத்து, கஉ-ஹ ஆனபிற்பாடு தான் அதை மீட்டுக்கொள்ளவேண்டும். (சுஅருருஹ-நம்-சச.)

உச. நிலத்தை மீட்டுக்கொள்ளும்படியான நிபந்தனைகண்டு ஒற்றி எதிர்நடைமுதலான ஆதாரவுகள் பிறக்கவேண்டியதில்லை. எவ்வளவு காலமானாலும் ஒற்றி நிலத்தை மீட்டுக்கொள்ள ஸ்வான்காரன் பாத்தியஸ்தனாயிருக்கிறான். (சுஅருருஹ-நம்-கருஉ.)

உரு. ஒற்றிவைத்தவன் ஒற்றித்தொகையைக் கொடுக்கக்கொண்டோய் அதை ஒற்றிக்காரன் வாங்கிக்கொள்ளாமற்போனால் அது முதல் நிலத்தின் வருமானத்துக்கு ஒற்றிபெற்றவன் பாத்தியப்படவேண்டும். ஒற்றிக்காரன் ஒற்றித்தொகையை வாங்கிக்கொள்ளாவிட்டபோதிலும் அந்தத்தொகையை ஸ்வான்காரன் கூ-வது மநுஷியனிடத்தில் பொதுக்கட்டவேண்டியதில்லை. (சுஅருளஹ்-நம்-சுகச.)

உசூ. முந்தின ஒற்றிக்காரனுடைய அதிகாரங்கள் கைதப்பிப்போனல் அவனுடைய பாத்தியத்தைப்பார்க்கிலும் பிந்தின ஒற்றிக்காரனுடைய பாத்தியம் மிஸ்ரமாகும். (கஅஉருவஈ-நம்-உ.)

உஎ. தகப்பன் கொடுக்கவேண்டிய தீர்ப்பின் தொகைக்கு உத்தரவாதமாயிருக்கிற ஸ்திதியை அவன் இறந்துபோனபிற்பாடு மகன் வேறையாருக்காவது ஒற்றிவைத்தாற் செல்லாது. (கஅஉருவஈ-நம்-அ)

உஅ. பத்திரத்தில் கெடுக்காறாமலும் காலந்பந்தமின் தோஷமில்லாமலும் இருந்திறபட்சத்தில் ஒற்றிக்காரன் ஒற்றித்தொகையைப் பற்றி எந்தக்காலத்தில் வேண்டுமானாலும் தொடரலாம். அவன் நீண்டகாலமாய் ஒற்றிசொத்தை அநுபவித்துவந்தபோதிலும் அந்தச் சொத்திலிருந்து அவன் ஒற்றித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு யாதொருதடையுமில்லை. (கஅசசூவஈ-நம்-கஙூ.)

உகூ. ஒற்றிவைக்கப்பட்ட ஸ்திரி வெண்ணிலைக் கடன்பத்திரங்களுக்குப் பாத்தியப்படமாட்டாது. (கஅருஎவஈ-நம்-சூ.)

ஙூ. ஒற்றிப்பத்திரத்தைப் பிரதிவாதி தாக்கல்செய்யாவிட்டால் அதின் உண்மையைப்பற்றி சாட்சிகளோ விசாரிக்கலாம். (கஅருஅவஈ-நம்-கஙஅ.)

ஙக. ஜப்தியிலிருக்கிறசொத்தை ஒற்றிவைக்கக்கூடாது. (கஅருஅவஈ-நம்-அஙூ-ப-கஅஎ.)

ஙஉ. சர்க்கார்த்தீர்வை முதலான கடன்களுக்காகச் சொத்து முழுதுங் கையைவிட்டுப்போகாமல் இருக்கவேண்டியதற்காகக் கும்பெனியாபகன் அவசரமானமட்டும் அந்தச்சொத்தைப் பக்கத்தில் ஒற்றிவைக்கலாம். (கஅஙகவஈ-நம்-எ.)

ஙங. கோவில் நிலத்தை விசாரணைக்கர்த்தாக்களில் ஒருவன்மட்டும் ஒற்றிவைத்தால் செல்லாது. அவன் மற்றவர்களுடைய சம்மதத்துடன் கோவில் பிரயோஜனத்துக்காக ஒற்றிவைத்தால் செல்லும். (கஅசஎவஈ-நம்-கஅ.)

ஙச. பூஸ்திதியை ஒற்றிக்காரனிடத்தில் உள் ஒற்றிவாங்கினவன் அந்த ஒற்றிக்காரனிடத்திலேயே கணக்குத் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஆதிஸ்வான்காரனிடத்தில் கணக்குத் தீர்த்துக்கொண்டதாக

உள் ஒற்றிக்காரன் சொல்லுங் கட்சிசெல்லாது. (கஅருகூஙஙு-நம்-கஙூஉ.)

கூருு. நிலத்தை ஒற்றிவாங்கினவனுக்கு எப்போது இஷ்டமோ அப்போது அவன் ஒற்றித்தொகையைப் பெற்றுக்கொண்டு ஸ்வாஸ்வத்துக்கு நிலத்தை விட்டுவிடுகிறதென்று ஒற்றி ஆதாரவில் எழுதப்பட்ட வக்கணையானது சுத்த அதிக்கிரமம். ஸ்வாஸ்வத்துக்கு இஷ்டமானபோது நிலத்தை மீட்டிக்கொள்ள ஆடங்கம் இல்லை. (கஅருஂஙஙு-நம்-உஙூ-கஅருகஙஙு-ப-ஙூகூ.)

கூசூ. ஒருவனுக்குப் பந்தகம் வைக்கப்பட்ட நிலத்தை வேறொருவருக்கும் குத்தகைக்கு விடுகிறதில்லையென்று பந்தகப்படத்திரத்தில் வாசகங்கண்டிருக்கிற பட்சத்தில் அந்தநிலத்தை ஸ்வாமிகாரன் வேறேயாதொருவனுக்கும் குத்தகை கொடுக்கக்கூடாது. அந்தக் குத்தகைக்காரனிடத்தில் வெ பந்தகக்காரன் பந்தகத்தொகையை வாங்கிக்கொள்ளமாட்டேனென்று நிராகரிக்கலாம். (கஅருஂஙு-நம்-கூசஙு-கஅருகஙஙு-ப-சஙூ.)

கூள. போக்கியமாய் அநுபவிக்கப்படுகிற நிலத்தின் வருமானத்திலில் போக்கியத்தொகையும் வட்டியுந் தீர்த்து போக்கியக்காரனுக்கு அதிகவருமானங்கிடைத்திருக்கிற பட்சத்தில் அந்த நிலத்தைப் பற்றியும், அதிகவருமானத்தைப்பற்றியும், போக்கியக்காரன்மேல் ஸ்வாமிகாரன் வியாச்சியஞ்செய்யலாம். வெ நிலத்தில் வருமானங்கிடைக்கவில்லையென்று போக்கியக்காரன் கட்சிசொன்னால் வருடாவனக்கணக்குகளை தாக்கல்செய்து அவன் அந்தப்படி நிரூபிக்கவேண்டும். (கஅருஂஙு-நம்-கூஙூ-கஅருகஙஙு-ப-சஙூ.)

கூஅ. பிரதிவாதிகளின் குடும்பவியாபகனென இறந்துபோன அ-என்பவனுக்கு விவாதநிலம் ஒற்றிவைக்கப்பட்டதாகவும் ஒற்றித்தொகையைப் பெற்றுக்கொண்டு பிரதிவாதிகள் நிலத்தை விடவேண்டுமென்றும் வாதி வியாச்சியந் தொடர்ந்தான். ஒற்றித்தொகையைப் பெற்றுக்கொள்ளத் தான் பாத்தியஸ்தனென்று முதற் பிரதிவாதியும் தான் பாத்தியஸ்தியென்று, கூ-ம் பிரதிவாதியும் எதிர்வழக்காடினர்கள். அந்த வியாச்சியத்தில் க-ஙு-பிரதிவாதிகளின் பாத்தியத்தைப் பற்றி விசாரிக்கவேண்டிய அகத்தியம் இல்லையென்றும் ஒற்றித்தொகையை வாதி கோர்ட்டில் செலுத்திவிட்டு நிலத்தைப் பெற்றுக்

கொள்ளவேண்டியதென்றும் கஅசுக(ஹய)-உ0-வது ஆக்ட்டின் பிரகாரமாவது, கஅசுஈ0(ஹர)-ஒ-ள-வது ஆக்ட்டின் பிரகாரமாவது, க-ங-பிரதிவாதிகள் யோக்கியதாபத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டியது கிரமம் என்னும் வாதிபக்ஷம் நிர்மாணிக்கப்பட்டது. (கஅசுஈ0(ஹர)-நம்-ஙஉசுஈ-ஈஞ0-கஅசுக(ஹய)-ப-சுஅ-ஞ0.)

ங0. போக்கியநிலத்தின் வருஷாந்தவருமானத்தில் சர்க்கார்த் திர்வையும் சாகுபடிச்செலவும்போக பாக்கியை போக்கியத்தொகை யிம்மட்டுக்காக ஈடுசெய்து அதற்குமேலும் மிச்சம் இருந்தால் அதை அசலுக்காக வரவைக்கவேண்டும். அந்தப்படி செல்லாதொகை போக அசலில் பாக்கியிருந்தால், அந்தபாக்கியை போக்கியக்காரனுக்கு ஸ்வான்காரன் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டும. (கஅசுஈ0(ஹய)-நம்-உஅக-கஅசுக(ஹய)-ப-எங.)

ச0. நிலத்தைப் போக்கியக்காரன் அநுபவிக்கிறதென்று போக்கியப்பத்திரத்தில் நிபந்தனை எழுதப்பட்டு அந்தப்பிரகாரம் போக்கியக்காரனுக்கு ஸ்வாமிக்காரன் நிலத்தை விடாமல் இருந்தால் அந்தத் தொகை செல்லாதிறவனைமீது போக்கியநிலம் மீடைக்கவேண்டிய தைப்பற்றியாவது அல்லது போக்கியத்தொகையைப்பற்றியாவது போக்கியக்காரன் இங்கிடப்படி வியாச்சியஞ்செய்யலாம். (கஅசுஈ0(ஹய)-நம்-ஙசுக-கஅசுக(ஹய)-ப-அசு.)

சக. போக்கியநிலத்தின்வருமானத்தினல் போக்கியத்தொகை பூரணமாய்த் தீர்ந்துபோய்விட்டதாகவும் தனக்கு அதிகவருமானம் மீடைக்கவேண்டியிருப்பதாகவும் சொல்லி நிலத்தைப்பற்றியும் அதி கவருமானத்தைப்பற்றியும் ஸ்வாமிக்காரன் செய்த வியாச்சியத்தில் போக்கியத்தொகையில் சிலதொகை பாக்கியிருப்பதாக வெளியான தியல் பிரியாதுக்குப் பிந்தினகாலத்தில் போக்கியக்காரனுக்குக் கிடைத்திருக்கக்கூடுமான வருமானத்தினல்லை போக்கியத்தின் பாக் கித்தொகை செல்லானதுபோக இன்னமும் பாக்கியிருந்தால் அதை ஸ்வான்காரன் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ளும்படிக்கும் மேற்கண்டபடி பொய்க்கட்சி பேசினதற்காக வாதியே செலவுகளைக் கொடுக்கும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது. (கஅசுஈ0(ஹர)-நம்-உஅக கஅசுக(ஹய)-ப-எங.)

சஉ. போக்கியநிலத்தை வட்டிக்குப்பதிலாய் போக்கியக்காரன் அநுபவிக்கும்படி அவன் வசத்தில் விட்டுவிடுகிறதென்று போக்கியப்பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறபிரகாரம் ஸ்வான்காரன் நிலத்தைவிடத் தப்பிப்போனதினல் ஷை நிலந்தனக்குச்சொந்தமாய் சித்தித்துப்போனதாகவும் அது கிடைக்கவேண்டுமென்றும் போக்கியக்காரன் வியாச்சியஞ் செய்தான். அந்தவழக்கு செல்லாதென்றும் போக்கியப்பத்திரவாசகப்படி வட்டிக்குப்பதிலாய் நிலத்தை அநுபவிக்கவேண்டியதற்காகவாவது போக்கியத்தொகையைப்பற்றியாவது வாதி வேறே வியாச்சியஞ் செய்யவேண்டுமென்றுந் தீர்ப்பு செய்யப்பட்டது. (கஅசுo(ஙர)-நம்-சஅச-கஅசுக(ஙல)-பகo.)

சஙூ. கையிட்டுக்கிராமத்தில் ஒற்றிவைக்கப்பட்டநிலம் பலபேர் கையேறும்படியாயிருப்பதால் ஒற்றியின் காலத்துக்குப்பின்பு அந்தக் கிராமம் ஆசந்திராக்கமாயுலுங்கூட எந்தநிலம் ஒற்றிவைக்கப்பட்டதோ அந்தநிலமே ஸ்வான்காரனுக்கு மறுபடியுங் கிடைப்பது அசாத்தியம்.—கையிட்டின் காலத்தில் ஒற்றிவைக்கப்பட்ட நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக ஸ்வான் வியாச்சியஞ் செய்கிறபட்சத்தில் தீர்ப்பு நிறைவேற்றுங்காலத்தில் பிரதிவாதிகள் வசத்தில் இருக்கிறநிலத்தில் நலம் இளப்பம் சரிக்கட்டி ஷை. ஸ்வான் பெற்றுக்கொள்ளும்படி கோர்ட்டார் தீர்ப்புச்செய்யவேண்டும். (கஅசுo(ஙர)-நம்-ருருச-கஅசுக(ஙல)-ப-ககஅ.)

சசு. உ-ஊ-பிரதிவாதிகளுடைய முன்னோர்களால் முதற் பிரதிவாதியின் பாட்டனுக்குப் போக்கியம்வைக்கப்பட்ட நிலத்தை உ-ஊ பிரதிவாதிகள் தனக்குக் கொடுத்துவிட்டதாகவும் அந்தநிலம் கிடைக்கவேண்டுமென்றும் வாதி சம்வாதஞ்செய்தான். அந்தவழக்கு சாம்பர்ட்டி தோஷக்கிரஸ்தமென்று தள்ளப்பட்டது உடனே ஷை உ-ஊ-பிரதிவாதிகள் ஷை நிலத்தைப்பற்றி வேறே வியாச்சியம் செய்தார்கள். மேற்கண்ட வியாச்சியத்தின் வாதிக்கு விவாதநிலத்தைக் கொடுத்துவிட்டதாக அந்த வியாச்சியத்தில் ஷை உ-ஊ-பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டிருப்பதால் அந்தநிலத்தின் ஸ்வான் பாத்தியத்தைப்பற்றித் தொடர அவர்களுக்குப் பாத்தியம் இல்லையென்று அவர்களின் வியாச்சியம் தள்ளப்பட்டது. (கஅசுo(ஙர)-நம்-சூஉஎ-கஅசுக(ஙல)-ப-கஉஎ.)

சரு. போக்கியத்தொகையைப் பிரதிவாதி கெடுவிற்கொடுக்கத் தப்பிப்போனதினால் போக்கியப்பத்திரத்தின் வாசகப்படி நிலம் தனக்குச் சொந்தமாய்விட்டதாகவும் அதின்மிராசு தன்பெயரால் தாக்கலாகவேண்டுமென்றும் வாதி வியாச்சியஞ் செய்தான். அந்தவியாச்சியம் பிரதிவாதியால் ஆட்சேபிக்கப்பட்டது அதற்குமுன் அபோக்கியத்தை ரத்துசெய்வதற்காக உபயவாதிகளின்மேலே பிரதிவாதியின் சகோதரிசெய்த வியாச்சியத்தில் போக்கியப்பத்திரத்தின் வாசகப்படி வாதிக்கு நிலஞ் சித்திக்துப் போய்விட்டதாக அசல் கோர்ட்டில் தீர்ப்புச்செய்யப்பட்டு அதின்மேல் பிரதிவாதி அப்பீல் செய்யாமல் இருந்துவிட்டதால், அந்தத் தீர்ப்பினிபந்தனைக்குப் பிரதிவாதி உட்படவேண்டுமென்று வாதிபட்சம் தீர்ப்புச்செய்யப்பட்டது. (கஅசுகவுல-நம்-கக-ப-கஉசு.)

சசு. போக்கியநிலத்தை மீட்டுக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட வழக்கில் அந்த நிலத்துக்குத் தானே ஸ்வாமியென்று பிரதிவாதி வாதாடினான் அந்தப்படி அவன் ரூபிக்கத்தப்பிப்போனதால் அவனுக்குப் போக்கியத்தொகைகூடக் கிடைக்கமாட்டாதென்று வாதிபட்சந் தீர்மானிக்கப்பட்டது. (கஅருசவுல-நம்-ருஉ.)

சள. ஒருவனுடைய மூன்றின வியாச்சியம் ஒற்றிவிஷயத்தைப்பற்றினதாயிருந்தால் ஸ்வான் பாத்தியத்தைப்பற்றிப் பிற்பாடு அவன் வியாச்சியஞ்செய்ய ஆடங்கம்இல்லை. (கஅருஉவுல-நம்-கஅ.)

சஎ. மலையாளதேசத்தில் பூரூபமான யாதொரு ஸ்திதியின் ஸ்வாதனும் அவனிடத்தில் அதை அதிகத்தொகைக்கு ஒற்றிபெற்றவனும் ஓசோவியாச்சியத்தில் வாதிகளாய்ச்சேர்ந்து குறைந்த தொகைக்கு ஒற்றிபெற்றவன்மேல் வழக்கிடக்கூடாது. ஆனால் அந்தப்படி அவர்கள் ஏகோபித்து வியாச்சியஞ்செய்ததைப்பற்றிப் பிரதிவாதி ஆட்சேபிக்காமற்போனால் கோர்ட்டாரும் ஆட்சேபிக்கவேண்டியதில்லை. (கஅசுஅவுல-நம்-கஅஅ-ப-ககூஅ.)

சஏ. ஒருசொத்து இருவருக்குப்பங்காய்ப்பட்டிருகிறபட்சத்தில் மூலாதாரவு சஹிதமாய்ப் பங்தகம் வாங்கியிருக்கிறவனுடைய பாத்தியமே சிரோஷ்டமாம். ஷ இரண்டுபங்தகக்காரர்கள் பட்சமாகவுந் தீர்ப்புகள் பிறந்திருக்கிறபட்சத்தில் ஷ பங்தகசொத்தை எந்தத்தீர்ப்பில் பாத்தியங் கண்டெழுதப்படவில்லையோ அந்தத் தீர்ப்புக்கு

அந்தச்சொத்து பாத்தியப்படமாட்டாது. (ச-உ, கஅசுo ஹ) மார்ச்சு மீ நிஉ-சிவி. கஅநிகூஹல-நம்-நூசுக.)

அங்கீகாரவிபரீதம்-கஅ.....	சாம்பர்ட்டி-க-ச.....
இணம்-கக.....	சுரோத்திரியம்-க... .....
கட்சி-நூ.....	செலவு-உஉ.....
கடன் பத்திரம்-நூசு-சக.....	மிராசுதாரும் புறக்குடியும்-நூந.
காலநிர்ணயம்-கள-நூக-நூஉ-நூச	மோசம்-உ-நூ..... .....
நூசு-சசு-சள-நிநூ-நிச	வட்டி-க-கநூ.....
கிரயம்-நூநூ-நூச-நூஅ.....	
சாட்சிய நிர்வாஹம்-க-நூ-கக....	
சாட்சியம்-நூநூ..... ...	

இவைகளைப்பார்க்க.

கஙஎ.

க. ஆதியில் ஒரு செய்கையானது எந்த நிமித்தியத்தினல் செய்யப்பட்டதோ அந்த நிமித்தியத்துக்குப் பிரத்தியட்ச விரோதமான வேறொரு நிமித்தியத்தை அந்தச்செய்கைக்கு ஆதாரமாகப்பேசக் கூடாது. (கஅநூநிஹல-நம்-கo.)

உ. இறந்துபோன ஒருவனுக்கு வாதி பாத்தியஸ்தன் என்கிற ஆதாரத்தின்மேல் வாதியால் செய்யப்பட்ட வழக்கில் இறந்துபோனவனுக்கு வாதி பாத்தியஸ்தன் என்பதைப்பற்றிப் பிரதிவாதி ஆட்சேபிக்காவிட்டால் அந்த விஷயத்தைப்பற்றிக் கோர்ட்டாரும் ஆட்சேபிக்கக்கூடாது. (கஅநிகூஹல-நம்-கனo-கஅசுo ஹல-ப-கநூ.)

ங. ஒருவன் தான் ஒற்றிவாங்கின நிலத்தைப் பிற்பாடு கிரயத்துக்கு வாங்கினதாகக் கட்சிபேசி அந்தக்கிரயத்தை அவன் ருசுப்படுத்தத் தப்பிப்போனல் பிற்பாடு ஒற்றிப்பத்திரத்தின் வாசகப்படி மேநிலம் தனக்குச் சொந்தமாய்ச் சித்தித்துப்போய்விட்டதாக அவன் கட்சிசொல்லக்கூடாது. (கஅசுo ஹல-நம்-உநி-ப-நூகூ.)

ச. வியாச்சியமத்தியகாலத்தில் வாதிக்குப் பிரதிவாதி தொகை கொடுத்துத் தீர்த்துப்போட்டதாகப் பிரதிவாதி தெரியப்படுத்திக் கொண்டால் அதைப்பற்றிக் கோர்ட்டார் ருசு விளங்கக்கூடாது. ஆனல் அந்தவிஷயத்தில் வாதி எவ்வளவு ஒப்புக்கொள்ளுகிறு

னே அவ்வளவுமட்டும் பிரதிவாதி பட்சந் தீர்மானஞ்செய்யலாம். (கஅசூ0வுல-நம்-அள-ப-கஙஉ.)

ரு. ஒரு வியாச்சியத்தில் பிரதிவாதிக்குத் தான் வக்கீலாயிருந்த விஷயத்தில் பூரணமான வக்கீல்பீசு கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிடடான் பூரணமான வக்கீல்பீசு கொடுப்பதாய் தான் கரார் செய்யவில்லையென்றும் ஆகிலும் பூரணமான வக்கீல்பீசு வாதிக்குத் தான் கொடுத்துவிட்டதாகவும் பிரதிவாதி எதிர்கட்சி பேசினன். அவன் பூரணமான வக்கீல்பீசு கொடுத்ததாய்ச் சொல்வதைக்கொண்டே அந்தப்படி கரார் நடந்தென்பது பிரத்தியட்சப் பிரமாணமென்றும் பிரதிவாதி பீசுகொடுத்ததை ருசுபடுத்தத் தப்பிப்போய்விட்டதினல் அவன் வாதி வழக்குக்குப் பாத்தியப்படவேண்டிய தென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கஅசூ0வுல-நம்-க0ள-ப-கஅசூ.)

சூ. பிரதிவாதிக்கு முக்கியமான ஆதாரவைப்பற்றி அவனுடைய விவரப்பத்திரிகையில் பிரஸ்தாபிக்காமல் விட்டுவிட்டு அதற்குச் சிலகாலத்துக்குப்பின்பு ஞாபகப் பிசகினல் அே ஆதாரவைப்பற்றிப் பேசாமலிருந்துவிட்டதாக அவன் சொல்லும் பிரதிகட்சி அநுபோகம். (கஅகரு வுல-நம்-ரு அ-ப-கசரு.)

எ. உறுதியான காலநிஷ்காரணை யில்லாமல் உத்தேசம் கரு-வருஷத்துக்குமுன் ஒரு காரியம் நடந்ததாக ஒருவன் ஸ்தூலமாய்ச் சொன்னல் அந்தக்காலத்துக்குச் சிலவருஷங்களுக்கு முன்வுவது பின்வுவது அந்தக்காரியம் நடந்ததாக நிச்சயஞ் செய்யலாம் அப்படியே உத்தேசம் கஅஙசூ-ம் வருஷத்தில் ஒருசெய்கை நடந்ததாக ஒருவன் சொன்னல் கஅஙக-கஅஙஉ-கஅஙங இந்த வருஷங்களில் அே செய்கை நடந்திருக்கலாமென்று நிச்சயிக்கலாம். (கஅருஅவுல-நம்-ரு அ-ப-கசரு.)

அ. ஒருவியாச்சியத்தில் விவாதப்படுகிற சொத்துக்கு அந்த வியாச்சியத்தில் சேராத ஒருவன் பாத்தியஸ்தனென்று தீர்ப்பில் ஸ்தாபிப்பது அயுக்தமானதால் அந்தத் தீர்ப்பினல் தன்பாத்தியம் பூரணஸ்தாபகமாய்விட்டதாக அவன் வேறொரு வியாச்சியத்தில் கஷி சொல்லக்கூடாது. (கஅருகூவுல-நம்-ககூங-கஅசூ0வுல-ப-அ0.)

அப்பீல்-ஙச.....
கடன் பத்திரம்-உ-கள.....

இவைகளைப்பார்க்க.

சுடன்.

க. அ-என்பவன் இடத்தில் இ-என்பவன் சிலதொகை சுடன் வாங்கினன். அந்தக் சுடனை உ-என்பவன் தீர்ன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான் உ-என்பவனுக்கு இ-என்பவன் தகுந்த ஈடுகொடுக்காமல் மோசம்பண்ணினபோதிலும் உ-என்பவன் ஒப்புக்கொண்டபடி அவன் அ-என்பவனுக்குத் தொகை கொடுக்கப் பட்டிருக்கிறன். (சஅருகூஹப-ப-உசு.)

உ. சுடன்வாங்கினவன் ஜீவந்தனபிருக்கும்போது அவனுடைய பெண்சாதியையும் பிள்ளையையும் அந்தக் சுடனுக்குப் பாத்தியப் படுத்தக்கூடாதென்பது தர்மசாஸ்திரப் பிரமாணம். (சஅருஐ ஹநி நம்-சுசு.)

கூ. சுடன்பத்திரம் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கின் றதோ அந்த உத்தமர்ணனுக்கே அதமர்ணன் தொகை செலுத்த வேண்டும். பத்திரத்தில் பிரஸ்தாபிக்கப்படாதவனும் பத்திரஸ்வா தினம் இல்லாதவனுமான கூ-வது மநுஷனிடத்தில் தொகை கொ டுத்தினதாக அதமர்ணன் சொல்லி அந்தச்செல்லை கூ-வது மநுஷன் ஒப்புக்கொண்டாலுங்கூட அது, அநுபயோகம் கூ வது மநுஷன் கூ உத்தமர்ணனுக்கு அவிபக்த காயாதபாயிருந் தாலுங்கூட அந்த உத்தமர்ணனுடைய அநுமதி இல்லாமல் கூ-வது மநுஷனிடத்தில் தொகை செலுத்துவது அயுக்தம். (சஅருகூஹப-நம்-சச.)

ச. குடும்ப உபயோகார்த்தமாக ஒரு சோதரன் வாங்கினகட னுக்குமட்டும் அவனுடைய அவிபக்த சகோதரனும் மற்ற சமா ம்சகர்களும் பாத்தியப்படவேண்டும் அவனுடைய சொந்தச் செ லவுக்காக அவன் பட்டகடனுக்கு அவன்மட்டும் பாத்தியப்படக் கடவான். (சஅருஐஹப-நம்-கரு-உள.)

ரு. அவிபக்த குடும்பத்தில் கர்த்தாபட்ட கடனுக்கு மற்ற பாகஸ்தர்களைப் பாத்தியப்படுத்தக்கூடாது (சஅருசுஹப-நம்-சுபு.)

சுரு. புத்திரன் பட்டகடனுக்குப் பிதாவையிழுப்பது குடும்பஸ்தி தியையாவது உத்தரவாதப் படுத்தக்கூடாது. (சஅருருஹப-நம்-அகூ.)

எ. அவிபக்த குடும்பத்தில் ஒருவன் பட்டகடனுக்கு அவனு டைய பாகஸ்திதியைமட்டும் பாத்தியப்படுத்தலாம். (சஅருருஹப நம்-சகசூ-சகச-சஅசுஐஹப-நம்-சுசு-ப-உசுள.)

அ. பாத்தியஸ்தர்களுக்குப் பூர்வார்ஜிதம் எவ்வளவு கிடைத்திருக்கிறதோ அவ்வளவுமட்டுக்குத்தான் அவர்கள் பூர்வீகக்கடனுக்குப் பாத்தியப்படவேண்டும் பூர்வார்ஜிதத்துக்கு மேற்பட்ட கடனுக்கு அவர்கள் ஜவாபுதாரிகள் அல்ல. (கஅருள வரு-நம்-உஉ-உங.)

கூ. ஒரு விதந்துவினுடைய வீட்டில் அவளுடைய சகோதரன் கூட இருந்துகொண்டு அவளுடைய குடும்பக்காரியங்களை விசாரணை செய்வதைக்கொண்டு அவளுடைய புருஷன் பட்டகடனுக்கு ஷை சகோதரனைப் பாத்தியப்படுத்தக்கூடாது. (கஅருள வரு-நம்-அ.)

கo. வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டிய கடனை வாதியிடத்திலே பிரதிவாதி செலுத்தவேண்டும் அந்தக்கடனை வாதியின் அநுமதிப்பத்திரம் இன்றி வாதியின் கடன்காரனிடத்திற் கொடுத்துவிட்டதாகப் பிரதிவாதி சொல்லுந் தர்வாதம் வியர்த்தமே. (கஅருச வரு-நம்-கூஅ.)

கக. விவாத கடனுக்காக வாதிக்குத் தான் சிலதொகை செலுத்தியிருப்பதாகப் பிரதிவாதி சொன்னால், அந்த விஷயத்தைப்பற்றி அந்த வியாச்சியத்தில் தாமே விசாரித்துத் தீர்மானஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் பிரதிவாதி செலுத்தினதாகச் சொல்லுந் தொகையைப்பற்றி வேறேவியாச்சியஞ் செய்யும்படி பிரதிவாதிக்குக் கோர்ட்டார் உத்தரவு கொடுத்திருந்தாலுங் கூட அந்தத் தொகையைப்பற்றிப் பிரதிவாதி செய்யும்வியாச்சியஞ் செல்லாது. (கஅருகூ வரு-நம்-ககஅ-ப-களச.)

கஉ. மகமது சாஸ்திரப்படி அவிபக்த குடும்பத்தில் ஒரு மகமது மதஸ்தன் பட்டகடனுக்கு அவனுடைய அவிபக்த சகோதரர்கள் முதலான சமாம்சகர்கள் உத்தரவாதிகள் அல்ல ஆனால் அவர்கள் பிதிதரூபமாய்த் தங்களுடைய உத்தரவாதத்தை ஒப்புக்கொண்டிருந்தால் அப்போது அந்தக்கடனுக்கு அவர்களும் ஜவாபுதாரிகள்தான். (கஅருச வரு-நம்-உங.)

கஙூ. க-உ-பிரதிவாதிகள் அவிபக்த தாயாதிகள் உ-ம் பிரதிவாதி பால அவஸ்தையில் இருக்கும்போது குடும்ப வியாபகனை முதற் பிரதிவாதி நிலம் வாங்கவேண்டியதற்காக வாதியிடத்திற் கடன் வாங்கினன். அந்தப்பணத்தைக்கொண்டு முதற் பிரதிவாதி நிலம் வாங்காமல் உ-ம் பிரதிவாதிக்குத் துரோகஞ் செய்தபோ

திலும் குடும்ப வியாபகனை முதற் பிரதிவாதியால் வாங்கப்பட்ட கடனுக்கு உ-ம் பிரதிவாதியும் பாத்தியப்படவேண்டும். (கஅசூ0 ஹூப-நம்-களக.)

கச. சரீர வியோகமாய்ப்போன பக்கார் ஆஜீனென்பவனல் வாங்கப்பட்ட கடனைப்பற்றி அவனுடைய புத்திரர்கள் மேலும் அவனுடைய சகோதரன் பிள்ளைகள் மேலும் வாதி வியாச்சியம் ஆடினன். வியாச்சிய காலத்துக்கு முந்தின கஉ-வருத்துக்குள் வாதியின் பாத்தியத்தை லெ பக்கார் ஆஜீயின் புத்திரர்கள் ஒப்புக்கொள்ளாததால் அவர்கள் சம்மந்தப்பட்டவனையில் கால நிர்ணய தோஷத்தால் வாதியின் வழக்கு மலினமாய்ப்போனதாகவும் மத்தியகாலத்தில் லெ பக்கார் ஆஜீயின் சகோதரன் புத்திரர்கள் லெ கடனை ஒப்புக்கொண்டு அதற்காக அவர்கள் வாதிக்குச் சில தொகையைக் செலுத்தியிருப்பதால் அவர்கள்மட்டும் வாதிக்குத் தொகை கொடுக்கவேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது. (கஅசூ0 ஹூப-நம்-ககூ அ-கஅசூக ஹூற்-ப-கக.)

கரு. ஒருவன் கடன்வாங்குங்காலத்தில் அவனுடைய சகோதரர்கள் வேறே யோகட்சேமமாகவும் பிரத்தியேகமாய் வியாபாரஞ் செய்துகொண்டும் வருவார்களானால், அவர்களை அந்தக்கடனுக்குப் பாத்தியப்படுத்தக்கூடாது. அவர்கள் எல்லாரும் அவிபக்தரானென்று வாதி சாதித்தால் அந்தப்பிரகாரம் அவன் நிரூபிக்கவேண்டும். (கஅசூ0 ஹூப-நம்-கூ0உ-கஅசூக ஹூற்-ப-உகூ.)

கசூ. குடும்ப வியாபகர்களால் வாங்கப்பட்ட கடன் குடும்பப்பிரயோஜனத்திற்காக வாங்கப்பட்டதல்லவென்று ரூபிக்கப்படுமிறவரையில் குடும்பப்பிரயோஜன நிமித்தமே அந்தக்கடன் வாங்கபட்டதாக ஊகிக்கவேண்டும். (கஅசூ0 ஹூற்-நம்-கஉ அ-கஅசூக ஹூற்-ப-உரு.)

கள. குடும்பவியாபகன் அவனுடைய சொந்த உபயோகத்துக்காக வாங்கின கடனுக்குக் குடும்பஸ்திதி பாத்தியப்படமாடாது. (கஅசூ ஹூப-நம்-கூள-கஅருசூ ஹூற்-நம்-சூரு.)

கஅ. குடும்ப விசாரணைசெய்கிற காரணவன் குடும்பப்பிரயோஜன நிமித்தம் வாங்கினகடனுக்குத் தார்வாடு குடும்பஸ்திதி பாத்தியப்படவேண்டும் அந்தக்கடன் வாங்குவதற்கு இதர பாகஸ்தர்களின் சம்மதியாவது கையெழுத்தாவது அநாவசியம். (கஅருஉ ஹூப-நம்-கூஅ-கஅருசூ ஹூற்-நம்-சூரு-கஅருஅ ஹூற்-நம்-ருசூ-ப-கஅ0-)

கஙூ. பிரதிவாதியின் பிதர்வ்ஷினுடைய புத்திரிகையான இறந்து போன ஜீவுபாயியால் வாங்கப்பட்ட கடனைப்பற்றிப் பிரதிவாதிமேல் வாதி வியாச்சியஞ்செய்தான். பிரதிவாதியின் ஸ்வீகாரப்பிதாவின் மேல் ஷை ஜீவுபாய் ஆஸ்திகளைப்பற்றிக் கோர்ட்டில் ஒரு தர்வியாச்சியம் ஆடிக்கொண்டுவந்தகாலத்தில் அவளால் ஷை கடன்வாங்கப் பட்டிருப்பதால் அந்தக்கடனுக்குப் பிரதிவாதியைப் பாத்தியப்பதித்தக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசுஂஐஙூ-நம்-சுஙசு-கஅசுஙக-ப-சூஅ.)

உ0. கடன்கொடுத்தவன் வட்டிக்குப்பதிலாய் நிலத்தை அநுபவிக்கிறதென்று கடன்பத்திரம் பிறந்து சிலகாலத்துக்குப் பிற்பாடு ஷை நிலத்தின் அதிகவாநுமானத்தை அசலுக்காகவும் வரவுவைக்கிறதென்று ஷை கடன்காரன் கடன்பட்டவனுக்கு உடன்படிக்கை யெழுதிக்கொடுத்து அந்த அதிகவாநுமானத்தினல் அசல் தீர்ந்துபோய்விட்டால் பிற்பாடு அந்த அசலைப்பற்றி ஷை கடன்காரன் வியாச்சியஞ்செய்யக்கூடாது. (கஅசுஂஇ-நம்-சூ-க.அசுஙக-ப-சூஉ.)

உக. கடன்வாங்கினவன் அபுத்திரவாயுப் மாண்டுபோனல் அந்தக்கடனுக்கு அவனுடைய ஸ்திரியைமட்டும் பாத்தியப்படுத்தவேண்டுமே அல்லாமல் அவன் பெண்ணைக்கொண்ட மருமகனையும் பாத்தியப்படுத்தக்கூடாது. ஏனென்றால் மருமகன் இறந்துபோனவனுடைய பாத்தியஸ்தர்களின் வரிசையைச் சேர்ந்தவன் அல்ல, இறந்துபோனவனுடைய சொத்து மருமகனுக்குக்கிடைத்திருக்கிற பட்சத்தில் தீர்ப்பு நிறைவேற்றுங்காலத்தில் அந்தச் சொத்தைமட்டும் ஷை கடனுக்குப் பாத்தியப்படுத்தலாமே அல்லாமல் அந்த ஆதாரத்தைக்கொண்டு மருமகனையும் பாதியப்படுத்தக்கூடாது. (கஅசுஂ (வீ)-நம்-நிகக-கஅசுகவ ப-எசு.)

உஉ. வாதியிடத்தில்-சு-வது மநுஷனல் வாங்கப்பட்ட கடனைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டதாக வாதி வியாச்சியஞ்செய்கிற பட்சத்தில் அந்த-சு-வது மநுஷனையும் பிரதிவாதியாகச் சேர்க்கவேண்டும். (கஅநிசூ வீ-நம்-ககஉ-கஅநிஎ வீ-ப-கசு.)

உசு. ஒரு அவிபக்தனல் வாங்கப்பட்ட கடனுக்கு அவனுடைய பாகஸ்திதியைமட்டும் பாத்தியப்படுத்தலாம். (கஅசுஂ வீ-நம்-சூக-ப-உசுஎ.)

உச. பாகஸ்தர்கள் அவிபக்தர்களாயிருக்கும்போது குடும்ப உபயோகத்துக்காக அவர்கள் கடன்வாங்கியிருக்கிற பட்சத்தில் பிற்பாடு அவர்களுக்குள் பாகமாய்விட்டாலுங்கூட அந்தக்கடனை அவர்கள் எல்லாரும் உத்தரிக்கவேண்டும். (கஅகச ஹ)-நம்-எ.)

உரு. ஒரு குடும்பத்திற் சிலர்பட்டகடனுக்கு அந்தக் குடும்பத்திலிருந்து விபக்தர்களாய்ப்போனவர்கள் பாத்தியப்படவேண்டியதில்லை. (கஅருகூ ஹல-நம்-உ0அ-கஅசு0 ஹ)-ப-ருக.)

உசூ. ஒருவன் தன்னுடைய தாயார்பட்டகடனுக்காக அவனுடைய பென்சியனை பெந்தகம்வைத்திருக்கிறபட்சத்தில் அவன் இறந்துபோய் அந்தப்பென்சியன் அவனுடையபுத்திரர்களுக்குக் கிடைத்தாலுங்கூட அவர்கள் அந்தக்கடனை உத்தரிக்கவேண்டியதில்லை. அந்தக்கடனுக்குப் பென்சியன்மட்டும் பந்தகமாயிருப்பதால் அதைத்தவிர வேறேயாதொரு ஆஸ்தியையும் பாத்தியப்படுத்தக்கூடாது. (கஅஉக ஹ)-நம்-சு.)

உஎ. சமாம்சகர்களாகிய பிரதிவாதிகள் வாதிக்குக் கொடுக்கவேண்டிய குடும்பக்கடனை அவர்களில் ஒருவன் கொடுக்கிறதென்று ஆதாரவுபிறந்து அந்த ஆதாரவின் பிரகாரம் வாதி செய்த வியாச்சியத்தில் அந்த ஆதாரவைத்தள்ளித் தீர்ப்பாகிற பட்சத்தில் எல்லாப்பாகஸ்தர்களிடமிலும் வாதி வேறேவியாச்சியஞ் செய்ய வேதீர்ப்பிஞல் பிரதிபந்தம் இல்லை. (கஅருரு ஹநம்-அள-ப-உ0ரு.)

உஅ. தையலம்மை கொடுக்கவேண்டிய கடனைப் பிரதிவாதி கொடுப்பதாகப் பரவசஞ் சொன்னபடியால் அந்தத் தொகையை வாங்கித்தரவேண்டுமென்று வாதி பிரார்த்தித்தான். வேறு கடனைத் தையலம்மை தனக்கு உத்தரிக்கிறதென்கிற சங்கற்பத்தின்மேல் அதைத்தான் ஒப்புக்கொண்டதாகவும் அந்தத் தொகைக்காக அவள்மேல் தான்செய்த வியாச்சியம் அபஜயமாய்ப் போய்விட்டதால் வாதி வியாச்சியத்துக்குத் தான் பாத்தியப்படவேண்டிய தில்லையென்றும் பிரதிவாதி பிரதிநியாயம் பேசினன் பிரதிவாதிக்குத் தையலம்மை தொகை கொடுத்தால்மட்டும் வாதிக்குப் பிரதிவாதி பாத்தியப்படுகிறதென்று ஏற்பாடு நடந்திருப்பதாக ருஜுவாகாதபடியாலும் வாதியின் கடனைக் கொடுப்பதாகப் பிரதிவாதி நிசங்கேதமாய் ஒப்புக்கொண்டபடியாலும் வாதிக்குப் பிரதிவாதி பணங் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅசு0 ஹ)-நம்-கூஎ-ப-உ2க.)

உகூ. பிதாவினுடைய சொத்து புத்திரனுக்குக் கிடைத்திருக்கி றபட்சத்தில் அந்தச் சொத்துக்குச் சரியான பிதாவின் கடனைப் புத்திரன் உத்தரிக்க வேண்டும். புத்திரனுக்குக் கிடைத்த பிதிர்ஸ் திதி பிற்பாடு கெட்டு நஷ்டமாய்ப் போனாலுங்கூடப் புத்திரனுடைய உத்தரவாதம் நீங்கமாட்டாது. (கதுருக வுரு)-நம்-உஉஉ-கதுசுo(வுப ப-எஅ.)

கூo. தார்வாடு குடும்பச்சொத்தைப் பங்கம்வைத்துக் காரண வன் சிலரிடத்திற் கடன்வாங்கினன். அந்தக்கடனில் அதிகபாகம் குடும்பச்செலவுக்காக வாங்கப்பட்டபடியாலும் மற்றப்பாகம் மோ சமாய் வாங்கப்பட்டதாக விசதமாகாதபடியாலும் ஷ பங்கம் நிரமமானதென்று ஸ்தாபிக்கப்பட்டது. (கதுருசுவுல - நம்-உகூ-ப-ஙசை.)

கூக. கடனைப்பற்றி முதற்பிரதிவாதிமேல் வாதிசெய்த வியாச் சியத்தில் அவர்கள் ராஜிநாமா தாக்கல் செய்துகொண்டதாகவும் அந்த ராஜிநாமா நிபந்தனைப்படி வாதிக்கு முதற்பிரதிவாதி தொ கை கொடுக்கத்தப்பிப்போனால் அந்தத் தொகையை உ-ம் பிர திவாதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாதியின் கணக்கில் கையெ ழுத்து வைத்ததாகவும் அந்தப்படி உ-ம் பிரதிவாதியால் தொகை கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாச்சியங் கொண்டுவந்தான். அந்த வியாச்சியத்தை உ-ம் பிரதிவாதி மூற்பிலும் நிராகரித்தான். ஒருதரம் வியாச்சிக்கப்பட்டு ராஜிநாமாமூலமாய்த் தீர்த்துபோன விஷயத்தைப்பற்றி மறுபடியும் வாதி வியாச்சியஞ் செய்தது சுத்த ஆபாசமென்று வாதிவழக்குப் பிரதிகூறிக்கப்பட்டது. (கதுருஉ வுரு)-நம்-கூஉ.)

கூஉ. பிரதிவாதியிடத்தில் அடைக்கலமாய் வைக்கப்பட்ட நகைக ளின் கிரயத்தைப்பற்றி வாதி வியாச்சித்தான். வாதி தனக்குக்கொ டுக்கவேண்டிய கடனுக்காக அந்த நகைகள் ஈடுவைக்கப்பட்டதாக வும் அந்தக் கடனைப்பற்றிக் தான் வியாச்சியஞ் செய்திருப்பதாக வும் பிரதிவாதி எதிர்வாதஞ் கூறினான். இவ்வளவு தொகை தன க்குக் கிடைக்கவேண்டியதென்று பிரதிவாதி எண்பிக்கத் தப்பிப் போய் அந்தக் காரணத்தினால் அவனுடைய வியாச்சியங் தள்ளு படியாயிருந்தாலுங்கூடக் கடனுக்காகவே வே நகைகள் ஈடுவை க்கப்பட்டதாக நிகரிசனப்பட்டபடியால் வாதியின் வழக்கு செல்

லாதென்று நிஷ்டிக்கப்பட்டது. (க அகூ0வது-நம்-ங-ப-உஎக-நம்-ஙி-ப-உஎங.)

அங்கீகார விபரீதம்-க.....	பாகம்-ஙிக.....
அதிகார வரம்பு-உக.....	பாலுன்-உ-எ.....
அவிபக்த குடும்பம்-க.....	பூர்வார்ஜிதம்-ஙி.....
உடன்படிக்னை-ங.....	மக்கான்-க.....
கடன்பத்திரம்-கள.....	வக்கில்-ஙள..... .....
கணக்கு-ங.....	வட்டி-கூ.....
கிரயம்-சு.....	விசாரணைக் கர்த்தன்-க.....
ஜமீன்தார்-கஅ-உ0.....	

இவைகளைப்பார்க்க.

கடன்பத்திரம்.

க. பீ-என்பவனுல் சீ-என்பவனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரத்தின் தொகையைக் கொடுப்பதாக எ-என்பவன் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் அவனுல் தொகை கிடைக்கவேண்டுமென் றுஞ் செய்யப்பட்ட வழக்கில் அந்தத் தொகைக்கு எ-என்பவன் உத்தரவாதி யல்லவென்றும், சீ-என்பவனுடைய அலட்சியத்தினு லும் அவனிடத்தில் எ-என்பவன் நம்பிக்கையாய்க் கொடுத்திரு ந்த ஆதாரவுகளை வாங்கவேண்டியதற்காகவும் மேற்கண்டபடி எ-என்பவன் தொகை கொடுப்பதாகக் காரணர்த்தமாய் ஒப்புக்கொ ண்டதாகத் தெரியவருவதினுலே அவன் அந்தத்தொகைக்கு பாத் தியப்படவேண்டியதில்லையென்றும் சதர்க்கோர்ட்டாரவர்கள் தீர் மானித்தார்கள். (கஅகசவது-நம்-ககூ.)

உ. பத்திரங்கள் தீரவில்லையென்பதற்கு அவைகளைப் பெற்று க்கொண்டவன் கையில் அவைகள் இருப்பதுவே பலமான திரு ஷ்டாந்தம். தீர்ந்த பத்திரங்களைவாங்கிப் பரிகரிக்கிற வழக்கம் இல்லையென்று பிரதிவாதி சொல்லுங்கட்சி சுத்த அநுசிதம். (கஅஉக வது-நம்-க0-கஅருஙவது-நம்-எஉ.)

ஊ. வாதி வழக்குக்கு ஆதாரமான பத்திரம் கவர்ன்மென்று ரவர்களை மோசஞ்செய்வதற்காகப் பிறந்ததென்று ஒரு எதிர்க டைச் சீட்டைக்கொண்டு பிரதிவாதிகள் ஸ்தாபித்ததினுல் தொ

கைகொடுத்து விவாதபத்திரத்தைப் பெற்றுக்கொண்டதாக நிரூபிக்கவேண்டியது வாதியின் கடமையென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅகசஙஇ-நம்-உ0.)

ச. பத்திரங்கள் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களே எழுதிக்கொண்டு பூரணஞ்செய்யும்படி வெற்றுக்காகிதங்களில் கையெழுத்தும் முதலிரையுமட்டும் வைத்துக்கொடுத்ததாக ஒருவன் ஒப்புக்கொண்டால் அந்தப் பத்திரங்கள் செல்லத்தக்கனவைகளே. (கஅகஉஙஇ-நம்·கசூ.)

ரு. ஒரு பத்திரத்தை மேலோவர் வாங்கினவன் அந்தப் பத்திரப்படி தனக்குத் தொகை கிடைக்கவேண்டியதென்று நிரூபிக்கக் கடமையுள்ளவனாயிருக்கிறான். அந்தப்பத்திரம் அவன் கையிலிருப்பதுமட்டும் போதாது. (கஅகஙஇ-நம்-சூ.)

சூ. ஒருவன் தகுந்த வயதில்லாதகாலத்தில் எழுதிக்கொடுத்த பத்திரத்துக்குத் தகுந்த வயதுவந்தபின்புகூட உத்தரவாதியாகமாட்டான். (கஅசஎஙஇ-நம்-சூஎ.)

எ. லிகிதமூலமான பத்திரத்துக்காகத் தொகை செல்லாயிருப்பதற்கு எழுத்துமூலமான ரசீதுகளாவது, அல்லது ஷை பத்திரத்தின்மேல் வரவாவது வைத்திருக்கவேண்டுமென்பது ஹிந்து தர்மசாஸ்திரவிதியாயிருக்கின்றது. (கஅஉகஙஇ-நம்-எ.)

அ. குடும்ப வியாபகனல் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம் யதார்த்தமாகவும் இதர பாகஸ்தர்களுடைய சம்மதத்தின்மேல் அவர்களுக்கு அநுகூலமாகவும் பிறந்திருக்குமானல் அதில் மற்றப்பாகஸ்தர்களுடைய கையெழுத்து இல்லாமல் இருந்தாலுங்கூட அந்த ஆதாரவுக்கு அவர்களும் பாத்தியப்படவேண்டும். (கஅருஉஙஇ-நம்-கூஅ.)

கூ. ஒரு பத்திரமானது அதைப் பெற்றுக்கொண்டவன்கையில் இருக்குமானல் அவன் வரவுவந்ததாக ஒப்புக்கொள்ளுகிற தொகைபோக பாக்கித்தொகைக்கு ஷை ஆதாரவை எழுதிக்கொடுத்தவன் பாத்தியப்படவேண்டும். அந்தப்பத்திரம் பூரணமாய்த் தீர்த்துபோனதற்கு எழுத்துமூலமான ருஜு இருந்தால்மாத்திரம் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளலாமே அல்லாமல் வாய்மொழி ருஜுவை அங்கீகரிக்கக்கூடாது. (கஅருஎஙஇ-நம்-கருஅ-கஅருஅஙஇ-ப-உஉ.)

கo. ஒரு பத்திரத்துக்காகச் செல்லான தொகைகள் விகிதமுமான ரூஜ-விலேயே ஸ்தாபிக்கப்படவேண்டும். (கஅருகூஙஅ நம்-ககசூ-ப-உருகூ.)

கக. கடன்விஷயத்தில் பத்திர நிபந்தனைப்படி நடக்கவேண்டியதே அல்லாமல் அதற்கு முன்பாக நடந்த செய்கைகளைக் கொண்டு பத்திர நிபந்தனையை அழிக்கக்கூடாது. (கஅஉஅ ஙஅ-நம்-உ.)

கஉ. ஒரு பத்திரம் கருந்தபடி ரூஜ-வாகவேண்டியதே அல்லாமல் அதில் போட்டிருக்கிற கையெழுத்தும் வேறொரு ஸ்தாவேஜில் போடப்பட்டிருக்கிற கையெழுத்தும் ஒரேமாதிரியாயிருப்பதைக்கொண்டுமாத்திரம் அந்தப் பத்திரத்தை ஸ்தாபிக்கக்கூடாது. (கஅருருஙஅ-நம்-சூக-கஅருஅஙஅ-நம்-கசo.)

கங. பத்திரத்தைப் பெற்றுக்கொண்டவன் அதற்காக வேறொருவன் இடத்தில் பணம் பற்றிக்கொண்டு மேடோவர் செய்கிற பட்சத்தில் அந்தப் பத்திரத்தை ஆதியில் எழுதிக்கொடுத்தவன் சம்மதி வேண்டியதில்லை. (கஅருபஙஅ-நம்-கo.)

கச. ஒரு பத்திரம் பிறந்தபிற்பாடு அந்தப் பத்திரத்தை எழுதிக்கொடுத்தவனுக்கும், பெற்றுக்கொண்டவனுக்கும், வேறே பற்றுவரவுகள் நடந்தபோதிலும் அந்தப் பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டியதைப்பற்றி அதைப் பெற்றுக்கொண்டவன் வியாச்சியங் கொண்டுவரலாம். (கஅருஅஙஅ-ப-எஉ.)

கஙு. ஒருபத்திரம் ரூஜ-வாகாவிட்டால் அதைப் பிரதிவாதி ஆஜராகி ஆட்சேபிக்கவில்லையென்கிற நிமித்தத்தைக்கொண்டுமாத்திரம் அவனுக்கு விரோதமாய்த் தீர்ப்பு செய்யக்கூடாது. (கஅருஅஙஅ நம்-எஅ.)

ககூ. முதற் பிரதிவாதி தான்மாத்திரம் பத்திரத்தின் தொகையை வாதிக்கு உத்தரிக்கவேண்டியதென்று ஒப்புக்கொள்ளுகிற பட்சத்தில் அவன் மாத்திரம் அந்தப் பத்திரத்திற்குப் பாத்தியப்படவேண்டும். முதற் பிரதிவாதியின் ஆன்சர் தனக்குஞ் சம்மதமென்று உ-ம் பிரதிவாதி அதின்மேல் எழுதியிருப்பதைக் கொண்டு அந்த உ-ம் பிரதிவாதியையும் ஷ பத்திரத்திற்கு உத்தரவாதியாக்கக்கூடாது. (கஅருஅஙஅ-ப-கஉக.)

களு. ஒருவன் தான் கடன்வாங்கினதாகக்கண்டு பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் சிலவேலைசெய்கிறதென்கிற வாக்குக் கரா

ரின்மேல் அந்தப் பத்திரம் பிறந்ததாக அவன் சொல்லுங் கட்சி யை ஒப்புக்கொள்ளக்கூடாது. (கஅருஅவ)-நம்-கசஙட-ப-உகங.)

கஅ. ஒருவனை வீட்டுக்குள் அடைத்து பலவந்தமாய் அவனி டத்தில் வாங்கப்பட்ட பத்திரம் செல்லாது. (கஅருகவ)-நம்-ஙஅ-ப-கசக.)

ககூ. வாதியிடத்தில் பிரதிவாதி ரூபா-கoo கடன் வாங்கிக்கொ ண்டு வாதிக்கு ஒரு கடன் சீட்டு எழுதிக்கொடுத்தான். வாதியின் கிராமத்தில் ஜலம் பாய்வதற்காக வாய்க்கால் வெட்டும்படி பிரதி வாதி எப்படியாவது சர்க்காரிடத்தில் உத்தரவு வாங்கிக்கொடுத் தால் மே கடன்பத்திரம் ரத்தாய்ப்போகிறதென்று அந்தத்தேதி யிலே பிரதிவாதிக்கு வாதி ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தான். அதிற்கண்டபடி பிரதிவாதி சர்க்காரிடத்தில் உத்தரவுவாங்கத் தப்பி ப்போய்விட்டதால் டிக்கிரத்தின்தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டான். பிரதிவாதி பட்டாமணியகாரனதால் லஞ்ச வியமாக விவாதபத்திரம் பிறந்ததென்றும் அப்போப்பட்ட பத்தி ரத்தை உறுதிப்படுத்துவது நீதி அல்லவென்றும் அபிப்பிராயப்ப ட்டு சதர்க்கோர்ட்டார் வாதிக்குப் பிரதிகூலமாய்த் தீர்ப்பு செய்தார் கள். (கஅருஙவப)-நம்-அஙஉ-ப-கருங.)

உo. பத்திரம் பிறந்த இடத்திலாவது, வியாச்சிய ஆரம்பகாலத் தில் பிரதிவாதி இருக்கும் இடத்திலாவது வாதி வியாச்சியஞ்செய்ய லாம். பத்திரம் வியாச்சியமூலமே அல்லாமல் பத்திர நிபந்தனைப் படி பிரதிவாதி நடக்கத்தப்பிப்போன செய்கையானது, வியாச்சிய மூலம் அல்ல, பத்திரத்தின் கெடிக்காலத்தில் பிரதிவாதி எந்த இடத் தில் இருந்தாலென்ன அந்த இடத்தில் வியாச்சியஞ்செய்யக்கூடாது. (கஅருகவ)-நம்-கூரு-ப-கசஅச.)

உக. பழைய பற்று வரவுக் கணக்கின்மேல் பாக்கியானதொகைக் குப் பிரதிவாதி கடன்பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும் அதின் தொகை கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாச்சியஞ்செய்தான். பழைய பற்று வரவுக் கணக்கிலில் தன்மேல் பாக்கியாகவில்லையெ ன்றும் வாதி கடன் கொடுப்பதாகச்சொல்லி விவாத பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதாகவும், பிற்பாடு வாதி தொகை கொடுக்கவில்லை யென்றும் பிரதிவாதி வாதாடினான். அந்தப்படி பிரதிவாதி ரூபிக்கத் தப்பிப்போய்விட்டதால் அவன் ஒப்புக்கொள்ளுகிற விவாத பத்தி

ரத்தின்தொகையை அவன் கொடுக்கவேண்டியதென்றும் அந்தத் தொகை பழைய பற்று வரவின் பாக்கியாயிருந்தபோதிலும் ரொக்கக்கடன் வாங்கிக்கொண்டதுபோல விவாத பத்திரத்தில் கண்டிருப்பது தேசவழக்கத்துக்கு ஒத்ததாயிருப்பதால் அது நிஷ்களங்கமானதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கஅருகூஙூ-நம்-கஎ0-கஅசு0ஙூ-ப-கஙூ.)

உஉ. மகமது சாஸ்திரப்படி எழுத்துமூலமான பத்திரம் தீர்ந்துபோனதை ரூபிக்கிறதற்கு வாக்குமயமான சாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅருகூஙூ-நம்-உ0உ-கஅசு0ஙூ-ப-ரு0.)

உஊ. ஹிந்து தர்மசாஸ்திரப்படிக்குங் கோர்ட்டுகளின் ஒழுங்குப்படிக்கும் விதித ரூபமான பத்திரம் தீர்ந்துபோனதற்கு வார்த்தாரூபகசாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. (கஅருகூஙூ-நம்-கஅள-உ0க, கஅசு0ஙூ-நம்-உ0-கசக-ப-அஊ-க உ0-உஊச-உசஉ. கஅசு0ஙூ-நம்-ககூ0-உஊஅ, கஅசுகஙூ-ப-சு-கசு.)

உச. வாதிக்குத் தகுந்தவயது இல்லாதகாலத்தில் அவனுக்காக அவனுடைய போஷகனை ஈ-ம் பிரதிவாதி பெயரால், க-உ-பிரதிவாதிகளின் தகப்பனல் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தின் தொகை கிடைக்கவேண்டியதற்காக வாதி வியாச்சியந் தொடர்ந்தான். ஷ பத்திரம் ஈ-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அது வாதிக்காகவே பிறந்ததானென்பதை அறியும்பொருட்டு பத்திரவாசகத்துக்கு விரோதமான வாசாசாட்சியத்தை அங்கீகரிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசு0ஙூ-நம்-ஈஉ-ப-கஉச.)

உரு. அ-என்பவன் இ-என்பவனுக்குக் கடன்கொடுத்து உ-என்பவன்பேருக்குப் பத்திரம் வாங்கிக்கொண்டதாகவும் அந்தத் தொகையை இ-என்பவனிடத்தில் உ-என்பவன் பெற்றுக்கொண்டதிலுலே உ-என்பவனிடத்தில் அந்தத்தொகை கிடைக்கவேண்டுமென்றும் அ-என்பவன் வழக்குத்தொடர்ந்தான். ஷ பத்திரம் உ-என்பவன்பேருக்குப் பிறந்திருப்பதால் அதின் தொகையைப் பெற்றுக்கொள்ள தர்மசாஸ்திரப்படி உ-என்பவனே பாத்தியஸ்தனென்றும், அ-என்பவன் பட்சத்தில் ஷ பத்திரவாசகத்துக்கு விரோதமான வாய்மொழி ருஜுவை அங்கீகரிக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கஅசு0ஙூ-நம்-எகூ-ப-உகக.)

உசு. எந்தப்பத்திரத்தில் ரொக்கமாய்த் தொகை கொடுக்கப்பட்டதாகக் கண்டிருக்கின்றதோ அந்தப்பத்திரத்தின் யதார்த்தத்தை ஒருவன் ஒப்புக்கொண்டால் அந்தப்பத்திரத்துக்காகத் தான் தொகை பற்றிக்கொள்ளவில்லையென்று அவன் சொல்லுங் கட்சியைப்பற்றி வசநரூபமான சாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅநசுo ஹரி-நம்-சுசு-ப-உசுரு.)

உள. பத்திரம்பிறந்து ச-வருஷத்துக்குப் பின்பு பிரதிவாதியை வாதி எப்போது பணங்கேட்கிறானோ அதுமுதல் ஒரு வருஷத்துக்குள் வாதிக்குப் பிரதிவாதி பணங் கொடுக்கவேண்டுமென்று காரார் நடந்திருக்கிற பட்சத்தில் அந்தக் காலாவதிக்குப் பிற்பாடு தான் வாதி வியாச்சியஞ் செய்யவேண்டும். (கஅநிசுஹரி-நம்-நிo.)

உஅ. பணங் கொடுத்துப் பத்திரத்தை வாங்கிக்கொள்ளுகிறதென்று அந்தப்பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிற பட்சத்தில் அதற்காகச் செலுத்தப்பட்ட தொகைகளை அந்தப் பத்திரத்தின் மேல் வரவு வைத்திருக்கவேண்டுமே அல்லாமல் அதற்காக வார்த்தாபூர்வமான சாட்சியத்தை ஒப்புக்கொள்ளக்கூடாது. (கஅநருஹரி-நம்-கநிo.)

உக. இருவர்கையால் எழுதப்பட்டும் சாட்சிகள் கையெழுத்து இல்லாமலும் எழுதினவன்பெயர் காணுமலும் இருக்கிற பத்திரமானது தர்மசாஸ்திரப்படி செல்லாது. (கஅகசுஹரப-நம்-கக.)

கo. ஒரு பத்திரத்தில் சாட்சி கையெழுத்து இல்லாமலும் அதை எழுதிக்கொடுத்தவன் கையெழுத்து வைத்ததற்கும் பணம் பற்றிக்கொண்டதற்கும் ருசு இல்லாமலும் எழுதிக்கொடுத்தவனுடைய பாத்தியஸ்தர்களால் ஆட்சேபிக்கப்பட்டும் இருக்குமானால் அந்தப்பத்திரம் செலாவணி உள்ளதல்ல. (ஷி-நம்.)

கக. தன்னுடைய விபக்த சகோதரனை பிரதிவாதி எழுதிக்கொடுத்த பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்து அதைப்பற்றிப் பிரதிவாதி ஆட்சேபிக்கிற பட்சத்தில் கடன்பத்திரத்தின் யதார்த்தத்தைப்பற்றிமட்டும் கோர்ட்டார் விசாரிக்கவேண்டியதேதவிர உபயவாதிகளும் அவிபக்தர்களோ விபக்தர்களோ என்பதைப்பற்றி விசாரிக்கவேண்டியதில்லை. (கஅசுoஹரி-நம்-கசள-கஅசுகஹரி-ப-அ.)

கூஉ. வாதிக்குப் பிரதிவாதி ரூ-சூ00-க்கு கூ0000-மரக்கால் கொள்ளுகெடுவில் அளக்கிறதென்றும் அப்படி அளக்கத்தப்பினல் வாதி கேட்கிறதொகையை அவனுக்குப் பிரதிவாதி கொடுக்கிறதென்றும் வாதிக்குப் பிரதிவாதி பத்திரம் எழுதிக்கொடுத்து அதற்காக வாதியிடத்திற் பிரதிவாதி அச்சாரம் ரூ-உருக-வாங்கிக்கொண்டான். ஷ பத்திர நிபந்தனைப்படி கடக்குப் பிரதிவாதி தப்பிப்போய்விட்டதால் பிரியாதின்காலத்தின் விலைப்படி கொள்ளின் கிரயம் ரூ-சகநிச-கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்தான். வாதியின் யுக்தப் பிரகாரம் பணங் கேட்கும்படி ஷ பத்திரத்திற்கண்ட அபராத நிபந்தனையானது சுத்த அநியாயமானதால் அதைக் கோர்ட்டார் ஸ்தாபிக்கக்கூடாதென்றும் வாதியிடத்திற் பிரதிவாதி பெற்றுக்கொண்ட அச்சாரம் ரூ-உருகம் அதற்குள்ள வட்டியும் மட்டும் வாதிக்குக் கிடைக்கவேண்டியதென்றும் சதர்க்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். (கஅசூ0வூல-நம்-கூ0எ-கஅசூக வூப-ப-உஅ.)

கூகூ. வாதிக்குப் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன்பத்திரத்தில் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தொகையை அவன் கெடுவில்கொடுத்துவிட்டால் பிரதிவாதிக்கு வாதி சிலதொகையைத்தள்ளிக்கொடுக்கிறதென்று சங்கற்பிக்கப்பட்டிருந்தது. அந்தக்கெடுவில் வாதிக்குப் பிரதிவாதி தொகைகொடுத்தத்தப்பிப்போனதால் பத்திரத்தின் முழுத்தொகையைப்பற்றியும் வாதி வியாச்சியஞ்செய்தான். வாதியின் வழக்கு அபராத நிபந்தனையென்றும் தொழித்துக்குட்பட்டதல்லவென்று வாதிபட்சம் பூர்ணமாய்த் தீர்ப்பு செய்யப்பட்டது. (கஅசூ0வூ)-நம்-கூஎக-கஅசூகவூப-ப-கூஉ.)

கூச. பழைய கணக்குப்படி பாக்கியான தொகைக்குக் கடன்பத்திரம் பிறந்து அந்தக்கணக்கையுங் கடன்பத்திரத்தையும் வாதி தாக்கல்செய்திருக்கிற பட்சத்தில் அந்த வியாச்சியத்துக்குக் கடன்பத்திரம் முக்கியமேதவிரக் கணக்கு முக்கியமானதல்ல. கடன்பத்திரமட்டும் ருஜுவாயுள் கணக்கு ருஜுவாகாமற்போனலுங்கூட வாதி பட்சங் கோர்ட்டார் தீர்ப்புச்செய்யவேண்டும். (கஅசூ0வூ)-நம்-உசகூ-கஅசூகவூப-ப-எஅ.)

கூடு. பிரதிவாதி அ-என்பவனுக்கு எழுதிக்கொடுத்த கடன்பத்திரத்தை அவன்இடத்தில் வாதிமேடோவர்பெற்றுக்கொண்டு அந்த அ-என்பவனைப் பிரதிவாதியாய்ச் சேர்க்காமல் பிரதிவாதிமேல்மட்

நம் வாதிசெய்த வியாச்சியம் நிராட்சேபமாய் அங்கீகரிக்கப்பட்டது. (கஅசுo(வரு)-நம்-ஊஎo-கஅசுஉ(வரு)-ப-அஉ.)

ஊசு. வாதியினுடைய சிற்றப்பனை லிங்கப்பாவுக்குப் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பத்திரத்தின் தொகையைப்பற்றி வாதி வியாச்சியஞ்செய்தான். பிரதிவாதி தான் பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை யென்றும் லிங்கப்பாவுக்கு வாதியைத்தவிரப் பின்னுஞ் சில பாத்தியஸ்தர்கள் இருப்பதாகவும் தர்க்கித்தான். வாதி லிங்கப்பாவினுடைய பாத்தியஸ்தன் என்பதைப் பிரதிவாதி ஒப்புக்கொள்வதாலும் பத்திரம் வாதிகையில் இருப்பதாலும் அந்த வியாச்சியத்தில் பத்திரத்தின் உண்மையைப்பற்றிமாத்திரம் சாட்சி விளங்கவேண்டுமென்றும் லிங்கப்பாவினுடைய இதர பாத்தியஸ்தர்களின் பாத்தியத்தைப்பற்றி அந்த வியாச்சியத்தில் யோசிக்கவேண்டிய அகத்தியம் இல்லையென்றும் வாதிபக்ஷந் தீர்மானிக்கப்பட்டது. (கஅசுo(வரு)-நம்-உஅரு-கஅசுக(வரு)-ப-கூக.)

ஊள. பத்திரங்களைப் பிரதிவாதி திருடிக்கொண்டதாக வாதியும் தொகைசெலுத்தி அந்தப்பத்திரங்களை வாங்கிக்கொண்டதாகப் பிரதிவாதியுங் கட்சி பேசினர்கள். அந்தப்பத்திரங்களைப் பிரதிவாதி தாக்கல்செய்யாதபடியால் அவனுடைய பிரதிவாதம் துர்வாதமென்று ஊகிக்கப்பட்டது. (கஅருசு(வரு)-நம்-கசஅ.)

ஊஅ. விவாதபத்திரத்தை வாதி தாக்கல்செய்யத்தப்பிப்போனால் அதினிபந்தனைகள் பிரதிவாதிக்கு ஸ்வசாதகமென்று ஊகிக்கவேண்டும். (கஅருஅ(வரு)-நம்-கூரு-கஅருகூ(வரு)-ப-ககசு.)

ஊகூ. பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சித்தான் லே கடனுக்காகவும் பின்னுஞ் சில கடன்களுக்காகவும் தன்னுடைய நிலத்தை வாதிக்குத் தான் ஒற்றிவைத்து ஆதாரவெழுதிக் கொடுத்திருந்ததாகவும் பிற்பாடு அந்த ஒற்றியைத் தீர்த்து ஒற்றி ஆதாரவை வாங்கிக்கொண்டதாகவும் அது காணுமற்போனதாகவும் பிரதிவாதிசொல்லி அந்தப்பிரகாரஞ் சாட்சிகளால் நிரூபணஞ்செய்தான். நிர்ந்துபோன ஒற்றிவிஷயத்துக்கு விஷய சாட்சியம் இல்லாதபடியால் பிரதிவாதியின் கட்சி அங்கீகாரஞ்செய்யப்பட்டது. (கஅருகூ(வரு)-நம்-உoக-கஅசுo(வரு)-ப-அஊ.)

சo. பத்திரத்தின் தொகையைக்கொடுத்துப் பத்திரத்தைப் பிரதிக்கிரஹணஞ் செய்துகொண்டதாகவும் பிற்பாடு அதைப் பரிஹரித்து விட்டதாகவும் ஒருவன் கட்சிசொன்னால் அதைக் கோர்ட்டார் நம்பக்கூடாது. (கஅசுo(வரு)-நம்-ககஉ-ப-கசள.)

சக. பங்ககப்பத்திரத்தின் தொகைக்காக வாதிசெய்த வியாச்சியத்தின் உண்மையை முதற்பிரதிவாதி மௌனமாகவும் அவனுடைய புத்திரர்களான-உ-ஊ-பிரதிவாதிகள் கண்டோக்தமாகவும் ஒப்புக்கொண்டார்கள். ச-ம் பிரதிவாதி ஷ பங்ககச்சொத்து தனக்குப் பாத்யமென்றும் வாதியும் மற்றப்பிரதிவாதிகளும் உபேட்சையென்றும் எதிர்கட்சிபேசினன். ஷ பங்ககச்சொத்தின் உத்தரவாதத்தை வாதி ருஜுப்படுத்தாவிட்டபோதிலும் அவனுடைய கடனை ஒப்புக்கொள்ளுகிற-க-உ-ஊ-பிரதிவாதிகள் அந்தக்கடனுக்குப் பாத்தியப்படவேண்டுமென்று வாதிவழக்கு அநுகூலிக்கப்பட்டது. (கஅருஙவல-நம்-ஊக-ஙஊ-சக.)

சஉ. ஒருபத்திரத்தை மேடோவர் அல்லது பிரதிக்கிரஹணஞ் செய்துகொண்டு அதின்மேல் வியாச்சியஞ்செய்கிறவன் அதற்காகப் பணமுதலானதுகொடுத்து அதை மேடோவர்வாங்கினதாக ருஜுப்படுத்தவேண்டும். மேடோவர்செய்துவிட்டதாக அந்தப்பத்திரத்தின்மேல் எழுதி வாங்கிக்கொள்வது போதுமானதல்ல. (கஅஉஅவல-நம்-கசூ.)

சஙு. வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தொகையில் சில தொகையைத்தள்ளி பாக்கிக்காக வாதிக்குப் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பத்திரத்தில் அந்தத்தொகையைப் பிரதிவாதி கெடுவில்கொடுக்கிறதென்றும் அப்படிச்செய்யத்தப்பினால் கண்டிக் கொடுக்கப்பட்டதொகையும் வாதிக்குப் பிரதிவாதி சேர்த்துக்கொடுக்கிறதென்றும் நிபந்தனை கண்டெழுதப்பட்டு அந்தப்படி கெடுவில் பிரதிவாதிதொகை கொடுக்கத்தப்பிப்போனால், ஷ பத்திரநிபந்தனைப்படி தள்ளப்பட்ட தொகைஉள்பட முழுத்தொகையைப்பற்றியும் வாதி வியாச்சியஞ்செய்யலாம். (கஅசசூவல-நம்-ஙூசூ.)

சஎ. கடன்பத்திரத்துக்காகத் தொகை செலுத்துகிறவிஷயத்தில் மலையாளதேச சம்பிரதாயமும் இதரதேசங்களின் சம்பிரதாயமும் அபேதமேதவிர பேதம் அல்ல. (கஅஉஅவல-நம்-உ.)

சஙு. கடனுக்காகச்செய்யப்பட்ட வியாச்சியத்தில் வாதி அவனுடைய சமாம்சகர்களை மோசஞ்செய்யவேண்டியதற்காக அந்தக்கடனை வேறொருவனுக்குக் கொடுக்கும்படி தனக்கு உத்தரவுகொடுத்து அந்தப்படி தான் கொடுத்துவிட்டதாகப் பிரதிவாதி கட்சிசொன்னன். அந்தக்கட்சி குச்சிதமென்று அங்கீகரணஞ் செய்யப்பட்டது. (கஅருகூவல-நம்-கஎருங-ப-அ0.)

சசு. அநேக வருஷங்களுக்கு முன்பிறந்த கடன் பத்திரத்தைப் பற்றிப் பேசுகிற சாட்சிகள் ஸ்வல்ப்ப விஷயங்களில் ஒருவர்க்கொருவர் பரஸ்பர விரோதமாய்ப்பேசுவது ஸஹஜமானபடியால் மூன்றினை கணக்குமுதலிய தருந்த ஆதாரங்களால் ஷை கடன் ஸ்தாபிக்கப்படுகிற விஷயத்தில் ஷை சாட்சியபேதங்களைக்கொண்டு அந்தப் பத்திரத்துக்குத் தோஷம்சொல்லலாகூடாது. (கஅசுo ஹல-நம்-சுக-ப-உருo.)

சன. கூ-வது முதலாளின்மேல் வாதி வியாச்சியஞ்செய்து அந்த வியாச்சியத்தொகையைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டு வாதிக்குப் பத்திரம் எழுதிக்கொடுக்கிற பட்சத்தில் அந்த வியாச்சியத்தின் இலக்கத்தைமட்டும் அந்தப்பத்திரத்திற் கண்டெழுதுவதுபோதும். அந்த வியாச்சிய விஷயங்களின் விவரம் ஷை பத்திரத்தில் எழுதப்படாமற்போனதைக்கொண்டும் பிரதிப் பிரயோஜனமின்றி அந்தப் பத்திரம் பிறந்ததைக்கொண்டும் அந்த ஆதார தோஷங்களுதைமாக மாட்டாது. (கஅருசு ஹநி-நம்-கூகூ-ப-கருசு.)

சஅ. முதலாவது பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தின் தொகையைப்பற்றி வாதி வழக்கிட்டான். கூ-ம் பிரதிவாதி தான் வாதியின் பாகஸ்தனைதால் ஷை தொகையில் தனக்குப் பாதி கிடைக்கவேண்டுமென்று எதிர்ப்புத்தஞ்செய்தான். வாதி குடும்ப வியாபகனென்று ரஜா-வானபடியாலும் விவாதபத்திரம் அவன்கை யிலிருந்ததாலும் அவனுக்கு முழுத்தொகையும் கிடைக்கும்படிக்கும்-கூ-ம் பிரதிவாதியின் பாகத்தைப்பற்றி அவன் வேறே வழக்குத்தொடுக்கும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது. (கஅசுo ஹல-நம்-கஉ-உசு-ப-கனரு-கனஎ.)

அங்கிகாரம்-ப..... .....
அங்கிகார விபரீதம்-சு-ய-கரு..
எஜமானன்-க-உ-கூ.....
ஒற்றி-உசு.....
கடன் டை.....
கணக்கு-உ.....
காலநிர்ணயம்-கரு-கசூ-கஅ-உரு.....
சாட்சிய நிர்வாஹம்-சூ.....
சாட்சியம்-கரு-உo-உன-சச-ருகூ சூo-சுக-சூஉ-சூங-சூச-சூரு சூசூ.....
ஜாமீன்-உ.....
பாதினம்-உசூ.....
மோசம்-க-ரு.....

இவைகளைப்பார்க்க.

கணக்கன்.

சாட்சியம்-எ-கஉ..... ..... | ஜீவனும்சும்-கசு.....

இவைகளைப்பார்க்க.

கணக்கு.

க. கணக்குத்தீர்மானப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வியாச்சியஞ்செய்கிற வாதியானவன் கணக்குத் தீர்ந்ததாய் நிரூபிக்கத்தப்பிப்போனால் கோர்ட்டார் அவனுடைய வியாச்சியத்தைத் தள்ளிப்போடவேண்டியதே அல்லாமல் அவனுக்காகக் கோர்ட்டார் கணக்குப்பார்த்துத் தீர்மானஞ் செய்யக்கூடாது. (கஅருஎஹப நம்-கஉ-கஅருஅஹப-ப-சுo.)

உ. ஒருகணக்குக்கு மூன்னதேதியுள்ள பத்திரமானது அந்தக் கணக்கில் சேர்க்கப்படாமலிருந்தால் அந்தப்பத்திரம் உபயோகப்படமாட்டாது. கணக்குத்தீர்ந்து பாக்கியான தொகையைக்கொடுத்து அடகு நகையை மீட்டுக்கொள்ளுகிறதென்று கணக்கில் கண்டிருந்ததினாலும் உபயவாதிகளுக்கும் வேறே பற்றுவரவு தீராமலிருப்பதாகக் கணக்கினால் தெரியவராதபடியினாலும் உபயவாதிகளுடைய சகலகணக்குகளும் பூரணமாய்த் தீர்ந்து ஷை கணக்குப்பிறந்ததாகவும் ஆனதால் அதற்கு முன்பிறந்தபத்திரம் உபயோகமற்றதென்றும் நிச்சயிக்கப்பட்டது. (கஅருஅஹப-நம்-கசசு-ப-உகஅ.)

ங. ஒரேதினத்தில் இரண்டுதரங் கணக்குத் தீர்த்துக்கொண்டதில் ஒருதடவையில் ரூபா உ00-ம் மற்றொருதடவையில் ரூபா உ00-க்கு அதிகமாகவும் பாக்கியேற்பட்டது. ஒரேகடனைப்பற்றி அந்த இரண்டுதடவைகளிலும் கணக்குத் தீர்க்கப்பட்டதென்று நிச்சயிக்கப்பட்டது. (கஅருஅஹப-நம்-கஉஉ-ப-உஙஅ.)

சு. ஒருகட்சிக்காரனால் தாக்கல்செய்யப்பட்ட கணக்கு வழக்கமாயெழுதிவைக்கப்படுகிற வியாபாரத்தைச் சேர்ந்த கிரமமானகணக்கென்று நிரூபிக்கப்புட்டால்மட்டும் அந்தக்கணக்கை சாட்சியமாக அங்கீகரிக்கலாம். கடன் வரவேண்டுமென்று வியாச்சியஞ்செய்கிறவன் அந்தக்கடன் விஷயத்தைப் பரிஷ்காரமாய் ருஜுப்படுத்தத்தப்பிப்போனால் அவனுடைய கடைக்கணக்கைமட்டும் நம்பி அவன் பக்கூக் தீர்ப்புச்செய்யக்கூடாது. (கஅசுoஹ)-நம்-ஙு-ப-உஎக.)

ரு. விவாதவிஷயத்துக்கு வேறே தகுந்தசாட்சியம் இல்லாத வரையில் கணக்கினுடைய நகல்மட்டும் உபயோகப்படமாட்டாது. (கஅசுஂ0ஹூல-நம்-நுள-ப-ககூக.)

சூ. வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தொகைகளின் விபரங்கண்டு வாதி ஒருகணக்குத் தயார்செய்து அதைத் தபால்வழியாகப் பிரதிவாதி இடத்துக்கு அனுப்பினதாகவும் அந்தக்கணக்குப்படி தொகை கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாச்சியஞ் செய்தான். வாதிக்குத்தான் யாதொன்றுங் கொடுக்கவேண்டியதில்லையென்றும் வாதி யாதொருகணக்குங் தனக்கு அனுப்பவில்லையென்றும் பிரதிவாதி ஆசேஷபித்தான். பிரதிவாதியிடத்துக்கு வாதி கணக்கனுப்பினதாகவும் மற்றவிவாதவிஷயங்களும் ருஜுவானதினால் வாதிபக்ஷந் தீர்ப்புசெய்யப்பட்டது. (கஅசுஂ0ஹூல-நம்-ககக-ப-ககூ0.)

எ. பிரதிவாதியிடத்துக்கு வாதி தபால்வழியாக அனுப்பின அசல்கணக்கை தாக்கல்செய்யும்படி பிரதிவாதிக்குக் கோர்ட்டார் உத்தரவுகொடுத்தும் அவன் அந்தப்படி தாக்கல்செய்யத் தப்பிப்போனதால் அந்தக்கணக்குக்குச் சரியான நகலை வாதியிடத்தில் அங்கீகரித்து அதை அவன்பக்ஷம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாமென்று நிச்சயிக்கப்பட்டது. (ஷை.)

அ. சரக்குகளின் கிரயத்துக்காகச் செய்யப்படுகிற வியாச்சியங்களில் வர்த்தகர்களுடைய கணக்குகள் தகுந்தபடி ருஜுவாஞல் அந்தக்கணக்குகளே சர்வோத்தமமான சாட்சியம். (கஅசகூஹூல-நம்-கூக.)

கூ. உபயவாதிகளுடைய பற்றுவரவுகளும் நிசேஷமாய்த் தீர்ந்துபோய்விட்டதாகப் பிரதிவாதியால் தாக்கல்செய்யப்பட்ட கணக்கின் அந்தத்தில் எழுதப்பட்டிருந்ததால் அதற்குமுன்பாக நடந்த பற்று வரவுகளி னிலுவைக்காக வாதிசெய்தவியாச்சியம் நிஷ்பலஞ் செய்யப்பட்டது. (கஅருகூஹூல-நம்-உ0கூ-கஅசுஂ0ஹூல-ப-சச.)

அப்பீல்-கக.....	சித்தாந்தமுந் தீர்ப்பும்-சள.....
கடன்பத்திரம்-உக-நுசு.....	

இவைகளைப்பார்க்க.

கப்பல்.

க. ஒரு இடத்துக்குக்கப்பல் வழியாய் அனுப்பப்பட்ட சரக்குகளை அந்த இடத்தில் கப்பற்காரன் இறக்கி அந்தச்சரக்குகளை வாங்கிக்

கொள்ள அதிகாரம் பெற்ற படகுக்காரனிடத்தில் கொடுத்துவிட்டால் அதற்குப்பிற்பாடு அந்தச்சரக்குகள் கெட்டுப்போய் அதினால் உண்டாகும் நஷ்டத்துக்கு ஷ கப்பற்காரன் உத்தரவாதி அல்ல. ஷ சரக்குகளின் விவரங்களைன்று கப்பற்காரனால் தின்னடால் என்னும் உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புக்கடிதம் பொய்யானதென்று சந்தேகிக்கிறதற்கு இடம் இல்லாவிட்டால் அந்தச்சரக்குகளைக் கப்பற்காரன் கொடுத்துவிட்டதற்கும் அவனுடைய உத்தரவாதம் நீங்கிப்போனதற்கும் அந்தக் குறிப்பே போதுமான சாட்சியம். (கஅருகூஙஏ-நம்-கரன-கஅசுஏஙஏ-ப-எக.)

அதிகாரவரம்பு-க-உ-அ.

இலைகளைப்பார்க்க.

கலகம்.

க. கலகக்காரர்களுடைய கொள்ளை முதலான செய்கைகளால் நேரிட்ட நஷ்டத்தைப்பற்றி அவர்கள்மேல் வியாச்சியஞ் செய்யலாம். (கஅகளஏஙஏ-நம்-கஅ-ப-கூ.)

கலால்குத்தகை.

க. கலால்குத்தகைக்காரன் சில கிராமங்களை வேறொருவனுக்கு உட்குத்தகையாய்விட்டு அதற்காக முன்பணமும் வாங்கியிருப்பானால் அந்தக்கிராமங்களை அவன் உட்குத்தகைக்காரன் வசத்திலாவது விட்டுவிடவேண்டும். அல்லது அவன் வாங்கின முன்பணத்தையாவது உட்குத்தகைக்காரனுக்குக் கொடுத்துவிடவேண்டும். (கஅருகூஙஏ-நம்-கருகூ-கஅசுஏஙஏ-ப-ச.)

கலெக்ட்டர்.

க. கஅஉஉஙஏ ரு-வது சட்டப்படி கலெக்ட்டர் முன்பாகக் கொடுக்கப்படுகிற வியாச்சியங்களை சீவில்க்கோர்ட்டு வியாச்சியங்களைப்போலே வருஷவாரிப்படி கலெக்ட்டர் இலக்கம்போட்டுப் பதிந்துகொள்ளவேண்டும். (ச-பு-கஅருகூஙஏ பிரிவரிமீ உகஉ.)

உ. கஅஉஉஙஏ ரு-வது சட்டப்படி தாற்காலம் நிலத்தைச் சாகுபடி செய்யவேண்டியதைப்பற்றியாவது நிலத்தை அநுபவிக்கவே

ண்டியதைப்பற்றியாவது சூக்ஷ்மவிசாரணை செய்யமட்டிங் கலெக்ட்டருக்கு அதிகாரம் உண்டாயிருப்பதால் நிலத்தின் பாத்தியத்தைப்பற்றின விபாச்சியத்தை அவர் அங்கீகரிக்கக்கூடாது. (ச-பு-கஅசஅ ஹ்ய மார்ச்சுமீ கஉடை.)

ஈ. தர்மசாஸ்திரம்-பாத்தியம்-மரணசாஸனத்தின் வியாக்கியான முதலான விஷயங்கள் சம்பந்தப்பட்ட வியாச்சியங்களை ஷை சட்டப்படி கலெக்ட்டர் வாங்கக்கூடாது. (ச-பு-கஅசஈ ஹ்ய-டிசம்பர்மீ ககஉ.)

ச. கலெக்ட்டருடைய நிர்மானத்தின்மேல் அப்பீல் செய்வதற்காக நிஷ்கர்ஷை செய்யப்பட்ட ஊ0-நாள் கிரமிக்கிறவரையில் செலவுகளாயாவது நஷ்டங்களாயாவது வசூல்செய்யக்கூடாதென்று கஅஉ ஹ்ய-நு-வது சட்டம் உ-வது பிரிவு உ-வது உட்பிரிவில் சொல்லப்பட்ட நிபந்தனையானது நியாயாதிபதிகளாலாவது மற்றவர்களாலாவது ஷை சட்டம் ஸ-வது பிரிவுப்படி ஸ்வான் பாத்தியத்தைப்பற்றி விசாரிக்காமல் அநுபோகபாத்தியத்தைப்பற்றிமட்டும் விசாரித்துக் கலெக்ட்டர் செய்த தீர்மானத்தின்மேல் அப்பீல்செய்யப்பட்டிருந்தாலுங் கூட அந்த அப்பீல் முடிவாகிறவரையில் செலவுவிஷயமும் நஷ்டவிஷயமுமல்லாத மற்றவிஷயத்தில் அந்தத்தீர்ப்பை நிறைவேற்றுமல் நிறுத்திவைக்கக்கூடாது. (ச-பு-கஅஈ ஹ்ய-டிசம்பர்மீ கஉஉ.)

ரு. தீர்வைப்பாக்கிக்காக ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலம் போடுகிறதற்குக் கலெக்ட்டருக்குப் பூரண அதிகாரம் இருப்பதால் ஷை சட்டம் ஸ-வது பிரிவு ஸ-வது உட்பிரிவுப்படி கலெக்ட்டர் செய்த தீர்மானத்தின்மேல் அப்பீல் செய்யப்பட்டிருந்தாலும் அந்த அப்பீல் முடிவாகிறவரையில் செலவுவிஷயங்களைத்தவிர மற்றவிஷயத்தில் ஷை கலெக்ட்டருடைய நிர்மானத்தை நிறைவேற்றுமல் நிறுத்திவைக்கக்கூடாது. ஷை சட்டம் கக-வது பிரிவுப்படி ஸ்வான் பாத்தியத்தைப்பற்றி விசாரிக்காமல் அநுபோகபாத்தியத்தைப்பற்றிமட்டும் விசாரித்துக் கலெக்ட்டர் செய்த தீர்மானத்தின்மேல் அப்பீல்செய்யப்பட்டிருந்தாலுங் கூட அந்த அப்பீல் முடிவாகிறவரையில் செலவுவிஷயமும் நஷ்டவிஷயமுமல்லாத மற்றவிஷயத்தில் அந்தத்தீர்ப்பை நிறைவேற்றுமல் நிறுத்திவைக்கக்கூடாது. (ச-பு-கஅஈஅ ஹ்ய-டிசம்பர்மீ கஉஉ.)

சுரு. சபார்டினேட் கோர்ட்டு இருக்கிற ஜில்லாக்களில் ஷை ரு-வது சட்டம் ககரு-வது பிரிவுமுதலாவது உட்பிரிவுப்படி கலெக்ட்டர்செய்த தீர்மானங்களின்மேல் சபார்டினேட் கோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டுமே அல்லாமல் ஜில்லாக்கோர்ட்டில் அப்பீல்செய்யக்கூடாது. (ச-பு-கஅசச ஹ்ய-மார்ச்சுமீ சஉ.)

எ. ஷை சட்டப்படி கலெக்ட்டரால் செய்யப்பட்ட தீர்மானத்தை அசல் வியாச்சியத்தின் தீர்ப்பாகவும் அதன்மேல் செய்யப்பட்ட அப்பீலைக் கிரம அப்பீலாகவுந் தர்க்கல்செய்துகொள்ளவேண்டும். (ச-பு-கஅருகூவ-மார்ச்சுபீ ஈ0ஙூ.)

அ. ஷை நு-வது சட்டப்படி கலெக்ட்டர்செய்த தீர்மானத்தின்மேல் செய்யப்பட்ட அப்பீலில் கலெக்ட்டனா அப்பீலில்ப்பிரதிவாதியாய்ச் சேர்க்கக்கூடாது. (ச-பு-கஅருகூவ-நவம்பர்பீ நூஙூ.)

கூ. கலெக்ட்டர் அவருடைய அதிகாரத்தைக்கொண்டு செய்த செய்கைக்காக அவர்மேலே செய்யப்படும் வியாச்சியத்தில் அவர் கோர்ட்டாருக்கு யாதொருசங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியிருந்தால் கவரன்மெண்டு வக்கில்மூலமாகத் தெரியப்படுத்தவேண்டும். (ச-லெ-கஅருநுவ-டிசம்பர்பீ நூஙூ.)

கo. கோர்ட்டாருடைய தீர்ப்புக்காவது உத்தரவுக்காவது கீழ்ப்படியாமலிருக்கிற கலெக்ட்டருக்கு கஅo2வ-உள-வது சட்டம் உறுவது பிரிவுப்படி கோர்ட்டார் அபராதம் விதிக்கக்கூடாது. ஆனால் கலெக்ட்டருடைய அதிகாரச்செய்கைக்காக வியாச்சியஞ் செய்யப்படாமல் சொந்தவிஷயமாக அவர்மேல் செய்யப்படும் வியாச்சியத்தில் அவர் மேற்கண்டபடி கீழ்ப்படியாமற்போனால் அவருக்குக் கோர்ட்டார் அபராதம்விதிக்கலாம். (ச-பு-கஅ2ச வ-பிப்பரவரிபீ உoஙூ.)

கக. பலவந்தமாய்ச் சொத்துக்கள் அபகரிக்கப்படுகிற விஷயத்தில்மாத்திரம் கஅ2உவ-நு-வது சட்டம் உபயோகம். (கஅருகவ-நம்-கங-கஅருவ-நம்-கஉ-சுக.)

கஉ. யாதொருவிசாரணையும் செய்யாமல் ரிவினியு பேஷ்காருக்குக் கலெக்ட்டரால் அனுப்பப்பட்ட உத்தரவு கஅ2உவ-நு-வது சட்டத்தில் சொல்லப்பட்ட தீர்மானத்துக்குச் சமானமானதல்ல. ஆகையால் அந்த உத்தரவின்மேல் சீவில்க்கோர்ட்டாரிடத்தில் கிரம அப்பீல் செய்யக்கூடாது. (கஅருகவ-நம்-கங.)

கங. ஷை நு-வது சட்டப்படி கொடுக்கப்பட்ட பிரியாதுகளைக் கலெக்ட்டர் ஸ்வயமே விசாரிக்கவேண்டுமே அல்லாமல் தாசில்தார் முதலானவர்கள்மூலமாய் விசாரணைசெய்து அவர்களுடைய ரிப்போர்ட்டின்மேல் கலெக்ட்டர் தீர்மானஞ் செய்யக்கூடாது. (கஅருகவ-நம்-அஅ-கஅருவ-நம்-அக.)

கச. கவர்ன்மென்ரூருக்குச் சொந்தமான நிலத்தைச் சாகுபடிக் காகத் தன்னிடத்தில் விட்ட கலெக்ட்டர் பிற்பாடு பிரதிவாதிகள் வசப்படுத்திப்போட்டதால் அந்த நிலங் கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டான். அந்த வியாச்சியத்தில் கலெக்ட்டர் பிரதிவாதியாய்ச் சேர்க்கப்படாததினால் அவருடைய செய்கை கிரமமா அல்லவாவென்பதைப்பற்றி நிச்சயஞ் செய்யக்கூடாதென்றும், ஈரோப்புக்குப் போயிருக்கிற வே கலெக்ட்டர் திரும்பிவந்தவுடனே அவனையுஞ்சேர்த்து வாதி வழக்குச்செய்யவேண்டுமென்றும வாதிக்கு விரோதமாய்த் தீர்ப்புசெய்யப்பட்டது. (கஅருகூஹ-நம்-உஉக-கஅசுo஫ப-எஎ.)

கரு. மேஜட் அஜிஸ்டான்ரு கலெக்ட்டரால் கொடுக்கப்பட்ட பட்டாப்படி நிலங் கிடைக்கவேண்டுமென்று தொடருகிறவனுடைய பாத்தியத்தை சிலாக்கியமானதாகக் கலெக்ட்டர் எடுத்துக்கொள்ளலாம். (கஅருஅ஫ப-நம்-கஙசு-ப-உஎo.)

கசு. ஒரு கலெக்ட்டரின் அதிகாரச்செய்கைகளினாலே துன்பத்தை அடைந்தவன் அந்தக் கலெக்ட்டர் இருக்கும்போதே அவர்மேல் வியாச்சியஞ் செய்யவேண்டுமே அல்லாமல் அவருக்குப் பதிலாய் நியமிக்கப்பட்ட கலெக்ட்டர்மேல் வியாச்சியஞ் செய்யக்கூடாது. (கஅருகூ ஹ-நம்-உoச-கஅசுo஫ப-ப-சுரு.)

கள. கஅஉ஫ப சுo-வது சட்டம் ரு-சு-பிரிவுகளின்படி ஒரு கலெக்ட்டருடைய நிர்மானத்தினாலாவது உத்தரவினாலாவது துன்பத்தை அடைந்தவன் அந்தக் கலெக்ட்டர்மேல் நஷ்டத்தைப்பற்றிப்போதுமான ழுத்தினாக்காகிதத்தின்மேல் வியாச்சியஞ்செய்யலாம். அல்லது மறு எழுதனெல்லாடிட ழுத்தினைக்காகிதத்தின்மேல் ரிவிஸ்ஜட்ஜிடத்தில் அவர் அப்பீலாவது பண்ணிக்கொள்ளலாம். மேற்கண்ட இரண்டுமார்க்கங்களில் எந்தமார்க்கம் அநுஷ்டிக்கப்பட்டபோதிலும் கலெக்ட்டருடைய நிர்மானம் அல்லது உத்தரவின் சொரூபமுழுதுங் கோர்ட்டாரால் ஆலோசிக்கப்படவேண்டும். (ச-பு-கஅருகூ஫ப-அக்ட்டோபர்மீ உரூ.)

கஅ. அக்கிரமமாய்க் கலெக்ட்டர் தீர்வை வசூல் செய்ததற்காகவும் அவருடைய அதிகாரச்செய்கைகளால் சேரிட்ட நஷ்டத்துக்காகவும் அவர்மேல் வியாச்சியஞ் செய்வதற்கு கஅருo஫ப கஅ-வது ஆக்ட்டினால் யாதொரு தடையும் இல்லை. (ச-பு-கஅருக ஹ ஜனவரிமீ உருஉ.)

ககூ. கஅஉஉஙல ரு-வது சட்டப்படி வருமானத்தைப்பற்றிக் கலெக்ட்டர் செய்த தீர்மானமானது நிலத்தின் பாத்தியத்தைப்பற்றிக் கோர்ட்டில் வியாச்சியஞ் செய்வதைத் தடுக்கமாட்டாது. (கஅருசுஙல நம்-ருஉ-ப-சுகூ.)

அங்கீகாரவிபரீதம்-ககூ..... | நிர்ப்பு நிறைவேற்றல்-உசு.....
அப்பீல்-ச0.....

இவைகளைப்பார்க்க.

கவர்ன்மென்று வக்கீல்.

க. கவர்ன்மென்று வக்கீல் உத்தியோகம் சாயியானல் சீவில் ஜட்ஜ் கலெக்ட்டருடன் ஆலோசித்து அந்த உத்தியோகத்துக்காக ஒருவனை நிச்சயஞ்செய்து அவனைப்பற்றி சீவில்ஜட்ஜ் கவர்ன்மென்றுக்கு சிபாரிசுசெய்யவேண்டும். ஷை நியமகத்துக்குக் கலெக்ட்டருடைய அபிப்பிராயம் விரோதமாயிருந்தால் கலெக்ட்டருடைய அபிப்பிராயத்தையும் சீவில்ஜட்ஜ் வாங்கி அனுப்பவேண்டும். (ச-பு-கஅசுஅஙல ஜ-ன்மீர் அடை.)

உ. யாதொரு கட்சிக்காரனுக்கும் அவனுடைய வக்கீலுக்கும் எவ்வளவு சம்பந்தமோ அவ்வளவுமட்டுந்தான் கலெக்ட்டருக்கும் கவர்ன்மென்று வக்கீலுக்குஞ் சம்பந்தமுண்டாயிருப்பதால், கவர்ன்மென்று வக்கீலுக்கு அபராதம்விதிக்கக் கலெக்ட்டருக்கு அதிகாரம் இல்லை. வேலையில் அசட்டைசெய்ததற்காகவும் அல்லது வேறே தூர்நடக்கைக்காகவும் சீவில்ஜட்ஜ்மட்டும் கவர்ன்மென்று வக்கீலுக்கு அபராதம் விதிக்கலாம். (ச-லெ-கஅருஉஙல டிசம்பர்மீ ருஉ.)

ஊ. கவர்ன்மென்றூர்மேல் ஒரு வாதியினால்செய்யப்பட்ட வியாச்சியத்தில் அந்த வாதிக்காக வக்கீலாயிருக்கிறவர் பிற்பாடு கவர்ன்மென்று வக்கீலாக நியமிக்கப்பட்டால் அந்த நியமகத்துக்குப்பிற்பாடும் அவர் அந்த வாதிக்காக வக்கீலாயிருக்கலாம். ஆனால் அந்த வக்கீல் வேண்டியதில்லையென்று வாதி தள்ளிக்கொண்டால் அவர் கவர்ன்மென்றூர் பட்சத்தில் வக்கீலாயிருந்து பேசலாம். (ச-பு-கஅருசும்ஙல ஜ-ன்மீர் உஅ.)

சு. போஸ்ட்மாஸ்டர் ஜனரல் முதலான பகிரங்கமான உத்தியோகஸ்தரிடத்தில் அதிகாரம் பெற்றுக்கொள்ளாத கவர்ன்மென்று

வக்கீல் அந்த உத்தியோகஸ்தருக்காக அப்பீல் செய்யக்கூடாது. (கஅருஅஹ-நம்-கசூ-ப-உ0ங.)

கலெக்ட்டர்-ங.

இணைப்பாக்க.

களவு.

க. ஒருசொத்தைத் திருடனவன் அந்தச்சொத்தின் கிரயத்தைக் கொடுத்துவிடுகிறதென்றும் அந்தச் சொந்துக்குடையவன் திருட்டுச்சங்கதியைப்பற்றிப் பிரியாது கொடுக்கிறதில்லையென்றும் உடன் படிக்கை செய்துகொண்டு அந்த உடன்படிக்கையின் ஆதாரத்தின் மேல் திருட்டுச்சொத்தின் கிரயத்துக்காகச் செய்யப்படும் வழக் கைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (ச-வி-ப-கக.)

காசாவர்க்கம்.

க. மிராசுதாருடைய நிலத்தைக் காசாவர்க்கக் குடிகள் எவ்வள வுகாலம் அநுபவித்தாலும் அவர்களுக்குப் பாத்தியம் உண்டாகமா ட்டாது. மிராசுதார் கேட்கும்போது அவர்கள் நிலத்தை விட்டுவிட வேண்டும். (கஅசச ஹ-நம்-க0அ, கஅருஅ ஹ-நம்-சூ0-ககக-ப-சக-கசரு.)

உ. சாகுபடி விஷயத்தில் ஒருவன் மிராசுதாருக்குள் காசாவர்க் கப் புறக்குடியாயிருந்தாலும் அவனுடைய குடியிருப்பு மனை மிரா சுதாருக்குச் சம்பந்தம் இல்லாமல் அந்தப் புறக்குடிக்கே பூரண பாத்தியமாயிருக்கலாம். (கஅருஅஹ-நம்-கருள-ப-உஉசூ.)

மிராசுதாரும் புறக்குடியும்-கரு-வது விதிணையைப்பார்க்க.

காஜி.

க. மற்றவர்களை எல்லாம் நீக்கிப் பட்டணத்துக்காஜிமட்டும் அவ ருடைய வேலையை நடப்பிவிக்கும்படி அவருக்குச் சட்டத்திலல் அதிகாரங்கொடுக்கப்படவில்லை. ஆனல் அவருக்குமட்டும் உரித் தான சுதந்தரங்களில் யாராவது பிரவேசித்து அவருக்கு நஷ்டம் உண்டாயிருந்தால் அந்த நஷ்டத்தைப்பற்றி அவர் வியாச்சியஞ் செய்யலாம். (ச-பு-கஅசகஹ ஜனுவரிபீ ருவ.)

உ. தன்னுடையமுன்பாக ஒரு சாட்சிக்காரன் ஆஜராகும்படி வணிமைசெய்யக் காஜிக்கு அதிகாரமில்லை. ஆனல் யாதொரு சாட்சிக்காரன் வராமற்போனதினல் ஆதாரவின் உண்மையைப்பற்றிக் காஜிக்கு ஸந்தேகம் உண்டானல் அந்த ஆதாரவிற் கையெழுத்துவைத்து உறுதிசெய்ய அவர் நிராகரிக்கலாம். (ஷை.)

ஊ. புருஷனேடு கூடியிருக்க இஷ்டமில்லாத ஸ்திரீயைப் புருஷனிடத்திற் சேர்த்திருக்கும்படி காஜிபலவந்தம் பண்ணக்கூடாது. கிரமவியாச்சியஞ்செய்யும்படிமட்டும் புருஷனுக்கு அவர் சொல்லவேண்டும். (ஷை.)

எ. மூத்தினை ஆக்ட்டன்விதிகளை ஆசரிக்கவேண்டியது காஜியினுடைய கையெழுத்துக்காகக் கொண்டுவரப்பட்ட ஆதாரவுகளைப் பிறப்பிவித்துக்கொள்ளுகிறவர்களுடைய கடமையேதவிர அந்த ஆக்ட்டை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டியது காஜியினுடைய வேலையல்ல. (ச-பு-க அசுo [illegible] டிசம்பர்மீ கசுடை.)

ரு. சுல்த்தான் இடத்தில் சன்னது பெற்றுக்கொள்ளாமல் யாதொரு குத்தீபு குத்பாவாசிக்கலாம். (கஅகசு [illegible]-நம்-க.)

கூ. குத்பாவாசிக்கிற குத்தீபைத் தடைசெய்ய சுல்த்தானுடைய குத்தீபுக்கு அதிகாரமில்லை. (ஷை.)

ஏ. வெள்ளிக்கிழமை நடக்கும் குத்பாமுதலான நைபங்களாக் கோரியிலாவது வீட்டிலாவது அல்லது ஜனங்களுடைய சம்மதத்தின்மேல் நியமிக்கப்பட்ட யாதொரு ஸ்தலத்திலாவது வாசிக்கலாம். (ஷை.)

ஐ. யாதொருவன் குத்பாவாசிக்கக்கூடாதென்று தடைசெய்யக் காஜிக்குப் பாத்தியமில்லை. (ஷை.)

இதைப்பார்க்க.

காரியஸ்தன்.

க. யஜமானன் உத்தரவுப்படி காரியஸ்தன் பாங்கிநோட்டுகளைத் தபாலில் அனுப்பி அவைகள் காணுமற்போனலுங் கெட்டுப்போனலுங் காரியஸ்தன் பாத்தியப்படவேண்டியதில்லை. (கஅகஉ [illegible]-நம்-எ.)

உ. ஒரு அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தவன் இறந்துபோன உடனே அது ரத்தாய்ப்போகிறபடியால் அவனுடைய பாத்தியஸ்தர்கள் வேறே அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டியது முக்கியம். (கஅகளஹூ-நம்-உஉ.)

ஈ. யஜமானனுடைய உத்தரவுகள் தெளிவாகவும் கண்டிப்பாகவும் இருக்குமாறால் அந்தப்படியே காரியஸ்தன் சரியாய்நடக்கவேண்டும். யஜமானனுடைய ஹிதத்துக்காகவே அந்த உத்தரவுக்கு விரோதமாய்க் காரியஸ்தன் நடந்தாலுங்கூட அதினால் உண்டாகப்பட்ட நஷ்டத்துக்குக் காரியஸ்தன் பாத்தியப்படவேண்டும். (கஅகூஉ-நம்-கo.)

ச. காரியஸ்தன்பெயராய் ஒரு கரார் நடந்திருந்தாலுங்கூட அது யஜமானனுக்காக நடந்தகானபடியாய் யஜமானசம்மதிச்சக்காமல் காரியஸ்தன்பேரில் மட்டும் வியாச்சியங் கொண்டுவரக்கூடாது. (கஅருஉ-ஹூ-நம்-உஈ.)

ரு. உண்டிமுறையாய்ப் பணம் அனுப்பும்படி காரியஸ்தனுக்கு யஜமானன் உத்தரவுகொடுத்திருக்க அவன் பாங்கிகோட்டுகள் அனுப்பி அவைகள் காணாமற்போனாலும் காரியஸ்தன் பாத்தியப்படவேண்டும். (கஅசரு-நம்-ஈஅ.)

ரூ. கவுஸ்தாருடைய காரியஸ்தன் ஜமீன்தாருக்குப் பாத்தியப்படவேண்டியதில்லை. (கஅருஅ-நம்-சள-சஅ.)

எ. காவற்கூடத்தில் வைக்கப்பட்ட ஜமீன்தார் விடுதலைபெறுவதற்காக லஞ்சமாகத்தான் வேண்டிய சஹாயங்களைச்செய்ததாகவும் அதற்காகத் தனக்கு ஷை ஜமீன்தார் வாக்குத்தத்தஞ்செய்தபடி பிரதி உபகாரஞ்செய்யவில்லையென்றும் அந்த ஜமீன்தாருடைய காரியஸ்தன் செய்தவழக்கு அக்கிரமமென்று தள்ளப்பட்டது. (கஅoகூ-நம்-உ.)

அப்பீல்-உள ..... | ஜீவநாம்சம்-ஈக ....
எஜமானன்-க-உ-ஈ ..... | இனவகளைப்பார்க்க .....

காலநிர்ணயம்.

க. வாதியின் வழக்கு காலநிர்ணய தோஷத்துக்கு உட்பட்டிருப்பதாகப் பிரதிவாதி கட்சிபேசினால் ஸாராம்சத்தைப்பற்றி விசாரிக்

கிறதற்கு முன்காலநிர்ணய தோஷத்தைப்பற்றிக் கோர்ட்டார் விசாரணைசெய்யவேண்டும். (ச-பு-கஅருஉஹல சூன்மீ கஉ.)

உ. வாதியின் பாத்தியத்தைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருந்தால் அப்படி ஒப்புக்கொண்ட தேதிக்குமுன் கஉஹல-காலம் கிரமித்துப் போயிருந்தாலுங்கூட ஷி ஒப்புக்கொள்ளுதலின் தேதி முதல்-கஉ-வருஷத்துக்குள்ளாகச் செய்யப்படும் வியாச்சியத்துக்குக் காலநிர்ணயதோஷமில்லை. (கஅசசூஹல-நம்-சூச, கஅருகஹல-நம்-உச, கஅருஙஉஹல-நம்-ஙஉ, கஅருளஹல நம்-கசூக, கஅருஅஹல-ப-சூங.)

ங. வியாச்சியஞ் செய்யவேண்டிய அவசரமில்லாமல் சமாதானமாய்த் தீர்த்துபோகுமென்று வாதிக்கு நம்பிக்கையுண்டாகும்படியான விதமாய் அவனுடைய பாத்தியத்தைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருந்தால்மட்டும் வாதி வழக்கு காலநிபந்தனை தோஷத்தால் பிடிக்கப்படமாட்டாது. (கஅசூ0ஹல-நம்-சு-ப-உஉரு.)

சு. வாதி ஒருவியாச்சியஞ்செய்து பிற்பாடு அதைத் தள்ளிக்கொண்டிருப்பதைக்கொண்டு காலநிபந்தனை தோஷபரிகாரமாகமாட்டாது. (கஅருங-ஹல-ப-ருசூ-கஅருசூஹல நம்-சு, கஅருளஹல-நம்-சூஅ-ப-கசூக, கஅருகூஹல-ப-சுரு.)

ரு. வியாச்சியஞ் செய்யும்படியான பாத்தியமுள்ளவன் ஜீவவந்தணயிருக்கும்போதே கால நிபந்தனை தோஷமுண்டாயிருக்குமானால், அந்தப் பாத்தியமானது அவன் இறந்தபிற்பாடு அவனுடைய பாத்தியஸ்தனுக்கு மறுபடியும் உண்டாகமாட்டாது. (ச-வி-ப-ஙஉ.)

சூ. கால நிர்ணய தோஷத்துக்குட்பட்ட வழக்கைத் தருந்த அதிகாரமுள்ள கோர்ட்டார் தள்ளினபிற்பாடு அந்தப் பாத்தியம் மறுபடியும் உண்டாயிருக்கிறதென்பதற்கு வாசா சாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅருளஹல-ப-உஉ.)

எ. மிராசுதாருக்கும் மற்றக் குடிகளுக்கும் உண்டாகிறவழக்கில் புறக்குடி பகுதிகொடுக்கத்தப்பின தேதிமுதல். கஉஹல்த்துக்குள் மிராசுதார் வியாச்சியம் செய்யவேண்டும். (கஅஉசஹல-நம்-சு-கஅருகஹல-நம்-நிஅ-அசு, கஅருஉஹல-ப-சுசு-ள்க.)

அ. விவாதஸ்திதியை கஉஹல-வரையில் பிரதிவாதி அனுபவித்திருந்தால்மட்டும் காலநிர்ணய தோஷமுண்டாகுமே அல்லாமல் பிரதிவாதியாயிராத வேறொருவன் விவாதஸ்திதியை அனுபவித்துப்

பின்புவிட்டிருப்பானால் வாதிவழக்குக் காலநிர்ணயதோஷத்துக்கு உள்ளாகமாட்டாது. (கஅருகஙு-நம்-கூஎ-ப-உருசூ.)

கூ. விவாதநிலம் மோசமாய் அபகரிக்கப்பட்டிருந்தால் அந்த மோசம் வெளியானதுமுதல் காலநிர்ணயக்கணக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒருவன் ஒருசொத்தை மோசமாக எவ்வளவுகாலம் அனுபவித்தாலும் அந்தமோசம் வெளியாகி கஉஙு-த்துக்குள்ளாக அவன்மேல் அந்தச்சொத்துக் குடையவன் வியாச்சியஞ் செய்யலாம். (கஅஉகஙு-நம்-நு)

கo. வாதி சிறுபிள்ளையாயிருக்கும்போது அவனுடைய மாதாவினால் பராதீனஞ்செய்யப்பட்ட சொத்தைப்பற்றி அவனுக்குத் தகுந்தவயது வந்ததிலிருந்தல் கஉஙு-த்துக்குள்ளாக அவன் வியாச்சியஞ்செய்யவேண்டும். (கஅசoஙு-நம்-சக-கஉசூ-ப-உருஉ.)

கக. நிலம் வாதிக்குச் சொந்தமானதல்லவென்று ஆக்ஷேபிக்கப்பட்டி அவன் அந்தநிலத்தைப்பற்றி வியாச்சியஞ்செய்ய யோசித்திருப்பதாக எழுத்துமூலமாய் சொல்லியிருப்பானால் அதுமுதல் கஉஙு-க்கணக்கிடவேண்டும். (கஅருஅஙு-நம்-கசச-கஅருகஙு-ப-கo.)

கஉ. ஒருவனுக்குப் பாத்தியஸ்தன் என்கிற ஆதாரத்தின்மேற் செய்யப்படுகிற வழக்கில் அந்தப்பாத்தியம் உண்டான தேதிமுதற்கொண்டும் அவன் சொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதில் விக்நம் சேரிட்ட தேதிமுதற்கொண்டும் காலநிர்ணயக்கணக்குப்பார்க்கவேண்டும். (கஅருகஙு-நம்-உகச. கஅசoஙு-ப-கஉசூ.)

கஙு. தகுந்த வயதில்லாதவனுடைய பாகத்தைமட்டும் காலநிபந்தனை தொடர்ந்துசாராது. அவனுடைய பாகஸ்தன் தகுந்தவயதுள்ளவனாயிருந்தால் அவனுடைய பாகத்துக்கு வெ தொடர்முண்டு. (கஅருசஙு-நம்-அஉ-ப-கஎகஉ.)

கச. ஒருபாகஸ்தன் அவனுடைய பாகத்தைப்பற்றி எந்தக்காலத்திலுந் தொடரலாம். அவனுடைய பாத்தியம் எப்போது ஆக்ஷேபிக்கப்படுகின்றதோ அதுமுதற்கொண்டு காலநிபந்தனை ஆரம்பிக்கும். (கஅகஙுஙு-நம்-கக, கஅசசுஙு-நம்-சூஙூ, கஅருஙூஙு-நம்-அஉ, கஅருருஙு-நம்-நுசூ-ய-அஉ, கஅருஅஙு-நம்-கஉஅ-ப-கசூஙூ.)

கஙு. பலகெடுக்கள் கண்டபத்திரவிஷயத்தில் ஒவ்வொருகெடின் தேதிமுதல் வியாச்சியமூலம் ஆரம்பிக்குமேதவிர முதற்கெடு

மூதல் ஆரம்பிக்கமாட்டாது. (கஅருச வுர்-நம்-கூக-ப-உ உ ரு, கஅருருவுர்-நம்-உள, கசள-ப-சங-கஙங-உஙள.)

கசூ. கடன் பத்திரத்திற்கண்டகெடுவின் தேதிமூதல் காலநிர்ணயக் கணக்குப் பார்க்கவேண்டியதேயஸ்லாமல் அந்தப்பத்திரம் பிறந்த தேதிமுதற்கொண்டு கணக்கிடக்கூடாது. (ச-வி-ப-ஙஙூ.)

கள. நிலத்தின் வருமானத்தைக் கொண்டுபோக்கியத்தானகையும் வட்டியுந் தீர்ந்துபோய் நிலத்தைவிடும்படி ஸ்வான்காரன் கேட்டு போக்கியக்காரன் நிலத்தைவிடாமல் யிண்முகாந்தரஞ் சொல்லுவானால் அதுமுதற்கொண்டு காலநிபந்தனை தோஷம் ஆரம்பிக்கும். (கஅருகூ வுர்-நம்-எ0-ப-ககூக)

கஅ. காலநிபந்தனை தோஷத்தைப்பற்றிப் பிரதிவாதி பேசாமலிருந்தாலுங்கூடக் கோர்ட்டார் அதைப்பற்றி விசாரிக்கவேண்டும். (கஅருளவுர-நம்-சஉ.)

கசூ. பிரதிவாதி வேறொருவனுக்கு எழுதிக்கொடுத்த ஆதாரவில் வாதியின் கடனை ஒப்புக்கொண்டு அதைத் தீர்க்கவேண்டியதற்கு மாக்கஞ்சொல்லி யிருந்தபடியால் அந்த ஆதாரம் பிறந்ததேதிமுதல் காலநிர்ணயத்துக்குக் கணக்குச் செய்யவேண்டுமேயல்லாமல் வாதியின் கடன் பத்திரம் பிறந்ததேதிமுதல் கணக்குச்செய்யக்கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டது. (கஅருளவு-நம்-ககூக, கஅருஅவுர-ப-ஙூ.)

உ0. தகுப்பன் இறந்துபோகும்போது காலநிர்ணயதோஷம் நில்லாமல் சிலகாலமாத்திரங் கடந்துபோயிருக்குமாயல் மிச்சக்காலத்தை அவனுடையமகனுக்குத் தகுந்தவயது வந்தபிறகற்கொண்டு கணக்கிடவேண்டும். (கஅருகச வுர்-நம்-கஉ, கஅருஅவுர-நம்-கசூ.)

உக. காலநிபந்தனை தோஷத்துக்காக அசல் கோர்ட்டாரால் தள்ளப்பட்ட வியாச்சியம் அந்தத் தோஷத்துக்குட்பட்ட தல்லவென்று அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால் அதைச்சாராம்ச விசாரணைக்காக அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட்டுக்கு அனுப்பிவிடவேண்டும். (கஅருளவுர-நம்-கஉஅ-ப-கஅக.)

உஉ. வாதிதேசாந்தரம் போயிருந்தைகொண்டு காலநிர்ணய தோஷ நிவாரணம் உண்டாகமாட்டாது. (கஅருஉவுர்-நம்-சள, கஅருஙவுர்-ப-ஙஙள.)

உசு. வாதி கண்டனைப்பட்டுக் காவற்கிடங்கில் இருந்தால் காலநிர்ணயதோஷம் நிவர்த்தியாகும். (கஅருகஇ)-நம்-உன-கஅருகஇ-ப-கூன.)

உச. தகப்பன் சித்தப்பிரமை யுள்ளவனாகவும் மகன் அந்தக்காலத்தில் கருந்த வயதில்லாதவனாகவும் இருந்தால் அது காலநிர்ணயதோஷத்தை நிவர்த்திசெய்யப் போதுமானதாயிருக்கின்றது. (கஅருஉஇ-நம்-சுச-கஅருகஇ-ட-உசகூ.)

உரு. பலகெடுக்காரர்கண்ட பத்திரத்தில் ஒரு கெடுத்தப்பினலும் எல்லாத்தானைகளுங் கொடுத்துவிடுகிறதென்று கண்டிருந்தாலுங் கூட முதற் கெடுத்தப்பின தேதிமுதல் காலநிபந்தனைக் கணக்குப் பார்க்கக்கூடாது. காலாதிக்கிரமணதோஷத்துக்குட்படாத கெடுக்கனின்தானைகளைப் பெற்றுக்கொள்ள வாதி பாத்தியஸ்தனாயிருக்கிறான். (கஅருசஇ-நம்-கூக-ப-உஉரு-கஅருஇ-நம்-உன-ப-கூகூ.)

உசு. நிஸ்திகிரையப்பற்றின வியாச்சியத்தில் கஉரூபத்துக்குள்ளாக ஸ்வாமிதோகங்கொடுக்கப்பட்டிருக்குமானல் அந்த வியாச்சியம் காலநிபந்தனை கோஷத்துக்குட்படமாட்டாது. (கஅருசஇ-நம்-கூஅ-கஅருஇ-ட-கூ.)

உள. கஉரூபத்துக்குள் வாதிக்கு ஸ்வாமிதோகங் கிடைத்ததாய்ருசுவாகாவிட்டால் நிலத்தின்மூல ஆதாரவு வாதியிடத்தில் இருந்தாலுங்கூட அவனுடைய வழக்கைக் காலநிர்ணயச் சனியன் பிடித்துக் கொள்ளும். (கஅருகஉ-நம்-உகசு.)

உஎ. ஒருவனிடத்தில் அடைக்கலமாய் வைக்கப்பட்டிருக்கிற சொத்தை அவன் கொடுக்கமாட்டேனென்று சொல்லுகிற தேதிமுதல் காலநிர்ணயம் ஆரம்பிக்கும். (கஅருஅ-நம்-சள.)

உகூ. ஒருவனிடத்தில் நம்பிக்கையாய் வைக்கப்பட்டிருக்கிற சொத்துக்களிற் சிலது தன்னிடத்திற் கொடுக்கப்படவில்லையென்று அவன் ஆசேஷபித்தால் அந்த ஆசேஷபனையின் தேதிமுதல் காலாவதி ஆரம்பிக்கும். (கஅருஅ-ப-உகசூ.)

ஈ0. குடும்பத்திற் சேர்ந்நாத நாயாதிகள் பாகத்துக்காக வியாச்சியஞ் செய்கிறபக்ஷத்தில் காலநிர்ணயதோஷம் உண்டு. (கஅருஉ-நம்-உள.)

ஈக. அனுபோக ஒற்றிவிஷயத்தில் ஒற்றித்தொகையைக் கொடுப்பதற்குப் பத்திரத்தில் கெடிக்காணுமல் இருந்தால் அந்தத்தொகையைப்பற்றி ஒற்றிக்காரன் எப்போது வேண்டுமானலும் தொடரலாம். அந்த விஷயத்தில் காலநிபந்தனை தோஷங் கிடையாது. (கஅசசூ(வு)-நம்-கஈ.)

ஈஉ. அனுபோக ஒற்றிக்காரன் நிலத்தை விட்டுவிடுவதாகச்சொல்லி ஸ்வான்காரன் அந்த நிலத்தைப் பெற்றுக்கொள்ளவும் பணங் கொடுக்கவும் ஆக்ஷேபித்தால் அதுமுதல் கால நிர்ணயதோஷம் ஆரம்பமாகும். (கஅருரு(வுல)-நம்-கக.)

ஈஈ. விபக்த தாயாதிகளில் ஒருவன் இறந்துபோய் அவனுடைய பத்தினி ஜீவவதியாயிருந்தால் அவள் இறந்துபோனதுமுதல் வியாச்சியமூலம் ஆரம்பிக்குமேதவிர அவள் புருஷன் இறந்துபோனதுமுதல் ஆரம்பிக்கவில்லை. (கஅருரு(வு)-நம்-கஈ.)

ஈச. ஒற்றிபெற்றவன் ஒற்றியை ஆக்ஷேபித்து நிலத்தை விடமாட்டேனென்று எப்போது சொல்லுகிறானே அதுமுதல் காலாவதியின் தோஷம் உண்டாகும். (கஅருகஅ(வு)-நம்-உஉ-ப-கஈசூ-கஅருஅ(வு)-நம்-ஈஅ-ப-கஅள.)

ஈஎ. கஅ0உ(வு) உ-வதுசட்டம் உண்டாகிறதற்குமுன் கஉ(வு) காலம் ஒருவன் அனுபவித்த நிலத்தைப்பற்றி வேறொருவன் வியாச்சியஞ் செய்யக்கூடாது. (கஅஉஈ(வு)-நம்-அ.)

ஈசூ. பந்தகம் வைக்கப்பட்ட சொத்தை அநுபவிக்காத பந்தகக்காரன் அவனுக்கு வரவேண்டிய தொகையைப்பற்றிச் சட்டத்திற் குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளாகவே வியாச்சியஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவனுடைய வழக்கு காலாதிக்கிரமணதோஷத்தால் பாதிக்கப்படும். (கஅருஅ(வு)-நம்-ருஉ0.)

ஈஎ. விவாதநிலத்துக்கு மிராசு பதியும்படி ரிவினியூ அதிகாரிகளிடத்தில் வாதி மனுக்கொடுத்திருந்தால் அதிலால் கஉ(வு)த்திய தோஷம் நீங்கமாட்டாது. (கஅருக(வு)-நம்-ருஅ.)

ஈஅ. பிரதிவாதி நிலத்தை அபகரித்துக்கொண்டதாக ரிவினியூ அதிகாரஸ்தர்கள் இடத்தில் வாதியாற் செய்யப்பட்ட பிரியாது கால நிர்ணயதோஷத்தை விலக்கமாட்டாது (கஅருக(வு)-நம்-அச.)

ஈஈ. தன்னுடைய அவிபக்த தாயாதிகளான பிரதிவாதிகளிடத்தில் இருக்கிற குடும்பச்சொத்தில் பாகங் கிடைக்கவேண்டுமென்று

வாதி வழக்குச்செய்தான். உருவுத்துக்குமுன் இறந்துபோனவாதி தகப்பனுவது, வாதியாவது, பிரதிவாதிகளுடைய குடும்பத்தில் ஒருநாளுஞ் சேர்ந்திராதபடியாலும் வாதி பாகஸ்தன் என்பதைக்காட்டும்படியான யாதொருசெய்கையும் நடவாதபடியாலும் அவனுக்குப் பாகங் கிடைக்கமாட்டாதென்று தீர்ப்பு செய்யப்பட்டது. (கஅருஉவு-நம்-உள.)

சுo. வாதிக்குத் தகுந்த வயதில்லாதகாலத்தை அவனுக்கு அநுகூலமாகவே கோர்ட்டார் கழித்துவிடவேண்டும். (ச-பு-கஅஉகூவு ஏப்பிரல்மீ உசூ.)

சுக. தகுந்த வயதில்லாதவன் தர்மசாஸ்திரப்படி கசூ-வது வயதுமுதல் தகுந்த பிராயமுள்ளவனாகிறான். தகுந்த வயதுவந்தபிற்பாடு கஉவுத்துக்கு மேற்பட்டகாலம்வரையில் தகுந்த காரணம் இல்லாமல் அவனுடைய பாத்தியதையைப்பற்றி அவன் வியாச்சியஞ்செய்யத் தப்பிப்போனால் அவனுடைய வியாச்சியம் காலநிர்ணயதோஷத்தை அடையும். (கஅஉகூவு-நம்-கo-கஅசூoவு-நம்-சுoச-கஅசூகவு-ப-கூஉ.)

சுஉ. ஒருவன் மோசமாய் வியாச்சியஞ்செய்து பெற்றுக்கொண்டதீர்ப்பினால் துன்பத்தை அடைந்தவன் அந்தத்தீர்ப்பை ரத்துசெய்ய அதற்கு கஉவுத்துக்குப்பிற்பாடு வியாச்சியங் கொண்டுவரக்கூடாது. (கஅஉகூவு-நம்-கஉ.)

சுங. வியாச்சிய மூலம் உண்டானகாலம் நிச்சயமாய்த் தெரியாமல் இருந்தாலுலே சதர்க்கோர்ட்டாரவர்கள் சாராம்சத்தில் பிரவேசித்துத் தீர்ப்புச்செய்தார்கள். (கஅஉகூவு-நம்-க.)

சுச. வாதி பிரியாதில் தானும் தன் சகோதரனுன பிரதிவாதியும் கஅகஅ-ம்வுத்தில் பாகஞ்செய்துகொண்டதில் விவாதநிலந் தனக்குக் கிடைத்ததாகவும் அதை கஅஉஉவுத்தில் தான் தன்னுடைய சகோதரனிடத்தில் விட்டு, கஅகூசூ-ம்வுவனையில் வருமானம் பெற்றுவந்ததாகவும் அந்த நிலங் கிடைக்கவேண்டியதென்றும் விவாதித்தான். சுoவுகாலம்வனையில் வாதியின் பாத்தியத்தை ஒப்புக்கொள்ளாமல் பிரதிவாதி நிர்விவாதமாய் விவாதநிலத்தை அனுபவித்துவந்ததால் வாதி வழக்குக் காலாதிக்கிரமணதோஷத்துக்கு உட்பட்டதென்று கள்ளுபடி செய்யப்பட்டது. (கஅருoவு-நம்-சுகூ-கஅருஉவு-நம்-உ.எ.)

சஞ. கழகளவுகத்தில் தங்களுடைய முன்னோர்கள் கலெக்டர் இடத்தில் கவுல்வாங்கி அனுபவித்தநிலத்தை கழகூஉவுகத்தில் முதலாவது பிரதிவாதியின் பாட்டன் அபகரித்துக்கொண்டதினால் அந்தநிலங் கிடைக்கவேண்டுமென்று வாதிகள் வியாச்சித்தார்கள். வேநிலத்தைப் பிரதிவாதிகள் உருவுகாலம்மாய் அனுபவிப்பதை வாதிகளே ஒப்புக்கொள்வதால் கலெக்டருடைய கவுல் அவர்களுடைய கையில் இருந்தபோதிலும் அவர்களுடைய வழக்குக் காலநிபந்தனை தோஷத்துக்கு உட்பட்டதென்று தள்ளப்பட்டது. (கழகூஉவுக நம்-உஉக-கழகூஉவுட-ட-ககக.)

சகூ. போக்கிய நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக ஸ்வாமின்காரன் எந்தக்காலத்தில் வேண்டுமானாலும் வியாச்சியஞ் செய்யலாம். அவனுடைய வழக்கைக் காலநிபந்தனை வியாதி பிடிக்கமாட்டாது. (கழகுக-நம்-சுஎ-கழகுஉ - நம்-சுசூ - கழகுச-நம்-கச-நம்-குஉ-கழகுஉ-நம்-கஉ சு-கழகு - கழஎ - கழகூஎ-ட-உக-உச-சூஅ.)

சள. நிலத்தைப் போக்கியம் வைத்தவன் போக்கியத்தொகையைக் கொடுப்பதாகச் சொல்லி அதை வாங்கிக்கொள்ளாமலும் நிலத்தைவிடவும் போக்கியக்காரன் ஒழிகூடித்தால் அதுமுதல் கஉவுகத்துக்குள்ளாக நிலத்தைப்பற்றிப் போக்கியம்வைத்தவன் வியாச்சியஞ்செய்யவேண்டும். (கழகுஉவுக-நம்-குசஎ - கழகுகூவுக-நம்-கழஎ-கழகூஎ-நம்-உகு-ப-கூசஅ-சூஅ.)

சஅ. பிரதிவாதிகள் தங்களுக்குப் பகுதிகொடுத்துக்கொண்டு அனுபவித்துவந்த நிலத்துக்கு அவர்கள் பகுதிகொடுக்காதுப்பிப் போனதினால் அந்த நிலமும் பகுதிப்பாக்கியும் வாங்கித்தரவேண்டுமென்று வாதிகள் வியாச்சியஞ்செய்தார்கள். வே நிலத்தை சு-வது வாதி தகப்பனிடத்தில் இருந்து தாங்கள் ஒற்றிபெற்றதாகவும் ஒற்றிப்பத்திரத்தின் வாசகப்படி அந்த நிலம் தங்களுக்குச் சித்திக்துப் போய்விட்டதாகவும் பிரதிவாதிகள் விபவகரித்தார்கள். அந்த நிலம் ஆதியில் வாதிகளுக்குச் சொந்தமென்பதைப் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதினாலும் அது அவர்களுக்கு ஒற்றியாய்க்கிடைத்துச் சித்திக்துப்போனதாக அவர்கள் ருசுப்படுத்தாதுப்பிப்போனதினாலும் வாதிகள் வழக்குக் காலநிபந்தனை தோஷத்துக்கு உட்பட்டதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. (கழகூஎவுநம்-கூகு-ட-கஉன.)

௮௯. ஒருவனுக்கு ஒருசொத்தின் பாத்தியம் உண்டாகிச் சிலவருஷங்களுக்குப்பிற்பாடு வியாச்சியஞ் செய்தபோதிலும் காலநிபந்தனைச் சட்டத்திற் குறிக்கப்பட்ட கெடுவுக்குள்ளாக அவன் அந்த வியாச்சியத்தைச் செய்தால் அதை எற்றுக்கொள்ளத்தடையில்லை. (கஅஙூ0வஹ)-நம்-சகநி)-ப-கநிஙூ.)

நி0. ஒருவன் ஒரு நிலத்தைப்பற்றி வியாச்சியஞ்செய்து அந்த வியாச்சியத்தை அவனே தள்ளிக்கொண்டிருந்தால் அது முதற் கொண்டு பிரதிவாதியினுடைய அநுபவம் வாதிக்கு விரோதமான அநுபவமாயிருப்பதால் அந்த வியாச்சியத்தினா் தேதிமுதல் கஉவஹ த்துக்குள்ளாக ஷ நிலத்தைப்பற்றி வாதி வேறே வியாச்சியமும் செய்யவேண்டும். (கஅஙூ0வஹ)-நம்-சக-ப-கஙூசக.)

நிக. வாதியின் பாத்தியத்தை நிராகரித்துப் பிரதிவாதி ஒருசொத்தை அநுபவிக்கத்தொடங்கியல் அதுமுதற்கொண்டு பிரதிவாதியினுடைய அநுபோகம் வாதிக்கு எதிரிடையான அநுபோகமானதால் அதுமுதல் வியாச்சியமூலம் உண்டாகும். (கஅநிநிவஹ-நம்-கஙசக-கஅநிசவஹ)-நம்-உஎ.)

நிஉ. பிரதிவாதிக்குத் தகுந்தவயதில்லாததினால் அவன் மேலே செய்யப்பட்ட வியாச்சியத்தை தடைப்படுத்தக்கூடாதென்று வாதி அபிப்பிராயப்பட்டு அவனுடைய வியாச்சியத்தை தள்ளிக்கொண்டிற்பாடு பிரதிவாதிக்குத் தகுந்தவயது வந்தவுடன் வேறே வியாச்சியங் கொண்டுவந்தான். வியாச்சியமூலம் உற்பத்தியாகி கஉவஹத்துக்குப்பிற்பாடு ஷ உ-வது வியாச்சியஞ் செய்யப்பட்டபோதிலும் பிரதிவாதிக்குத் தகுந்த பருவம் இல்லாதகாலத்தில் அவன் பேரில் வியாச்சியம் நடந்தக்கூடாதென்று வாதிகொண்ட எண்ணந்தப்பானதென்று அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டியது கோர்ட்டாருடைய கடமையாயிருக்க, அந்தப்படி தெரியப்படுத்தாமல் அவனுடைய முந்தினவழக்கைத் தள்ளிக்கொள்ளும்படி கோர்ட்டார் உத்தரவுகொடுத்தது கிரமவிரோதமானதால் அவனுடைய உ-வது வியாச்சியத்தைக் காலநிபந்தனை தோஷஞ்ஞ சேரமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅநிநிவஹ)-நம்-ஙசக.)

நிங. எந்தக்கெடுவில் ஒற்றித்தொகையைக் கொடாவிட்டால் ஒற்றிக்காரனுக்கு நிலஞ் சொந்தமாய் சித்திக்துப்போகிறதென்று ஒற்றிப்பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிறதோ அந்தக்கெடுத்தப்பி

களவுக்குப் பின்புகூட ஒற்றிவைத்தவன் நிலத்தை மீட்டுக் கொள்வதற்காக வியாச்சியஞ்செய்யலாம். (கஅருகூவு-ப-கூஉ.)

நுச. ஒற்றித்தொகையை வாதி கெடுவில் கொடுக்கத்தப்பிப்போனல் அவனுக்குப் பிரதிவாதி அதிகமாய்ப் சிலதொகை கொடுத்து நிலத்தைச் சொந்தமாய் அனுபவித்துக்கொள்ளுகிறதென்று பத்திரம் பிறந்திருக்கிற விஷயத்தில் வாதி கெடுவில் தொகைகொடுக்கத் தப்பிப்போய்ப் பிரதிவாதியும் வாதிக்கு மேற்கண்ட கிரயசேஷத்தைக் கொடுக்கத்தப்பிப்போனல் அந்தக்கெடுத்தப்பி-கசூவு-த்துக்குப் பின்புகூட வே நிலத்தை மீட்டிக்கொள்ள வாதி வியாச்சியஞ் செய்யலாம். (கஅருகூவு-நம்-கூ.)

நுரு. ஒரு சொத்தைப்பற்றி, அ-என்பவனுக்கும், இ-என்பவனுக்கும் நடந்த வியாச்சியத்தில் தன்னைப் பிரதிவாதியா யேற்றுக்கொள்ளும்படி-உ-என்பவன் மனுக்கொடுத்தான். அவன் தனியே வியாச்சியஞ்செய்துகொள்ளும்படி சதர்க்கோர்ட்டாரால் உத்தரவுசெய்யப்பட்டது. அந்த உத்தரவின் தேதிமுதல் வியாச்சியமூலமான தால், உ-என்பவனுடைய வழக்குக் காலநிபந்தனை தோஷத்துக்குட் பட்டதல்லவென்று நிர்மானிக்கப்பட்டது. (கஅருஅவு-நம்-எ.)

நுசு. வருஷாவருஷம் ஒருவனுக்குத் தொகை கொடுக்கப்படுகிற பட்சத்தில் அந்தத்தொகை எப்போது கொடுக்கப்படாமல் நிறுத்தப்படுகிறதோ அதுமுதல் வியாச்சியமூலம் ஆரம்பமாகும். (கஅருஅவு-நம்-எகூ.)

நுள. கஉவு-வனாயில் பூஸ்திதியிலிருந்து ஒருவன் யாதொரு பிரயோஜனத்தையும் அடையாமலும் அவனுடைய ஸ்வாதந்திரியத்தை உபயோகப்படுத்தாமலும் இருந்தால் அவனுடைய பாத்தியம் கஉவுத்திய தோஷநிவாகத்தையடைந்து பிரானைவிசியாகமாகும். (கஅருஅவு-நம்-எநு.)

நுஅ. நதியின் பிரவாகத்தினல் ஜீரணமாய்ப்போன மானிய நிலங்களுக்குப்பதிலாய் ஜமீன்தார் மானியக்காரர்களுக்கு வேறே சில நிலங்கொடுத்துவிட்டு இறந்துபோகிறபட்சத்தில் அந்த ஜமீன்தாருடைய பாத்தியஸ்தன் அவனுக்கு ஜமீன்ஸ்திதி கிடைத்தகாலமுதல் கஉவுத்துக்குள்ளாக வே நிலத்தைப்பற்றி வியாச்சியங்கொண்டு வந்தால்மட்டும்-கஅ02உவு-உரு-வது சட்டம்-கஉ-வது பிரிவுப்படி அந்தநிலம் அவனுக்குக்கிடைக்கலாம். அந்தக்காலாவதி கடந்தபிற்

பாடு செய்யப்படும் வியாச்சியத்தின்மேல் காலநிர்ணயதோஷம் ஏறிக்கொள்ளும். (கஅசூ0ஹ)-நம்-சசச-கஅசூகஹ)-ப-நிஅ.)

நிகூ. யாதொரு நிலத்தைப்பற்றி உபயவாதிகளுக்குஞ் சண்டை உண்டாகி அந்தக்கலகத்தை நிவர்த்திசெய்யவேண்டியதற்காக அவர்களுடைய பாத்தியம் ஸ்தாபிக்கப்படுகிறவரையில் ஷே நிலத்தைக் கலெக்ட்டர் ஜப்தியில்வைத்திருந்தால் அந்த ஜப்திசெய்யப்பட்ட காலமுதல்-கஉஹ)த்துக்குப்பின்பு அவர்களில் ஒருவன் ஷே நிலத்தைப்பற்றி வியாச்சியஞ்செய்தாலுங்கூட அந்த வியாச்சியத்தைக் காலநிர்ணயதோஷப்பிரசக்திசேரமாட்டாது. எனென்றால் கலெக்ட்டருடைய ஜப்தியானது பிரதிகூலமான அநுபவம் அல்ல. (கஅசூ0ஹ)-நம்-க0-கஅசூகஹ)-ப-எநி.)

சூ0. இறந்துபோன சீத்தாராமய்யனுக்குப் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்தப்பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று அந்த சீத்தாராமய்யனுடைய நகுந்த வயதிலுள்ள ஸ்வீகாரபுத்திரனுடைய போஷகரால் வியாச்சியஞ்செய்யப்பட்டது. வாதி வழக்கு காலநிர்ணயதோஷத்துக்கு உட்பட்டதென்று பிரதிவாதிகள் ஆட்சேபித்தார்கள். தன்னுடைய போஷகனிடம் இருக்கிற பிள்ளையின் ஸ்வீகாரபாத்தியத்தை ஸ்தாபிக்கிறதற்காகத் தான் வேறே சிலவியாச்சியங்கள் ஜோடிக்கொண்டுவந்ததிலால் காலஹரணம்நேரிட்டதாக வாதி தர்க்கித்தான். அந்தக்காரணத்திலால் காலநிர்ணயதோஷம் விமோசனம் ஆகமாட்டாதென்று வாதி வழக்கு தள்ளப்பட்டது. (கஅசூ0ஹ)-நம்-சசூசூ-கஅசூ0கஹ)-ப-க0சூ.)

சூக. வாதிசெய்த வியாச்சியத்தை அவனே தள்ளிக்கொண்டுபிற்பாடு நாதஸாவியாச்சியம் செய்கிறபட்சத்தில் முந்தின வியாச்சியங் கோர்ட்டு நடவடிக்கையில் எவ்வளவுகாலம் இருந்ததோ அந்தக்காலத்தையுஞ்சேர்த்து, கஉஹ) கணக்கிடவேண்டுமேயல்லாமல் அந்தக்காலத்தைக் கழிக்கக்கூடாது. (கஅருஅஹ)-நம்-உ0க-கஅருகூஹ)-ப-சூரு)-கஅசூ0ஹ)-நம்-சூ-ப-கசூசூ.)

அநுபவம்-கச	கிரயம்-சூரு .....
இணம்-உ0	ஸ்வீகாரம்-சூன-சக .....
ஒற்றி-க0-கஉ-கசூ	மிராசுதாரும் புறக்குடியும்-உரு.
கடன்-கச	விசாரணைக்கர்த்தன்-க .....

இவைகளைப்பார்க்க.

கால்நடை.

யாதொரு நிலத்தில் கால்நடைமேய்வதற்கும் அதற்குத் தண்ணீர் கட்டுவதற்கும் ஒருவனுக்கு உண்டாயிருக்கிற பாத்தியத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியதற்காக அவன் வியாச்சியஞ்செய்யலாம். (கஅசூக வரு). நம்-உக-ப-கசசூ.)

கிரயம்.

க. பூஸ்திதி வேறொருவனுக்குக் கிரயமாயிருப்பதைத் தெரிந்துகொண்டே பிற்பாடி அதைக் கிரயத்துக்கு வாங்குகிறவன் முந்தின கிரயக்காரனுக்கு அந்தப் பூஸ்திதியை விட்டுவிடப் பாத்தியப்பட்டிருக்கிறான். (கஅருகூ வரு-நம்-கஅஉ-ப-களன.)

உ. ஒருவனிடத்தில் சரக்குகளைவாங்கி அவைகளைத் திருப்பிக் கொடாமல் அனேகவருஷகாலம் வைத்துக்கொண்டிருக்கிறவன் அந்தச் சரக்குகள் உபயோகமற்றவைகளாயிருந்தாலுங்கூட அவைகளின் கிரயத்தை உத்தரிக்கவேண்டியவனாயிருக்கிறான். (கஅருகூ வரு-நம்-கஅசூ-ப-உசரு.)

கூ. ஒருவனுக்கு நிலத்தைக் கிரயஞ்செய்து கொடுத்தவன் அந்தக்கிரயத்தொகையைக் கெடுவில்கொடுத்து அந்தநிலத்தை மீட்டுக்கொள்ளுகிறதென்று ஒரு உடன்படிக்கை பெற்றுக்கொண்டிருந்து அந்தக்கெடுவில் கிரயக்காரனுக்குத் தொகை கொடுக்கத்தப்பிப்போகிற பக்ஷத்தில் மை உடன்படிக்கை ரத்தாய்ப்போய் மை கிரயசாசனம் உறுதிப்பட்டுப்போகும். (கஅருபவரு-நம்-கசூஉ-நம்-களஉ-கஅசூஅ வரு-ப-சூசூ-கூகூ.)

ச. ஒருவன் வேறொருவனுக்குக் கடன்கொடுக்கவேண்டியிருந்தபோதிலும் அந்தக்கடனுக்குப் பாத்தியமாயிராத சொத்தை அவன் யாருக்காவது கிரயஞ்செய்யலாம். (கஅருரு வரு-நம்-ககசூ.)

ரு. ஆதாரவில்லாமல் நிலத்தை வாய்மொழியாய்க் கிரயஞ்செய்வது செல்லாது. (கஅருசூ வரு-நம்-சஅகூ.)

சூ. பூஸ்திதிமுதலானவைகளைக் கிரயஞ்செய்வதாகக் கிரயத்தொகை பற்றிக்கொள்ளாமல் ஒருவன் செய்யும் வாக்குத்தத்தமானது உபயோகமற்றது. நிலத்தை ஒற்றிவாங்கினவனுக்கு அந்த நிலத்தைக் கிரயஞ்செய்துகொடுக்கும்படி ஒருவன் மரணசாஸனத்தின் அடியில் எழுதிவைத்திருந்தாலும் அந்தப்படி செய்யவேண்டியதில்லை. (கஅருஎ வரு-நம்-சஉ.)

எ. ஜேஷ்டசகோதரனுடைய அநுமதி இல்லாமல் கநிஷ்ட சகோதரனால் செய்யப்பட்ட கிரயம் ஜேஷ்ட சகோதரன்மேல் பொறுக்கமாட்டாது. (கஅருசூஹ-நம்-சக.)

அ. புத்திரனுடைய சம்மதமில்லாமலும் அவசரம் இல்லாமலும் பூர்வீகஸ்திதியைத் தகப்பன் கிரயஞ்செய்தால் செல்லாது. (கஅருநு ஹ-நம்-கஉ)

கூ. தகுமானவயது வராதபிள்ளையைப் போஷிக்கிற தாயானவள் முக்கியமான அவசரம் நேரிடும்போது சொத்துக்களைக் கிரயஞ் செய்யலாம். (கஅருஅ ஹ-நம்-உஉ-ப-சoச.)

கo. தீர்ப்பின் தொகைக்காக ஜப்திபிலிருக்கிற நிலத்தைக் கிரயஞ் செய்தால் செல்லாது. (கஅருசூ ஹ-நம்-கஉஅ.)

கக. கிரயசாஸனஞ் செய்துகொடுத்தவன் கிரயம் பெற்றவனுக்குக் கிரயத்தொகையைத் திருப்பிக்கொடுத்து அதற்காக ஆதாரவும் பெற்றுக்கொண்டால் ஷை கிரயம் ரத்தாய்ப்போகும். (கஅருஅ ஹ-நம்-ககூள.)

கஉ. கிரயம் மோசமாய் நடந்ததா அல்லவா என்பது ருசுவைப் பற்றின விஷயமானதால் அந்த விஷயத்தில் சதர்க்கோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாது. (கஅருசூ ஹ-நம்-கக.)

கஙூ. சூ-ம்-பிரதிவாதியிடத்தில் கஅருஉ ஹ-ரூலதீ்த்தில் தான் கிரயம் வாங்கினநிலம் கிடைக்கவேண்டுமென்று வாதி தொடர்ந்தான். ஷை நிலத்தை கஅசஅ-ஹ்ரூத்தில் சூ-ம் பிரதிவாதி-அ-ம்-பிரதிவாதிக்குக் கிரயஞ்செய்ததாகவும் அதை அ-ம் பிரதிவாதி கஅருஉ ஹ-ஆகஸ்ட்டுதீ்த்தில் தனக்குக் கிரயஞ்செய்ததாகவும் எ-ம் பிரதிவாதி எதிர்கட்சிபேசி அந்தப்பிரகாரம் ருசுப்படுத்தினவைத் தான். அ-ம் பிரதிவாதி வசத்திலிருந்த நிலத்தை சூ-ம் பிரதிவாதியிடத்தில் வாதிகிரயம் வாங்கினது ( )லாதென்றும் நிலத்தைக் கிரயம்வாங்குகிறவன் அது இன்ஜர்வசத்திலிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளாமல் கிரயம்வாங்கினால் அது அவனுடைய ஸ்வயங்கிருத அபராதம் என்றும் அதினால் உண்டாகத்தக்க நஷ்டத்தை அவன் அநுபவிக்கவேண்டியவனென்றும் வாதிவழக்கு தீர்க்கப்பட்டது. (கஅருசூ ஹ-நம்-களக-கஅசூo ஹ-ப-எசூ.)

கச. வாதியின் பணத்தைக்கொண்டு மூதற் பிரதிவாதியின் பெயரால் கிரயம்வாங்கப்பட்ட நிலம் கிடைக்கவேண்டுமென்று வாதி

தொடர்ந்தான். வே நிலத்தின் சிரயசாஸநம் மூதலானவைகள் மூதற் பிரதிவாதியின் பெயராற்பிறந்து அந்தச்சாஸநங்களும் நிலமும் அநேகவருடகாலம் அனுபவத்தில் இருப்பதால் வாதிவழக்கு செல்லாதென்றும் எவன்பெயராற் சாஸநம் பிறந்திருக்கிறதோ அவன் சிரயம் வாங்கினவனல்லவென்றும் வேறொருவன் சிரயக்காரனென்றுஞ்சொல்வதைப்பற்றி தர்மசாஸ்திரப்படி. வாசா சாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாதென்றும் நிரூபிக்கப்பட்டது. (கஅருசுஅஸ்)-நம்-கஉஉ-கஅருஅ அஸ்ல-நம்-உசூ-கஅருசூ அஸ்ல-நம்-உசூ0-கஅசூ0 அஸ்ல-ப-கூஅ.)

கரு. தனக்குச் சொந்தமான நிலத்தை மூதலில் வாதிக்குக் கிரயஞ்செய்து மூதற்பிரதிவாதி பிற்பாடு உடம் பிரதிவாதிக்குக் கிரயஞ்செய்து நிலத்தையும் அனுபவத்தில் விட்டிலிட்டான். வாதிக்கு முன் சாஸநமாயிருப்பதை அறியாமலே உடம் பிரதிவாதி வே நிலத்தைக் கிரயம்வாங்கி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டபோதிலும் முந்தின சாஸநக்காரனை வாதிரின் பாத்தியமே சிரேஷ்டமானதென்று அனுபவிக்கும் தீர்ப்புசெய்யப்பட்டது. (கஅசூ0 அஸ்ல-நம்-சூசு-ப-உளள.)

கசூ. சாஸநங்கள் வாதியின்பெயராற் பிறந்திருந்தபோதிலும் அந்தச் சாஸநங்களும் நிலமும் கஎ-வருடகாலம் பிரதிவாதிகள் வசத்தில் இருந்ததினால் அந்தநிலம் பிரதிவாதிகளுக்குச் சொந்தமானதென்றும் விருதா காரணார்த்தமாக வே சாஸநங்கள் வாதியின் பெயராலெழுதப்பட்டிருப்படதாகவும் நிர்மானிக்கப்பட்டது. (கஅருஅ அஸ்ல-நம்-உஅ-ப-களசூ)

களள. தகப்பன் சிரயசாஸநம் எழுதிக்கொடுக்கும்போது மகன் கூட இருந்து ஆசேஷேபிக்காமல் இருந்ததினால் அந்தக்கிரயம் மகனுடைய சம்மதத்தின்மேல் நடந்ததென்று நிச்சயிக்கப்பட்டது. (கஅசஅ அஸ்ல-நம்-கச-கஅசசூ அஸ்ல-நம்-உ0.)

கஅ. அவிபக்த சகோதரர்களில் ஒருவனும் அவனுடைய தகப்பனும் தகுந்தவயதில்லாத மற்றச் சகோதரர்களுடைய சம்மதி இல்லாமல் எழுதிக்கொடுத்த கிரய சாஸநமானது குடும்ப நிர்ப்பந்தத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு பிறந்திருந்தால் மாத்திரம் அதற்கு மற்றச்சகோதரர்களும் பாத்தியப்படவேண்டும். அப்படி இல்லாதவனையில் அதை எழுதிக்கொடுத்தவர்களுடைய பாகஸ்திதி சம்

பந்தப்பட்டவனையில் மாத்திரம் அந்தச்சாஸநம் செல்லும். (கஅருகூ (வரு)-நம்-கூகூ.)

௬௬. பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரயசாஸநப்படி நிலங் கிடைக்கவேண்டுமென்று வாதியால் வழக்கிடப்பட்டது. அசல்க்கோர்ட்டார் வாதிபக்ஷந் நிர்ப்படுச்செய்தார்கள். ஷை நிலத்தைப்பற்றி வேறொரு வியாச்சியத்தில் விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது அதைப் பிரதிவாதி கிரயஞ்செய்தது செல்லாதென்று வாதிக்கு விரோதமாய் அப்பில்க்கோர்ட்டார் தீர்மானஞ்செய்தார்கள். எந்த நம்பரில் ஷை நிலத்தைப்பற்றி முன்பாக வியாச்சியம்நடந்ததோ அந்த நம்பரில் தாக்கலான ராஜிநாமாவில் பிரதிவாதி ஷை நிலத்துக்குப் பாத்தியஸ்தனென்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அவன் இப்போது பிரஸ்தாபத்தில் இருக்கிற நம்பரின் வாதிக்குச்செய்துகொடுத்த கிரயசாஸநம் ஷை வியாச்சியகாலத்தில் பிறந்திருந்தாலுங்கூட அது செலாவணி உள்ளதென்று சதர்க்கோர்ட்டாரவர்கள் தீர்மானித்தார்கள். (கஅருகூ (வரு)-நம்-ரு.)

௬0. நிலத்தைப்பற்றி அ-என்பவன் க என்பவனுக்கு எழுதிக்கொடுத்த கிரயசாஸநம் அ-என்பவன்கையில் இருப்பதைக்கொண்டு மாத்திரம் அந்நிலம் மறுபடியும் அ-என்பவனுக்குக் கிரயமானதாக நிச்சயிக்கக்கூடாது. அ-என்பவன் மறுபடியும் கிரயம் வாங்கியிருந்தால் அவன் க-என்பவனிடத்தில் வேறொருசாஸநம் பெற்றுக்கொண்டிருக்கவேண்டும். (கஅருகூ (வரு)-ப-எக.)

௬௬. இவ்வளவு பங்குநிலம் கிரயமானதாகமட்டும் ஸ்தூலமாய் சாஸநத்தில் எழுதுவது சகஜவழக்கமாகவும் விவாதப்படுகிற தோட்டா அந்தக் கிரயத்திற் சேர்ந்ததா அல்லவா என்பது சாஸநத்திலும் அறியக்கூடாமலும் இருக்கும்போது அந்தச்சாஸநத்தை வாதி தாக்கல்செய்யத்தப்பிப்போயிலுங்கூட அவன்பக்ஷங் கோர்ட்டார்தீர்ப்படிச்செய்யவிக்கினம் இலை. (கஅசுo (வரு)-நம்-நிக-ப-நிஅ.)

உஉ. நிரமமாய்ப்பிறந்த கிரயசாஸநத்தை ஹீகக்கிரயம் என்கிற ஆதாரத்தினால்ரத்துச்செய்யக்கூடாது. (கஅருசு (வரு)-நம்-சச-கஅருள (வரு)-நம்-கூகூ.)

உங. வாதிக்குப் பிரதிவாதி நு-கெடுவில் பணங்கொடுக்கிறதென்றும் எந்தக்கெடுவாவது தப்பிஞ்சு விவாதநிலம் வாதிக்குச் சொந்தமாய் சித்தித்துபோகிறதென்றும் நிபந்தனை கண்டிருக்கிற ஒரு

கிரயசாஸநப்படி நிலங்கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ் செய்தான். வாதிக்கு நிலஞ் சித்திக்துப்போகிறவிஷயத்தில் அவன் பிரதிவாதியிடத்தில் பெற்றுக்கொண்ட முந்தின கெடுக்களின் தொகையை அவன் மறுபடியும் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படியான நிபந்தனை காணுமல் வழக்கவிரோதமாகவும் அநியாயமாகவும் பிரதிவாதிக்குப் பிரத்தியக்ஷ பிரதிகூலமாகவும் பிறந்திருக்கிற கெ சாஸநத்தை உறுதிப்படுத்துவது தர்மம் அல்லவென்று சதர்க்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். (க அருஉ ஹெ-நம்-உஉ.)

உச. முதற்பிரதிவாதி எழுதிக்கொடுத்த சாஸநப்படி நிலங்கிடைக்கவேண்டியதற்காக வாதி வழக்குச்செய்தான். அந்தச்சாஸநத்தின் உண்மையை முதற்பிரதிவாதி ஒப்புக்கொண்டு, உ-ம் பிரதிவாதிக்குத்தகுந்தவயது இல்லாதகாலத்திற் பிறந்த கெ சாஸநஞ் செல்லாதென்று தர்க்கித்தான். முதற்பிரதிவாதி செய்துகொடுத்த கிரயசாஸநத்தைப்பற்றி இதாள் ஆட்சேபிக்கலாமே அல்லாமல் அவனுடைய செய்கையைப்பற்றி அவனே தோஷஞ்சொல்வது தகுதி அல்லவென்று விதிக்கப்பட்டது. (க அருஉ ஹெ-நம்-அசு.)

உரு. ஒரு நிலத்தைப்பற்றியே, அ-என்பவன் முந்தினசாஸநமும், இ-என்பவன் பிந்தினசாஸநமும் பெற்றுக்கொண்டார்கள். அ-என்பவனுடைய சாஸநம் ரெஜிஸ்டர்செய்யப்படாமலும், இ-என்பவனுடையசாஸநம் ரெஜிஸ்டர்செய்யப்பட்டதாகவும் இருந்தது. இ-என்பவனுடைய சாஸநம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாயிருந்தாலும், அ-என்பவனுக்கு முன்சாஸநமாயிருப்பதை அறிந்துகொண்டே, இ-என்பவன் மோசமாய்ப் பின்சாஸநம்பெற்றிருப்பதால் அது செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது. (க அருகூ ஹெ-நம்-எசூ-ப-கசஞ.)

உசூ. முதற்பிரதிவாதி தனக்கு விக்கிரயஞ்செய்த நிலங்கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சித்தான். முதற்பிரதிவாதியிடத்தில் வாதியின் சாசஸநத்துக்கு முந்தித்தான் சாஸநம் பெற்றுக்கொண்டதாகவும் சந்ததியில்லாத விதவையான முதற்பிரதிவாதிக்குத்தானும், கூ-சு-பிரதிவாதிகளும் பாத்தியஸ்தர்களானதால் தங்கள் அநுமதியின்றி வாதிக்கு முதற்பிரதிவாதிசெய்த கிரயஞ் செல்லாதென்றும் உ-ம் பிரதிவாதி எதிர்கட்சிசொன்னான். முதற் பிரதிவாதியிடத்தில்தான் கிரயம்வாங்கினதாய்ச் சொல்லுகிற உ-ம் பிரதிவாதி அந்த முதற்பிரதிவாதியின் பாத்தியத்தை ஆட்சேபிக்கக்கூடாதென்றும் முதற்பிரதிவாதியின் அகத்தியமான செலவுக்காக கூ-சு-பிரதிவாதி

களுடைய சம்மதியின்மேல் அவள் விவாதநிலத்தை வாதிக்குக் கிரயஞ்செய்தது செல்லுமென்றும், உ-ம் பிரதிவாதி அவனுடைய சகோதரர்களான, ங-ச்-பிரதிவாதிகளை துவேஷித்துக்கொண்டிருப்பதால் ஷை கிரயத்துக்கு, உ-ம் பிரதிவாதியின் அநுமதி அநாவசியமென்றும் வாதி வழக்கு ஸ்தாபிக்கப்பட்டது. (கஅருகூஹுப-நம்-உ௧0-கஅசூகஹுப-ப-கள.)

உஎ. உ-ம் பிரதிவாதியின் நிலத்தை அவன் முதற்பிரதிவாதிக்கு விக்கிரயஞ்செய்து அவனிடத்தில் கெடு உடன்படிக்கை பெற்றுக்கொண்டான். அந்தக்கெடுவில் சாஸநத்தினாகையை உ-ம் பிரதிவாதியிடத்தில் முதற்பிரதிவாதி பெற்றுக்கொள்ள நிராகரித்தபடியால் வாதிகளுக்கு உ-ம் பிரதிவாதி ஷை நிலத்தை உடன்படிக்கைமூல மாய்க்கொடுத்துவிட்டான். அந்த உடன்படிக்கையின் ஆதாரத்தின் மேல் ஷை நிலத்தைப்பற்றி வாதிகள் வியாச்சியஞ்செய்தார்கள். ஷை சாஸநத்தினாகையை வாதிகளிடத்தில் முதற்பிரதிவாதி வாங்கிக்கொண்டு நிலத்தை வாதிகள்வசத்தில் விட்டுவிடும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅசூ0ஹுப-நம்-கூக-கஅசூகஹுப-ப-உகூ.)

உஅ. சாஸநத்தினாகையை ஸ்வாதீனகாரன் கெடுவில்கொடுத்தால் வாங்கிக்கொண்டு நிலத்தை விட்டுவிடுகிறதென்கிற சங்கேதத்தின் மேல் அந்த நிலத்தைக்கிரயம்வாங்கி அநுபவிக்கிறவன் ஷை கெடு கிரமிக்கிறதற்குமுன் அந்த நிலத்தை வேறே யாருக்காவது கிரயஞ் செய்தால் செல்லாது. (கஅசூபஹுப-நம்-சூகூ-கஅசூகஹுப-ப-சள.)

உகூ. வாதிக்குப் பிரதிவாதி ஒருமனைபைக் கிரயஞ்செய்து அதை வாதி வசப்படுத்தத்தப்பிப்போனால் அந்த மனையைப்பற்றி வாதி வியாச்சியஞ்செய்யவேண்டுமே அல்லாமல் கிரயத்தினாகையைப் பற்றித் தொடரக்கூடாது. ஆனால் கிரயத்தினாகையைக்கொடுப்பதாகப் பிரதிவாதி உடன்படிக்கை செய்திருந்தால் அந்தத்தினாகையைப்பற்றியும் வாதி வியாச்சிக்கலாம். அந்த உடன்படிக்கையை வாதி நிறைவேற்றத்தப்பிப்போனால் அவனுடைய வழக்கைத் தள்ளுபடிசெய்யவேண்டுமேதவிர ஷை மனையை வாதி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டதாகப் பிரதிவாதிசொன்ன கட்சி அபீனவின் ரிப்போர்ட்டினால் பலஹீனமாய்ப்போய்விட்டதென்கிற காரணத்தினால் வாதி பட்சந் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅசூ0ஹுப-நம்-சூருச-கஅசூகஹுப-ப-சூரு.)

கூo. கிரயசாஸநம் ஒருபக்கத்தில் கொஞ்சம்பிந்துசெய்யப்பட்டு அதை எழுதிக்கொடுத்தவன் வசத்தில் அநுபவம் அதற்கண்டகிலமும் இருக்குமாயல் அவன் கிரயசாஸந்தொகையைக் கிரயக்காரனுக்குக்கொடுத்து நிலத்தை மீட்டுக்கொண்டதாக ஊகிக்கப்படவேண்டும். (கஅசுo வரு-நம்-நு அசூ-க அசூக வரு-ப-கூசுக்.)

கூக. சாஸநம் எழுதிக்கொடுத்தவன் அதின் உண்மையை ஒப்புக்கொண்டால் அது பிறந்தகாலத்தில் அவன் கிரயத்தொகையைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்தாலுங்கூட அந்தச்சாஸநத்துக்கு ஓர்ஊ உண்டாகமாட்டாது. ஷ சாஸநஞ்செய்துகொடுத்தவன் கிரயத்தொகையைப்பற்றிமட்டும் வியாச்சியஞ்செய்யலாமேதவிர சாஸநத்துக்குப் பங்கஞ்சொல்லக்கூடாது. (கஅசுo வரு-நம்-சுநo-கஅசுக வரு ப-கசுஅ.)

கூஉ. கிரயசாஸநத்தைப் பெற்றுக்கொண்டவன் கைபற்றிஸ்டமீன அநுபவடபடாமல் கிரயம் அழிரணமாய்ப்போய்விட்டதால் சாஸநத்தொகையை அவன் வட்டியுடன் பெற்றுக்கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅநிநி வரு)-நம்-நுசூ.)

கூங. அ-என்பவனுடைய நிலத்தை, இ-என்பவன் கிரயம்வாங்கினபோது அந்த நிலத்தை அ-என்பவனுக்கே ஒற்றிவைப்பதாக, இ-என்பவன் பிரதிக்கிஹ்யைசெய்தான். அநிலமும் ஷ நிலத்தை, இ-என்பவன் கிரயம்வாங்கி மூலாதாரவுகளையும் பெற்றுக்கொண்டதினாலும் ஷ பிரதிக்கிஹ்யைப்பிரகாரம் யாதொருசெய்கையும் நடவாதபடியாலும் ஷ நிலத்தின்மேல், அ-என்பவனுக்குப் பாத்தியம் இல்லையென்றும் அதை, இ-என்பவன் வேறே யாருக்காவது விக்கிரயஞ்செய்யலாமென்றும் நிர்த்தாரணஞ்செய்யப்பட்டது. (கஅநிஅ வரு)-நம்-சுன-ப-கஉசுக.)

கூச. ஒரு நிலத்தை ஊதியில்லாமல் போக்கியம் வாங்கினவன் மூலாதாரவு ரஹிதனாயும் அதைப் பிற்பாடு கிரயம்வாங்கினவன் மூலாதாரவு சஹிதனாகவும் இருந்தால் அந்தக் கிரயகாலத்தில் ஷ நிலம் போக்கியக்காரன் ஸ்வாதீனத்தில் இருந்தாலுங்கூடப் பிந்தின கிரயமேஸ்தாபிக்கப்படும். (கஅநிஅ-ம்வரு-நம்.சுகூ.)

கூஞ. ஒரு பாத்தியத்தைக் கிரயம்வாங்கினவன் அதைப்பற்றி உடனே தொடராமல் காலாதிக்கிரமணதோஷம் உண்டாகும்படி சும்மா இருந்துவிடுவானாலும் அவன் அந்தப்பாத்தியத்தைக் கிரயஞ்

செய்தவனைக்கூடப் பிற்பாடு தொடரக்கூடாது. (க.அ.நி.வ.ரு.ச.ம்-கஉ.)

௯௫. சாஸ்திரம் ஒருவன்பெயரால் பிறந்திருக்கும்போது வேறொருவன் தானுங்கூடச்சேர்ந்து கிரயம்வாங்கினதாக நிச்சிதமாய்க் கட்சிசெபசியல்ஸ் அதை ஒப்புக்கொள்ளக்கூடாது. (க.அ.அ.வ.-ரம்-ரி.அ-ப-கசரி.)

௯உ. குடும்பஸ்திரியைக் காரணவன் பிரசித்தமாய் விக்கிரயஞ் செய்து அதைப்பற்றி அநந்தரவாள் ஏட்சேபிக்காமல் சிலவரு வரையில் மௌனமாயிருந்துவிட்டால் அந்த விக்கிரயத்துக்கு அவர் கருதம் பாத்தியப்படவேண்டும். (க.அ.சு.வ.ரு.-ரம்-உ.அ-ப-கக.)

௯அ. கிரயசாஸ்திரம். நிலங்கினடக்கவென்றுமென்று வாதி செய்து வியாச்சியத்தில் அந்தக்கிரய சாஸ்திரம் அபத்தமென்று ஸ்தாபிக்கப்பட்டபடியால் வே நிலந்தின்பேரில் வாதி பிறாங்கைகாண்ட யுதார்த்தமான பந்தகப் பாத்திரத்தினதாணைகளைப்பற்றி அவன் வெறே வியாச்சியஞ்செய்யலாமென்று அநுமதி கொடுக்கப்பட்டது. (க.அ.நி.வ.ரி.-ரம்-உ.சு-ப-கக.)

சுஎ. கம்னாடதேசத்தில் பர்க்கார் நிலங்களைச் சாகுபடி. செய்கிறவர்கள் அந்தப்பாத்தியத்தை வேறே யாருக்காவது விக்கிரயாதிகள் செய்யலாம். அதிலுள்ள சர்க்காருடைய பாத்தியத்துக்கு வியாகாதம் நில்லை. (க.அ.சு.வ.ரு-ரம்-கஉ.)

சுஏ. ஒரே நிலத்தை இருவர் கிரயம்வாங்கியிருக்கிற பட்சத்தில் முந்தின கிரயக்காரனுடைய பாத்தியத்தைக் கோர்ட்டார் ஸ்தாபிக்க வேண்டுமே அல்லாமல் வே கிரயத்துக்கு முன்னதாய் கடந்த ஒற்றி விவகாரங்களாக்கலந்து யோசித்து அதற்குத்தக்கபடி தீர்மானஞ்செய்யக்கூடாது. (க.அ.நி.வ.ரு-ரம்-சுஏ-ட-கரி.அ.)

சுக. ஒரேஸ்திரியை இருவர் கிரயம்வாங்கியிருக்கிறபட்சத்தில் முந்தின சாஸ்திரக்காரனுடைய பாத்தியத்தைமட்டும் ஸ்தாபித்துத் தீர்ப்புச் செய்யவேண்டுமேயல்லாமல் பிந்தின சாஸ்திரத்தைப்பற்றி அந்தத்தீர்ப்பில் கோர்ட்டார் யாதொரு அபிப்பிராயமுஞ்சொல்லக் கூடாது. பிந்தின சாஸ்திரக்காரன் சாஸ்திரத்தொகையைப்பற்றி வேறே வியாச்சியஞ்செய்யலாம். (க.அ.சுஏ.வ.ரு-ரம்-சுசுகூ-க.அ.சுசுக.வ.ரு-ப-கசுகூ.)

சுஉ. அ-என்பவனுடைய நிலத்தை, க-என்பவன் கிரயம்வாங்கும் போது, அ-என்பவன் கெடுவில் கிரயத்தொகையைக்கொடுத்து

நிலத்தை மீட்டுக்கொள்ளுகிறதென்று அவர்களுக்குள் அந்தரங்க ஏற்பாடு நடந்து பிற்பாடு அந்த ஏற்பாட்டை அறியாமல், க-என்பவனிடத்தில், ச-என்பவன் ஷ நிலத்தைக் கிரயம்வாங்கினால் அந்தக்கிரயம் ஸ்திரமேதவிர அதை தோஷாநுபந்தலேசஞ் சேராது. (கஅருசுஙல-நம்-கருக.)

சஙூ. கிரயஞ்செய்துகொடுத்தவன் கிரயம் பெற்றுக்கொண்டவனிடத்தில் கிரயத்தொகையை சொக்கமாய்ப்பற்றிக்கொண்டதாக சாஸநத்தில் எழுதப்பட்டிருந்தால் கிரயத்தொகை செல்லானதற்கு அந்தச் சாஸநமே பூர்ணசாட்சியம். அதற்கு விரோதமாய்க் கிரயத் தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லையென்று கிரயஞ்செய்துகொடுத்தவன் சொல்லுவ்கட்சி அநுபயோகம். அதைப்பற்றி வாசாசாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅசுo ஙல-நம்-உஉசூ-உருசூ-கஅசுகஙல ப-கச-சஉ.)

அங்கீகாரம்-கஉ.....	ஐப்தி-சூ.....
அங்கீகாரவிபரீதம்-கஉ.....	பராதிநம்-ஙூ-கசூ-கச்-கள-ககூ ...
அநுபவம்-க.....	பாகம்-கசூ-சூஅ..... .....
அவதிக்கிரயம் முழுமையும்.....	பாலம்ப்-சூ; ....
ஓற்றி-க-ரு-கச-உo-உக..... ...	பிரதமச்சிரயபாத்தியம்-க-உ-சூ..
சாட்சியநிர்வாஹம்-கo	மிராசுபதிவு-க.....
சாட்சியம்-ரு-சூ-எ?.....	ரெஜிஸ்டர்-உ.....
சாம்பர்ட்டி-க-உ-சூ-சுர-எ.....	

இவைகளைப்பார்க்க.

கிராம உத்தியோகங்கள்.

க. கிராமக்கணக்கன் அவனுடைய வேலைக்காரன்மேல் கோர்ட்டுகளில் வியாச்சியஞ்செய்யலாம். (ச-பு-கஅசஙல-ஜனுவரிமீ கூஉ.)

உ. சாசுவதத்தீர்வை ஏற்பட்ட கிராமத்தின் கணக்கனைக் கோர்ட்டாருடைய தீர்ப்பின்மேல்மட்டும் தள்ளலாமே அல்லாமல் வேறே விதமாய்த் தள்ளக்கூடாது. (ச-பு-கஅசo ஙல-செப்ட்டம்பர்மீ உஉ)

சு. கஅசுகஙல-சு-வது சட்டம் உ-வது பிரிவுப்படி பிதுராார்ஜித மான கிராம உத்தியோகங்களின் வருமானங்கள் கோர்ட்டுக்கட்டளைக்கு உட்பட்டனவையல்ல. (ச-பு-கஅருகஙல-ஆகஸ்டுமீ கூoஉ)

ச. ஷை சட்டம் ச-வது பிரிவுப்படி தர்மசாஸ்திர விதிகளுக்கு விரோதமாகவும் ரிவினியூ போர்டாருடைய உத்தரவில்லாமலும் பிதுரார்ஜிதமான கிராம் உத்தியோகங்களைப் பராதீனஞ்செய்தால் செல்லாது. (ஷை.)

ரு. கிராமக்கணக்கனுடைய வருமானம் அவனுடைய உத்தியோகத்துக்குச் சம்பந்தப்பட்டதானதால் அந்த வருமானங் குடும்பச் சொத்தைப்போலே பாகத்துக்கு யோக்கியமானதல்ல. (ஷை.)

சூ. தீர்வை யேற்பட்ட தாலூகாவில் கிராமக்கணக்கன் கொடுக்க வேண்டிய தீர்ப்பின் தொகைக்காக அவனுடைய உத்தியோகத்தை ஏலம்போடக்கூடாது. அந்த உத்தியோகத்தை வேறேவிதமாய் விக்கிரயஞ்செய்யவுங்கூடாது. அந்த உத்தியோகம் கிடைக்கவேண்டியதைப்பற்றி வியாச்சியம் செய்யவுங்கூடாது. (ஷை.)

எ. சாசுவதத்தீர்வை ஏற்பட்ட தாலூகாவில் கிராமக்கணக்கன் இறந்துபோனால் அவனுடைய பாத்தியஸ்தர்களில் ஒருவனை அந்த உத்தியோகத்தில் நியமிக்கவேண்டும். அந்தப்பாத்தியஸ்தன்மேல் பிரியாதுகள் வந்திருக்கிற நிமித்தியத்தினால் ஷை உத்தியோகத்தை அநேகவருஷகாலம் கலெக்ட்டர் காலியாய்வைத்திருக்கக்கூடாது. சாசுவதத்தீர்வை ஏற்பட்ட தாலூகாவின் கிராமக்கணக்கர்களை நியமிக்க அதிகாரமுள்ள கலெக்ட்டர் அந்தப்படி. நியமஞ்செய்யாவிட்டால் ஷை உத்தியோகங் கிடைக்கவேண்டியதைப்பற்றித் தகுந்தபாத்தியஸ்தன் கலெக்ட்டர்மேலே கோர்ட்டில் வியாச்சியஞ்செய்யலாம். (அசுஐஹ-நம்-உஉ-ப-கஉஉ.)

அ. நியமகத்தினாலாவது அல்லது பிதுரார்ஜித பாத்தியத்தினாலாவது கணக்குவேலை பார்க்கிறவன் அந்த உத்தியோகத்தை வேறொருவனுக்குக் கொடுக்கக்கூடாது. (கஅகசூஹ-நம்-க.)

க. கஅஐஉஹ-உ-சூ-வது சட்டம் எ-வது பிரிவுப்படி நிரியாணதசையை அடைந்த கணக்கனுடைய பௌத்திரன் தகுந்தவயதுள்ளவனையிருந்தால் ஸ்வயமாகவும் தகுந்தவயதில்லாமலிருந்தால் குமாஸ்தாமூலமாகவும் அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு நடப்பிக்கப்பாத்தியஸ்தனையிருக்கிறான். (ஷை.)

கஐ. கணக்கனுடைய உத்தியோகவருமானங்கள் பாகத்துக்கு அநர்ஹமானபடியால் அந்த வேலைபார்க்கிறவனைத்தவிர வேறே யா

தொழுவனுக்கும் அந்த வருமானங்கள் கிடைக்கத்தகுந்தவைகள் அல்ல. (கஅசசஹூ-நம்-அநி.)

கக. பாத்தியஸ்தன் தகுந்தவனுயிருந்தால்மட்டும் கர்ன்னம் உத்தியோகம் அவனுக்குக்கிடைக்கும். அவனுக்குத் தகுந்தவயதில்லாவிட்டால் ஜமீன்தார் தனக்கு இஷ்டமானவர்களை நியமித்துக்கொள்ளலாம். இறந்துபோன கணக்கனுடையபாத்தியஸ்தன் ஸ்வயமே வேலைபார்க்க அசமர்த்தனுயிருந்தால் குமாஸ்தாமூலமாக அவன் ஷை வேலையை நடப்பிக்கும்படி,கஅ0உஹூ-உசூ-வது சட்டம் இடங் கொடுக்கவில்லை. (கஅநஉஹூ-நம்-சநு.)

கஉ. கஅ0உஹூ உசூ-வது சட்டம் நு-வது பிரிவுப்படி கணக்கர்களைத் தள்ளவேண்டியதற்காகத் தாலூகா முன்சீபுக்கோர்ட்டுகளிலும் வியாச்சியஞ்செய்யலாம். (கஅநுசஹூ-நம் சூஉ.)

கங. யாதொருவன் கணக்குவேலைகருத் தகுந்தவன் அல்லவென்று ஜமீன்தாருடைய சொந்த அபிப்பிராயத்தின்மேல் தள்ளக் கூடாது. (கஅநுஅஹூ-நம்-கஎக-கஅநுசூஹூ-ப-சூஎ.)

கிராமக்காவற்காரன் க.

இதைப்பார்க்க.

கிராமக்காவற்காரன்.

க. திருட்டுப்போன சொத்துக்குக் காவற்காரர்களைப் பாத்தியப் படுத்தக்கூடாதென்று கஅகசூஹூ-கக-வது சட்டம் கநு-வது பிரிவில் சொல்லப்பட்டிருந்தாலும் திருட்டுப்போன சொத்துக்கு உத்தரவாதஞ் செய்வதாகக் காவற்காரர்கள் உடன்படிக்கை செய்திருந்தால் அந்த ஆதாரத்தின்மேல் அவர்களை ஷை சொத்தின் கிரயத்துக்காகத் தொடரலாம். (கஅநுஎஹூ-நம்-கூநு-ப-சூச.)

கிராமப்பிரதட்சணம்.

க. தாங்கள் கிராமப்பிரதட்சணம் வரும்போது பிரதிவாதிகள் மறியல்செய்ததினால் தங்களுக்கு நேரிட்ட நஷ்டங் கிடைக்கவேண்டுமென்று வாதிகள் வழக்குச்செய்தார்கள். உபயவாதிகளும் இன்னின்ன இடங்களுக்குள்ளாகக் கிராமப்பிரதட்சணம் வரவேண்டியதென்று மேஜஸ்திரேட்டார் எல்லை நிஷ்கரிஷைசெய்து, அதற்கு

நிர்ம முனசபு.

உபயவாதிகளுஞ் சம்மதித்து அந்தப்படி கசஹலகாலம் நடந்துவந்த பிற்பாடு அவர்களில் ஒரு கட்சியைச்சேர்ந்தவர்களுக்கு மேஜஸ்தி ரேட்டாரால் குறிக்கப்பட்ட எல்லைக்குள், மற்றொரு கட்சிக்காரர்கள் கிராமப்பிரதட்சணம் வரவேண்டுமென்று வியாச்சியஞ்செய்வது செல்லாதென்று வாதி வழக்குத் தள்ளப்பட்டது. (கஅருகஹல-நம்-கருஅ-கஅசூ0ஹல-ப-உஅ.)

உ. வாதிகள் ஸ்வாமியை எடுத்துக்கொண்டு பட்டணப் பிரதட்சணம் வரும்போது பிரதிவாதிகள் பலவந்தமாய்ப் பிரவேசித்து சொத்து நஷ்டஞ்செய்தபடியால் அந்த நஷ்டத்தைப்பற்றி வாதிகள் வழக்குத்தொடர்ந்தார்கள். வாதிகள் பட்டணப்பிரதக்ஷணம் வருகிற விஷயத்தில் பிரதிவாதிகளுக்கு ஆக்ஷேபம் இருந்தால் அவர்கள் மேஜஸ்திரேட்டில் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டியது கிரமமா யிருக்க, அவர்கள் ஸ்வயமே பிரவேசித்து பலாத்காரஞ்செய்த துரா கிருதத்துக்காக வாதிகளுக்கு நஷ்டங்கொடுக்கும்படி தீர்மானிக் கப்பட்டது. (கஅசூ0ஹல-நம்-கூஉ-ப-உ0அ.)

ஊ. ஸ்வாமி வீதி வலம்வரும்போது வாதியினுடைய வீட்டில் தங்கி அவனுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற ஆதாரத்தின்மேல் வாதிசெய்தவியாச்சியஞ் செல்லாதென்றும் வாதி யின் அபேட்சையை அவன் கோவிலாருக்குந் தெரியப்படுத்தி அவர் களுடைய அநுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றுந் தீர்மா னிக்கப்பட்டது. (கஅசகூஹல-நம்-ருச-கஅருகஹல-ப-எஎ.)

ச. கொடிகள் மேளவாத்தியமுதலான ஆடம்பரங்களுடன் பல் லக்கின்மேல் ஊர்வலம் வரும்படியான பாத்தியம் ஒவ்வொருவனுக் கும் உண்டாயிருப்பதால் அதைப்பற்றி யாதொருவன் ஆட்சேபிக் கக்கூடாது. (கஅருஎஹல-நம்-கசக-ப-உககூ.)

ரு. அந்தப் பாத்தியத்தைப்பற்றி வியாச்சியமும் அங்கீகரிக்க லாம். (கஅருஅஹல-நம்-கஊசூ-கஅருகூஹல-ப-சஅ.)

மாஜஸ்திரேட்டு-க..... | மானஷ்டம்-சூ.....

இவைகளைப்பார்க்க.

கிராம முன்சீபு.

க. கிராம முன்சீபுகளும், கிராமப்பஞ்சாயத்தாரும், தாலூகாபஞ் சாயத்தாரும், நஷ்ட வியாச்சியம்வாங்க அதிகாரமில்லை. (ச-பு-கஅஉசஹல-மார்ச்சுமீ கசஙஉ.)

உ. ஜங்கமஸ்திதிகளின் மேல்மட்டுங் கிராம முன்சீபுகளுடைய தீர்ப்புகளை நிறைவேற்றலாம். அந்தத்தீர்ப்புகளின் தொகையைக் கொடுக்கவேண்டிய கடன்காரனைபபிடித்துக் காவற்கூடத்தில் வைக்கக்கூடாது. (ச-பு-கஅஉகூஙுப டிசம்பர்மீ உசஉ.)

ஊ. கிராம முன்சீபுகளின் தீர்ப்புகளைத் தாலூகாமுன்சீபுகளைத் தவிர வேறே யாதொரு அதிகாரியும நிறைவேற்றக்கூடாது.

சு. வாதிக்கு நஷ்டம் உண்டாகும்படி, ஊ-மீ த்துக்குப் பின்புகூட கிராம முன்சீபுகளுடைய தீர்ப்புகளை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கக்கூடாதென்பது கஅகசூஙுப சு-வது சட்டம், உஊ-வது பிரிவின் தாற்பரியமேதவிர வாதிக்கு நஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஷை ஊ-மீ த்துக்குள்ளாகவே நிறைவேற்றவேண்டுமென்பது ஷை பிரிவின் கருத்தல்ல, காலநிர்ணய சட்டத்திற்கண்ட காலாவதிக்குள் எப்போதாவது ஷை தீர்ப்பை நிறைவேற்றலாம். (ச-பு-கஅஊக ஙுப-மார்ச்சுமீ உளஉ.)

எ. கிராம முன்சீபினுடைய தீர்ப்பில் கிராமக்கணக்கன் கையெழுத்துவைக்க நிராகரிப்பதைக்கொண்டு அந்தத் தீர்ப்புக்குப்பாதகம் உண்டாகமாட்டாது. ஷை கணக்கனை வேலையிலிருந்து நீக்கவேண்டியதற்காக அவனுடைய கீழ்ப்படியாமையைக் கலெக்ட்டருக்குத் தெரிவிக்கவேண்டும். (ச-லெ-கஅசஊ ஙுஎ-நவம்பர்மீ உஙுஉ.)

குடிகள்.

மிராசுதாரும் புறக்குடியும் பார்க்க.

குடும்பவிசாரணை.

க. வீண்செலவுசெய்கிறவன் குடும்பஸ்திதிகளை மேல்விசாரணை செய்யத்தகுந்தவன் அல்ல, ஜ்யேஷ்ட சகோதரன் அதிவிரயக்காரனாதலால், கநிஷ்டசகோதரன் குடும்பவிசாரணை செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅஙகஊ ஙுஏ-நம்-எ.)

உ. ஜ்யேஷ்டர்கள் குடும்பவிசாரணைசெய்ய அசமர்த்தர்களாயிருந்ததாலும் அவர்களுக்கு அடுத்த பாத்தியஸ்தர்கள் கநிஷ்டர்களைத் தகுந்தபடி சம்ரட்சணைசெய்யாதபடியாலும் கநிஷ்டர்களை பிரமுகர்களாய்க் குடும்பவிசாரணைசெய்யும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅகசஙுஏ-நம்-உஅ.)

சுட. குடும்பவிசாரணைசெய்யத்தக்க சக்தி இல்லாத ஒருஸ்திரீயைப்பார்க்கிலும் சாஸ்திரப்படி ஸ்ரமமான பாத்தியஸ்தன் அந்த விசாரணையை நடப்பிக்க விசேஷ ஸ்வாதந்திரியம் உள்ளவனாயிருக்கிறான். (கஅகச ஹரி-நம்-சுக.)

ச. ஜமீன்தாருக்குத்தகுந்த வயது வந்தால் எவ்வளவு அதிகாரமோ அவ்வளவு அதிகாரந்தான் கஅoச ஹஎ நி-வது சட்டம் அ-வது பிரிவுப்படி நியமிக்கப்பட்ட விசாரணைக்கர்த்தனுக்கும் உண்டென்ற அனைவிட அதிக அதிகாரங்கிடையாது. (கஅஉஉ ஹரி-நம்-ச.)

ரு. ஹிந்துக்களுக்குள்ளாகக் குடும்ப வியாபகனை ஜேஷ்டன் செய்தவழக்கு குடும்ப விசிஷ்டத்தையும் அநுபந்தப்படுத்தும். (கஅருசு ஹரு-நம்-கசுஅ-கஅருள ஹரு-ப-கசுச.)

கடன்-ச-சூ-கசூ-கள-கஅ..... | கடன்பத்திரம்-அ.....

இவைகளோப்பார்க்க.

குத்துவை.

ஒற்றியைப்பார்க்க.

குத்தகை.

க. குத்தகைச்சீட்டில் கட்டுக்குத்தகையென்று பதப்பிரயோகஞ் செய்யப்பட்டிருந்தால் அது சாசுவத குத்தகையென்றே தாற்பரிய மாகும். அப்படிப்பட்ட குத்தகைக்காரன் அநுபவிக்கிற நிலத்தைப் பற்றி ஸ்வான் வியாச்சியஞ் செய்யக்கூடாது. (கஅருசூ ஹரி-நம்-கசுசூ-ப-உஎக.)

உ. நிலத்தைக் குத்தகையொப்புக்கொண்டவன் ஸ்வான்காரனுக்குப் பிரதிகூலமான ஸ்தாநத்திலிருந்து அவனுடைய பாத்தியதையை ஆட்சேபிப்பானாயின் அவனுடைய குத்தகையை நிறுத்திவிட்டதாய் அவனுக்கு ஸ்வான்காரன் தெரிவிக்கவேண்டியதில்லை. அப்படித் தெரியப்படுத்தாமல் ஸ்வான்காரன் மே நிலத்துக்காக வியாச்சியங்கொண்டுவரலாம். (கஅருசூ ஹரி-நம்-எள-அo-ப-கசுசூ-கருஉ.)

சுட. ஆகியில் நிலத்தைக் குத்தகைவாங்கி அநுபவித்த குடிகள் அநேக வருஷகாலம் பிராசுதாருடைய மேல்வாரத்தைத் தானியமாய்ச் செலுத்திவந்தால் பிற்பாடு அந்த நிலத்தைக் குத்தகைவாங்கின புறக்குடியுந் தானியமாகவே மேல்வாரஞ் செலுத்தவேண்டிய

தேயல்லாமல் பணமாய்ச்செலுத்தக்கூடாது. (கஅருகூஙல-நம்-கசக-கஅசூ0ஙரு-ப-க0.)

ச. வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தீர்ப்புகளின் தொகைக்காகப் பிரதிவாதியின் கிராமத்தை வாதி-க0-வருஷம் வரையில் குத்தகையாய் அநுபவித்துக்கொள்ளுகிறதென்று சங்கேதம் நடந்து வாதி-சு-வருஷம் வரையில் ஷை கிராமத்தை அநுபவித்ததாகவும் பிற்பாடு பிரதிவாதி செலுத்தவேண்டிய தீர்வைக்காக அந்தக் கிராமத்தை சர்க்கார் ஏலம்போட்டு அவர்களே எடுத்துக்கொண்டதாகவும் தன்னுடைய பாக்கித்தொகை கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாச்சித்தான். ஷை கிராமத்தை மறுபடியும் சர்க்கார் பிரதிவாதியிடத்தில் விட்டுவிட்டதால் குத்தகையின் பாக்கிக்காலம் வரையில் அந்தக்கிராமத்தை வாதி அநுபவித்துக்கொள்ளும்படி சித்தாந்திக்கப்பட்டது. (கஅருகூஙர-நம்-கஉள-கஉசூ-கஅசூ0ஙரு-ப-உகங.)

ரு. வாதிக்குப் பிரதிவாதி பிரதி வருஷமும் தீர்வைசெலுத்துகிறதென்றுந் தப்பிரல் அதற்குப்பதிலாய் நிலத்தை வாதி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுகிறதென்றும் குத்தகைச்சீட்டில் நிபந்தனைகண்டிருந்தபோதிலும் தீர்வையின் பாக்கி வாதிக்குக்கிடைக்கவேண்டியது நியாயமென்று நிர்த்தாரணஞ்செய்யப்பட்டது. (கஅருள ஙரு-நம்-கஉரு.)

ஏலம்-ங.....	கலால் குத்தகை-க.....
ஒற்றி-சூ-ஙசூ.....	சாட்சிய நிர்வாஹம்-உ-அ.....

இவைகளைப்பார்க்க.

குத்பா.

காஜியைப்பார்க்க.

குற்றம்.

க. தண்டனைசெய்யத்தக்க குற்றங்களால் ஒருவனுக்கு உண்டான நஷ்டத்தைப்பற்றி அந்தக் குற்றவாளிகள்மேல் அவன் சிவில் வழக்குத்தொடரலாம். (கஅஙகூ ஙரு செப்டம்பர்மீ கூஉ.)

உ: ஒருவனுடைய ஸ்திரீயை அபகரித்துக்கொண்டவனுக்குக் கிரிமினல் கோர்ட்டில் தண்டனையானபோதிலும் அந்தச்செய்கை

யிலல் புருஷனுக்கு உண்டான திரவிய நஷ்டத்தைப்பற்றி அவன் சிவில்வழக்குத்தொடரலாம். (ச-வி-ப-கஉ.)

பஞ்சாயத்து-சு.

இதைப்பார்க்க.

கூட்டாளி.

க. சு-கூட்டாளிகளில், கூ-பெயர்மட்டும் மற்றொருவனைப் பிரதிவாதியாகசேர்த்து வியாச்சியங்கொண்டுவரலாம். (கஅருள வரு-ப-கசஉ.)

உ. பலகூட்டாளிகள்மேல் செய்யப்பட்ட வழக்கில் அவர்கள் கூட்டாளிகளென்று ஸ்தாபிக்கப்படாமல் சாட்சியலோபம் நேரிட்டால் அவர்களில் ஒருவனைமட்டும் உத்தரவாதப்படுத்தித் தீர்ப்பு செய்யலாம். (கஅருள வரு-நம்-சுசு-கஅரு அரு-ப-எகூ)

கூ. அசலும் லாபத்திற் சிலதொகையும் பெற்றுக்கொள்ளுகிறதென்கிற சங்கேதத்தின்மேல் ஒருவன் மற்றொருவனுக்குக் கடன் கொடுத்திருந்தால் அதைக்கொண்டி அவர்கள் கூட்டாளிகளென்று பாவஞ்செய்யக்கூடாது. (கஅருள வரு - நம் - சுகூ-கஅரு அரு-ப-கஎசு.)

சாட்சியம்-கூசு..... | வட்டி-கஉ.....

இவைகளைப்பார்க்க.

கோர்ட்டுகள்.

க. பாலசம்ரக்ஷணைக் கோர்ட்டார் விசாரணையிலிருக்கிற ஸ்திதிகளின் பகுதிமுதலான வருமானங்களை வசூல்செய்கிறவிஷயத்தில் அந்தப்பாலர்கள் தகுந்தவயதுள்ளவர்களாயிருந்தால் அவர்களுக்கு எவ்வளவு அதிகாரம்உண்டோ அவ்வளவே அதிகாரந்தான் இக் கோர்ட்டாருக்கும் உண்டாயிருக்கின்றது. அதைப்பார்க்கிலும் அதிகமான அதிகாரம் அவர்களுக்கு உண்டாயிருக்கவில்லை. (கஅஉஉ வரு-நம்-சு.)

உ. சதர்க்கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல் கோர்ட்டாப் ரிக்குவெஸ்ட்டென்னும் நியாயாதிபதிகள் தங்களுடைய தீர்ப்புகளை வேறுபடுத்தக்கூடாது. (கஅருள வரு - நம் - ககூ0-கஅரு அரு-ப-கசஅ.)

கூ. வாதி ஆஜராகத்தப்பிப்போனதற்காக அவனுடைய வழக்கைக் கோர்ட்டாப் ரிக்குவெஸ்ட்டென்னும் நியாயாதிபதிகள் தள்ளினல் அந்த விவாதவிஷயத்தைப்பற்றி 'கஅசக(ஙு)-சூ-வது ஆக்ட்டு க0-வது பிரிவுப்படி வாதி வேறேவியாச்சியஞ்செய்யக்கூடாது. (கஅசூ0(ஙு)-நம்-க-கஅசூக(ஙு)-ப-உக.)

ச. வெளிப்பிரதேசக்கோர்ட்டார்கள் சாஸ்திரத்தை எப்படி அநுஷ்டிக்கவேண்டியவர்களோ அப்படியே தர்மநீதியையுந் தழுவித் தீர்மானஞ்செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். (கஅரு0(ஙு)-நம்-க0-ப-உ0.)

ரு. கோர்ட்டாப் ரிக்குவெஸ்ட்டென்கிற நியாயதுரந்தரர்களுடைய நடவடிக்கைகள் கிரம விருத்தமாயிருக்கிற காரணத்தினல் அவர்களிடத்திற்கு வியாசியங்களை மறுவிசாரணைக்காக அனுப்புவது உசிதம் அல்ல. (கஅருகஙு-நம்-எகூ.)

சூ. ஷை கோர்ட்டாரிடத்துக்கு வியாச்சியங்களை ஒரு அவர்த்நிக்குமேல் பல அவர்த்தி மறுவிசாரணைக்கனுப்புவது நியாயவிபரிதம். (கஅருஙகஙு-நம்-அக.)

எ. வீடுமுதலிய ஸ்தாவரத்தைப் பற்றினவியாச்சியங்களைப் பிடிக்கக் கோர்ட்டாப் ரிக்குவெஸ்ட்டென்கிற நியாயஸ்தலத்தாருக்கு அதிகாரம் இல்லை. (கஅசூ0(ஙு)-நம்-சூ-ப-உஎச.)

சாகூஷ்யம் சு(ரு).

இதைப்பார்க்க.

கோவில்.

ஆலயத்தைப்பார்க்க.

சடகோபம்.

ஆலயத்தைப்பார்க்க.

சட்டம்.

க. யாதொரு சட்டமாவது ஆக்ட்டாவது பரகஷ்டமென்பது என்கிற அபிப்பிராயத்தின்மேல் அந்தச்சட்டத்துக்கு விரோதமாய்க் கோர்ட்டார் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅருளஙு-நம்-ருஅ-ருகூ-கூ0)

உ. சட்டநிர்மாண சபையாரால் உண்டாக்கப்பட்ட ஆக்ட்டின் விதிகள் அதற்குப் பிற்பட்டகாலத்துக்குமட்டும் உபயோகமேதவிர அந்த ஆக்ட்டு உண்டாவதற்கு முந்தினகாலத்துக்கு உபயோகம் அல்ல. முந்தினகாலத்துக்கு உபயோகமென்று அந்த ஆக்ட்டில் விசேஷமாய்க் கண்டிருந்தால்மட்டும் அந்தப்படி உபயோகசித்தியாகும். (கஅறுஅஇ-ப-உறு.)

யுத்தப்பிரமாணசட்டம் க.

இதைப்பார்க்க.

சத்தியம்.

பிரமாணத்தைப் பார்க்க.

சமாதானப்பத்திரிகை.

ராஜிநாமாவைப்பார்க்க.

சர்வமானியம்.

இனாமைப்பார்க்க.

சன்னது முல்க்கியத்து நிஷ்திமிரார்.

க. ஆலோசனாச்சங்கத்தின் கவர்னர் அவர்களால் கொடுக்கப்பட்ட சன்னது முல்க்கியத்து நிஷ்திமிரார் என்றும் பத்திரிகையினால் உண்டாக்கப்பட்ட சாசுவத பாத்தியத்தை அதனிக்கவேண்டியது கோர்ட்டாருடைய கடமையாயிருக்கின்றது. (கஅ0அஇ-நம்-சூ.)

உ. கஅ0உ-உ-வது சட்டப்படி ஒரு ஜமீன்தாரியைப் பிது ராஜ்ஜிய ஸ்திரியாக்குவதற்கு சன்னது முல்க்கியத்து நிஷ்திமிரார் அவியமாயிருக்கின்றது. (கஅகசூஇ-நம்-கக.)

ஜமீன்தார்-க0-கஈ-கச-கறு-கசூ-கசூ.

இனைகளைப்பார்க்க.

சாஸனம்.

கிரயத்தைப்பார்க்க.

சாஸ்திரம்.

சித்தாந்தமும் தீர்ப்பும்-கசூ..... | யூரோசியன்-உ..... .....
தர்மசாஸ்திரமுமுமையும்..... |

இவைகளைப்பார்க்க.

சாகூியநிர்வாஹம்.

சாகூி.

க. கட்சிக்காரர்கள் கோறிக்கொள்ளப்பட்ட எல்லாச்சாட்சிகளை யுங் கோர்ட்டார் விசாரிக்கவேண்டும். எந்தச்சாட்சியையாவது விசாரிக்கவேண்டியதில்லை யென்று கட்சிக்காரர்களின் யுக்தாநுசாரம் அவர்களே தள்ளிக்கொள்ளலாமேயல்லாமல் கோர்ட்டார் தள்ளக்கூடாது. (கஅநுகஹ)-நம்-சுள-கஅநுஉஹ-நம்-எக-கஅநுசுஹ நம்-கஅ-கூசு-கஅநுகூஹ-நம்-அஉ.)

சாகூியநிர்வாஹம்.

க. போக்கியநிலத்தை மீட்டிக்கொள்வதற்காக வாதி வியாச்சியஞ்செய்து பிரதிவாதி அந்தநிலத்தை வாதியிடத்திற் கிரயம்வாங்கினதாகக் கட்சிசொன்னால் அந்தக்கிரயத்தை நிரூபிக்கவேண்டியது பிரதிவாதியின் கடமையேதவிர போக்கியத்தை நிரூபிக்கவேண்டியது வாதியின்கடமை அல்ல. பிரதிவாதியின்கட்சி நிரூபணமாகாவிட்டால் வாதிபக்கந் தீர்ப்புச்செய்யவேண்டும். (கஅநுஅஹ)-நம்-கசஉ-கஅநுகூஹ-ப-உஉ.)

உ. தான் குத்தகைவாங்கின கிராமம் கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்தான். ஒரு சர்வமானியத்தோப்பு குத்தகையிற் சேரவில்லையென்று பிரதிவாதிகள் எதிர்வழக்காடினார்கள். இந்தவிஷயத்தில் ருஜு-க்கொடுக்கவேண்டிய பொறுப்பு பிரதிவாதிகளைச் சேர்ந்ததேதவிர வாதியைச்சேர்ந்ததல்ல. (கஅநுஅஹ)-நம்-களை-கஅநுகூஹ-ப-கள.)

ங. உ-ங-பிரதிவாதிகள் இடத்தில் போக்கியம் வைக்கப்பட்ட நிலத்தை மீட்பதற்காக வாதி வியாச்சியஞ்செய்தான். உ-ங-பிரதிவாதிகள் வாதி வழக்கை ஒப்புக்கொண்டார்கள். விவாதநிலத்தை வாதியிடத்தில், உ-ங-பிரதிவாதிகள் கிரயம்வாங்கி அவர்கள் தனக்கு விக்கிரயித்ததாக முதற்பிரதிவாதி வாதித்தான். இந்த விஷயத்தில் ருஜு

ப்படுத்தவேண்டிய பாரம் முதலாவது பிரதிவாதினையப் பொறுத்திருக்கின்றது. (கஅருகூவரு-நம்-அச-ப-கூகூ.)

ச. ஒரு கட்சிக்காரன் ருபிக்கவேண்டிய பாரத்தை மற்றொரு கட்சிக்காரன் தலையின்மேல் கீழ்க்கோர்ட்டார் சமத்தினல் அந்த வியாச்சியம் மறுவிசாரணக்கனுப்பப்படுபடும். (கஅருகூவரு-நம்-கூ-ட-ச.)

ரு. ஒரு பிரசித்தமான உத்தியோக ஸ்தலத்திலிருந்து வரப்பட்ட விதிதங்கள் உண்மையானதென்று ஊகிக்கப்படவேண்டியதானதால் அவைகள் பொய்யானதென்று சொல்லுகிறவன் அந்தப்படி ருபிக்கவேண்டியவனயிருக்கிறன். (கஅருகூவரு-நம்-உஉங-கஅசுஏவரு-ப-கசஉ.)

சு. போக்கியம்வைக்கப்பட்ட நிலத்தை மீட்டிக்கொள்வதற்காக ஸ்வாதீனல் செய்யப்பட்ட வியாச்சியத்தில் முந்திப் போக்கியமும் பிற்பாடி கிரயமும் வாங்கி அநுபவிப்படதாகப் பிரதிவாதிசொன்னல் சாட்சிய நிர்வாஹம் அவனைச்சேர்ந்ததாயிருக்கின்றது. (கஅசுஏவரு நம்-உங்ரு-கஅசுகவரு-ப-ஙரு.)

எ. விவாதஸ்திதி உபயவாதிகளில் யார் ஸ்வாதீனத்தில் இல்லையோ அவனென அவன் கட்சியை நிரூபிக்கக்கடமையுள்ளவன். அந்த ஸ்திதி எவன்வசத்தில் இருக்கின்றதோ அவன் நிரூபிக்கக் கடமை இல்லை. (கஅசுஏவரு-நம்-ருருஏ-கஅசுகவரு-ப-சுஏ.)

அ. வாதியின் வழக்குக்கு ஆதாரமான குத்தகை எதிர்கடைச்சிட்டி உண்மையானதென்று ஸ்தாபிக்கப்பட்டால், அந்தச் சிட்டிப்படி பிரதிவாதி கிஸ்தி கொடுக்கவில்லையென்று நிரூபிக்கவேண்டியது வாதியின் கடமை அல்ல. அந்தக் கிஸ்தியை வாதிக்குச் செல்லாமல் விட்டதாகப் பிரதிவாதி நிரூபிக்கவேண்டும். (கஅசுகவரு-நம்-கஉ-ப-கஙஏ)

கூ. விவாதபத்திரத்தை எழுதிக்கொடுத்த முதற்பிரதிவாதி அதின் உண்மையை ஒப்புக்கொள்ளுகிற பட்சத்தில் மற்றப்பிரதிவாதிகள் அந்த ஆதாரவு பொய்யானதென்று ஆட்சேபித்தால் மட்டும் அதின் உண்மையைப்பற்றிக் கோர்ட்டார் சாட்சி விளங்கவேண்டும். வாதியும் முதற்பிரதிவாதியும் ஒன்றுசேர்ந்து அந்த ஆதாரவை உற்பத்திசெய்திருப்பதாகமட்டும் மற்றப் பிரதிவாதிகள் வாதித்தால் அந்தப்படி நிரூபிக்கவேண்டியது அவர்களுடைய கடமை. அவர்கள்

அதற்குத்தகுகுணமான நிதானசனங்கொண்டு வரத்தப்பிட்டோ னல் ஷை பத்திரத்தை ஸ்தாபித்து வாதி பட்சந் தீர்ப்புச்செய்ய யா தொரு பிரதிபந்தமும் இல்லை. (கஅசுoஹரு-நம்-கoசூ-ககo-ப-கசசூ-கரூo.)

கo. அ-என்பவனுடையஸ்வான் பாத்தியத்தை, க-என்பவன் ஒப் புக்கொண்டு பிற்பாடு தான் கிரயம்வாங்கினதாக வாதஞ்செய்தால் அந்தக்கிரயத்தை நிரூபிக்கவேண்டியது. க-என்பதனுக்குக் கடன் அவன் அந்தப்படி நிரூபிக்காவிட்டால், அ-என்பவனே பாத்தியஸ் தனென்று ஊகிக்கப்படும். (கஅருள ஹரு-நம்-கசூசு-கஅருஅஹரு-ப-உசூ.)

கக. ஸ்வான்காரனுல் பிரதிவாதிக்கு ஒற்றிவைக்கப்பட்ட நிலத் தைத் தான் ஸ்வான்காரனிடத்தில் கிரயம்வாங்கியிருப்பதாக வாதி வியாச்சியங்கொண்டுவந்தால், அந்தக்கிரயத்தைப்பற்றிக் கோர்ட் டார் விவாத நிச்சயஞ்செய்து விசாரிக்கவேண்டும். ஒற்றியைப்ப ற்றி ஆட்சேபம் இல்லாவிட்டால் அதைப்பற்றிக் கோர்ட்டார் விசா ரிக்கவேண்டியதில்லை. (கஅருசூஹரு-நம்-அசூ-ப-கூஅ.)

கஉ. விவாதநிலம் வாதி தகப்பனுல் தன்னுடைய பெண்ஜாதிக்கு ஸ்திரீதனமாய்க் கொடுக்கப்பட்டதாகப் பிரதிவாதி எதிர்கட்சி பே சினுல் அந்தப்படி நிரூபணஞ்செய்யவேண்டியது அவனுடைய கடன். அந்த விஷயத்திற்கு நேரான சாட்சிய லெளப்பியம் கோர்ட்டால் ஜமாபந்திக் கணக்குகளில் ஷை ஸ்திரீதனவிஷயத்தைக் கண்டிருந்தா லுங்கூட அது பிரதிவாதிக்கு சாதகத்தைச் செய்யாது. (கஅருசூ ஹரு-நம்-சூசு-ப-ககசூஉ.)

கஙூ. வாதி பாகத்துக்காகச் செய்த வியாச்சியத்தில் குடும்ப ஆஸ் திக்கு மேற்பட்ட கடன் இருந்ததால் வாதி அவனுடையபாகம் வே ண்டியதில்லையென்று பரித்தியாகஞ்செய்துவிட்டதாகப் பிரதிவாதி எதிர்கட்சிசொன்னுல் அந்தப்படி நிரூபிக்கவேண்டியது பிரதிவாதி யின் கடமை. பிரதிவாதி சாட்சிய தரித்திரஞ்செய்துபோய்விட்டால் நிருணயமாய் வாதியின் பாகம் அவனுக்குக் கிடைக்கும்படி தீர்ப் புச்செய்யவேண்டும். (கஅருசூஹரு-நம்-கருச-கஅசூoஹரு-ப-ககசூ.)

அநுபவம்-உ.....	பாகம்-சஉ.....
அவதிக்கிரயம்-க.....	மிராசுதாரும் புறக்குடியும்-உரு.
சாட்சியம்-உசூ-ரு சூ.....	

இவைகளைப்பார்க்க.

சாகூியம்.

க. ஆதரை சிருஷ்டிசெய்த தப்பிதத்துக்காக சர்க்கியூட் கோர்ட்டார் முன்பாக விசாரணை செய்யப்பட்டவர்கள் விடுதலையானதைக்கொண்டு அந்த ஆதரை உண்மையானதென்று நிச்சயிக்கக்கூடாது. (கஅகக வரு-நம்-எ.)

உ. ஒரு ஆதரவின் வாசகங்களைப்பற்றி சாட்சியம் விளங்குமுன் அது கைதப்பிடானதாகவாவது, சேதப்படுத்தினதாகவாவது ருஜுவாகவேண்டும். (கஅகஏ வரு-நம்-கஉ-கஅசூ0 வரு-நம்-சுசள-கஅசுக வரு-ட-எசுர.)

கூ. வியாச்சியகாலத்துக்குமுன் ஒரு கட்சிக்காரனும் எழுதியனுப்பப்பட்ட வர்த்தமானக்காகிதத்தை அந்தக்கட்சிக்காரன் பட்சத்தில் சாட்சியமாக அங்கீகரிக்கக்கூடாது. அப்படியே எதிர்கட்சிக்காரன் தான் எழுதிக்கொடுக்கவில்லையென்று ஆட்சேபிக்கிற ஒரு ஆதாரத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅகசூ வரு-நம்-எ.)

ச. கடவுழ்னைகள் ரத்துசெய்யப்பட்டபின வியாச்சியத்தின் சாட்சி வாக்குமூலங்களின் சுகஸ்கந்த வெளிருரு வியாச்சியத்தில் தாக்கல் செய்யக்கூடாது. ஆனால் அந்தச்சாட்சிகள் இறந்துபோனதாக ருஜுவானால் மே வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ளலாம். (கஅகன வரு-நம்-கக.)

ரு. வியாச்சியந்தாக்கலானபிற்பாடி பேசிக்கொள்ளப்பட்ட சமாதான யார்த்தனையை சாட்சியமாக எண்ணக்கூடாது. (மே.)

சு. வாதியால் தாக்கல்செய்யப்பட்ட கஸ்தவேஜின் உண்மைக்கு சாட்சியம் இல்லாமம்போனால் அதினால் அவனுக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஆனால் அந்த ஆதாவு பிரதிவாதிக்கு சாதகமாயிருந்தால் அதை வாதியின் ஒப்புதலாக எண்ணவேண்டியதான படியால் அதின் பிரயோஜனத்தை அடையப் பிரதிவாதிக்குப் பாத்தியம் உண்டு. (கஅகள வரு-நம்-கள.)

எ. ஒருவன் சுo-வருஷம் வரையில் கர்ணம் வேலைபார்த்துவந்தால் அவன் யதார்த்தமான கர்ணன் என்பதற்கு அதுவே பிரத்தியட்ச நிதர்சனம். (கஅகக வரு-நம்-க.)

அ. ஒரு மிட்டாவின் வருமான வசூல்க்கணக்குகளில் கர்ணர்கள் கையெழுத்துவைத்துக்கொடுத்ததற்கு அந்தக் கர்ணர்களுடைய

சாட்சியமேமுக்கியம். அப்போதுகூட இருந்தவர்களுடைய ருஜு ஷை கணக்குகளை ஸ்தாபிக்கிறதற்கு எவ்வளவும்போதாது. (கஅகசு ஹ-நம்-எ.)

கூ. கட்சிக்காரர்களால் எழுதிக்கொள்ளப்பட்ட வர்த்தமானக் காகிதங்களை ஒரு வியாச்சியத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாமே அல்லாமல் இதரர்களால் எழுதப்பட்ட காகிதங்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது. (ஷை.)

கo. ஒரு ஜமீன்தாரியின் கணக்குகளின் பிரகாரம் தொகைகிடைக்கவேண்டுமென்று ஜமீன்தாருடைய தீவான்மேல் செய்யப்படுகிறவழக்கில் அந்தத் தீவானுடைய உத்தரவுப்பிரகாரம் அந்தக் கணக்குகள் யதார்த்தமாய்ப் பிறந்தவைகளென்று அந்தக் கணக்குகளைத் தயார்செய்த உத்தியோகஸ்தர்களால் நிரூபணமாகவேண்டும். (கஅஉo ஹ-நம்-கூ.)

கக. ருஜுவாகாத கணக்குகளை அறித்திசெய்ய வேறு கணக்குகள் வேண்டியதில்லை. (கஅஉக ஹ-நம்-கo.)

கஉ. தாமங்களின் வார வருமானங்களைப்பற்றி வியாச்சியம் வரும்போது கஅகசூ ஹ கரு-வது சட்டம் கo-வது பிரிவுப்படி அந்தக் தாமக் கர்ணர்களுடைய கணக்குகளைக் கோர்ட்டார் பார்வையிடவேண்டியதற்காக அந்தக் கர்ணர்களைச் சாட்சிகூறும்படிக்கும் அப்படிச்செய்யாதவனையில் அதற்குக் காரணம் தெரிவிக்கும்படிக்கும் கட்சிக்காரர்களுக்குக் கோர்ட்டார் உத்தரவு கொடுக்கவேண்டும். (கஅஉ.உ ஹ-நம்-சூ.)

கஙூ. ஒரு அதிகாரஸ்தர் கையெழுத்து வைத்துக்கொடுத்திருக்கிற தஸ்தவேஜுகளின் பிரதிகள் சரியானபிரதிகள் என்பதற்கு ருஜுவை அபேட்சிக்காமல் அந்தப் பிரதிகளை எற்றுக்கொள்ள வேண்டியது சாட்சிய சாஸ்திரவிதியாயிருந்த போதிலும், ஷை அதிகாரஸ்தரின் ஸ்வபாணையில் எழுதப்படாமல் அங்கியபாஷையில் எழுதப்பட்டிருந்தால் அந்தப் பிரதிகளைச் சரிபார்த்த சாட்சிகளைக் கோர்ட்டார் வரவழைத்து விசாரிக்கவேண்டும். முகயமாய் ஷை பிரதிகள் அபத்தபுரட்சமென்று எதிர் கட்சிக்காரன் ஆக்ஷேபித்தால் மேற்கண்டபடி கோர்ட்டார் விசாரிக்கவேண்டும். (கஅஉஙூ ஹ-நம்-சு.)

கச. ஒரு ஆதாரவு அபூதகற்பனையென்று தகுந்த அதிகாரமுள்ள கோர்ட்டாரால் தீர்ப்புச் செய்யப்பட்டிருந்தால் அந்த ஆதாரவை பலகூஷியஞ்செய்வதற்குஷி தீர்ப்பைத் தாக்கல்செய்வதேபோதும். (சுழஉசுஹூல-நம்-ரு.)

கரு. ஒரு ஆதாரவை எழுதினவனுஞ் சாட்சி போட்டவர்களும் அதை யெழுதிக்கொடுத்தவனும் இறந்துபோயுல் அவர்களுடைய கையெழுத்து ருஜுவாகவேண்டியது முக்கியம். அப்படிப்பட்ட ருஜு இல்லாதவனையில் அந்த ஆதாரவு அசக்தமே. (கழஉசஹூல நம்-ககூ.)

கசு. வர்த்தமானக்காகிதம் யாருக்கு எழுதப்பட்டதாகக் கண்டிருந்தாலும் அவர்கள் கையினிருந்து அந்தக்காகிதம் வெளிப்பட்டதற்கு நிச்ச நிதரிசனம் இல்லாதவனையில் அந்தக்காகிதத்தை சாட்சியமாக ஒப்புக்கொள்ளக்கூடாது. (ஷை.)

கன. உபயபக்ஷத்திலும் சாட்சியம் சமத்துவமாகவும் சாட்சிகளின் வாஸஸ்தலம் பொய்ச்சாட்சிகள் வசிக்கிற பிரசித்தமான ஸ்தானமாகவும் இருக்குமானுல் அந்தவிடாச்சியத்தின் நிதரமான ருஜுக்காயும் விவகாரவிஷயங்களின் ஸ்வரூபத்தையும் கோர்ட்டார் யோசித்து அதற்குத் தகுந்தபடி எந்தப்பட்சத்தின் சாட்சியத்தை யாவது விசேஷமாக எடுத்துக்கொள்ளலாம். (கழஉசஹூல-நம்-கசூ.)

கஅ. ஒரு ஆதாரவையெழுதிக்கொடுத்தவன் அதின் உண்மையைக் கோர்ட்டார் முன்பாக ஒருகாலத்தில் ஒப்புக்கொண்டிருந்தால் அதற்குப் பிற்பாடி அந்த ஆதாரவைப்பற்றி அவன் சொல்லும் ஆக்ஷேபனையைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (கழஉருக ஹூல-நம்-சூக.)

கசூ. ஒரு ஆதாரவைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டி அது இறந்துபோனவன் கையெழுத்தென்பதற்கு சாட்சியம் விளங்குவது கோர்ட்டுகளின் சாம்பிரதாயகமேதவிர அபுக்தமானதல்ல. (கழஉருக ஹூல-நம்-அசூ.)

உ. விவாதபத்திரம் பிறந்ததேதியில் அதில் எவ்வளவு தொகை கண்டிருக்கிறதோ அவ்வளவுதொகைக்கு வாதிக்குப் பிரதிவாதி ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்ததாகப் பிரதிவாதியின் சாட்சிகள் சொன்னதைக்கொண்டு வாதிபட்சத்தின் ருஜுவுக்கு விசேஷபலம் உண்டானதாக சதர்க்கோர்ட்டார் நிச்சயித்தார்கள். (கழஉசஹூல-நம்-உ.)

உக. அப்பீல் இல்லாமல் முடிவாயிருக்கிற ஒரு நீர்ப்பில் ஒரு ஆதாரவு உண்மையானதென்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அதற்குப் பிற்பாடு வேறொருவியாச்சியத்தில் அந்த ஆதாரவைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடாது. (கஅசகூ வரி)-நம்-உசூ.)

உஉ. ஒரு வியாச்சியத்தில் தாக்கலான ராஜிநாமாவில் ஒரு சங்கதினை ஒரு கட்சிக்காரன் ஒப்புக்கொண்டிருந்தால் பிற்பாடு வேறொருவியாச்சியத்தில் ஷை சங்கதினை ஆட்சேபித்து அவனுல் சொல்லப்பட்டவாதத்தை அபலப்படுத்துவதற்கு ஷை ராஜிநாமாவின் ஒப்புக்கொள்ளுதலே போதுமான சாட்சியம். (கஅசருஙல-நம்-கரு.)

உங. ஒரு ஆதாரவு தாக்கலாகக்கூடுமா யிருக்கும்போது அதை தாக்கல்செய்துகொள்ளாமல் அதின் உண்மையைப்பற்றி ருஜூ-வினங்குவது நியாயம் அல்ல. (கஅருகஙல-நம்-கங.)

உச. வாதிகள் கட்சிக்காரமான தஸ்தாவேஜூ-களை கைகடாபிப்போய்விட்டதாக ஜில்லாக்கோர்ட்டில் சொன்ன வாதிகள் பிற்பாடு அந்த ஆதாரவு அகப்பட்டுப்போனதாகவும், அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் ஹைக்கோர்ட்டாரவர்களிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். நடவடிக்கைகளெல்லாம் முடிவான வாதிகள் கட்சியின் நிர்ப்பலங்களெல்லாம் வெளிப்பட்டபிறகு ஷை ஆதாரவை வாதிகள் கொண்டுவந்தது சந்தேகாஸ்பதமென்று ஹைக்கோர்ட்டாரவர்கள் நிர்மானித்தார்கள். (கஅருகஙநல-நம்-பக.)

உரு. ஒரு தஸ்தாவேஜின் பிரதியில் கலெக்ட்டர் கையெழுத்து வைத்துக்கொடுத்து அது ஒரு வியாச்சியக்காரரால் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டபின்பு எதிர் கட்சிக்காரன் அதைப்பற்றி ஆட்சேபித்தால் அதின் உண்மைக்குக் கோர்ட்டார் சாட்சி விளங்கிக்கொள்ளவேண்டும். (கஅருகஙரல-நம்-சுஙக.)

உசு. ஒரு வியாச்சியக்காரனிடத்தில் இருந்தாவது அவனுடைய வேலைக்காரனிடத்தில் இருந்தாவது வெளியாகப்பட்ட தஸ்தாவேஜிகளின் பிரதிகளாயும் கையெழுத்தில்லாத தஸ்தாவேஜூ-களாயும் சாட்சியமாக அங்கீகரிக்கக்கூடாது. (கஅருகஙரல-நம்-சுஙக.)

உஎ. ஒரு பத்திரத்தின் ஆதாரத்தின்மேல் செய்யப்பட்ட வியாச்சியத்தின் உத்தரவாதத்தை நிக்கிக்கொள்ளுதற்கு அந்தப்பத்திரத்துக்குப் பூர்ணமாய்த் தொகை செல்லாதிவிட்டதாகப் பிரதிவாதி பூர்த்தியாய் ருஜூப்படுத்தவேண்டும். (கஅஉகஙநல-நம்-கஎ.)

உஅ. பணம் அனுப்பும்படி எழுதப்பட்ட வர்த்தமாந காகிதங் கள்மட்டும் பணங்கொடுபட்டதற்கு ருஜு ஆகமாட்டாது. அதற் கு வேறே ருஜுவும் அக்கத்தியம். (கஅகசஎல-நம்-உ0.)

உக. ஒரோமனுஷன் எழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்பட்ட உ-தஸ்தாவேஜுகளில் ஒன்றுக்கொன்று பேதமான உ-முத்திரைகள் வைக்கப்பட்டி-ருந்ததினால் அவன் அந்த உ-முத்திரைகளையும் உப யோகப்படுத்துறது வழக்கமென்று ருஜுப்படுத்தவேண்டியது அந்த தஸ்தாவேஜை தாக்கல் செய்தவனுடைய கடமையென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅஙஎஎல-நம்-கஉ.)

கூ0. ஒரு ஆதாரவில் ஒருவனுடைய கையெழுத்து பலவந்தமாய் வாங்கப்பட்டி-ருந்தால் அந்த ஆதாரவு நிராத்தகமாகும். (கஅஉசூ எல-நம்-எ.)

கூக. பைமாஷ்க் கணக்குகளில் வாதியின் பெயர் தாக்கலாயிருப் பதாகப் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டால் அந்தக் கணக்குகளை வாதி தாக்கலசெய்யவேண்டிய அகத்தியம் இல்லை. (கஅருகஎல-நம்-அக.)

கூஉ. தபால் முத்திரைகள் வைக்கப்பட்ட லகோடாவுக்குள் அடக்கஞ்செய்யப்பட்ட வர்த்தமானக் காகிதங்களை ருஜுவாக அங் கீகரிக்கக்கூடாது. (கஅருஉஎல-நம்-கரு.)

கூங. நிலத்தை ஒற்றிவாங்கி அநுபவிக்கிறவன் அந்த நிலத்தின் வருமானக்குறைவை ருபிக்கிறதற்கு வருமானக் கணக்குகளை ஆஜர் செய்யவேண்டும். அப்படிசெய்யத் தப்பிப்போனால் அவனிடத் தில் வேறே ருஜுவை ஒப்புக்கொள்ளக்கூடாது. (கஅருஎஎல-நம்-ககூஅ-கஅருஅஎல-ப-ககூ.)

கூச. அசல ஆதாரவு தாகலாகாமல இருந்தால அதின உள் ளங்களைப்பற்றி ருஜு விளங்குமுன் அந்த ஆதாரவைமே தாக்கல் செய்யும்படி கட்டளை பிறப்பிக்கவேண்டும். (கஅருஅஎல-நம்-அஅ-ப-கஉஅ.)

கூரு. ஒருவன் ஒரு உத்தியோகத்துக்காகப் பிரயத்தஞ்செய் தபோது தான் ஆஸ்திவந்தனென்று காண்பிக்கவேண்டியதற்காக அவனால் தயார்செய்யப்பட்ட ஆஸ்தி விவர ஜாப்தாவை அவனு டைய எதிரிக்குப் பிரதிகூலமான ருஜுவாக எண்ணக்கூடாது. (கஅருஅஎல-ப-கஉஅ.)

கூசூ. ஒருவன் வேறொருவனுடைய கையெழுத்தைப்போல் போட்ட தப்பிதத்துக்காக விசாரணைசெய்யப்பட்டு விடுதலையாஞல் வே கையெழுத்து உண்மையானதென்று எண்ணப்படவேண்டும். (கழருகூஙுப-ப-உகூ.)

கூஎ. கோர்ட்டுத் தீர்ப்புப்படி பகுதிகொடுக்கவேண்டியவன் பகுதியைச் செலுத்திவிட்டதாகச்சொன்ஞல் அதற்கு விதிதரூபமான ஆதாரத்தை அவன் தாக்கல்செய்யவேண்டும். (கழருகூஙுப-பகூருஞ.)

கூஅ. புருஷனுடைய சொத்துக்குப் பத்தினி பாத்தியஸ்தி அல்லவென்றும் பெட்டிஜாதி வழக்கப்படி மருமகன் பாத்தியஸ்தனென்றும் விவகரிக்கப்படுகிறபட்சத்தில் அதிகபலமும் நிர்தோஷமுமான சாட்சியத்தினல் அந்த வழக்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்தப்படி ருஜுவாகாவிட்டால் சாஸ்திரவிரோதமான வே வழக்கத்தைக் கோர்ட்டார் உறுதிப்படுத்தக்கூடாது. (கழருகூஙுப-நம்-அகூ-ப-உருஐ.)

கூகூ. உ-ம் பிரதிவாதி அஞ்சரில் ரூகும்பிரதிவாதியும் தானும் கூட்டாளிகளென்பதை ஒப்புக்கொண்டபடியால் அந்த உ-ம் பிரதிவாதியும் அவனுடைய பாத்தியஸ்தர்களும் வே கூட்டுவியாபாரத்தைச்சேர்ந்த சகல கடன்களுக்கும் உத்தரவாதிகளென்றும் உ-ம் பிரதிவாதியிடத்தில் சரக்குகள் ஒப்புவிக்கப்பட்டதாகவும் கணக்கில் உ-ம் பிரதிவாதி கையெழுத்துவைத்ததாகவும் வாதி நிரூபிக்கவேண்டிய அவசரம் இல்லையென்றுந் தீர்மானிக்கப்பட்டது. (கழசஎ ஙுப-நம்-சு.)

சஅ. இணம் சன்னதைக் கலெக்ட்டர் ஆபிசில் ரெஜிஸ்டர் செய்யவேண்டியது அநியாவசியகமானதல்ல. ரெஜிஸ்டர் ஆகாத சன்னதைக் கோர்ட்டில் சாட்சியமாக ஏற்றுச்கொள்ளலாம். (கழகசூ ஙுப-நம்-அ.)

சக. தன்னிடத்தில் அடைக்கலமாய் வைக்கப்பட்ட பொருளைப் பிரதிவாதி அபகரித்துக்கொண்டதாகவும் அதின்கிரயம் வரவேண்டியதென்றும் வாதி வழக்குச்செய்தால் அந்தப்பொருள் தனக்குச் சொந்தமென்றுவது அல்லது அதின்கிரயத்தைத் தான் வேறெயா தொருவனுக்கு உத்தரிக்கவேண்டியதென்றுவது அவன் ருஜுப் படுத்தவேண்டும். (கழகஎ ஙுப-நம்-க.)

சஉ. குடும்பப்பொது நன்மைக்காக ஆபரணங்களை வேறொரு வன் இடத்தில் பொதுக்கட்டப்பட்டிருக்கிற பட்சத்தில் அந்த ஆப ரணங்களை அந்தக் குடும்பத்தலைவன் இடத்தில் கொடுத்துவிட்டால் அதுவே போதுமானசாட்சியம். (கஅஉச ஹூல-நம்-கசூ.)

சஊ. க-என்பவன் உத்தரவுப்பாடியென்று கையெழுத்துவைத்து, அ-என்பவன், ச-என்பவனுக்கு ஒரு சாஸநம் எழுதிக்கொடுத்தான். அந்தப்பாடி, அ-என்பவனுக்கு, க-என்பவன் உத்தரவு கொடுக்கவில்லையென்றும், அ-என்பவனுக்கு, க-என்பவன் அனுப்பினை அதிகாரத்திலிருந்து செல்லாதென்றும் கலெக்டர் தீர்மானஞ்செய்ததாகத் தெரியவந்தபடியால் அந்தப்படி ஒரு தகுந்த அதிகாரியினால் செய்யப்பட்ட தீர்மானமே லே உத்தரவு செல்லாதென்பதற்குப் போதுமான சாட்சியம் என்று நிர்ணயிக்கப்பட்டது. (கஅகச ஹூல-நம்-கஉ.)

சஎ. பத்திரம் எழுதிக்கொடுத்தவனுடைய பாத்தியஸ்தர்களில் சிலர் அந்தப் பத்திரத்தைப்பற்றி ஆட்சேபித்தநிலை அவர்களில் ஒருவன்மட்டும் தானாக கொடுக்கும்படி சூப்பரிம்கோர்ட்டில் தீர்மானிக்கப்பட்டு அந்தத் தீர்ப்புக்காக வெளிப்பிரதேசத்தில் எல்லாப் பாத்தியஸ்தர்களையும் அழைப்பதாக அறுதியிடவேண்டும். (ச-னை-கஅஉ அஹூல-பிர் பயனிர்ீ உகஉ.)

சஅ. ஒரு நியாயாதிபதிக்கு ஸ்வயமே ஒரு விஷயம் தெரிந்திருந்தால் அந்தப்படி அவர் தீர்மானஞ்செய்யக்கூடாது. அவருக்கு அந்தரங்கத்தில் ஒரு காரியம் தெரிந்திருந்து அதற்கு முழு விரோதமாக சாட்சியம் ஏற்படுமானால் அந்த சாட்சியப்படிக்கே அவர் தீர்மானஞ்செய்யவேண்டும். அவருக்குத் தெரிந்தவிஷயத்தை அவர் கோர்ட்டில் சாட்சியாக் வந்து வெளிப்படுத்தினால்மட்டும் உபயோகப்படுமேதவிர வேறெவிதத்தில் உபயோகப்படமாட்டாது. (ச-டி-கஅஉஎஹூல அக்ட்டைடபர்ீ ககஎ.)

சள. வாதிபட்சத்தில் ருஜுவிளங்கி முடிவாகிறவனையில் பிரதி வாதி பட்சத்து ருஜுவிற் பிரவேசிக்கக்கூடாது. (ச-பு-க அ0எஎவ-செப்ட்டம்பர்மீ உசுஉ.)

சஅ. ஒரு வழக்கம் சந்தேகத்துக்குரியதாகக் காணப்பட்டால் அதைப்பற்றி ருஜு விளங்கவேண்டும். (ச-பு-க அஉசுஎவ-மார்ச்சு மீ கசுஉ.)

சக. ஒருவன் தன்னுடைய நிலத்தைச் சிலகாலம்வரையில் வே றொருவனுடைய விசாரணையில் விட்டுவைக்கும்படியான அவசி யம்கோரிட்டால் அவன் ஆதாரவைப் பெற்றுக்கொள்வது தகாசார மாயிருக்கின்றது. அப்படிப்பட்ட ஆதாரவு இல்லாவிட்டால் அந் தவிஷயத்தை நம்பக்கூடாது. (கஅஉஅஎவ-நம்-சு.)

ரு0. விவாதஸ்தலத்தின் ஸ்திதியைக் கோர்ட்டார் அறியவேண் டியிருந்தால் கோர்ட்டு அபீலுமூலமாகத் தெரிந்துகொள்ளவேண்டி யது கிரமமேதவிர சிவில் இஞ்சினீரால் எழுதப்பட்ட காகிதத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. சிவில் இஞ்சினீருடைய அபிப்பிராயந் தெரியவேண்டியிருந்தால் அவரைச் சாட்சியாய் வர வழைத்து விசாரிக்கவேண்டும். (கஅரு0எவ-நம்-சுக.)

ருக. ஒரு நியாயாதிபதி சாட்சிய பரிசீலனஞ் செய்யாமல் வாதி யின் கட்சி துர்வியாச்சியக்காரர்கள் வழக்கமாய்ச் சொல்லுகிற துர் க்கட்சி என்றுமாத்திரந் தீர்ப்பில் சொல்லி வாதி வழக்கைத் தள்ளி னதினால் நியாயாதிபதிகள் வியாச்சியங்களில் ஏற்பட்டிருக்கிற சாட் சியப்பிரகாரந் தீர்மானஞ்செய்யவேண்டுமே அல்லாமல் சாதாரண மான வழக்கங்களைக்கொண்டு தீர்மானிக்கக்கூடாதென்று சதர் க்கோர்ட்டாரவர்களால் உத்தரவு செய்யப்பட்டது. (கஅருஉவ-நம்-உரு.)

ருஉ. உண்மையானதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தஸ் தவேஜின் கையெழுத்துடனேகூட ஆதேகூடிக்கப்பட்ட தஸ்தவே ஜின் கையெழுத்தை இணையிட்டுப்பார்ப்பது சாஸ்திரசம்மதமாக வும் அதிக பிரயோஜகரமாகவும் இருக்கின்றது. (கஅருகவ-நம் அசு.)

ருசு. கடன் பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்தான். பிரதிவாதி பத்திரத்தின் உண்மை யை ஒப்புக்கொண்டு அதற்காகத் தான் தொகை பற்றவில்லை யென்

றும் அது லஞ்சவிஷயமாகப் பிறந்ததென்றும் எதிர்கட்சிபேசினன். அசல்க்கோர்ட்டார் வாதிபட்சந் தீர்ப்புச்செய்தார்கள். பிரதிவாதிக் கு வாதி கடன்கொடுத்து ஷை ஆதரவைப் பெற்றுக்கொண்டதை ருஜுப்படுத்தும்படி வாதிக்கு அப்பீல்க்கோர்ட்டார் உத்தரவுகொ டுத்து அந்தப்படி அவன் ருஜுப்படுத்தத் தப்பிப்போய்விட்டான் என்கிற ஆதாரத்தினல் அசல் தீர்ப்பை மாற்றிப்போட்டார்கள். பத் திரத்தில் வியக்தமாய்க் கண்டிருக்கிற ஒரு விஷயத்தை ருஜுப் படுத்தும்படி வாதிக்கு அப்பீல்க்கோர்ட்டார் உத்தரவுகொடுத்தது உசிதம் அல்லவென்றும் பிரதிவாதி பக்கத்து ருஜுவைமட்டும் கவ னித்து அந்த ருஜு திருப்தியாயிராவிட்டால் வாதி வழக்கை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் சதர்க்கோர்ட்டார் நிர்மானித்தார்கள். (கஅருருவ-நம்-கூள.)

நச. கஅ02-வருத்தில் கவர்ன்மெண்டார் அவர்களால் ஒரு அதி காரஸ்தருக்கு எழுதப்பட்டு அதிற்கண்டபடி. ஒரு காலத்திலும் அநாக்டாகநு செய்யப்படாத ஒரு பணமுகாகிதத்தை கவர்ன் மெண்டாரின் உத்தரவாகநிரூபத்து அதை ஆதாரப்படுத்தி நிர்ப்பு செய்வது நியாயமானதல்ல. (கஅருருவ-நம்-கூரு.)

ருரு. வர்த்தமாந காகிதங்களை எழுதினவர்களுடைய கையெழு த்துகள் ருஜுவாகுல்மட்டும் அந்தக் காகிதங்களை சாட்சியமாக ஏற் றுக்கொள்ளலாம். (கஅருகூவ-நம்-ருஉ.)

ருசூ. இறந்துபோனவர்களுடைய வாக்குமூலங்களை ருஜுவாக ஏற்றுக்கொள்ளுகிறதற்குமுன் அவர்கள் இறந்துபோனவிஷயம் ருஜுவாகவேண்டியது முக்கியம். (ஷை நம்.)

ருள. வாக்குமூலம் எழுதிவைத்தவர்களையே வரவழைத்து விசா ரிப்பது சாத்தியமாயிருக்க அவர்கள் பிரமாணம் இல்லாமல் எழு திவைத்த வாக்குமூலங்களின் நகல்களை அங்கீகரிப்பது சாட்சிய சாஸ்திரவிதிக்கு விரோதம். (கஅருளவ-நம்-உ.)

ருஅ. விவாதகடனைப் பிரதிவாதி ஆட்சேபிக்கிறபட்சத்தில் வாதி பிரமாண பூர்வமா யெழுதிவைத்த வாக்குமூலத்தைக்கொண்டும் அவனுடைய கணக்குகளைக்கொண்டும் பிரதிவாதிக்கு விரோதமா ய்த் தீர்ப்பு செய்வது சரியல்ல. (கஅருருவ-நம்-கூகூ.)

ருகூ. விவாத சாஸனத்தின் உண்மையை ஒப்புக்கொள்ளுகிற பிர திவாதி அதற்காகத் தான் தொகை பற்றவில்லையென்று கட்சிசொ

ன்னுல் அந்த விஷயத்தை ருஜு-ப்படுத்தவேண்டியது அவனுடை யகடமையேதவிரத் தொகைகொடுத்து சாஸநம்வாங்கினதாக ருஜு-ப்படுத்தவேண்டியது வாதியின்கடமை அல்ல-தொகை செல்லான தற்கும் கிரய பரிபூர்த்திக்கும் சாஸநமே சாட்சி. (கஅருசஹ-நம்-அகூ.)

கூ0. பத்திரத்துக்காகச் செல்லாநிற தொகையைப் பத்திரத்தின் மேல் செல்லுவைக்கிறதென்றும் வேறேவிதமான செல்லுகளை ஒப்புக்கொள்ளுகிறதில்லை யென்றும் அந்தப்பத்திரத்தில் நிபந்தனை கண்டிருக்கிறவிஷயத்தில் அந்தப்படி நடக்கவேண்டியதே அல்லாமல் பத்திரம் தீர்ந்துபோனதற்கு ருஜு-வாகப் பிரதிவாதி தாக்கல் செய்யும் பற்றுச்சீட்டை ஒப்புக்கொள்ளக்கூடாது. (கஅருஹ-நம்-உ.)

கூக. ஒரு தஸ்தாவேஜைப் பெற்றுக்கொள்ளுகிறவன் அதைச் செய்துகொடுத்தவன் கையிலிருந்து அதை வாங்கிக்கொண்டால்மட்டும் அந்த தஸ்தாவேஜ் செல்லும். (கஅருஹ-நம்-அகூ-கஅருகூ-நம்-களக-சஅசூ0-ப-எகூ.)

கூஉ. ஒரு ஆதாரவு உண்மையானதென்று பிரதிவாதிகளில் ஒருவன் ஒப்புக்கொண்டாலுங்கூட, அது பொய்யாய் சிருஷ்டிக்கப்பட்டதென்று ருஜு-வாயுல் அந்த ஆதாரவைக் கோர்ட்டார் ஒருவிதத்திலும் ஊர்ஜிதப்படுத்தக்கூடாது. (கஅருஅ-ப-உசுரு.)

கூங. ஒரு ஆதாரவு பலவந்தத்தின்மேல் வாங்கப்பட்டால் மட்டும் செல்லாது. அந்த ஆதாரவை எழுதிக்கொடுத்தவன் தான் மனப்பூர்வமாக எழுதிக்கொடுக்கவில்லையென்றும் வேறுருகாரணத்துக்காக எழுதிக்கொடுத்ததாகவும் ஆட்சேபித்தால் அந்த ஆட்சேபம் நிருபயோகம். (கஅருகூ-நம்-க00-ப-உசூ0.)

கூச. ஒரு ஆதாரவைக் கிரமப்படி எழுதிக்கொடுத்தவன் அதின் நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கக் கடமையில்லாயிருக்கிறான். (கஅசூ0-நம்-ச-கஙரு-ப-உஉரு-உருரு.)

கூரு. ஒரு ஆதாரவில் தொகைபற்றிக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாகக் கண்டிருந்தால் அந்தத் தொகை கொடுபட்டதற்கு அந்த ஆதாரவே பிரத்தியட்சசாட்சியம். அந்த விஷயத்துக்கு வேறே சாட்சியம் வேண்டியதில்லை. (கஅருச-நம்-அகூ.)

கூசு. ரிவினியூ நடவடிக்கை கேவலம் அநுபவத்துக்குமட்டும் சாட்சியமேதவிர நிலத்தின் பாத்தியத்துக்காவது ஸ்வதந்தர அநு

போகத்துக்காவது சாட்சியம் ஆகமாட்டாது. (கஅசுஐவுல-நம்-உகூரு-கஅசுக வுல-ப-கூரு.)

சுன. உடன்பாடிக்கைப்படி நிலங் கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ்செய்தான். அந்த ஆதாரவு பலாத்காரமாய் வாங்கப்பட்டதாகப் பிரதிவாதி கட்சிபேசினன். வாதியின் தூப்போதனையினல் பிரதிவாதிமேல் தண்டிக்கத்தக்க குற்றம் சாட்டப்பட்டு அவன் பாராவில் இருக்கும்போது வே உடன்பாடிக்கை பிறந்ததினலும் அது பிறந்து சிலநாளைக்குப்பிற்பாடு பிரதிவாதி நிரபராதி என்று விடுதலையாயிருப்பதாலும் பிரதிவாதிக்கு வாதி பீதியை உண்டுபண்ணி வே ஆதாரவை வாங்கி இருப்பதாகவும் ஆகையால் அது நிஷ்பலமென்றும் வாதி வழக்கு சமாப்தஞ் செய்யப்பட்டது. (கஅசுக வுல-நம் நி-ப-எக.)

சுஅ. பிரதிவாதி குற்றஞ் சாட்டப்பட்டுப் பாராவில் இருக்கும்போது அவனல் எழுதிக்கொடுக்கப்பட்ட ராஜிநாமா செல்லாது. (கஅபகவுல-நம்-அ-ப-எஉ.)

சுக. ஒரு ஆதாரவு ஒரு பக்கத்தில் கொஞ்சம் கிழிக்கப்பட்டிருக்கையில் எவன் எழுதிக்கொடுத்தானே அவன்கையில் இருக்குமானல் அது ரத்தாய்ப்போய்விட்டதென்பதற்கு அதுவே திர்க்கடாந்தம். அதை அவன் துராகிருதமாய்க் கைப்பற்றிக்கொண்டதாக எதிர்கட்சிக்காரன் வாதிததால் அந்த துராகிருதத்தை அவன் நிரூபிக்கவேண்டும். அவன் அந்தப்படி நிரூபிக்கத்தப்பிப்போனல் வே ஆதாரவு கிரமமாய்ப் பரிஹரிக்கப்பட்டதாகவே ஊகிக்கப்படும். (கஅசுஐ வுல-நம்-நி அகூ-கஅசுக வுல-ப-கூஎ.)

எ0. ஒரு ஆதாரவை எவன் தாக்கல்செய்தானே அவன் அந்த ஆதாரவிற் கண்ட ஏற்பாட்டுக்குச் சம்மதித்தவனென்று நிச்சயிக்கவேண்டும். (கஅசுஐ வுல-நம்-கஉ-கஅசுக வுல-ப-ககக.)

எக. ஒரு ஆதாரவை எழுதிக்கொடுக்கிறவர்கள் அந்த ஆதாரவில் எந்த இடத்தில் கையெழுத்துவைக்கிறது வழக்கமோ அந்த இடத்தில் ஒருவன் கையெழுத்துவைத்து வேறே பிரத்தியேகமான ஸ்தானத்தில் சாட்சிகளின் கையெழுத்து வைக்கப்பட்டிருந்தால் அவன் அந்த ஆதாரவினிபந்தனைக்கு உட்படவேண்டும். தான் சாட்சி கையெழுத்துவைத்ததாக அவன் சொல்லும் பிரதி நியாயம் அப்பிரயோஜகம். (கஅசுக வுல-நம்-கூ-ப-கஙச.)

எஉ. இருவர்பெயரால் கிரயசாஸநம் பிறந்திருக்கிறபட்சத்தில் அவர்களில் ஒருவனை நாமமாத்திரமாய் சாஸநத்தில் கண்டிருப்பதாகவும் அவனுக்கும் அந்தக் கிரயத்துக்கும் சம்பந்தம் இல்லையென்றும் மற்றொருவன் சொல்லுங் கட்சியைப்பற்றி வாசாசாட்சியத்தை அங்கீகரிக்கக்கூடாது. (கஅருசுஏ-நம்-கஉஉ.)

எஊ. தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து வரப்பட்ட யாதாஸ்துபோர்ட்டு முதலான தஸ்தாவேஜுகள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவைகள். (கஅசஎ-நம்-சூஅ.)

எச. கலெக்ட்டர் முன்பாக வாங்கப்பட்ட வாக்குமூலங்களைக் கோர்ட்டார் சாட்சியமாக அங்கீகரித்து அந்த வாக்குமூலங்களையே முக்கியமாக ஆதாரப்படுத்திக் கோர்ட்டார் தீர்மானஞ்செய்யக்கூடாது. (கஅருஉ-நம்-எரு.)

எரு. ஒருவன் தனக்குள்ள முக்கியசாட்சியத்தை வெளிக்குக் கொண்டுவராமல் அவனை மறைத்தால் அவன் கட்சி அபத்தமயம் என்பதற்கு அதுவே பலமான ஊஹாஸ்பதமாகும். (கஅசூ0ஏ-நம்-ககஉ-ப-கசஎ.)

எசூ. பிரதிவாதியால் தாக்கல்செய்யப்பட்ட தஸ்தாவேஜு சாட்சியலோபமாகவும் பிரதிவாதிக்கு நிஷ்பிரயோஜநமாகவும் போய்விட்டபோதிலும் அந்த ஆதாரவிஞல் வாதியின் கட்சிக்கு சாதகமாய் உண்டாகப்பட்ட அநுமாநத்தின் பிரயோஜநத்தை அவன் அடையப் பாத்தியஸ்தனாயிருக்கிறான். (கஅகரு ஏ-நம்-ச.)

என. கட்சிக்காரர்கள் சர்க்கார் ஆதாரவுகளை வாங்கி தாக்கல்செய்வதற்காக அவர்களுக்குக் கோர்ட்டார் போதுமான சாவகாசங் கொடுக்கவேண்டும். (கஅருஅஏ-நம்-உ0ரு-ப-உஎஉ.)

எஅ. பலநிலங்களுக்குள் சொற்பநிலத்தை ஒருவன் வாஸ்தவமாய் அநுபவித்ததாக ருஜுப்படுத்துவது கஷ்டமானபடியால் அந்தவிஷயத்தில் பைமாஷ்கணக்கை அநுபோக நிர்ஷ்டாந்தமாக ஏற்றுக்கொள்ளலாம். (கஅருஅஏ-நம்-சூக-ப-க்ள0.)

எசூ. வியக்தமாய்ப் பேசப்பட்ட ஒரு விவகார சங்கதியைப்பற்றி விசாரணை நடந்து சித்தாந்தஞ்செய்யப்பட்டு அந்த சித்தாந்தத்தின் மேல் அப்பீலும் செய்யப்படாமல் இருந்தால் பிற்பாடு அந்த சங்கதியைப்பற்றி ஆட்சேபம் செய்யக்கூடாது. (கஅஉசஏ-நம்-ரு.)

அ0. ஒரு ஆதாரவானது அதை எழுதிக்கொடுத்தவனுடைய ஸ்வ யபாஷையில் எழுதப்படாமலிருந்தாலுங்கூட அது தத்துவமென்று ருஜு-வானால் அவன் அந்த ஆதாரவுக்கு உட்படவேண்டும். (கஅருகூ ஹல-ரம்-கஉச-ப-உளகூ.)

அக. உபயவாதிகளுக்கும் பொதுவான சாட்சிகளின் ருஜு-னைவ இதரசாட்சிகளின் ருஜு-னைப்பார்க்கிலும் அதிசிலாக்கியமாகவும் நம்பிக்கைக்கு யோக்கியமாகவும் எண்ணவேண்டும். (கஅருஅஹல ரம்-கருகூ-கஅருகூஹல-ப-உஉசூ.)

அஉ. நிர்தோஷமான ஏகசாட்சியின் ருஜு-ஒரு கட்சியை ஸ்தாபிக்கப் போதுமானதுதான்-அதற்கு உபபலமான ருஜு-வேண்டியதில்லை. (கஅசூ0ஹல-ரம்-அ-ப-க0ள.)

அங்கிகாரம்-ச-கசூ.....
அநுபவம்-ச-சூ-ள.....
அப்பீல்-சூச-சூரு.....
அவதிக்கிரயம்-க.....
இரும்-கள.....
ஒற்றி-கரு-சூ0-சூள.....
கடன்-கரு.....
கடன்பத்திரம்-சூ-ரு-சூ-க0-கஉ-உஉ-உசூ-உச-உரு-உசூ-உஅ-சூகூ-சூகூ.....
கணக்கு-ச-ரு-ள-அ.....
கப்பல்-க.....
கால நிர்ணயம்-சூ.....
கிரயம்-கச-சூ.....
சித்தாந்தமும் தீர்ப்பும்-சூ0.....
ஸ்வீகாரம்-உ-உரு.....
பாகம்-ரு-சள-ரு0.....
பர்ப்பர்-சூ.....
பிரமாணம்-சூ.....
மாநஷ்டம்-சூ.....
மிராசுதாரும் புறக்குடியும்-கஅ-உ0.....

இவைகளைப்பார்க்க.

சாம்பர்ட்டி.

க. பிரதிவாதி போக்கியம்வாங்கி அநுபவிக்கிற நிலத்தை அதின் ஸ்வானிடத்தில் தான் கிரயம் வாங்கினதாகவும் பிரதிவாதி போக்கியத்தொகையைப் பெற்றுக்கொண்டு நிலத்தை விடவேண்டுமென்றும் வாதி தொடர்ந்தான். ஸ்வான்காரன்வசத்தில் இல்லாத நிலத்தை அவனிடத்தில் வாதி கிரயம்வாங்கினதால் அவன் வழக்கு சாம்பர்ட்டி தோஷத்துக்கு உட்பட்டதென்று சீவில் ஜட்ஜ் வாதியின் வழக்கைத்தள்ளினார். ஸ்வான்காரனுடைய அநுபவத்தில் நிலம் இல்லாமல் இருந்தபோதிலும் அவன் அந்த நிலத்தை விக்கிரயம் செய்

யலாமென்றும் வாதி வழக்கைச் சாம்பர்ட்டி தோஷகிரஹணம் பிடிக் கமாட்டாதென்றும் சதர்க்கோர்ட்டாரவர்களால் நிர்த்தாரணஞ் செ ய்யப்பட்டது. (கழநிந வடு-நம்-கசூ-ப-சூசூ.)

உ. நரசிம்மசெட்டியிடத்தில் பிரதிவாதி சில தொகை பெற்றுக் கொண்டு அதற்காக அவனுடைய ஜமீன்தாரிணை வை நரசிம்மசெட் டிக்கு. கo-வருஷம் வரையில் குத்தகை கொடுக்கிறதென்று பிரதி வாதி உடன்படிக்கைசெய்தான். வை தொகையை நரசிம்மசெட்டி- கொடுக்கிறதற்கு முன் பிரதிவாதி வேறொருவனிடத்தில் பணம் பற் றிக்கொண்டு அவனுக்குத் தன்னுடைய ஜமீன்தாரிணையக் குத்தகை கொடுத்துவிட்டான். வை நரசிம்மசெட்டிக்குப் பிரதிவாதி செய்த உடன்படிக்கைப்படி நிறைவேறவேண்டியதற்காக வை நரசிம்மசெ ட்டி செய்த வியாச்சியத்தைக் கீழ்க்கோர்ட்டார் தள்ளிப் பிரதிவாதி யின் உடன்படிக்கைப்படி நடக்க அவன் தவறிப்போனதிலால் நரசி ம்மசெட்டிக்கு நேரிட்ட நஷ்டத்தைப்பற்றி அவன் வேறே வியாச் சியம் செய்துகொள்ளும்படி உத்தரவுகொடுத்தார்கள். பிற்பாடு வை நரசிம்மசெட்டி இறந்துபோய் அவனுடைய பாத்தியஸ்தன் வை நஷ்டத்துக்காகத் தொடரும்படியான பாத்தியத்தைத் தனக்குக் கிரயஞ்செய்துவிட்டதால் அந்த நஷ்டத்தொகை பிரதிவாதி இடத் திலிவாங்கித்தரவேண்டுமென்று வாதிவியாச்சியஞ்செய்தான். அந்த நஷ்டத்துக்காக வாதிக்குப் பிரதிவாதி ரூ-சூ0000-கொடுக்கும்படி. மதுரை சீவில் கோர்ட்டாரால் தீர்ப்புசெய்யப்பட்டது. அதைப் பற்றிப் பிரதிவாதி சதர்க்கோர்ட்டாரவர்களுக்கு அப்பில் செய்து கொண்டான். சதர்க்கோர்ட்டார் அடியிற்கண்ட காரணங்களால் வாதி வழக்கைத்தள்ளினார்கள். அந்தக் காரணங்களாவன, வாதியின் வழக்கு சாம்பர்ட்டி என்கிற வியாச்சிய பாத்திய விக்கிரயதோஷ த்துக்கு உட்பட்டதாயிருக்கிறது. அந்தப்பாத்தியத்தை விக்கிரயஞ் செய்தவனும் வாங்கினவனும் வியாச்சியத்தினால் உண்டாகத்தக்க பிரயோஜனங்களை பாகித்துக்கொள்ளுகிறதென்று உடன்படிக்கை செய்துகொள்ளாமல் இருந்தாலுங்கூட வாதியின் வழக்கு வை தோ ஷத்தினால் பாதிக்கப்பட்டதாகவே யிருக்கின்றது. அந்தத் தோஷம் இருப்பதாகப் பிரதிவாதி அசல் கோர்ட்டில் பேசாமல் இருந்தாலுங் கூட அந்தத் தோஷத்தைப்பற்றி யோசித்து நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்தவேண்டியது சதர்க்கோர்ட்டாருக்குக் கடன். (கழநின வடு-நம்-நின-கழநிஅ வடு-ப-சூசூ.)

கூ. ராஜா பீபி இடத்திலும் அவளுடைய போனன காதர்சாயபு இடத்திலும் முதற்பிரதிவாதியின் தகப்பன் குத்தகைவாங்கி அநுபவித்த நிலத்தை அவனுக்குச் சொந்தம்போல ரிவினியூ அதிகாரஸ்தர்கள் ஏலம் போட்டுவிட்டதாகவும் அந்த நிலத்தை ஷை ராஜாபீபியும் அவள் பௌத்திரனும் தனக்குக் கிரயஞ்செய்துகொடுத்துவிட்டதால் அந்தநிலம் கிடைக்கவேண்டுமென்றும் வாதி வழக்கிட்டான். க0-ஹ்ரிகாலம் ஷை ராஜா பீபிவகையரா விவாதநிலத்தை அநுபவியாதபடியாலும் அந்த-க0-ஹ்ரகாலமும் ஷை ஏலத்தை ரத்துசெய்யவேண்டியதற்காக ரிவினியூ அதிகாரஸ்தர்களிடத்தில் ஷை ராஜா பீபிவகையரா பலவித பிரயத்தனங்கள்செய்தும் பலிக்காமல் அவர்களைக் கிரமவியாச்சியஞ்ஞ செய்துகொள்ளும்படி உத்தரவுகொடுத்த பிற்பாடு அவர்கள் ஷை நிலத்தை வாதிக்குக் கிரயம் செய்திருப்பதாலும் வாதியின் வழக்கு சாம்பர்ட்டி என்னும் வியவகாரபாத்திய விக்கிரயதோஷதிரஸ்தமானதென்று திரஸ்கரிக்கப்பட்டது. (கஅருஅஹ்ல-நம்-சச-ப-கஙுக.)

சு. கூ-ம் பிரதிவாதிக்கு ஸ்வந்தமான நிலத்தை அவன்வாயுடன்படிக்கை மூலமாக வாதிகளுக்குக் கொடுத்துவிட்டதாகவும் அந்த நிலத்தை போக்கியமாயனுபவிக்கிற முதற் பிரதிவாதியிடத்திலிருந்து அந்த நிலம் கிடைக்கவேண்டுமென்றும் வாதிகள் வியாசியம் செய்தார்கள். ஷை நிலத்தைப்பற்றி கூ-ம் பிரதிவாதி வியாச்சியம் செய்யவேண்டியவனுயிருக்க அந்த வியாச்சிய பாத்தியத்தை வாதிகள் பெற்றுக்கொண்டிருப்பதால் அவர்களுடைய வழக்கு சாம்பர்ட்டிதோஷ பரிதமானதென்று நிக்கிரகிக்கப்பட்டது. (கஅருஅஹ்ல-நம்-ககஙு-கஅருகூஹ்ல-ப-அ.)

ஙு. முதற் பிரதிவாதி புருஷனுக்காகப் பலவியாச்சியங்களில் வக்கீலாயிருந்த பட்டாபிராமையனுக்குக் கிடைக்கவேண்டிய பீசுகளை அந்தப்பட்டாபிராமையன் இறந்த பிறகு அவனுடைய பாத்தியஸ்தன் வாதிக்கு மேடோவர் செய்துகொடுத்துவிட்டதால் அந்தப் பீசுத்தொகை வரவேண்டுமென்று வாதி வியாச்சியப் பிரயோகஞ் செய்தான். அந்த வியாச்சியம் பிரதிவாதிகளால் ஆட்சேபிக்கப்பட்டது. ஷை பட்டாபிராமையனுக்குக் கிடைக்கவேண்டிய பீசுத்தொகை இவ்வளவென்று நிஷ்கரிஷையில்லாமலும் நிராதாரவாகவும் இருப்பதாலும் தனக்குக் கிடைக்கவேண்டிய பீசை வக்கீல் வேறொருவனுக்கு மேடோவர் செய்வது சாம்பர்ட்டி தோஷத்துக்குட்பட்ட

தென்றும் வாதி வழக்குதள்ளப்பட்டது. (கஅசுஂ ஙநு-நம்-ககள-ப-உசுசூ.)

சூ. சேஷய்யன் அவனுடைய நிலத்தை மூப்பது வருஷத்துக்கு முன் முதற் பிரதிவாதியின் பிதா மகனுக்குப் போக்கியம் வைத்ததாகவும் அந்த நிலத்தைச் சேஷய்யன் பாரியை தனக்குக் கிரயஞ்செய்திருப்பதால் அந்தநிலங் கிடைக்கவேண்டுமென்றும் வாதி விவாதித்தான். அந்தநிலத்துக்குத் தாங்களே பூர்ணஸ்வாமிகளென்று பிரதிவாதிகள் பிரதிவாதஞ் செய்தார்கள். அசல்க்கோர்ட்டார் வாதி பட்சந் தீர்ப்புச் செய்தார்கள். சாம்பர்ட்டிதோஷ நிபஞ்சொல்லி அப்பீல்க்கோர்ட்டார் வாதி வழக்கைத் தள்ளுபடிசெய்தார்கள். வியாச்சியஞ் செய்யும்படியான பாத்தியத்தைமட்டும் வாதி கிரயம் வாங்கவில்லையென்றும் பூர்ணமான ஸ்வத்துவ பாத்தியத்தை அவன் கிரயம்வாங்கியிருப்பதால் அவனுடைய வழக்கு சாம்பர்ட்டிதோஷ ரஹிதமானதென்றும் சதர்க் கோர்ட்டார் சித்தாந்த நிர்ணயஞ் செய்தார்கள். (கஅசுஂ ஙநு-நம்-ககக-ப-கசசூ.)

எ. ஒரு ஸ்வத்தைக் கிரயம் வாங்கினவன் உடனே அதை ஸ்வாதீனஞ் செய்துகொள்ளாமல். கo-ஙநுகாலம் அதின் வருமானத்தை மட்டும் பற்றிவந்து பிற்பாடு அவன் அந்தச் சொத்தை வேறே யாருக்காவது விக்கிரயஞ்செய்தாலுங்கூட அந்த விக்கிரயம் சாம்பர்ட்டிதோஷக் கிரஸ்தமாகமாட்டாது. (கஅசுஂபஙநு-நம்-சூசூ-ப-கஉஎ.)

ஒற்றி-சச-வது விதியைப்பார்க்க.

சித்தாந்தமுந் தீர்ப்பும்.

க. ஒரு நியாயாதிபதி ஒரு வியாச்சியத்தை விசாரணைசெய்து அதில் அவருடைய சித்தாந்தத்தைக் கோர்ட்டில் பிரசித்தப்படுத்தி சித்தாந்தத்தை எழுதிவைக்காமல் அவருடைய தீர்மானத்துக்குச் சுருக்கமான ஒரு குறிப்பைமட்டும் எழுதிவைத்துப் பிற்பாடு அவர் அந்தக்கோர்ட்டை விட்டுப்போய்விட்டால் அவருக்குப் பதிலாய் வந்த நியாயாதிபதி அந்தவியாச்சியத்தை மறுபடியும் பரிசிலனை செய்து வேறே தீர்மானஞ்செய்யவேண்டும். (ச-பு-கஅசுகஙநு ஜ-ஒன்பீ ககஉ.)

உ. ஒரு சிவில் ஜட்ஜ் சித்தாந்தங்களை யெழுதி அவைகளைக் கோர்ட்டில் அறிவிக்காமல் அந்தக்கோர்ட்டை விட்டு அப்பாற்போய்விட்

டால் அவருக்குப்பதிலாய் வந்தவர் அந்தச் சித்தாந்தங்களைப் பிர சித்தஞ் செய்யக்கூடாது. அவர் மறுபடியும் அந்த வியாச்சியங் களை விசாரித்துத் தீர்மானஞ் செய்யவேண்டும். (ச-பு-க அசகூஙூல ஆகஸ்ட்டுடீ எ.)

ரு. ஒரு நியாயாதிபதி இறந்துபோய் அவருடைய சித்தாந்தங் கள் ரகலெழுதப்படாமலும் அபூர்ணமாகவும் வாசித்தறியக்கூடாத வைகளாகவும் இருந்தால் அவருக்குப்பதிலாய் வந்தவர் நூதன மாய்த் தீர்ப்புகள்செய்யவேண்டும். (ச-லெட்டர்-க அருஙூல ஆக் டோபர்டீ நுை.)

சு. சித்தாந்தங்களை யெழுதிக் கோர்ட்டில் தெரியப்படுத்தின நி யாயாதிபதி அவைகளிற் கையெழுத்து வைக்காமல் இறந்துபோனா லும் அல்லது அந்த இடத்தை விட்டுப்போய்விட்டாலும் அந்தத் தீர்ப்புகளில் அவருக்காக அவருக்குப்பதிலாய் வந்தவர் கையெ ழுத்துவைக்கலாம். (ஷை.)

நு. சித்தாந்தத்தைப் பந்திபந்தியாக எழுதி ஒவ்வொரு பந்திக் கும் இலக்கம் போடவேண்டும். (ச-பு-க அருo ஙூல) எப்பிரல்டீ உகூை.)

கூ. அப்பீல் சித்தாந்தத்தில் வாதி பிரதிவாதியென்று பேச வேண்டுமேயல்லாமல் அப்பீல் வாதி அப்பீல் பிரதிவாதியென்று சொல்லக்கூடாது. (ச-பு-க அகூo ஙூல டிசம்பர்டீ நுை.)

எ. யாதொரு வியாச்சியத்தில் சதர்க்கோர்ட்டு நியாயசாஸ்திரி களுடைய அபிப்பிராயம் வாங்கப்பட்டிருந்தால் சாஸ்திரக்கேள்வி யையும் உத்தரவையும் கோர்ட்டாருடைய சித்தாந்தத்தில் எழு தியிருக்கவேண்டும். (ச-பு-க அசகூஙூல ஆகஸ்ட்டுடீ கூை.)

அ. ஒரு தீர்ப்பின்மேல் எதிரடையான பல அப்பீல்கள் செய் யப்பட்டிருந்தால் அந்த அப்பீல்களுக்கு ஒரே சித்தாந்தம் போது மானதாயிருக்கின்றது. ஆனல், அந்த ஒவ்வொரு அப்பீலிலும் பே சப்பட்ட வியவகார விஷயங்களையெல்லாம் ஷை சித்தாந்தத்தில் எடு த்துப்பேசவேண்டும். (ச-பு-க அருஅஙூல ஜனுவரிடீ கஅை.)

கூ. பல வியாச்சியங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதாக வும் ஒரே கட்சிக்காரர்களாகவும் ஒரு வியாச்சியத்தின் சித்தாந்தம் மற்ற வியாச்சியங்களுக்கும் உபயோகப்படத்தக்கதாகவும் இருக்கிற பட்சத்தில் ஒரு வியாச்சியத்தில் மட்டும் சித்தாந்தம் விவரமாயெ

முதலி அதிற்கண்ட முகாந்தரங்கள் மற்ற நம்பர்களின் சித்தாந்தங்களில் சுருக்கமாயெழுதப்படவேண்டும். (ச-அ-வி.)

கo. புதர் விசாரணைக்காக அனுப்பப்படுகிற வியாச்சியங்களில் முதல் விசாரணைத் தீர்ப்பைப்பார்க்கவேண்டிய அவசியமில்லாதபடிக்கு மறுவிசாரணைத் தீர்ப்புகள் பூரணமாயிருக்கவேண்டும். (ச-பு-கஅருகஙல பிப்பரவரிமீ உஉ.)

கக. கஅருகஙல-அ-வது ஆக்ட்டு கூருகூ-வது பிரிவுப்படி அர்த்தம் விளங்கும்படியான விதமாய் இங்கிலீஷ் எழுதத்தெரிந்த ஒவ்வொரு கேட்டீவ் பிரின்சிபால் சதாமீனும் அப்பீல் சித்தாந்தங்களையெல்லாம் இங்கிலீஷ் பாஷையிலெழுதக் கடமைப்பட்டிருக்கிறார். (ச-பு-கஅசுகஙல ஜனுவரிமீ ககூஉ.)

கஉ. இங்கிலீஷ் பாஷையைத் தெளிவாயெழுதத் திறமையுள்ளயாதொரு கேட்டீவ் ஜட்ஜ் ஷே ஆக்ட்டு கஅச-வது பிரிவுப்படி அந்தப்பாஷையில் அவருடைய சித்தாந்தங்களை யெழுதலாம். (ஷே.)

கஙூ. யூரோப்பியர்கள் கட்சிக்காரர்களாயிருக்கிற வியாச்சியங்களை ஸ்மியாயப்படிக்கும் கிரமப்படிக்குந் தீர்மானிக்கவேண்டுமே அல்லாமல் இங்கிலீஷ் சாஸ்திரப்படி தீர்மானிக்கவேண்டியது அகத்தியம் அல்ல. (ச-பு-கஅகூஎஙல நவம்பர்மீ களஉ.)

கச. ஒருவியாச்சியத்தில் பிரதிவாதிவசத்தில் இருக்கிறசொத்து அந்த வியாச்சியத்தில் சம்பந்தப்படாதவர்களுக்குச் சொந்தமானதென்று காணப்பட்டாலுங்கூட அந்தச்சொத்தில் எவ்வளவாவது அவர்களுக்குக் கிடைக்கும்படி தீர்ப்புசெய்யக்கூடாது. (ச-அ-வி.)

கஙி. இரண்டு மார்க்கங்களில் கட்சிக்காரர்களுக்கு இஷ்டமான எந்தமார்க்கத்தையாவது அவர்கள் அநுஷ்டிக்கலாமென்று சித்தாந்தங்களிற் கண்டெழுதுவது கோர்ட்டு சம்பிரதாயங்களுக்கு விரோதமாயிருக்கின்றது. வாதிக்குப் பிரதிவாதி ஜீவனம்சமாவது அல்லது குடும்பச்சொத்திற் பாகமாவது கொடுக்கவேண்டியதென்று தீர்ப்பிற் சொல்வதுதான் மேற்கண்ட நிஷேதத்துக்குட்பட்டது. (கஅஙo ஙல-நம்-கள-கஅருக ஙல-ப-ககக.)

கசூ. சாஸ்திர விஷயத்தைத்தவிர வியவகாரப் பத்திரிகைகளிற் சொல்லப்படாத வேறே யாதொரு விஷயத்தைச் சித்தாந்தத்திற் பேசக்கூடாது. (கஅருக ஙல-நம்-சச-ப-கஉஙி.)

கஎ. யாதொரு சொத்துக்கு வாதி ஸ்வான்காரன் என்பதைப் பற்றிப் பிரதிவாதியின் விவரப்பத்திரிகையில் ஆட்சேபிக்காமல் இருந்தால் அந்த விஷயத்தைப்பற்றிக் கோர்ட்டார் சித்தாந்தத்தில் ஆட்சேபிக்கக்கூடாது. (ஷை.)

கஅ. நியாயாதிபதிகள் அவர்களுடைய தீர்ப்புகளில் கட்சிக்காரர்களைத் தூஷிக்கக்கூடாது.

கக. ஒருவன் பொய்யான ஆதாரவையும் பொய்ச்சாட்சிகளையும் கற்பித்திருப்பதாக நிதரிசனமாயுல் அவனைக் கோர்ட்டார் கிரிமினல் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமேதவிர அவன் எப்போதும் பொய் ஆதாரவுகளையும் பொய்ச்சாட்சிகளையும் உண்டுபண்ணுகிறவனென்று தீர்ப்பில் தூஷிக்கக்கூடாது. (கஅருகஙல-நம்-கூஉ.)

உ0. தீர்ப்பின் ஆதாரங்களாயெல்லாங் கட்சிக்காரர்களுக்குத் தெரிவித்திருப்பதால் அந்த ஆதாரங்களைச் சித்தாந்தத்திற் பேசவேடியதில்லை யென்று சித்தாந்தத்தில் அந்த ஆதாரங்களைப் பேசாமல் விட்டுவிடுவது அசந்தர்ப்பம். (கஅருகஙல-நம்-ரு0.)

உக. தன்னுடைய மகளைப் பிரதிவாதி கலியாணஞ் செய்தபோது அவளுக்குச் சில பூஸ்திதிகள் தான் கொடுத்ததாகவும் அவள் அபுத்திரவதியாயிறந்துபோனதினால் அந்த ஸ்திதிகள் கிடைக்கவேண்டியதென்றும் வாதி வழக்கிட்டான். தன் பெண்சாதியின் சொத்துக்குத் தானே பாத்தியஸ்தனென்று பிரதிவாதி எதிர் கட்சி பேசினன். விவாதஸ்திதியில் வாதி பாதியும் பிரதிவாதி பாதியும் எடுத்துக்கொள்ளும்படி சீவில் ஜட்ஜ் தீர்மானித்தார். அந்தத் தீர்மானம் ராஜிநாமாவுக்குச் சமானமாயிருப்பதால் கட்சிக்காரர்களுடைய சம்மதம் இல்லாமல் சீவில் ஜட்ஜ் அப்படிப்பட்ட தீர்மானஞ் செய்தது சரியல்லவென்று சதர்க்கோர்ட்டாரால் அந்த வியாச்சியம் மறுவிசாரணைக்கனுப்பப்பட்டது. (கஅருஉஙல-நம்-உ0.)

உஉ. உபயவாதிகளும் ருசுப்படுத்தவேண்டிய விஷயங்களை ஒரு தீர்ப்பில் எழுதப்படாமலிருந்தால் அந்தத் தீர்ப்பு குறைவுள்ளதாம். (கஅருஉஙல-நம்-உஉ.)

உங. வியாச்சியந் தாக்கலானபிற்பாடு வாதிக்குப் பிரதிவாதி சிலதொகை கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தானென்கிற ஒரே காரணத்தினால் வாதிக்குப் பிரதிவாதி தொகை கொடுக்கும்படி தீர்மானிக்கக்கூடாது. (கஅருஉஙல-நம்-கஉ.)

உச. பஞ்சாயத்தாருடைய தீர்மானத்தை ஆதாரப்படுத்திக் கோர்ட்டார் தீர்ப்புசெய்கிறதாயிருந்தால் ஷை பஞ்சாயத்தாருடைய தீர்மானத்துக்குள்ள ஆதாரங்களைக் கோர்ட்டாருடைய தீர்ப்பிலும் பேசவேண்டும். (கஅருஙஎஅ-நம்-எ.)

உரு. ஒருவன் தனித்தனியே செயயவேண்டிய வியாச்சிய விஷயங்களை ஒரே வியாச்சியமாகச்செய்து அதைக் கோர்ட்டாருங் கிரமப்பிசகாய் அங்கீகரித்துத் தீர்ப்புசெய்தால் அந்தக் கிரமப்பிசகான தீர்ப்பின்மேல் அப்பீல் செய்யாத கட்சிக்காரர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அந்தத் தீர்ப்பு உறுதியுள்ளதுதான். (கஅருருஎஅ-நம்-கசஙூ.)

உசூ. அசல்தீர்ப்பில் அப்பீல்செய்யப்பட்ட பாகத்தை மாற்றி அப்பீல்செய்யப்படாத பாகத்தை உறுதிசெய்யப்பட்டதென்று ஒரு பிரின்சிப்பால் சதராமீனுடைய தீர்ப்பில் எழுதப்பட்டிருந்ததினால் அந்தத்தீர்ப்பு அசந்தர்ப்பமானதென்றும் தீர்ப்புகள் மிகவும் தெளிவாகவும் பரிஷ்காரமாகவும் எழுதப்படவேண்டுமென்றும் சதர்க் கோர்ட்டாரவர்களால் ஆக்ஞாபிக்கப்பட்டது. (கஅருஙஎஅ-நம்-கூஙூ.)

உஎ. தீர்ப்புகளில் பல ஆதாரவுகளைக்குறித்துப் பேசப்பட்டால் ஒவ்வொரு ஆதாரவினுடைய இலக்கம் முதலான அடையாளம் இன்னதென்று விவரிக்கவேண்டும். (கஅருகஎஅ-நம்-கக.)

உஅ. அசல்தீர்ப்பு உறுதிசெய்யப்பட்டது அல்லது மாற்றப்பட்டது என்று அப்பீல்த்தீர்ப்பில் விவரமாய்ச்சொல்லவேண்டியது கிரமமேதவிர அப்பீலை உறுதிப்படுத்தப்பட்டதென்று அப்பீல் தீர்ப்பில் எழுதக்கூடாது. (கஅருகஎஅ-நம்-சகூ.)

உக. அசல்தீர்ப்பில் பேசப்பட்ட முக்கியமான சகல முகாந்தரங்களையும் அப்பீல்க் கோர்ட்டார் பூர்ணமாயெடுத்துக்காட்டி அந்த முகாந்தரங்களின்மேல் அப்பீல்க் கோர்ட்டாருக்குள்ள சகல அபிப்பிராயங்களையும் அப்பீல்த் தீர்ப்பில் தெரியப்படுத்தவேண்டும். (கஅருகஎஅ-நம்-ஙகூ.)

ஙஐ. வியாச்சியத்துக்கு சம்பந்தமில்லாத ஒரு ஆதாரவின் உண்மையைப்பற்றித் தீர்ப்பில் சொல்லப்பட்டஅபூட்சேபனை அதியாகவும் அநுபயோகமாகவுமிருக்கிறது. (கஅருகூஎஅ-நம்-கஅசு-கஅகூ0 (இரு)-ப-ஙூசு.)

கூக. ஒருதரந் தீர்ந்துபோன விஷயத்தைப்பற்றி மறுபடியுஞ் செய்யப்பட்ட புநர்வியாச்சியத்துக்கு முந்தின தீர்ப்பு தடையாயிருக்கின்றது. (கஅருசுவ-நிம-கஉக.)

கூஉ. இறந்துபோன தன்னுடைய பந்துவின் ஸ்திதி கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டான். இறந்துபோனவன் வேறொரு பந்துவை ஸ்வீகாரஞ்செய்துகொண்டதாக ருஜுவானதில் வாதி வழக்கு தள்ளப்பட்டது. அந்த ஸ்வீகார புத்திரன் இறந்தபிற்பாடு ஸ ஸ்திதிகளைப்பற்றி மறுபடியும் வாதி வழக்கு செய்வதற்கு முந்தினதீர்ப்பு தடையல்லவென்று உத்தரவுசெய்யப்பட்டது. (கஅருசுவ-நம்-சுச.)

கூங. வாதி வழக்குக்குச் சாட்சியம் இல்லையென்கிற நிமித்தத்தினல் அந்தவழக்கு தள்ளப்பட்டிருந்தாலுங்கூட அந்தச் சொத்தைப்பற்றியே மறுபடியும் வாதி வழக்குச் செய்யக்கூடாது. (கஅருள வ-நம்-சஅ.)

கூச. ஒருவனுடைய கட்சிக்கு விரோதமான வாக்கியங்கள் அடங்கியிருக்கிற தீர்ப்பின்மேல் அந்தக் கட்சிக்காரன் அப்பீல் செய்யாவிட்டால் அந்த வாக்கியங்கள் எப்போதும் அவனுக்குப் பிரதிகூலமாகவேயிருக்கும். (கஅருசுவ-நம்-கூக.)

கூசு. ஒருதரந் தீர்ந்துபோன விஷயத்தைப்பற்றி மறுபடியும் வாதிகள் வியாச்சியஞ் செய்தார்கள். அவர்களில் முந்தின வியாச்சியத்தில் வாதிகளாயிருந்தவர்களைத் தள்ளி அந்த கும்பலில் வாதிகளாயிராத மற்றவர்களுக்குத் தகுந்த அதாரமிருந்ததால் அவர்கள் பட்சத்தில், உ-வது வியாச்சியத்தை அங்கீகரிக்கப்பட்டது. (கஅருள வ-நம்-உ.)

கூஎ. வியாச்சியத்தில் கேட்கப்பட்ட விஷயத்துக்குமேல் அதிகமாக ஒரு தீர்ப்பில் பேசப்பட்டிருந்தால் அவ்வளவுவரையில் அந்தத் தீர்ப்பை மேலான கோர்ட்டார் மாற்றிப்போடவேண்டும். (கஅருஅவ-நம்-கூஎ.)

கூஏ. கலெக்ட்டர் முதலானவர்கள்பேரில் ஒருவழற்செய்யப்பட்ட வழக்கில் கலெக்ட்டரைப் பிரதிவாதியாக ஏற்றுக்கொள்ளாமல் கோர்ட்டார் நீக்கியிருந்தால் பிற்பாடு அந்த வியாச்சியவிஷயத்தைப்பற்றியே கவர்ன்மென்றார் வியாச்சியஞ்செய்வதற்கு முந்தின தீர்ப்பு தடையாகமாட்டாது. (கஅருஅவ-நம்-உ0.)

கூஅ. மூன்றின வியாச்சியத்தில் ஒருவன் கட்சிக்காரனுபிராவிட்டால் அவனுடைய குடும்பத்தாரிற் சிலர் மூன்றின வியாச்சியத்தில் கட்சிக்காரர்களாயிருந்தாலுங்கூட அவன் அந்தச் சொத்தைப்பற்றி வேறே வியாச்சியஞ்செய்வதற்குத் தடையில்லை. (கஅஉக ஹ)-நம்-கூ.)

கூக. வாதி பிரியாதிற்கண்ட சங்கதிகளின் பிரகாரம் அவனுடைய வழக்கைப்பற்றிக் கோர்ட்டார் சித்தாந்தஞ்செய்யவேண்டும். (கஅருஅ ஹ-நம்-கஉ.)

சo. எழுத்துமூலமான சாட்சியம் இல்லாமல் ஒருவன் தீர்ப்புக்காகத் தொகை செலுத்தியிருப்பதாகச்சொல்லுங் கட்சியைக் கோர்ட்டார் அங்கிகரிக்கக்கூடாது. (கஅருகூ-நம்-கஙசு.)

சக. ஒரு வியாச்சியத்தில் ருஜுவாயிருக்கிற சங்கதிகளைக்கொண்டு ஒரு காரியம் நிஜமா பொய்யா என்பதைக் கோர்ட்டார் நிச்சயிக்கவேண்டுமே அல்லாது ருஜுவாகாத சங்கதிகளைக் கோர்ட்டார் அநுமானித்துக்கொண்டு அந்த அநுமானப்பிரகாரந் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅசகூ ஹ-நம்-உச.)

சஉ. சித்தாந்தத்தில் பேசப்பட்ட முகாந்தரங்களைத் தீர்ப்பில் பேசக்கூடாது. கஅருகூ ஹ) அ-வது ஆக்ட்டு, சஅசகூ-வது பிரிவிலும் ஙகூo-வது பிரிவிலுஞ் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகளையும் செலவுகளின் விபரங்களையும் தீர்ப்பில் எழுதவேண்டும். (ச-பு-கஅசூo ஹ டிசம்பர்மீ கூஉ.)

சங. கையெழுத்து மூத்தினை வைக்கப்படுகிற தேதியைத் தீர்ப்பில் எழுதவேண்டியதில்லை. என்றைத்தினஞ் சித்தாந்தம் அறிவிக்கப்படுகிறதோ அந்தத்தேதியைமட்டுந் தீர்ப்பில் எழுதவேண்டும். (ச-பு-கஅசூo ஹ டிசம்பர்மீ கூஉ.)

சச. சித்தாந்தம் அறிவிக்கப்பட்ட தேதிமுதல், நு-தினங்களுக்குள் தீர்ப்பும் சித்தாந்தத்தின் அசற்பிரதியும் மொழிபெயர்ப்பும் பூர்ணமாகவேண்டும். (ச-அ-வி.)

சநு. வாதி தனக்குக் கொடுக்கவேண்டிய தொகையிலல் வாதியின் கடன் தீர்ந்துபோய்விட்டதாகப் பிரதிவாதி எதிர்கட்சி சொல்லி அதைக் கோர்ட்டாரும் ஒப்புக்கொண்டால் வாதியின் வழக்கைத் தள்ளிவிடவேண்டும். (கஅருஉ ஹ)-நம்-கூசூ.)

சசூ. ஒரு வியாச்சியத்தில் வாதி தனக்குக் கடன்கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதி எதிர்கட்சிசொல்லி அந்த எதிர்கட்சி நுசுவாகாமற்போனல் பிற்பாடு அந்தத் தொகையைப்பற்றிப் பிரதிவாதி செய்யும் வழக்கைக் கோர்ட்டார் தள்ளிவிடவேண்டும். (கஅருசஎஅ-நம்-ககக.)

சஎ. எந்தக்காலத்தில் கணக்குத் தீர்ந்ததாக வாதி சொல்லுகிறானே அந்தக்காலத்திற்குப்பின்பு மறுபடியும் கணக்குத் தீர்த்துக்கொண்டதில் வாதி தனக்குத் தொகைகொடுக்கும்படி பாக்கியானதாகப் பிரதிவாதி கட்சிபேசியுல் அது உண்மையா அல்லவாவென்பதைக் கோர்ட்டார் நிச்சயிக்கவேண்டும். (கஅருஙஎஅ-நம்-அ.)

சஅ. ஒரு ராஜிநாமாவைக் கோர்ட்டார் அங்கிகரித்தால் அந்த ராஜிநாமாவின் வாசகப்படி தீர்ப்புசெய்யவேண்டுமே அல்லாது அதற்கு விரோதமாய்த் தீர்ப்புச்செய்யக்கூடாது. (ச-பு-கஅஙஎஅஎஅமேஅடீகஎ.)

சஙூ. விவாதநிலம் தனக்குத் தானமாய்க் கிடைத்ததாக வாதி சொல்லி அந்தநிலம் வாதி தர்மகர்த்தா வேலைபார்க்கிற கோவிலுக்குத் தானஞ்செய்யப்பட்டதாக நுஜூவாலுல் வாதி வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும். (கஅசஅஎஅ-நம்-சஙூ.)

ஙூ. எந்தக்காலத்தின் வாடகை கிடைக்கவேண்டுமென்று வாதி தொடருகிறானே அந்தக்காலமுழுவதும் வாதியின் வீட்டிற் பிரதிவாதி குடியிருந்தானு இல்லையா வென்பதைப்பற்றி நுஜூ விளங்காமல் அதற்குமுன், உ-வியாச்சியங்களில் வாதிக்குப் பிரதிவாதி வாடகைகொடுக்கிறதென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கிற ஆதாரத்தைக்கொண்டுமட்டுந் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅஙூஎஅ-நம்-ககக.)

ஙஎ. ஒருவியாச்சியத்தின் வியவகாரப்பத்திரிகைகள் முடிந்து நுஜூவாகவேண்டிய விஷயங்களாகக் கோர்ட்டார் குறித்தபிற்பாடு வாதியுந் தானும் ராஜியாய்ப்போய் அவன் தனக்கு ஸர்வ வில்லங்கசுத்தியாய்ப் பற்றுச்சீட்டு கொடுத்துவிட்டதாய்ப் பிரதிவாதிசொல்லி அந்தப்பற்றுச்சீட்டையுங் கோர்ட்டில் தாக்கல்செய்தால் அந்தப் பற்றுச்சீட்டைப்பற்றிக் கோர்ட்டார் அந்த வியாச்சியத்தில் யோசித்து அதை ஆதாரமாய்க்காட்டித் தீர்ப்புசெய்யக்கூடாது. வியவகாரப்பத்திரிகையிற் கண்ட சங்கதிகளைமட்டும் விசாரித்துத் தீர்ப்

புச்செய்யவேண்டும். பிரதிவாதிக்கு இஷ்டமிருந்தால் அவன் ஷெ பற்றுச்சீட்டைப்பற்றி வேறே வியாச்சியஞ் செய்துகொள்ளலாம். (கஅருகஙுல-நம்-சுக.)

நுஉ. சூட்சுமவிசாரணையில் செய்யப்பட்ட உத்தரவைக் கிரம வியாச்சியத்தில் ஆதாரமாய்க் காட்டித் தீர்ப்பு செய்யக்கூடாது. (கஅருகஙுல-நம்-எஉ.)

நுசு. வாதி பிராத்திக்காத விஷயங்கள் அவனுக்குக் கிடைக் கும்படி தீர்ப்புசெய்யக்கூடாது. வியாச்சியத்தில் கட்சிக்காரனு பிராதவனுடைய பாத்தியங்களைப்பற்றியும் கோர்ட்டார் தீர்மானஞ் செய்யக்கூடாது. (கஅகஉஙுல-நம்-கக-கஅகசுஙுல-நம்-சுர-கஅருக ஙுல-நம்-நுசு-கஅருஉஙுல-நம்-நுஅ.)

நுசு. வருமானத்துக்காகமட்டுஞ் செய்யப்பட்ட வியாச்சியத்தில் நிலத்தையும் விடும்படி தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅகசுஙுல-நம்-சுர.)

நுநு. ஒருவன் கட்சிக்காரனுயிராத வியாச்சியத்தில் செய்யப் பட்ட தீர்ப்பினுல் அவனுக்கு யாதொருநஷ்டம் உண்டாகிறதாயி ருந்தால் அந்தத்தீர்ப்பை மாற்றவேண்டியதற்காக அவன் வியாச் சியங்கொண்டுவரலாம். (கஅருசுஙுல-ப-உசு.)

நுசு. வாதி தன்வசத்தில் இருக்கிறதாக ஒப்புக்கொண்ட .ஆதர வை அவன் ஆஜர்செய்யத் தப்பிப்போனதைக்கொண்டு அவனுக்கு விரோதமாய் தீர்ப்புசெய்யக்கூடாது. ஆனுல் அந்த ஆதரவுத் தாக்கல்செய்யவேண்டியது வியாச்சியத்திற்கு முக்கியமாயிருந்தால் அப்போது வாதிக்கு விரோதமாய்த் தீர்ப்புசெய்யலாம். (கஅருசு ஙுல-ப-சு.)

நுள. தீர்ப்பு நிறைவேற்றவேண்டிய, விவரங்களையும் தீர்ப்பு நிறைவேறுங்காலத்தில் ஆட்சேபம்வந்தால் அந்த ஆட்சேபங்களை நிவர்த்திசெய்யும்படியான மார்க்கங்களையும் கோர்ட்டார் சித்தாந் தத்தில் பேசக்கூடாது. (கஅசுoஙுல-நம்-சுசு-சு - கஅசுகஙுல-ப-சுஙு.)

நுஅ. வாதி ஸ்வத்துக்காக வியாச்சியஞ்செய்தால் அந்தச் சொத் துக்குப்பதிலாய் அதின்கிரயம் அவனுக்குக் கிடைக்கும்படி தீர்ப்பு செய்யக்கூடாது. (ஷ.)

நகூ. பூர்வீகநிலங் கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியஞ் செய்து அதற்குந்தகுசாரமாய் ருஜுக்கொடுக்க அவன் தப்பிப் போனல் கலெக்ட்டருண்டைய கவுனின்மேல் அந்நிலம் அவனுக் குக் கிடைத்ததாக ஸ்தாபித்துக் கோர்ட்டார் அவன்பட்சந் தீர்ப்பு செய்யக்கூடாது. (கஅநுகூஙப-நம்-கஉசூ-ப-உசூள.)

சூ0. வாதிபட்சத்தில் யாதொருசாட்சியமும் இல்லாவிட்டால் அவனுடைய வழக்கைத் தள்ளவேண்டும். பிரதிவாதி விவாதநிலத் தின் பட்டாவைத் தாக்கல்செய்யாமற்போனதைக்கொண்டு அந்த நிலம் வாதிக்குச் சொந்தமென்கிற உத்தேசப்பிரமாணத்தின்மேல் வாதிபட்சந் தீர்ப்புசெய்யக்கூடாது. (ஷ.)

சூக. தங்களுக்கு ஸ்வந்தமான பூர்வீகநிலங் கிடைக்கவேண்டு மென்று வாதிகள் வியாச்சியஞ்செய்தால் அந்நிலம் எந்தக்கோவி லுக்குச் சொந்தமோ அந்தக்கோவிலுக்கு வாதிகள் தர்மகர்த்தர் கள் என்கிற ஹுல்பதத்தின்மேல் அவர்கள்பட்சந் தீர்ப்புசெய்யக் கூடாது. (கஅசஅஙப-நம்-சஙூ.)

சூஉ. நிலம் வீடுமுதலான பூஸ்திதிகளாய்ப்படற்கியும் அவைகளின் வருமானத்தைப்படியும் வாதி வியாச்சித்தால்மட்டும் பிரியாதுக் குப் பிந்தினவருமானமும் வாதி பெற்றுக்கொள்ளும்படி தீர்ப்புசெ ய்யலாமே அல்லாமல் வருமானத்துக்காகமட்டுஞ் செய்யப்படுகிற வழக்கில் பிரியாதுக்குப் பிந்தினவருமானங் கொடுக்கும்படி தீர்மா னிக்கக்கூடாது. வீட்டின் வாடகைக்காகமட்டுஞ் செய்யப்படுகிற வழக்கில் வாதியின் உத்தரவுப்படி தன்னுடைய சொந்தப்பணத் தைக்கொண்டு வே வீட்டைத்தான் பழுதுபார்த்துப் பரிஷ்காரப் படுத்தினதிலும் வீட்டின் வாடகை தீர்ந்துபோனதாகப் பிரதிவாதி எதிர்கட்சிபேசி அந்தப்படி நிரூபணஞ்செய்தால் வாதியின் வழக் கைத் தள்ளவேண்டுமே அல்லாமல் பிரியாதுக்குப்பிந்தின வாட கை வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கும்படி தீர்மானிக்கக்கூடாது. (கஅநுஉஙப-நம்-சூ.)

சூசு. உபயவாதிகளும் வியாச்சியம் ஜூடித் தீர்ப்பானபிற்பாடு அந்தத் தீர்ப்பைப்பற்றி உபயவாதிகளும் அந்தரங்கத்தில் ஏற்பாடு செய்துகொண்டால்மட்டும் செல்லாதேதவிர அவர்களுக்குள் வே றே பிரத்தியேகமான பற்றுவரவுகடந்து அதில் பாக்கியானதொ கைக்கு அவர்கள் ஒருவர்பேரில் ஒருவர் வியாச்சியஞ்செய்வதற்கு

ஷை தீர்ப்பினல் யாதொரு ஆடங்கமும் இலலை. (கஅருஉவஅ)-நம்-ங-உ.)

சுச. ரு-வது பிரதிவாதிக்கு, க-உ-பிரதிவாதிகள் கொடுக்கவேண்டியதீர்ப்பின் தொகையைத் தீர்க்கவேண்டியதற்காக, க-உ-பிரதிவாதிகள் அவர்களுடைய நிலத்தைத் தனக்குக் கிரயஞ்செய்ததாகவும் அந்தநிலங் கிடைக்கவேண்டுமென்றும் வாதி வழக்கிட்டான். அந்த வழக்கு ரு-வது பிரதிவாதியால் ஆட்சேபிக்கப்பட்டது. ரு-வது பிரதிவாதிக்குப் பாத்தியமான நிலத்தை வாதி கிரயம்வாங்கினது அநுசிதமென்றும் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தாமல் ரு-வது பிரதிவாதியின் தீர்ப்பின் தொகையைப்பற்றி அந்தரங்கத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்ட ஏற்பாடு செல்லாதென்றும் வாதிவழக்கு அநுங்கீகாணஞ்செய்யப்பட்டது. (கஅருசுவஅ-நம்-கசரு.)

சுரு. பிரியாதிற்கண்ட சொத்துகளின் விவரணத்தைப்பற்றிப் பிரதிவாதி கண்டோக்தமாய் ஆட்சேபிக்காவிட்டால் அந்தச்சொத்துக்கள் பிரதிவாதிவசத்திலிருப்பதாக நிதானிக்கவேண்டும். வாதிபட்சஞ் செய்யப்பட்டதீர்ப்பில் அந்தச்சொத்துக்களை நீக்கக்கூடாது. (கஅசுஅவஅ-நம்-கசு-ப-ககக.)

சுசு. பிரியாதிற்கண்ட மாடுகள் கன்வசத்திலிருந்து இறந்துபோனதாகப் பிரதிவாதிசொன்னல் அந்தமாடுகளின் கிரயம் வாதிக்குக் கிடைக்கும்படி தீர்மானிக்கவேண்டும். (ஷை.)

சுஎ. ஒருவியாச்சியத்தில் சாராம்ச விமரிசையின்மேல் செய்யப்பட்ட தீர்ப்பில் வாதியின் வழக்கைத்தள்ளி அந்த விஷயத்தைப்பற்றியே புநர்வியாஜ்யம் செய்யும்படி வாதிக்கு உத்தரவுகொடுக்கப்பட்டிருந்தாலுங்கூட அந்தப் புநர்வியாச்சியம் எந்தக்கோர்ட்டில் தாக்கலாகிறதோ அந்தக்கோர்ட்டார் அந்த வியாச்சியம் முந்தின வியாச்சியத்திலல் தடைபட்டதா அல்லவாவென்பதை யோசிக்கவேண்டும். (கஅசுஅவஅ-நம்-ககங-ப-ககரு.)

சுஅ. நிலமும் வருமானமும் வாதி பெற்றுக்கொள்ளும்படி அசல்தீர்ப்பு செய்யப்பட்டு அப்பீல்தீர்ப்பில் வருமானவிஷயமட்டும் வேறுபடுத்தப்பட்டு நிலத்தைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் இல்லாவிட்டால் நிலம் சம்பந்தப்பட்டவரையில் அசல்தீர்ப்பு அப்பீல்தீர்ப்பினல் உறுதிப்படுத்தப்பட்டதாக நிச்சயிக்கவேண்டும். (கஅசுஅவஅ-நம்-கஅசுப-ககஎ)

சுகூ. வாதிபட்சந் தீர்ப்பானபின்பு பிரதிவாதிகள் புநர்விமரிசைக் காக மனுக்கொடுத்துப் பிற்பாடு தாங்களும் வாதியும் ராஜியாய்ப் போய்விட்டதாகச்சொல்லி ஷ புநர்விமரிசை மனுவைப் பிரதி வாதிகளே நீக்கிக்கொண்டிருப்பார்களானால் அதற்குப் பிற்பாடு அவர்களுடைய செய்கையை அவர்களே ஆட்சேபித்து மறுபடி யும் புநர்விமரிசைசெய்யும்படி அவர்கள் வேறே மனுக்கொடுத்தால் அதைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (கஅசுக வரு-நம்-சுக-ப-கநச.)

எ0. ஸ்வீகாரபாத்தியத்தினல் யாதொரு ஸ்திதி தனக்குச்சொந் தமென்று ஒருவன் கட்சிபேசி அந்தப்படி மெய்ப்பிக்கத்தப்பிப் போனல் அந்த ஸ்திதி அவனுக்குத் தாநமாய்க்கிடைத்ததாக ஸ்தா பித்து அவன்பட்சங் கோர்ட்டார் தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅசு0 வரு-நம்-உசுச-கஅசுக வரு-ப-சசு.)

அங்கீகாரம்-சு.....	சாட்சியம்-நக-நச-நஅ-எச...
அநுபவம்-சு-அ.....	ஜீவநாம்சம்-க0.....
அங்கிய ராஜாங்கத்தீர்ப்பு-சுர.....	ஸ்வாமிபோகம்-உ.....
அப்பீல்-கள-சுசு-சுசு-சச-நச.	பாகம்-நஉ.....
எஸ்டேட் ஓடல்-க.....	பாடபர்-ள.....
ஒற்றி-சுசு.....	பிரமாணம்-ச.....
கட்சி-ச.....	புநர்விமரிசை-க.....
கடன்பத்திரம்-கரு.....	மிராசுபதிவு-சு.....
கூட்டாளி-உ.....	மோசம்-ச .....
சட்டம்-க.....	ராஜிநாமா-நி-உச..... .....

இலைகளைப்பார்க்க.

சீவில் ஜட்ஜ்.

சித்தாந்தமும் தீர்ப்பும்-உ-உக...	ஜீவநாம்சம்-சுசு.....
	வக்கீல்-சுக-சுஉ.....

இலைகளைப்பார்க்க.

• சுரோத்திரியம்.

க. சுரோத்திரியநிலத்தைப் போக்கியம்வாங்கி அநுபவிக்கிறவ னுக்கு ஸ்வான்காரன் போக்கியத்தொகையைக் கொடுத்து அந்த

நிலத்தை மீட்கவேண்டுமேதவிர அந்தத்தொகை செல்லாதவனையில் வே போக்கியக்காரனை அப்புறப்படுத்தக்கூடாது. சுரோத்திரிய நிலத்தின் ஒற்றிவிஷயத்துக்கு கஅஙக ஹே சு-வது சட்டமும் கஅஙஅ ஹய உங-வது ஆக்ட்டும் உபயோகம் அல்ல. (கஅருகூ ஹய-நம்-சகூ.)

சூத்திரன்.

ஸ்வீகாரம்-ள-கஉ-கரு ..... | பாத்தியம்-சூ-கஉ-ஙo .....
பராதீனம்-அ..... | விவாஹம்-க-உ..... .....

இவைகளைப்பார்க்க.

சூப்பிரீம்கோர்ட்டு.

க. சூப்பிரீம்கோர்ட்டில் புரோபேட்டென்னும் யோக்கியதாபத்திரிகை பெற்றுக்கொண்டவன் கஅசக ஹே உo-வது ஆக்ட்டு கச-வது பிரிவுப்படி வெளிப்பிராந்தங்களில் கடன்களை வசூல்செய்ய மட்டும் அதிகாரியேதவிர வெளிப்பிரதேசங்களில் பூஸ்திதியை விக்கிரயஞ்செய்ய அவனுக்கு அதிகாரம் இல்லை. (கஅருகூ ஹய-நம்-சக)

அதிகாரவரம்பு-ககூ..... | சாட்சியம்-சச .....

இவைகளோட்டபார்க்க.

செலவு.

க. வியாச்சியபதங்களை யோசித்து செலவுகொடுக்கவேண்டிய கட்சிக்காரன் இன்னன் என்று கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டுமே அல்லாமல் கட்சிக்காரர்களுடைய அந்தஸ்துப்பிரகாரம் தீர்மானிக்கக்கூடாது. ஒருவன் மற்றொருவனைப்பார்க்கிலும் அதிக ஆஸ்திவந்தனாகவும் செலவுகொடுக்க சக்தி உள்ளவனாகவும் இருக்கிறனென்கிற ஆதாரத்தினால் அவன் செலவுகொடுக்கும்படி தீர்மானிக்கக்கூடாது. (கஅசச ஹய-நம்-ககூக.)

உ. கட்சிக்காரர்கள் அவர்களுடைய அந்தரங்கமான காரியஸ்தர்களுக்குக் கொடுத்தபணத்தையும் விவரப்பத்திரிகைகள் தயார்செய்வதில் நேரிட்ட செலவுகளையும் வியாச்சியச்செலவுகளாகத் தீர்ப்பில் எழுதக்கூடாது. (ச-பு-கஅருகூ ஹய-ஏப்பிரல்மீ கஉஉ, கஅருகூள ஹய நவம்பர்மீ உளஉ..)

ஈட. சதர்க்கோர்ட்டில் தீர்மானிக்கப்பட்ட சகல வியாச்சியங்களிலும் மனுவிஷயங்களிலும் நேரிடுகிற செலவுகளுடன் அச்சுக்கூலியையுஞ் சேர்க்கவேண்டும்.

ச. துர்வியாச்சியத்துக்கு ஆதாரமான கட்சிக்காரர்களே செலவுகளைக்கொடுக்கும்படி தீர்மானிக்கலாம். (கஅஙஈசூ(ஙரு)-நம்-கக.)

ரு. வியாச்சியத்தில் அக்கிரமமாய் ஒருவன் பிரதிவாதியாய்ச் சேர்க்கப்பட்டால் அவன் செலவுகளைக்கொடுக்கும்படி தீர்மானிக்கக்கூடாது. (கஅருகஙரு-ப-உசo.)

சூ. வாதிவழக்கு தள்ளப்பட்டால் செலவுகளைப் பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்மானிக்கக்கூடாது. (கஅருருஙரு-ப-எஈ.)

எ. தீர்ப்பின் தொகைக்குத்தகுந்த செலவுகளைப் பிரதிவாதியும் தீர்ப்பில் தள்ளுபடியான தொகைக்குச் சரியான செலவுகளை வாதியுங் கொடுக்கும்படி சாதாரணமாய்த் தீர்ப்புசெய்யவேண்டும். (கஅருo ஙரு-ப-சூக-கஅருஎஙரு-ப-உகஎ.)

அ. வாதிக்குப்பிரதிவாதி பாகுதியின் பாக்கி கொடுக்கும்படி தீர்ப்பாகிறவிஷயத்தில் அந்த வியாச்சியத்தில் நேரிட்ட சகலசெலவுகளையும் வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கும்படி தீர்ப்புசெய்யப்படவேண்டும். (கஅருஎஙரு-நம்-சஅ-ப-அசூ.)

கூ. சமாதானமாய் ஒழிந்துபோகிற வியாச்சியங்களின் வக்கீல் பீசுகளைப்பற்றிக் கட்சிக்காரர்கள் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தால் அந்த உடன்படிக்கைப்பிரகாரம் பீசு ஏற்படுத்தப்படவேண்டும். அவர்கள் உடன்படிக்கை செய்துகொள்ளாமல் இருந்தால் மறுவிசாரணைக்காக அனுப்பப்படுகிற வியாச்சியங்களில் பீசு ஏற்படுத்துகிறதுபோல் மேற்கண்ட விஷயத்திலும் பீசு ஏற்படுத்தவேண்டும். (ச-பு-கஅசூo ஙரு மார்ச்சுபீ கூடை.)

கo. ஒவ்வொரு கட்சிக்காரனும் அவன் அவனுடைய செலவுகளை அவனே கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டால் தீர்ப்பில் செலவு விவரத்தைக் கண்டெழுதவேண்டியதில்லை. (ச-அ-வி.)

கக. யாதொரு வியாச்சியம் மறுவிசாரணைக்கனுப்பப்படும்போது அப்பீல்க்கோர்ட்டில் நேரிட்டசெலவுகளை மறுவிசாரணை உத்தரவிற் கண்டெழுதவேண்டும். அந்தச் செலவுகளை அபஜெயமாய்ப்போகிற கட்சிக்காரன் கொடுக்கும்படி கீழ்க்கோர்ட்டாருடைய மறுவிசாரணைத் தீர்ப்பில் சேர்க்கப்படவேண்டும். (ஷ.)

கஉ. ஒவ்வொரு கட்சிக்காரனும் ஒரு வக்கீலையாவது அல்லது பலவக்கீல்களையாவது நியமித்துக்கொள்ளலாம். ஒரு வியாச்சியத்தில் பல வாதிகளாவது பல பிரதிவாதிகளாவது இருந்தால் அவர்கள் ஒரு வக்கீலையாவது அல்லது பல வக்கீல்களையாவது நியமித்துக்கொள்ளலாம். ஆனல் ஜெயிக்காத கட்சிக்காரன் அவனுடைய ஒவ்வொரு எதிர்கட்சிக்காரனுக்காகவும் ஒவ்வொரு வக்கீல் பீசைமாத்திரம் கொடுக்கும்படி பாத்தியப்பட்டிருக்கிறன். (ச-ட-க அதி ஐஐ ஒஐல எப் பிரல்மீ அடை.)

கஊ. ஒரு வியாச்சியத்தில் ஒரு பட்சத்தில் பல கட்சிக்காரர்கள் இருந்து அவர்களில் ஒவ்வொருவனும் தனித்தனியே வக்கீல்களை வைத்துக்கொள்ளுகிறபட்சத்தில் அவர்களில் ஒவ்வொருவனுடைய கட்சியும் ஒன்றுக்கொன்று பிரதமாயிருந்தாலுமட்டும் அவர்களால் நியமித்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு வக்கீலினுடைய பீசையும் ஜயஹீகணப்படுகிற எதிர்கட்சிக்காரன் கொடுக்கவேண்டும். அவர்களுடையகட்சி அபிதமாயிருந்தால் ஒரு வக்கீலினுடைய பீசை மட்டும் அவர்களுடைய எதிரி கொடுக்கப் பாத்தியப்பட்டிருக்கிறன். (ஷை.)

கச. அப்பீல் மிமோராண்ட்டத்தின் அச்சுக்காகிதத்திற்பட்ட எந்தத் தொகையின்மேல் நிசசயிக்கப்படுகிறதோ அந்தத்தொகையின் மேல் வக்கீல்பீசும் ஏற்பாடுசெய்யவேண்டும். (ச-ட-க அஐ.கூ ஹரல ஸவம்பர்மீ நிஎ.)

கஎ. வக்கீல்பீசு ஏற்பாடுசெய்கிறதில் சங்கடம் உண்டாயிருக்கிறதென்கிற நிமித்தியத்தினல் வக்கீல்பீசு முழுமையும் தள்ளிப் போடக்கூடாது. (கஅருசுஹரல-நம்-கஊ-ட-கூஊ.)

கசு. வக்கீலுங் கட்சிக்காரனும் ரகசியத்தில் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி வக்கிலுக்குக் கிடைக்கவேண்டிய பீசுத்தொகையைப்பற்றி வக்கீல் கிரமவியாச்சியஞ் செய்யவேண்டும. அந்தத் தொகையை சூக்ஷமவிசாரணையின்மேல் வாங்கிக்கொடுக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரம் இல்லை. (ச-ட-க அசகூ ஹரல-நவம்பர்மீ ககூஎ.)

களு. ஒரு பாப்பர் வியாச்சியஞ் சமாதானமாய் முடிந்துபோனல் பாப்பர் வாதியின் வக்கீல்பீசைபபற்றிக் கிரமவியாச்சியஞ் செய்ய வேண்டியதில்லை. அந்த வக்கீலின் பிரயாசைக்குத் தகுந்த தொகையைக் கோர்ட்டார் நிஷ்கரிஷைசெய்து அதை வழக்கமான கட்டளை

மூலமாய் வசூல் செய்துகொடுக்கலாம். (கஅருஉஹூப-நம்-கஉ-ப-எசு.)

கஅ. சாராம்சத்தின்மேல் தீர்மானஞ்செய்யப்பட்ட கிரமமான வழக்குக்குள்ள பீசில் சுல்க-விநிதம் மறுவிசாரணைக்கனுப்பப்பட்டவியாச்சியத்தில் வக்கீல்பீசு எற்படுத்தப்படவேண்டும். (சட்-கஅசுஐஹூப மார்ச்சுபீ கூஉ.)

கக. டிலவுக்குமாய் நிலம் அபகரிக்கப்பட்டதைப்பற்றி, கஅஉஹூப-நு-வது சட்டப்பிரகாரம் கட்சிக்காரர்கள் கலெக்டர் இடத்திலாவது டிரியாது செய்யலாம். அல்லது கோர்ட்டுகளிலாவது கிரமவியாச்சியஞ்செய்யலாம். ஷ சட்டப்படி கலெக்டர் இடத்திற் பிரியாதுசெய்யாமல் கோர்ட்டில் வியாச்சியஞ்செய்தார்கள் என்கிற நிமித்தியத்தினல் வாதிகள் வியாச்சியச்செலவுகளை இழந்துபோகும் படி. தீர்மானிக்கக்கூடாது. (கஅருஎஹூப-நம்-கூஉ-சஅ.)

உ-ப. அவசரம் இன்றி ஒருவன் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டால் அவன் மற்றப் பிரதிவாதிகளோடு சேராமல் தனியே எதிர்வழக்காடினலுங்கூட அவனுடைய செலவுகளை வாதியால் அவனுக்குக் கிடைக்கவேண்டும். (கஅருஅஹூப-ப-சுச.)

உக. வாதி வழக்கு தள்ளப்பட்டால் அந்த வாதி பிரதிவாதியின் செலவுகளைக் கொடுக்கவேண்டும். (கஅருகஹூப-நம்-கசசு-கஅசுஐஹூப-ப-உரு.)

உஉ. பிரதிவாதிகளிடத்தில் டோக்கியம் வைக்கப்பட்ட நிலங்களைக்கவேண்டியதற்காக வியாச்சியஞ்செய்த வாதி டோக்கியத் தொகையைக் குறைத்துப்பேசிப் பிரதிவாதிகள் அதைப்பற்றி ஆட்சேபிக்கும்படி. சம்பவித்ததினல் வாதிபட்சம் தீர்ப்பானபோதிலும் அவனே செலவுகளைக் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருஙஹூப-நம்-கஅ உரு-உசு.)

உங. வியாச்சியத்தில் ஜெயரஹிதன் ஆகிற கட்சிக்காரன் செலவுகளைக் கொடுக்கவேண்டுமென்பது பொது விதியாயிருக்கின்றது. (கஅருஙஹூப-நம்-ககக.)

உச. ஒருவன் பெற்றுக்கொண்ட முந்தின தீர்ப்பை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்வதினல் அவனுடைய மனோரதம் பூரணம் ஆகும்படியாயிருக்க அவன் விருதாவாய் வேறொரு வியாச்சியஞ் செய்ததினல் அவன் பட்சம் தீர்ப்பானபோதிலும் செலவுகளை அவன்

இழந்துபோகும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருஅஉல-நம்-உக-எசூ.)

உரு. அவசரம் இல்லாமல் அப்பீல்செய்கிறவன் செலவுகளை இழந்துபோகவேண்டும். (கஅருஅஉல-நம்-சூஉ.)

உசூ. குடும்பஸ்திதியில் வாதிக்கு-சூ-ல்-ஒருபங்குமட்டும் பாகங் கிடைக்கவேண்டியது ஞாயமாயிருக்க அவன் சமபாகங் கிடைக்க வேண்டுமென்று தொடர்ந்து அதைப்பற்றிப் பிரதிவாதிகள் ஆட்சே பிக்கும்படி நேரிட்டதால்-சூ-ல்-க-க்கு வாதிபட்சந் தீர்ப்பானபோ திலும் வியாச்சியத்தின் செலவுகளையெல்லாம் வாதியே கொடுக்கும் படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருகூஉ-நம்-ருகூ-கஅசூ0உல-ப-ருசு.)

உஎ. அப்பீல்க்கோர்ட்டார் வாதிபட்சந் தீர்ப்புசெய்தபோதிலும் வாதிக்குச் செலவுகள் கிடைக்கும்படியாவது அல்லது செலவுகளை அவன் இழந்துபோகும்படியாவது தீர்ப்புசெய்வது அப்பீல்க்கோர் ட்டாருடைய யுக்தமானதால் அந்தச் செலவுகளின் விஷயத்தைப் பற்றி சதர்க்கோர்ட்டார் விசேஷ அப்பீல் அங்கீகரிக்கக்கூடாது. (கஅருகூஉல-நம்-களள-கஅசூ0உல-ப-ககள.)

உஅ. ஒரு பிரதிவாதி அவனுடைய செலவைக்கொடுக்கும்படி தீர் மானிக்கப்பட்டு அந்தத் தீர்ப்பின்மேல் அவன் அப்பீல்செய்யத் தப் பிப்போனால் வேறொரு பிரதிவாதியினால் செய்யப்பட்ட அப்பீலில் அப்பீல்செய்யாத ஷை பிரதிவாதியின் செலவை வாதி கொடுக்கும் படி அப்பீல்க்கோர்ட்டார் தீர்மானிக்கக்கூடாது. (கஅருகூஉல-நம்-கஙக-ப-உசூகூ.)

ஒற்றி-சக.....	பாப்பர்-அ-க0.....
தீர்ப்பு நிறைவேற்றல்-க0.....	புகர்விமர்சை-ந.....

இனைகளைப்பார்க்க.

ஜப்தி.

க. பிரதிவாதி கொடுக்கவேண்டிய தீர்ப்பின் தொகைக்காகக் கலெக்ட்டர்முதலான அதிகாரிகள் வசத்தில் இருந்த பிரதிவாதிக் குச் சொந்தமான பணத்தை ஜப்திமூலமாகக் கோர்ட்டார் தடை செய்தபிற்பாடு அந்தப்பணத்தைப் பிரதிவாதி வேறே யாருக்காவ

து கொடுத்தால் செல்லாது. அந்தப்பணம் வே தீர்ப்பின் தொகைக் கே பாத்தியப்படவேண்டும். (கஅசுo வது)-நம்-ககச-ப-கருஅ.)

உ. யாதொருசொத்து கிரமப்பிசகாய் ஜப்திசெய்யப்பட்டதினல் உண்டான நஷ்டத்தைப்பற்றி யாதொருவன் வியாச்சியஞ்செய்யலாம். (கஅஉச வது)-நம்-கஉ.)

ஊ. ஒரு தீர்ப்பின்தொகையைக் கொடுக்கவேண்டியவன் அந்தத்தீர்ப்புக்காக ஜப்திசெய்யப்படாத சொத்தை அவன் யாருக்காவது கிரயஞ்செய்யலாம். அதற்குப்பிற்பாடு வே சொத்து ஜப்தியானதைக்கொண்டு வே கிரயத்துக்குப் பங்கம் உண்டாகமாட்டாது. (கஅருசுவது-நம்-ககஉ-ப-ககo.)

எ. பந்தகடத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று பீ-என்பவன்மேல் ஏ-என்பவன் வியாச்சியஞ்செய்து அந்தப்பிரகாரம் தீர்ப்புபெற்றுக்கொண்டான். பிற்பாடு ஏ-என்பவன் சீ-என்பவனுக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக சீ-என்பவன் வியாச்சியஞ்செய்தான். அந்த வியாச்சியந் தீர்ப்பாகிறதற்குமுன் பீ-யிடத்தில் ஏ-பெற்றுக்கொண்ட வே பந்தகச்சொத்தை சீ-யினுடைய வியாச்சியத்தில் ஜப்திசெய்யப்பட்டது. அதற்குப்பிற்பாடு ஏ-என்பவனுக்குத்தான் வே தீர்ப்பின் தொகையைக் கொடுத்துவிட்டதாக பீ-என்பவன் வாதஞ்செய்தான். சீ-யினுடைய வியாச்சியத்திற்காக வே பந்தகச்சொத்து ஜப்திசெய்யப்பட்டதென்கிற பூரணகியானத்துடனே பீ-என்பவன் ஏ-என்பவனுக்குத் தொகை செலுத்தினது சுத்த அநுசிதமென்றும் பீ-என்பவனல் ஏ-என்பவனுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பந்தக ஆதாரவிற்கண்டசொத்து சீ-யினுடைய வியாச்சியத்துக்குப் பாத்தியப்படவேண்டுமென்றும் நிர்காரணஞ் செய்யப்பட்டது. (ச-உ-கஅசுo வது மாச்சுபீ நிஉ.)

அநுபவம்-க.....
இணம்-சு.....
உத்தரவின்பேரில் அப்பீல்-சு...
ஒற்றி-ஙக.....
காலநிர்ணயம்-நிசு.....
கிரயம்-கo.....
தீர்ப்பு நிறைவேற்றல்-ககூ-உo-உக-உஉ-உங-உச-உசு-உள-உஅ-உகூ-ஙo-ஙக.....

இவைகளைப்பார்க்க.

ஜமீன்தார்.

க. ஞாயமான நிபந்தனைகளுடன் பட்டாக்கொடுக்கத் தப்பிப்போ கிற ஜமீன்தார் கஅ0உ-வது சட்டம் கச-வது பிரிவுப்படி நஷ்டத்துக்குப் பாத்தியப்படவேண்டும். (கஅகஉ-நம்-கரு.)

உ. சாசுவதபேரிஜ் ஏற்படுத்தப்படுகிறதற்கு முன்கவர்ன்மென் ரூரால் வசூல்செய்யப்படாத தீர்வையை ஜமீன்தார் வசூல்செய்யக் கூடாது. (கஅகஉ-நம்-கஅ-கஅகச-நம்-கo.)

ங. தேசவழக்கத்தினல் ஸ்தாபிக்கப்படாத யாதொரு தீர்வையை ஜமீன்தார் வசூல்செய்வது அக்கிரமம். (கஅகங-நம்-அ.)

ச. சாசுவத தீர்வை ஏற்பாடானபோது ஒருவன் ஜமீன் ஸ்திதிக் குப் பாத்தியஸ்தன் அல்லவென்று கவர்ன்மென்ரூரால் செய்யப் பட்ட உத்தரவு உறுதிபுள்ளதாகவும் நிராட்சேபமாகவும் இருக் கின்றது. (கஅகங-நம் ஙo.)

ஞ. கவர்ன்மென்ரூருக்கு விரோதியான ஒரு ஜமீன்தானைத் தள் ளி வேரொருவனைப் பாத்தியஸ்தனாக கவர்ன்மென்ரூர் நியமஞ்ச செய்திருந்தால் தள்ளப்பட்ட வெ ஜமீன்தாருடைய பாத்தியஸ் தர்களுக்கு அந்த ஜமீன் ஸ்திதியில் யாதொருபாத்தியமும் இல்லை. (கஅகசு-நம்-கஅ.)

சு. ஒரு ஜமீன்தாருடைய பாத்தியமானது இந்தத்தேசத்தின் பூர்வீகராஜாக்களாலாவது இங்கிலீஷ் கவர்ன்மென்ரூராலாவது ஜட் சேபிக்கப்பட்டிருப்பதாக எல்லாவும் ருசுவாகாவிட்டால் அந்த ஜமீன்தாருக்கு ஆதாரவு இல்லாமல் இருந்தாலுங்கூட அவருடைய ஸ்வாமியத்தைமாற்றக் கோர்ட்டாருக்கு அதிகாரம் இல்லை. (கஅகள-நம்-கச.)

எ. சாசுவதபேரிஜின் ஒழுங்குப்படி அந்தக்காலத்தில் ஏற்படுத் தப்பட்ட ஜமீன்தாரியின் பிரிவிலினையைக் கோர்ட்டார் வேறுபடுத் தக்கூடாது. (கஅகஅ-நம்-ச.)

அ. கவர்ன்மென்ரூருடையவும் மற்றப்பாத்தியஸ்தர்களுடைய வும் சுதந்தரங்களுக்கு விரோதமாக அக்கிரம்மாய்ச் செய்யப்படும் பராதினங்களை அழிக்கவேண்டியதற்காக கஅ0உ-வது உ-வது சட் டமும் அதற்கு அநுசரனையான மற்றச்சட்டங்களும் உண்டாயி ருப்பதால் அந்தப் பராதினங்களைச் செய்தவனுடைய ஜீவியகாலத்

திற்குப்பின்பு அந்தப் பாதீனங்கள் ரத்தாகிவிடும். (கஅஉகஙுல-கம்-சுஈ.)

சுஉ. ஜமீன்தாருடைய நிலங்களைத் தலைமுறை தலைமுறையாய்ச் சாகுபடிசெய்த குடிகள் வேண்டாமென்று விட்டுவிட்டபிறகு ஒருவர் அந்நியன் இடத்தில் அந்த நிலங்கள் விடப்பட்டிருக்குமானால் குத்தகை முடிந்தவுடனே அந்த நிலங்களையும் ஜமீன்தாருடைய உழுதியக்காரர்களால் சாகுபடிசெய்யப்பட்ட கம்மட்டம் என்கிற நிலங்களையும் வாங்கிக்கொள்ள ஜமீன்தார் பாத்தியஸ்தராயிருக்கிறார். (கஅஉஉஙுல-கம்-உ.)

சூ. கஅ0உஙுல உரு-வது சட்டப்படிக்கு கவர்ன்மென்றரால் கொடுக்கப்பட்ட இஸ்திமிரார் சன்னதிலிம் யாசகங்களைக்கொண்டு பூர்வீக ஜமீன் பாகார்ஹமா அல்லவா என்பதைக் கோர்ட்டார் நிசயிக்கவேண்டும். (கஅஉருஙுல-கம்-க.)

சுக. ஜமீன்தாருடைய பூர்வீகமான ஜங்கமசொத்து பாகயோக்கியமானதுதான். (ஷை.)

சுஉ. ஒரு ஜமீன் முழுவதும் ஜெப்டபுத்திரனுக்குமட்டும் எப்போதும் அநுபவிக்கப்படாமல் எல்லா பாகஸ்தர்களாலும் பொதுவாக அநுபவிக்கப்பட்டிருக்குமானால் அந்த ஜமீன் பாகத்துக்கு அர்ஹமானதுதான். (ஷை.)

சுசு. ஒருவனுக்கு கவர்ன்மென்றரால் கொடுக்கப்பட்டு சன்னது மூல்க்கியஸ்து இஸ்திமிரார் இல்லாமல் அவனுடைய ஜெப்ட புத்திரனுக்குக்கிடைத்து அவனால் அநுபவிக்கப்பட்ட ஜமீன்பாகத்துக்கு யோக்கியமானதல்ல. ஜமீன்பாகத்துக்கு அர்ஹமாயிருந்தால் அதினுடைய வருமானமும் பாகத்துக்கு அர்ஹமானதல்ல. (கஅஙசுஙுல-கம்-சுஙு.)

சுச. கஅ0உஙுல உரு-வது சட்டம் உண்டாவதற்குமுன் ஜமீன் விஷயத்தில் பிதுரார்ஜித பாத்தியக்கிரமம் அநுஷ்டிக்கப்படாமல் துணைத்தனத்தார் இவ்விடப்படி அந்த ஜமீன்பாத்தியத்தை ஒருவனுக்குக் கொடுக்கிறதும் பிற்பாடு வாங்கிக்கொள்ளுகிறதும் இவ்விதமாக நடத்திவந்தார்கள். சாசுவத தீர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஜமீன்தார்களுக்கும் அவர்களுடைய பாத்தியஸ்தர்களுக்கும் சாசுவதபாத்தியத்தை உண்டுபண்ணுகிறதற்காகவும் ஷை உரு-வது சட்டம் உண்டுபண்ணப்பட்டது. கவர்ன்மென்றரிடத்தில் இஸ்திமிரார்

சன்னது பெற்றுக்கொண்டவனே ஜமீனுக்கு ஸ்வாமியாகிறான். (கஅசுகஉ(வரு)-நம் - கஉ - கஅசுச(ஹூ)-நம் - கஅ - கஅசுள(ஹூ)-நம்-கச-கஅசுஅ(ஹூ)-நம்-ச.)

கரு. சாசுவதபோரிஜ் எற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மாஜிஜமீன்தாருடைய மாதாவும் பத்தினியும் அவர்கள் ஜீவகாலமட்டும் அநுபவித்துக்கொள்ளும்படி ஜமீனைச்சேர்ந்த ஒரு கிராமத்தை அவர்களுக்கு விட்டு அவர்கள் பெயரால் இஸ்திமிராார் சன்னதுங் கொடுத்தார்கள். அவர்களுக்கு சர்வஸ்வாதந்தரியத்தையும் உண்டுபண்ணத்தக்க நிபந்தனைகளை ஷை இஸ்திமிரார் சன்னதில் கைப்பிசகாய்க் கண்டிருந்தபோதிலும் அவர்கள் இறந்துபோனபிற்பாடு ஷை கிராமம் ஜமீன்தாரியைச் சேரவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசுச ஹூ-நம்-சுசு.)

கசு. ஜமீன்தாருக்கு இஸ்திமிரார் சன்னதுமூலமாகக் கொடுக்கப்பட்ட ஜமீன் பூர்வீகஸ்திதியானதாலும் அது சாஸ்திரப்படி அவனுடைய பாத்தியஸ்தர்களைச் சேரவேண்டியதானதாலும் அந்த ஸ்திதியை ஜமீன்தார் பராதீனஞ்செய்யக்கூடாது. (கஅஉகஉ(ஹூ)-நம்-எ-கஅருக(ஹூ)-நம்-உகூ.)

கள. ஜேஷ்ட பாத்தியக்கிரம்மானது ராஜரீகங்களுக்கும் பூர்வீக ஜமீன்களுக்குமட்டும் உபயோகமேதவிர தானமாய்க் கிரயம் வாங்கப்பட்ட ஜமீன்களுக்கும் மிட்டாக்களுக்கும் உபயோகம் அல்ல. (கஅசுசஎ ஹரு-நம்-உ-கஅருக ஹூப-நம்-கூ0.)

கஅ. ஜமீன்தாருடைய மாதா ஜமீனை அநுபவித்தகாலத்தில் வாங்கின உண்மையான கடன்களுக்கு ஜமீன்தார் பாத்தியப்படவேண்டியதாம். (கஅருரு ஹூப-நம்-கூரு-கஅருள(ஹூ)-நம்-க0ள.)

ககூ. இஸ்திமிரார் சன்னதின்பிரகாரம் அநுபவிக்கப்பட்ட, உ0கூகூ கிராமங்கள் உள்ள ஜமீன்தாரியில் உகூ-கிராமங்களை ஜமீன்தார் அவனுடைய வைப்பாட்டி புத்திரனுக்குக் கொடுத்தது செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசுளஹூப-நம்-ருகூ.)

உ0. ஜமீன்தாருக்குத தகுமான வயதிலலாதகாலத்தில அவனுக்கு ஹிதமாகவும் அகத்தியமாகவும் அவனுடைய போஷகனால் வாங்கப்பட்ட ஞாயமான கடன்களுக்கு ஜமீன்ஸ்திதி பாத்தியப்படவேண்டியதாயிருந்தபோதிலும் ஜமீன்தாருக்குத் தகுந்தவயது வருகிறவனையில் அவனுடைய போஷகன் ஷை கடன்களுக்கு வ

கைசெய்யவேண்டியவனேதவிரத் தகுமானவயதில்லாத ஜமீன்தாரைப் பாத்தியப்படுத்திக் தீர்ப்புசெய்யக்கூடாது. ஜமீனைச் சேர்ந்த வருமானம் செலவுகளுக்கெல்லாம் மே போஷகன் சரியாய்க் கணக்குக் கொடுக்கிறபட்சத்தில் அவனல் வாங்கப்பட்ட அவசியமான கடன்களுக்கு ஜமீன்ஸ்திதினையப் பாத்தியப்படுத்தலாம். (கஅகஉவ நம்-க-கஅறுo வ-நம்-சகூ.)

உக. ஜமீன்தாரினையச்சேர்ந்த சில கிராமங்களை ஜமீன்தார் அவனுடைய சகோதரன் மகனுக்கு ஸ்திரீதனமாய்க் கொடுத்து அவளால் அந்தக் கிராமங்கள் பக்கத்தில் பந்தகம் வைக்கப்பட்டது. கஅoஉ ழ்ந்-உறு-வது சட்டப்படி மே செய்கை நடவாதபடியால் அது செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅருருவ-நம்-எo.)

உஉ. ஜமீன்தாரினைய விநியோகஞ்செய்யக்கூடாதென்று கவர்ன்மென்றரால் யாதொரு பிரத்தியேகமான நிபந்தனைகள் ஏற்பட்டிராதபடியால் தர்மசாஸ்திரப்படி ஜமீன்தார் செய்யத்தக்க யாதொரு செய்கையிலுல் ஜமீனுடைய பாத்தியக்கிரமத்துக்கு பாதகம் உண்டாகும்படியாயிருக்கிறது. (கஅகச வந-நம்-கஅ.)

உங. குடிகள் அநுபவிக்கிற நிலத்துக்குத் தீர்வை வசூல் செய்யாமல் ஒரு ஜமீன்தாருடைய முன்னோர்கள் அநேகவருஷகாலம் சும்மா இருந்துவிட்டபோதிலும் அந்த நிலம்-கஅoஉவ-உறு-வது சட்டம் அ-வது பிரிவுப்படி ரெஜிஸ்டர் செய்யப்படாமல் இருந்தால் அந்த ஜமீன்தாருக்குப் பட்டம் ஆறி-கஉவ-த்துக்குள்ளாக மே நிலத்தின் தீர்வைக்காகக் குடிகளைத் தொடர்ந்து அவர்கள் கொடாதவனையில் மாசூலை எலம்போட்டுத் தீர்வை வசூல் செய்துகொள்ளலாம். (கஅசo ழ்ந்-நம்-சஙறு-கஅசுகவ்ந-ப-சுசு.)

உச. சாகுபடிசெய்கிறவர்கள் சிலகாலம்வனையில் நிலத்தைப் பாழாய்ப்போட்டுவிட்டால் அந்த நிலத்தை ரிவினியூ அதிகாரஸ்தர்கள் வேறே யாரிடத்திலாவது சாகுபடிக்கு விட்டுவிடலாம். ரிவினியூ அதிகாரஸ்தர்களுடைய ஸ்தானத்தில் ஜமீன்தார் இருப்பதால் சாகுபடிசெய்யாமல் குடிகள் விட்டுவிட்ட நிலத்தை ஜமீன்தார் வேறே யாருக்காவது பட்டாக்கொடுக்கலாம். அந்தப்படி ஜமீன்தாரிடத்தில் பட்டாப் பெற்றுக்கொண்டவர்களை வியாச்சியமூலமாய் அப்புறப்படுத்தப் பழையகுடிகளுக்குப் பாத்தியம் இல்லை. (கஅசo வந-நம்-சஅஉ-கஅசுகவ்ந-ப-ககஉ.)

உரு. இறந்துபோன தன் பர்த்தாவினுடைய ஜமீனைச்சேர்ந்த மனை கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சித்தாள். அந்த ஜமீனுக்குத் தான் ஸ்வாமியென்று பிரதிவாதி எதிர்வாதம்பேசினான். விவாதமனையத்தவிர மற்ற ஜமீன்ஸ்திதிகள் முழுமையும் வாதிவசத்திலிருப்பதால் அந்த ஜமீனுக்குத் தான் பாத்தியஸ்தனென்று பிரதிவாதி கிரமவியாச்சியமூலமாய் ஸ்தாபித்துக்கொள்ளுகிறவனையில் விவாத மனையை அநுபவிக்க வாதியே ஸ்வதந்தனையென்று அவள் பட்சந் தீர்ப்புச்செய்யப்பட்டது. (கஅசூ0 ஹரு-நம்-கூரு-ப-உருசு.)

அங்கிகாரம்-ள.....
அங்கிகாரவிபரீதம்-ககூ-உஉ.....
இணம்-உ0.....
உபகாரச்சம்பளம்-க.....
ஏலம்-கூ.....
காலநிர்ணயம்-ருஅ.....
கிராம உத்தியோகம்-கக-கஙூ...
சன்னது முல்க்கியத்து இன்திமிரார்-உ.....
சாட்சியம்-க0.....
ஜீவநாம்சம்-கூஉ.....
பட்டா-சு.....
பாகம்-சு-சுசூ.....
பாத்தியம்-அ-ஙுசு.....
மிராசுதாரும் புறக்குடியும்-சூ-ள.
மிராபாபதிவை-சு.....
மேன்காவல்-க.....

இவைஎளப்பார்க்க.

ஜாதி.

க. ஜோடுபோடவும் தங்களுடைய கிரஹங்களுக்கு வெள்ளாவைக்கவும் இடங்கையாருக்குப் பூரணபாத்தியம் உண்டு. அந்தப்பாத்தியத்தில் வலங்கையார் துராகிருதமாய்ப் பிரவேசித்து அக்கிரமஞ் செய்தால் அதினால் உண்டான நஷ்டத்தைப்பற்றியும் அந்தப்பாத்தியத்தை ஸ்தாபிக்கவேண்டியதற்காகவும் இடங்கையார் வியாச்சியஞ்செய்யலாம். (கஅகூஎ ஹரு-நம்-ள.)

அதிகாரவாம்பு-கஙூ..... | மாநஸம்டம்-அ.....

இவைகளப்பார்க்க.

ஜாமீன்.

க. ஒருவனுக்காக ஜாமீன் ஒப்புக்கொண்டு ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுத்தவர்கள் அந்தப் பத்திரத்தின் சங்கேதப்படி நடக்கவேண்டும். அது அங்கியபாஷையில் எழுதப்பட்டிருந்தால் ஜாமீன்

பத்திரமென்பதை அறியாமல் அதில் தாங்கள் கையெழுத்துவைத்ததாக அவர்கள் சொல்லும் பிரதிவாதம் அநுபயோகம். (கஅசுக ஹூப-நம்-கூ-ப-கசுட.)

உ. பத்திரங்களை எழுதிக்கொடுத்தவர்கள் கெடுவில் தொகை செலுத்தாவிட்டால் அந்தத்தொகையைத் தான் கொடுப்பதாக வேறொருவன் ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுத்தால் அந்த ஜாமீன்பத்திரம் மகமதுசாஸ்திரப்படி செல்லாது. (கஅகஅஹூப-நம்-கo.)

ஈ. நிஷ்காரணஷையான சம்பளமுள்ள ஒரு உத்தியோகஸ்தனுக்காக வேறொருவன் ஜாமீன்கொடுத்திருந்து பிற்பாடு அந்த ஜாமீன்தாரனுக்குத் தெரியாமலும் அவனுடைய நிஷ்டபத்தி இல்லாமலும் ஷை உத்தியோகஸ்தனுக்கு நிச்சயம் இல்லாத கம்மிசியன் அல்லது தரகுவருமானம் ஏற்படுமாறல் உடனே ஷை ஜாமீன்தாரன் உத்தரவாத நிவர்த்தினைய அடைவான். (கஅஉசூஹூப-நம்-எ.)

ச. ஒருவன் கொடுக்கவேண்டிய கடனுக்காக வேறொருவன் ஜாமீன் ஒப்புக்கொண்டால் அவர்கள் இருவனையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து உத்தமர்ணன் வியாச்சியஞ்செய்யவேண்டும். (கஅருஎஹூப-நம்-கஈ.)

ரு. ஈ-வது மநுஷன் கொடுக்கவேண்டிய தீர்ப்பின்தொகையைப் பிரதிவாதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாதிக்குக் கடன்பத்திரம் எழுதிக்கொடுத்தான். அந்தப் பத்திரத்தின் தொகைக்காகப் பிரதிவாதிமேல் வாதி வியாச்சியஞ்செய்தான். ஷை தீர்ப்பை ஷை ஈ-வது மநுஷன்மேல் முந்தி நிறைவேற்றவேண்டுமென்றும் அவனிடத்தில் வசூலாகாமல் பாக்கியிருக்கிற தொகையைமட்டும் பிரதிவாதி உத்தரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கஅருசூஹூப-நம்-அங-கஅருஎஹூப-ப-கஉருஇ.)

சூ. வாதிக்குச் செங்கல்கொடுப்பதாக ஒப்பந்தஞ்செய்த ஈ-வது மநுஷன் தவணையில் செங்கல்கொடாதவனையில் அதினால் வாதிக்கு நேரிடுகிற நஷ்டத்துக்குச் சரியான தொகையைப் பிரதிவாதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுத்தபிற்பாடு ஷை ஈ-வது மநுஷன் கெடுவில் வாதிக்குச் செங்கல்கொடுக்கத்தப்பிப்போனல் ஷை ஜாமீன்பத்திர நிபந்தனைப்படி வாதிக்குப் பிரதிவாதி தொகைசெலுத்தவேண்டும். அந்த ஜாமீன்பத்திரம் அபராத நிபந்தனையுள்ளதென்று தோஷம் பாரிக்கக்கூடாது. (கஅருகூஹூ)-நம்-கஉச-ப-உஎஈ.)

எ. யாதொரு வியாச்சியத்தில் தீர்ப்பாகிறதற்குமுன் பிரதிவாதிக்காக வேறொருவன் ஜாமீன் ஒப்புக்கொண்டு அந்த ஜாமீன் தொகைக்குச் சமாக மதிப்புள்ளசொத்தை ஜாமீன்தாரன் பிரதிவாதியிடத்தில் ஈடுவாங்கியுமிருந்தால் அந்த ஜாமீன்பத்திரத்திற்கண்ட கடனுக்குமட்டும் ஜாமின்தார் உத்தரவாதியேதவிர அந்தப்பத்திரத்திற் காணுத பிரதிவாதியின் கடனுக்கு வே ஜாமீன்தாராவது அவன் பிரதிவாதியிடத்தில் ஈடுவாங்கியிருக்கிற சொத்தாவது பாத்தியப்படவேண்டியதில்லை. எந்தவியாச்சியத்தில் ஜாமீன்வாங்கப்பட்டிருக்கிறதோ அந்தவியாச்சியம் ஸ்தாபிக்கப்படாமல் அதோகதியாய்ப் போய்விட்டால் வே ஜாமீன் விமோசகமாகி ஜாமீன்தார் நிருத்தரவாதியாவான். (கஅசுo வரு-நம்-அசு-சுo-ப-கஅச-கஅசு.)

அப்பீல்-கரு.....
தீர்ப்பு நிறைவேற்றல் கரு-கசுர
உக.....

மகாராஜாத்தி அப்பீல்-சு.....
ராஜிநாமா-கசு.....

இவைகளைப்பார்க்க.

ஜீவநாம்சம்.

க. ஒரு தாயானவள் தகுந்தகாரணம் இல்லாமல் தன் மகனுடைய சம்ரட்சணையைவிட்டு நீங்கினபோதிலும் அந்த மகனிடத்தில் ஜீவநாம்சம் பெற்றுக்கொள்ளுகிறதற்கு அவள் பாத்தியஸ்தியாயிருக்கிறாள். (கஅகஎ வரு-நம்-கசு.)

உ. புத்திரன் தனக்குப் படிந்து நடக்கவில்லையென்கிற நிமித்தியத்தினால் அவனுக்கு ஜீவநாமசம் கொடுக்கமாட்டேனென்று தகப்பன் ஆட்சேபிக்கக்கூடாது. (கஅஉக வரு-நம்-உ.)

சு. தகுந்த நிமித்தியம் இல்லாமல் குடும்பத்தைவிட்டு விலகி இருக்கிற கனிஷ்டபாகஸ்தர்கள் பிரத்தியேகமாய் மிகவுஞ் சொற்ப ஜீவநாம்சத்தைமட்டும் பெற்றுக்கொள்ளப் பாத்தியஸ்தர்களாயிருக்கிறார்கள். (ஷை)

ச. அசல்தீர்ப்பின் தேதிமுதல் ஜீவநாம்சத்துக்கு வட்டியுங் கொடுக்கவேண்டும். (ஷை.)

ரு. புருஷன்-உ-வது விவாகஞ்செய்த உடனே நிர்நிமித்தியமாய் அவனைவிட்டு விலகிப்போன முதல் காரத்துக்கு அவன் ஜீவ

நாம்சங் கொடுக்கவேண்டியதில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅஉஙஹ-நம்-உ.)

கூ. தர்மசாஸ்திரப்படி கற்புநிலை கெட்டு வியபசாரியாய்ப்போன ஸ்திரீக்குப் புருஷன் ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லை. (கஅஉஙஹ-நம்-கூ.)

எ. சாஸ்திரப்படி புருஷனுடைய சொத்துக்கு அபாத்தியஸ்தியாய்ப்போகிற ஒரு விதவைக்கு அவள்புருஷன் பாத்தியஸ்தனுடைய நிர்வாகத்துக்குத் தகுந்தபடி ஜீவநாம்சங் கொடுக்கக் கோர்ட்டார் தீர்மானிக்கலாம். (கஅஉஎஹ-நம்-ஙங.)

அ. ஒருவன் தன்னுடைய நிலத்தை ஒரு விதவையினுடைய ஜீவநாம்சத்துக்காக விகித புரஸ்ஸரமாய்க் கொடுத்துவிட்டால் அந்தப்படியே நடக்கவேண்டும். (கஅருரு ஹரு-நம்-எரு.)

கூ. ஒருவிதவையினுடைய ஜீவநாம்சத்துக்காகக் குடும்பச்சொத்தில் அவளுக்குப் பாகங்கொடுக்கக்கூடாது. (கஅருரு ஹரு-நம்-ஙசஅ.)

கo. புருஷன் ஜீவந்தராயிருக்கிறவனாயில் அவன்மாத்திரமே அவனுடைய பத்தினிக்கு ஜீவநாம்சங் கொடுக்கக்கடமை உள்ளவனாயல் அவனுடைய பாகஸ்தர்களிலும் பொறுத்துத் தீர்மானஞ்செய்யக்கூடாது. (கஅருரு ஹரு-நம்-கசஙூ-கஅசo ஹரு-நம்-சரு-ப-அசூ-கஅசo ஹரு-நம்-களo-கஅசூக ஹரு-ப-கஉ.)

கக. கவர்ன்மென்ரரிடத்தில் போதுமான பென்சியன் அல்லது உபகாரச்சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளுகிற ஒரு விதவைக்கு அனைத்தவிர வேறே பிரத்தியேகமான ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லை. (கஅருசூ ஹரு-நம்-கசசூ.)

கஉ. ஒருவன் விதவையான தன்னுடையபத்தினி மாதாவுக்கு ஜீவநாம்சங் கொடுக்கவேண்டுமென்று மகமதுசாஸ்திரத்தில் விதிபேற்பட்டிருக்கவில்லை. (கஅருஙு ஹரு-நம்-சக.)

கஙு. ஒரு மகமது மதஸ்திரீ அவளுடைய புருஷன் இறந்து-சபீ கo-தினத்துக்குள் வேறொருவனைக் கல்லியாணஞ் செய்துகொண்டாள். பிரதம புருஷன் இறந்து அவளவு சொற்பக்காலத்துக்குள் நடந்தவிவாகம் மகமதுசாஸ்திரப்படி செல்லாதென்றும் அந்த ஸ்திரீக்கு உ-வது பார்த்தா ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லையென்றுந் தீர்மானிக்கப்பட்டது. (கஅருரு ஹரு-நம்-சூச.)

கச். ஒருமகமது மதஸ்தன் தன்பெண்சாதிஸ்யச் சிலவருஷகாலம் சம்ரட்சணைசெய்யாமல்விட்டுவிட்டானென்கிற ஆதாரத்திஸல் அந்தக்கல்லியாணத்தை நிராகரணஞ்செய்து அந்தஸ்திரீயை வேறொருவனுக்கு விவாகஞ்செய்துவைக்கக் காஜிக்கு அதிகாரம் இல்லை. புருஷஸல் கைவிடப்படுகிற ஸ்திரீ மக்மது சாஸ்திரப்படி ஜீவநாம்சத்துக்காகவும் வாசகிரஹத்துக்காகவும் புருஷன்மேல் வியாச்சியஞ் செய்துகொள்ளலாம். (கஅருளஹ-நம்-களஉ.)

கரு. ஒருத்தி ஜீவநாம்சத்துக்காகப் புருஷன்மேல் வியாச்சியஞ் செய்தாள். அவள் நிஷ்காரணமாய்த் தன்னைவிட்டு அப்புறப்பட்டுப் போய்விட்டதால் அவளுக்கு ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லை யென்று பிரதிவாதி எதிர்கட்சிபேசினன். அசல் அப்பீல்க்கோர்ட்டுகளில் வாதிபட்சம் தீர்ப்புசெய்யப்பட்டது. ஜீவநாம்ச வியாச்சியங்களில் பிரதிவாதியினுடைய இவ்விதமான செய்கையினல் அவன் ஜீவநாம்சங் கொடுக்கப் பாத்தியப்பட்டிருக்கிறனென்று தீர்ப்புகளில் கண்டெழுதவேண்டியது முக்கியமாயிருக்க அந்த விஷயம் ஷை அசல் அப்பீல்த் தீர்ப்புகளில் பேசப்படாததினலே ஷை வியாச்சியம் சதர்க்கோர்ட்டார் அவர்களால் மறுவிசாரணைக்கு அனுப்பப்பட்டது. (கஅருகஹ-நம்-அக.)

ககூ. ஜீவநாம்சங் கொடுக்கப் போதுமான ஸ்திதி பிரதிவாதியிடத்தில் இல்லாவிட்டால் அவன் வாதிக்குப் பிரத்தியேகமான ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லை. (கஅருகூஹ-நம்-ககூ-ப-அஉ.)

கள. ஒரு ஹிந்து விதவையைச் சம்ரட்சணைசெய்ய அவளுடைய தாய் தகப்பன்மார்களுக்கு இஷ்டம் இருந்தால்மாத்திரந்தான் அவர்கள் சம்ரட்சணைசெய்யலாம். அவர்களுக்கு இஷ்டம் இல்லாவிட்டால் ஷை விதவை புருஷனுடைய பாத்தியஸ்தர்கள் அவளைச் சம்ரட்சணைசெய்யக் கடமைஉள்ளவர்கள். அவன் புருஷன் இறந்து போகுங்காலத்தில் அவள் பக்குவம் ஆகாமல் இருந்தாலுங்கூட அவள் புருஷனுடைய பாத்தியஸ்தர்கள் அவளைப் போஷிக்கவேண்டும். (கஅருஅஹ-ப-கருச.)

கஅ. தர்மசாஸ்திரப்படி பிரியாதின் தேதிமுதல் ஜீவநாம்சங் கிடைக்குமேதவிர அதற்கு முந்தினகாலத்துக்குள்ள பாக்கி ஜீவநாம்சங் கொடுக்கும்படி தீர்ப்புசெய்யக்கூடாது. (கஅருஅஹ-நம்-உகூ-ப-உஙகூ-கஅகூ0ஹ-நம்-ச-கஅகூகஹ-ப-ஙஙக.)

கசூ. ஒரு கிராமக்கர்ணனுடைய சம்பளத்திலிருந்து ஜீவநாம்சங் கொடுக்கும்படி தீர்மானஞ் செய்யக்கூடாது. (கஅருஅஙப-நம்-கஉசூ-ப-உஉரு-கஅருசூஙப-நம்-கo-ப-ரு.)

உo. தன்னுடைய இறந்துபோன புருஷனுடைய சகோதரனை விரபத்திரசெட்டியிடல் தனக்கு ஜீவநாம்சம் கிடைக்கவேண்டுமென்று குப்பம்மாள் வியாச்சியஞ்செய்தாள். ஒரு வீட்டையுஞ் சில நகைகளையுந்தவிர வேறே வருமானங் கிடைக்கத்தக்க பூர்வீகஸ்திதி பிரதிவாதியிடத்தில் இல்லாததினாலே அவன் வாதிக்குப் பிரத்தியேகமாய் ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅருசுஙப-நம்-கசசுசு-ப-உசுரு.)

உக. பூர்வீகஸ்திதி இருந்தால்மட்டும் ஒருவன் தன்னுடைய சகோதரன் பெண்சாதிக்குப் பிரத்தியேகமான ஜீவநாம்சங் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அவனுக்கு நிச்சயம் இல்லாததும் மாறத்தக்கதுமான வருமானமட்டுங் கிடைத்துவந்தால் அதைக்கொண்டு பிரத்தியேகமான ஜீவநாம்சங் கொடுக்கும்படி தீர்மானஞ்செய்யக்கூடாது. (கஅருசுஙரு-நம்-கசஉ-ப-உ எஉ.)

உஉ. ஒரு விதவை அவளுடைய ஸ்வீகாரபுத்திரன் இடத்திலும் அவள் எந்தக்குடும்பத்தைச சேர்ந்தவளோ அந்தக்குடும்பத்தாரிட்டத்திலும் ஜீவநாம்சம் பெற்றுக்கொள்ளவேண்டியதேதவிர விபக்தர் களாய்ப்போன வேறே குடும்பத்தாரிடத்தில் அவளுக்கு ஜீவநாம்சங் கிடைக்கமாட்டாது. (கஅருசுஙரு-நம்-உஅ-உசு-சுo-கஅசுo ஙரு-ப-சுக.)

உசு. தன்னுடைய ஜீவநாம்சத்துக்காகக் கொடுக்கப்பட்ட ரூ-சுoo-ம் பிரதிவாதி வைத்துக்கொண்டு அதின் வட்டியைத் தன்னுடைய ஜீவநாம்சத்துக்காகக் கொடுத்துவருகிறதென்று பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதால் அந்த வட்டித்தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி. விவாதித்தாள். வாதியிடத்தில் நம்பிக்கையாய் வைக்கப்பட்ட சில நகைகள் வேண்டும்போது அவள் கொடுக்கத் தப்பிப்போனால் தன் ஜீவநாம்சத்தை இழந்துவிடுகிறதென்று அவள் உடன்படிக்கை எழுதிக் கொடுத்திருப்பதாலும் அந்தப்படி அவள் நகைகளைக் கொடுக்கத் தப்பிப்போனதினாலும் அவளுக்கு ஜீவநாம்சங் கொடுக்கவேண்டியதில்லையென்று பிரதிவாதி ஆட்சேபித்தான். புருஷனுடைய குடும்பத்தாரிடத்தில் ஜீவநாம்சம் பெற்றுக்கொள்ள ஒரு விதவைக்குப் பூரணபாத்தியம்

இருக்கிறபடியாலும் வே வாதியினுடைய அகத்தியமான செலவுக் காகப் பிரதிவாதியினுடைய சம்மதத்துடன் அவள் வே நகைக ளைப் பாதீநஞ்செய்திருப்பதாலும் அவள் வே நகைகளைப் பிரதி வாதிக்குக் கொடுக்கத் தப்பிப்போனதைக்கொண்டு ஜீவநாம்சபாத் தியத்தை இழந்துபோகவில்லையென்றும் பிரதிவாதி நகைகளைப் பற்றி வேறே வியாச்சியஞ் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது. (கஅசுo ஹ-நம்-ன-ப-கசுசு.)

உச. ஒருவிதவை அவள் புருஷனுடைய குடும்பத்தாருடன் சே ர்ந்திருக்கமாட்டேனென்று சொல்வதிலே அவளுடைய ஜீவநாம்ச பாத்தியத்தை இழந்து போகமாட்டாள். (கஅருசு ஹ-நம்-கள-கஅருள ஹ-நம்-கருக.)

உரு. பூர்வீகஸ்திதி இல்லாவிட்டால் விதவையானவள் அவள் புருஷன் குடும்பத்தாருடன் ஒரே யோகட்சேமமாயிருக்கவேண் டும். (கஅசுள ஹ-நம்-உள.)

உசு. பூர்வீகஸ்திதி இருந்தால் அவள் வேயாருடன் வகையாக ட்சேமமாயிருக்கவேண்டியதில்லை. (கஅருக ஹ-நம்-அரு.)

உள. புருஷனுடைய இடைவிடாத நிஷ்டூரத்தினாலாவது அல் லது வேறே தகுந்தகாரணங்களினாலாவது புருஷனைவிட்டு விலகிப் போகிற பத்தினிக்குமட்டும் அவன் ஜீவநாம்சம் கொடுக்கும்படி தீர்மானஞ்செய்யலாம். (கஅருள ஹ-நம்-சுச.)

உஎ. ஒருவன் தன்னுடைய பாத்தியஸ்தர்களுக்குத் துரோகமாய் அவனுடைய சகலஸ்திதிகளையும் பெண்சாதியினுடைய ஜீவநாம்சத் துக்காகக் கொடுக்கக்கூடாது. (கஅருசு ஹ-நம்-உ.)

உஅ. ஒரு மகமதுமதஸ்திரீ பெற்றுக்கொண்ட தீர்ப்பின்பிரகா ரம் அவளுக்குக் கிடைக்கவேண்டிய ஜீவநாம்சம் டிஸ்மாஸ் என் கிற விவாக நிராகரணம் ஆனஉடனே நின்றுபோகத்தக்கதாயிருக் கின்றது. (கஅரு அஹ-நம்-சூஉ.)

கூo. ஜீவநாம்ச வியாச்சியத்தில் வாசகிரகத்துக்கு வேண்டிய தொகையும் அடங்கியிருக்கவேண்டியதானபடியால் வாசகிரகத்துக் காக வேறே வியாச்சியஞ்செய்யக்கூடாது. (கஅருரு ஹ-நம்-ரு.)

கூக. தகுமானவயதுள்ள புத்திரனும் பால அவஸ்தை நீங்காத புத்திரர்களும் தகப்பன்மீது ஜீவநாம்சத்துக்காகத் தொடர்ந்தார் கள். தகுமானவயதுள்ள புத்திரனுக்குக் கிடைக்கவேண்டிய நிரம

மான ஜீவனம்சத்தொகை இவ்வளவென்பதையுந் தகுமானவயது வாத புத்திரர்களுக்காகச் செய்யப்பட்ட வியாச்சியஞ் செல்லுமா செல்லாதா என்பதையும் நிதானிக்கும்பொருட்டு பிதாவினுடைய நடக்கைமுதலான இன்னகாரணங்களால் அவனைவிட்டு அவர்கள் விலகும்படி நேரிட்டதென்பதை அறியவேண்டியது முக்கியமென்று சதர்க்கோர்ட்டாரவர்களால் ஷெ நம்பர்-மறுவிசாரணைக்கு அனுப்பப்பட்டது. (கஅருகூஙப-நம்-கஅஅ.)

ஈஉ. ஜமீன்தாரியின் வருமானங்களைப் பற்றிக்கொண்ட காரியஸ் தன் ஜீவநாம்ச பாக்கியைக் கொடுக்கிறதென்றும் அவன் கொடாதவரையில் ஜமீன்தார் கொடுக்கிறதென்றுந் தீர்மானிக்கப்பட்டது. (கஅருருஙப-நம்-ஈஅ.)

ஈஈ. ஒரு சிவில்ஜட்ஜ் அவருக்கு முன்னிருந்த சிவில்ஜட்ஜினல் ஏற்படுத்தப்பட்ட ஜீவநாம்சத்தொகையை நிர்மித்தியமாய் மாற்றி வேறுதொகை நிச்சயிக்கவைக் செய்யக்கூடாதது. (கஅருசூஙப-நம்-கஅ.)

ஈச. பிதாவினுடைய நிஷ்டூர நடக்கைமுதலான தகுந்தகாரணங்கள் இல்லாமல் அவனைவிட்டுப் புத்திரர்கள் விலகுதல் அவர்களுடைய ஜீவனத்துக்கு வேண்டிய அதி அற்பத்தொகையைமட்டும் அவர்களுக்குப் பிதாகொடுக்கும்படி தீர்ப்புசெய்யவேண்டும். அவர்களை மறுபடியும் தன் கிரகத்தில் சேர்த்துக்கொள்ளப் பிதா அநிஷ்டமாயிருந்தால் அவர்களுக்கு அவன் போதுமான ஜீவிதங் கொடுக்கவேண்டும். ஷெ புத்திரர்கள் தகப்பனைவிட்டு வெளிப்பட்டபிற்பாடு கலியாணஞ் செய்துகொண்டிருந்தால் அந்தக் கலியாணச்செலவைப் பற்றி அவர்கள் தகப்பனைத் தொடரலாம். (கஅசுஐஙப-நம்-சகஅசுகஙநி-ப-ஈஈ.)

ஈந. மாமனார் முதலானவர்களின் தளர்ந்தியநடக்கையினால் ஒரு அமங்கலி அவர்களைவிட்டு விலகும்படி நேரிட்டால்மட்டும் அவளுக்கு அவர்கள் பூர்ணமான ஜீவநாம்சங் கொடுக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட காரணங்கள் இல்லாமலும் மாமனார்முதலானவர்களுடைய இஷ்டப்பிரகாரம் அவர்களுடன் கூடியிராமலும் தன்னுடைய தகப்பன் வீட்டுடன் சேர்ந்திருக்கிற அமங்கலைக்கு ஸ்வல்ப ஜீவநாம்சமாத்திரங் கிடைக்கும். (கஅசுஐஙஜ-நம்-நஈக-கஅசுஈகஙநி-ப-ஈசு.)

கூசு. வருஷம் க-க்கு ரூ-சு000 வீதம் ஜீவநாம்சங் கிடைக்கவேண்டுமென்று வாதி செய்த வியாச்சியம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டது. வியாச்சியகாலத்திற்குமுன் வாதிக்குப் பிரதிவாதி எழுதிக்கொடுத்த உடன்படிக்கையில் அவருடைய ஜீவநாம்சத்துக்காக ரூ-கறு00-ம் தர்மச்செலவுக்காக ரூ-க்000-மும் அவளுக்கு வருஷாவருஷம் பிரதிவாதி கொடுக்கிறதென்றும் வாதி வியாச்சியத்துக்குப்போனல் தர்மபாகம் ரூ-க000-மும் அவள் இழந்து போகிறதென்றும் சங்கற்பிக்கப்பட்டிருந்ததால் அந்தப்படி அவள் வருஷம் க-க்கு ரூ-உறு00-மட்டும் பெற்றுக்கொள்ளவேண்டியதென்றும் பிரதிவாதியின் துராட்சேபனையினல் வாதி வியாச்சியத்துக்கு வரும்படி நேரிட்டதால் ஷ தர்மபாகத்தை வாதி இழந்து போகக்கூடாதென்றும் தீர்மானஞ் செய்யப்பட்டது. (கஅசுo வநப-நம்-கஉ-கஅசுக வநப-ப-கககக.)

கூள. தாசிகளுக்கு அவர்களுடைய சகோதரன் பெண்சாதியைச் சம்ரட்சணைசெய்யக்கடமை இல்லை. (கஅருஅ வநப-நம்-அஅ-ப-களறு.)

கூஅ. தன்னுடைய புருஷனை பிரதிவாதி துரதிஷ்டவசமாகும் செய்துகொண்டு தன்னை விரட்டிவிட்டதால் ஜீவநாம்சம் கிடைக்கவேண்டுமென்று வாதி தொடர்ந்தாள். வாதி ஸ்வேஷ்டமாய்ப்போய்விட்டதாகவும் அவளுக்கு ஸர்வஜில்லங்கசுதந்தியாய்த் தான் நிலதானகை கொடுத்துவிட்டதாகவும் பிரதிவாதி மாறுத்தரஞ்சொன்னன். வாதிக்குச் சிலதானகை கொடுத்துவிட்டதாகப் பிரதிவாதி சொல்வதைக்கொண்டே அவள் தன்னிஷ்டமாய் வெளிப்படவில்லையென்பது ஸ்புடமென்று வாதிபட்சம் தீர்மானிக்கப்பட்டது. (கஅருஙவநப-ப-உஙகூ.)

கூகூ. ஒரு ஸ்திரீயினுடைய ஜீவிதத்துக்காக அஸ்தியில் ச-ஸ்-ஒரு பாகம் அவளுக்குக் கொடுக்கக்கூடாது. (கஅசுoவநப-நம்-கசு-ப-கககக.)

ஸ்வீகாரம்-ககூ.....	பாகம்-கச-ககூ-கள.....
தீர்ப்புநிறைவேற்றல் - கள - கஅ-	பாத்தியம்-கச-உள-உசு.....
ககூ-கூo.....	வக்கீல்-கூச..... .....
பராதீனம்-கூ-று.....	

இவைகளைப்பார்க்க.

ஸ்தானீகம்.

க. கும்பகோணம் சக்கரபாணி ஸ்வாமிகோவிலின் ஸ்தானீக மிராசு பரம்பரை பாத்தியமானதல்ல. (கஅசளவு-நம்-நுச.)

ஸ்திரீதனம்.

க. பர்த்தாவினுலாவது அல்லது வேறே யாராலாவது பத்னிக்குக் கிடைத்த ஆபரணமுதலிய ஸ்திரீதனசொத்தை கூஹாமமுதலிய துஷ்காலங்களைத்தவிர வேறே எந்தக்காலத்திலும் பர்த்தா விநியோகஞ் செய்யக்கூடாது. இதரர்கள் இடத்தில் போக்கியம் வைக்கப்பட்டிருந்த குடும்பநிலத்தை மீட்கவேண்டியதற்காகப் பத்னியின் சம்மதியின்மேல் ஷை ஸ்திரீதனசொத்தைப் பர்த்தா விநியோகஞ் செய்திருந்தாலுங்கூடப் பர்த்தாவின் மரணத்துக்கு முன்னுவது பின்னுவது வட்டியில்லாமல் ஷை ஸ்திரீதனசொத்தின் கிரயத்தைப் பெற்றுக் கொள்ளப் பத்னி ஸ்வதந்தையாயிருக்கிறுள். (கஅருஙவு-நம்-நுக.)

உ. ஒருவனுக்கு ஒரு ஸ்திரீயைக் கன்னிகாதானமாய்க் கொடுக்கப்பட்டிருந்தால்மட்டும் அந்தக் கலியாணகாலத்தில் அவளுடைய தாயாரால் அவளுக்குக் கிடைத்த ஸ்திரீதனம் அவள் இறந்தபின்பு அவளுடைய நாயகனைச்சேரும். அந்த விவாஹம் ஆசுரமாயிருந்தால் பத்னி அஜீவியானபின்பு அவளுடைய ஸ்திரீதனம் அவளுடைய மாதாவைச்சேரும். (கஅருஉவு-நம்-உ-ம.)

சாட்சிய நிர்வாஹம்-கஉ.....
தாயீன்தார்-உக.....
தானம்-சு.....
பராதீனம்-உ-சூ.....
பாத்தியம்-கசு-சச.....

இவைகளைப்பார்க்க.

ஸ்வாமிபோகம்.

க. நிலத்தை ஸ்வாமிபோகம் வாங்கி அநுபவிக்கிறவனுக்குள்ளாக அந்த நிலத்தைச்சாகுபடிசெய்கிறவன் ஸ்வாமிபோகத்துக்காக ஸ்வாமின்காரனுக்குப் பாத்தியப்படவேண்டியதில்லை. (கஅருஙவு-நம்-அ.)

உ. ஸ்வாமிபோகத்துக்காகச் செய்யப்பட்ட வியாச்சியத்தில் நிலத்தை விடும்படி தீர்ப்புசெய்யக்கூடாது. (கழுகஉ-ஹ)-நம்-கக.)

ஆலயம்-ககூ..... ..... | காலநிர்ணயம்-உசூ-உஎ .....
ஒற்றி-கக..... |

இவைகளைப்பார்க்க.

ஸ்வார்ஜிதம்.

க. கஉ-வருஷகாலம்வரையில் நிறுத்தப்பட்டுப்போன மாகியாதிலத்தை ஒருவன் சர்வப்பிரயத்தநஞ்செய்து திருப்பிக்கொண்டால் அது அவனுடைய ஸ்வார்ஜிதமாகும். அந்த நிலத்துக்கு அவனுடையவிபக்த சகோதரர்கள் அஸ்வதந்தரர்கள். (கழசஎ ஹப-நம்-ஙசூ.)

உ. யாதொரு ஸ்திதிக்குக் கநிஷ்ட சகோதரன் பெயரால் ஆதரவுகள் பிறந்திருந்து அவன் ஆஸ்தி சம்பாதிக்கும்படியான அந்தஸ்திலும் இருந்தால் அந்தஸ்திதி அவனுடைய ஸ்வயசம்பாதனமென்றே ஊஹஞ்செய்யவேண்டும். (கழருஹ)-நம்-ககழ.)

ஙூ. ஒருவனுடைய சரீரப்பிரயாசைக்காக ஆதரவுமூலமாக அவனுக்கு யாதொரு ஸ்திதி தானஞ்செய்யப்பட்டிருந்து அந்த ஆதரவின் ஆரம்பத்தில்மட்டும் உள்ளிட்டானென்று கண்டு மத்தியபாகங்களில் உள்ளிட்டானின் பிரஸ்தாபமே இல்லாவிட்டால் அந்தஸ்திதி அவனுடைய ஸ்வார்ஜிதமென்றே நிச்சயிக்கப்படவேண்டும். (கழருசஹ-நம்-சரு.)

பாதீநம்-ககசூ..... | பாத்தியம்-உஙூ.....
பாகம்-ரு-உசு-ஙூஉ..... | பூர்வார்ஜிதம்-சு .....

இவைகளைப்பார்க்க.

ஸ்வீகாரம்.

க. ஒரு விதவை அவளுடைய புருஷன் உத்தரவுப்படிக்காவது அல்லது பந்துக்களுடைய உத்தரவுப்படிக்காவது ஒரு பிள்ளையை ஸ்வீகாரம்பண்ணிக்கொள்ளலாம். (கழகசஹ-நம்-கழ.)

உ. ஸ்வீகாரஞ்செய்துகொள்ளும்படி ஒரு விதவைக்கு அவளுடைய புருஷனால் கொடுக்கப்பட்ட அனுக்ஞை வாய்மொழியாயி

ருந்தால் அது சாட்சிகளால் ருஜுவாகவேண்டும். அந்த அநுக்ஞை எழுத்துமூலமாயிருந்து புருஷனுடைய கையெழுத்தும் ருஜுவானல் அதற்குச் சாட்சிகளுடைய கையெழுத்து அவசியமானதல்ல. அப்படி இல்லாதவனையில் ஷை எழுத்துமூலமான அநுக்ஞைக்குச் சாட்சிகளுடைய கையெழுத்து அவசரந்தான். (ஷை நம்பர்.)

கூ. புருஷனுடைய அநுமதிப்பத்திரத்தில் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளவேண்டிய பிள்ளையின்பெயரையும் அந்தப்பிள்ளையின் தாய் தகப்பன்பெயர்களையும் குறித்துக் காட்டியிருந்தாலும் இருக்கலாம். அல்லது பெயர்குறிக்காமல் எந்தப்பிள்ளையையாவது ஸ்வீகரித்துக்கொள்ளும்படி பொதுவாக உத்தரவு கொடுத்திருந்தாலும் தோஷமில்லை. (ஷை.)

சு. ஒரு பிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுகிறதென்று ஒரு புருஷனும் ஸ்திரியும் எழுத்துமூலமாக ஏற்பாடுசெய்துகொண்டபிற்பாடு அவர்களில் ஒருவர் இறந்துபோனல் ஜீவித்திருக்கிற புருஷனுவது ஸ்திரியாவது ஷை ஏற்பாட்டின்படி நடப்பிக்கவேண்டும். அவர்களில் ஒருவர் இறந்துபோனதைக்கொண்டு அந்த ஏற்பாடு ரத்தாகமாட்டாது. (ஷை.)

ரு. ஒரு பிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுகிறதென்று தன் பத்தினியுந் தானும் உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதாக ஒரு புருஷன் அவனுடைய அந்தியகாலத்தில் பிரஸ்தாபித்தால் அந்த உடன்படிக்கையிற் கண்ட பிள்ளையை ஸ்வீகரிக்க அவன் பத்தினி அதிகாரமுள்ளவள். (ஷை.)

சுரு. ஸ்வீகார உடன்படிக்கையில் பிள்ளையினுடையவுந் தாய்தகப்பனுடையவும் பெயர்களைக் கண்டிருந்தாலும் அல்லது தாயினுடைய பெயனையாவது அந்தப்பிள்ளையின் கோத்திரப்பெயனையாவது கண்டிருந்தாலும் சாஸ்திரப்படி அந்த உடன்படிக்கை ஊர்ஜிதமுள்ளதுதான். (ஷை.)

எ. பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், ஒரு குழந்தை பிறந்த கஉ-ம் நாள்முதல் உபநயநகாலம்வனையில் அந்தப்பிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். பிராமணர்கள் அ-வது வயதிலும், க்ஷத்திரியர்கள் கக-வது வயதிலும், வைசியர்கள் கஉ-வது வயதிலும், உபநயநஞ் செய்யவேண்டும். ககூ-வது வயதுவனையில் சூத்திரர்கள் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். (ஷை.)

அ. ஒருவன் தன்னுடைய ஜ்ஷ்ட சகோதரனுடைய ஏகபுத்திரனை ஸ்வீகாரஞ்செய்வது அசாஸ்திரீயமானதால் அவன் தன்னுடைய ஜ்ஷ்டகநிஷ்ட பிதாக்களில் ஒருவனுடைய கநிஷ்டபுத்திரனை ஸ்வீகரித்துக்கொள்ளலாம். (கஅகூஎ(ஹ)-நம்-ரு.)

கூ. ஒரு ஸ்திரீயானவள் பர்த்தாவினுடைய அநுக்ஞை பெறுமலிருந்தாலுங்கூட அந்தப் பர்த்தா இறந்துபோனபிறகு தகப்பன் சகோதரன் மூதலானவர்களுடைய சம்மதத்தின்மேல் அந்த ஸ்திரீ தன்னுடைய கநிஷ்ட புத்திரனை ஸ்வீகாரமாகக் கொடுக்கலாம். (ஷை.)

கo. மலையாளப்பிரதேசத்தில் நடக்கிறவழக்கப்படி செட்டிஜாதியில் ஒருவனுக்குப் புத்திரனில்லாதபட்சத்தில் தௌஹித்திரனுக்குப் பாத்தியமுண்டாவதற்கு அந்தத் தௌஹித்திரனை அவன் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளவேண்டியது அகத்தியம். (கஅகஎ(ஹ)-நம்-கo.)

கக. மகம்மது சாஸ்திரப்படி ஸ்வீகாரம் ஸ்வத்துவபாத்தியத்தைக் கொடுக்கமாட்டாது. (கஅகஎ(ஹ)-நம்-கஉ.)

கஉ. கலியாணமான புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் செல்லாது. (கஅஉகூ(ஹ)-நம்-எ.)

கஙூ. ஹிந்துக்கள் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளுகிறபட்சத்தில் சகலரும் அறியப் பிரசித்தமாய்ச் செய்துகொள்ளுவது முக்கியமானதல்ல. ஆகிலும் பிரசித்தமாய் ஸ்வீகாரஞ் செய்துகொள்வது வழக்கமாயிருக்கிறது. (கஅஉசஹ-நம்-கசூ.)

கச. உ-வது ஸ்வீகாரம் அசாஸ்திரீயமானதல்ல. (கஅஉஎ(ஹ)-நம்-கக.)

கரு. சூத்திரர்களுக்குள் நடக்கும் ஸ்வீகாரத்தில் ஸ்வீகிருதனுடைய ஜாகமாதாவும் ஸ்வீகாரமாதாவுங்கூட இருக்கவேண்டியதும், தத்தஹோமஞ் செய்யவேண்டியதும், ஸ்வீகர்த்தாவைத்தவிர மற்றவர்கள் மஞ்சள்நீர் குடிக்கவேண்டியதும் அகத்தியமல்ல. (கஅஙூ(ஹ)-நம்-அ.)

கசூ. ஜ்ஷ்டபுத்திரனை அல்லது ஏகபுத்திரனை ஸ்வீகாரஞ் செய்யக்கூடாது. ஆனல் அந்தப்பிள்ளையை அவனுடைய பிதுருவியர்கள் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட விஷயத்தில் அந்த ஸ்வீகிருதன் துவியாமுஷ்யாயணனாகி ஜாக ஸ்வீகாரபிதாக்கள் இருவருக்கும் புத்திரனும் பாத்தியஸ்தனுமாகிறான். (கஅசகூ(ஹ)-நம்-கக.)

கஎ. ஒருவன் தன்னுடைய சகோதரனை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளக்கூடாது. (கஅருகஙூ-நம்-உ0.)

கஅ. ஸகோத்திரத்தில் பிள்ளைகள் அகப்படாவிட்டால் அந்நிய கோத்திரோத்பன்னனை ஸ்வீகரிக்கலாம். (கஅருகஙூ-நம்-உக.)

ககூ. புருஷனுடைய அநுக்ஞைப்படி ஒருவிதவை ஒருபிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுகிறபட்சத்தில் அந்த உத்தரவு அடங்கிய மரணசாஸநம் எந்தத்தேதியில் எழுதப்பட்டதோ அந்தத்தேதி முதல் அந்த ஸ்வீகாரப்பிள்ளையின் பாத்யம் ஆரம்பிக்கிறபடியால், அதற்குப்பிற்பாடு அந்தஸ்துக்குத்தக்கபடி வே விதவை ஜீவநாம் சத்துக்குமட்டும் பாத்தியஸ்தியாயிருக்கிறாள். அவள் ஆஸ்தியை அநுபவிக்கும்படி புருஷனால் எழுதிவைக்கப்பட்ட மரணசாசநந் செல்லாது. (வே.)

உ0. ஸ்வீகாரமாதா இஷ்டப்பிரகாரம் தத்தன் நடக்கிறதென்கிற ஏற்பாட்டின்மேல் ஸ்வீகாரம் நடந்திருப்பதாகவும் அந்தப்படி நடக்க ஸ்வீகாரபுத்திரன் தப்பிப்போய்விட்டதால் அவனுடைய பாத்தியத்தை அவன் இழந்துபோய்விட்டதாகவும் ஸ்வீகாரமாதா சொல்லுங்கட்சி ஏபயோகம் அல்ல. ஔரஸபுத்திரனுடைய ஸ்தானத்தில் ஸ்வீகாரபுத்திரன் இருப்பதால் அவனுடைய ஸ்வீகாரம் சகலவிதத்திலும் பூர்ணமே அல்லாது காரணார்த்தமாயிருக்கக்கூடாது. (கஅருசஙூ-நம்-கூ.)

உக. தன்னுடைய ஸ்வீகாரபாத்தியம் வேண்டியதில்லையென்றுவிட்டுவிட யாதொருவனுக்கும் அதிகாரமில்லை. ஆனால் அவனுடைய ஸ்வீகாரமாதாக்கள் அநுபவித்துக்கொள்ளும்படி அவன் ஆஸ்தியை அவர்களுக்குக் கொடுத்துவிடலாம். அதற்குப்பிற்பாடு அவனுடைய சொந்தச்செய்கையை அவனே ஆட்சேபிக்கக்கூடாது. (கஅருஙூ-நம்-கூ.)

உஉ. ஒரு ஸ்வீகிருதன் அபுத்திரவாதகனாக இறந்துபோனால் அவனுடைய ஸ்வீகாரப்பிதாவின் குடும்பத்தார் அவனுடைய ஸ்வத்துக்களுக்குப் பாத்தியஸ்தர்களேதவிர அவனுடைய ஜநகபிதாவின் குடும்பத்தார் பாத்தியஸ்தர்கள் அல்லர். (கஅருஙூ-நம்-கூசூ.)

உங. ஒரு ஸ்வீகாரபுத்திரன் இருக்கும்போது வேறொருவனை ஸ்வீகாரஞ்செய்வது அக்கிரமமானதால், அந்த உ-வது ஸ்வீகாரத்துக்குப்பிற்பாடு முதலாவது ஸ்வீகிருதன் இறந்துபோனாலுங்கூட

அந்த இரண்டாவது ஸ்வீகாரஞ் செல்லமாட்டாது. (கஅருருஙம-கசஉ.)

உசு. ஸ்வீகிருதனுடைய ஜாகமாதாவை ஸ்வீகாரப்பிதா விவாஹஞ் செய்வதற்குத் தடை இல்லாதபட்சத்தில் மைத்துனனுடைய ஸ்வீகாரம் சாஸ்திரவிரோதமல்ல. (கஅருசூஙம-கம்-கூஎ.)

உஙி. ஸ்வீகாரத்துக்கு தஸ்தாவேஜின் ருஜு ஆவசியகம் அல்ல. நம்பிக்கைக்குப் பாத்திரமான வாய்மொழி ருஜுவே போதுமானது. (கஅருளஙம-கம்-உசூ.)

உசூ. ஸ்வீகிருதனுடைய தாயை ஸ்வீகாரப்பிதா விவாஹஞ் செய்யக்கூடாத அதிசமீபமான பாந்தவ்யம் இருந்தால்மட்டும் அந்த ஸ்வீகாரம் செல்லாதேதவிர அப்படிப்பட்ட பாந்தவ்யம் இல்லாவிட்டால் அந்த ஸ்வீகாரஞ் செல்லத்தக்கதுதான். அந்தக்கிரமப்படி ஒரு ஸ்திரீதன்புருஷன் உத்தரவுப்படி தன்னுடைய தம்பியை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். (கஅருளஙம-கம்-கச-கஙி.)

உள. வேறொரு குடும்பத்தில் ஸ்வீகாரமாய்ப்போன ஒரு ஹிந்துவுக்கு அவனுடைய ஜாதகுடும்பஸ்திரிகளில் யாதொருபாத்தியமும் இல்லை. (கஅருஅஙம-ப-ரு-கஅருசூஙம-ப-அக.)

உஅ. ஒருவன் ஒருத்தியை சாஸ்திரப்படி விவாஹஞ்செய்யக்கூடாமலிருக்கிற தடையை ஸ்வீகாரம் நிவர்த்திசெய்யமாட்டாது. (கஅருஅஙம-கம்-உள-ப-ககள)

உகூ. சாஸ்திரப்படி ஸ்வீகாரஞ்செல்லுபடியாவதற்கு ஸ்வீகிருதனை ஸ்வீகாரப்பிதா பெறும்படியான முறையிருக்கவேண்டும். (ஷை.)

உகூ. ஸ்வீகாரப்பிதா ஒரு அந்நியனுக்கு ஸ்வீகாரம்போயிருந்தாலுங்கூட அவன் தன்னுடைய ஜாதகசகோதரனை ஸ்வீகரிக்கக்கூடாது. (ஷை.)

உஙக. பிராமணர்களுக்குள் உபநயநஞ்செய்கிறவயதுக்கு முன் நடக்கிற ஸ்வீகாரமட்டுஞ்செல்லும். (கஅருசூஎற-ப-ககஅ.)

உஙஉ. பிராமணர்களுக்குள் அ-வயதுக்குள் உபநயநம் நடக்கவேண்டுமென்று விதியிருந்தபோதிலும் அந்த வயதுக்குப்பிற்பட்டகாலத்தில் நடக்கப்பட்ட உபநயநமும் நிர்தோஷமானதுதான். (ஷை.)

உஙஙி. பிராமணர்களுக்குள் உபநயநம் நடக்கவேண்டிய கிரமமான வயது தாண்டிப்போயிருந்தாலுங்கூட உபநயநம்மட்டும் நடக்காம

விருந்தால் அப்படிப்பட்ட பிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். (ஷை.)

கூச. ஒரு ஸ்திரீக்கு ஆண்சந்ததி இருக்குமானல் அவியாசங்கான சாஸ்திரப்படி அவள் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளக்கூடாது. (கஅருகூஙப-நம்-கூஅ.)

கூரு. ஒரு ஸ்வீகாரப்பிள்ளை நிஸ்ஸந்ததியாயிறந்தால் அவனுடைய ஆஸ்தி ஸ்வீகாரப்பிதாவினுடைய சொந்தக் குடும்பத்தாரைச் சேரும். (கஅருஅஙப-நம்-எக-கஅருகூ-ப-உசூரு.)

கூசூ. ஒருவன் தன் பத்நி கர்ப்பிணியாயிருக்குங்காலத்தில் ஸ்வீகாரஞ்செய்துகொண்டால் செல்லாது. ஸ்வீகாரத்துக்குப் பிற்பாடு அந்தக் கர்ப்பிணிக்குப் பெண்குழந்தை பிரசவமானலுங்கூட ஸ்வீகாரஞ்செல்லமாட்டாது. (கஅருகூஙப-நம்-உஉகூ-கஅசூ0ஙப-ப-சூள.)

கூள. கஅருகூம்-வருஷத்தில் நடந்த ஸ்வீகாரத்தை ஆட்சேபித்து கஅருபம்-வருஷத்தில் செய்யப்பட்ட வியாச்சியத்தில் வெகுகாலத்துக்குமுன் நடந்த ஸ்வீகாரத்தை ஆட்சேபிக்கக்கூடாதென்று நீர்மானஞ் செய்யப்பட்டது. (கஅருளஙப-நம்-கூகூ-ச0-ச2.)

கூஅ. சாஸ்திர விருத்தமான தத்து சரிபமான புருஷபந்துவினுடைய சம்மதத்தின்மேல் உறுதிப்படும். (கஅருளஙப-நம்-கருசூ.)

கூகூ. சாஸ்திரவிரோதமான ஸ்வீகாரத்துக்கு அநேகவருஷகாலம் எல்லாருஞ் சம்மதித்திருந்து அந்த ஸ்வீகாரத்தின் ஆதாரத்தின்பேரில் ஆஸ்தி விபாகமும் செய்துகொண்டபிறகு அப்படிப்பட்ட ஸ்வீகாரத்தைரத்துச்செய்யக்கூடாது. (கஅருகூஙப-நம்-உஅ-உகூ-கூ0.)

ச0. குஷ்டவியாதிக்காரனல் செய்துகொள்ளப்பட்ட ஸ்வீகாரஞ் செல்லாது. (கஅருளஙப-நம்-கஙகூ.)

சக. கஉ-ஙபத்துக்கு மேற்பட்டகாலம்வரையில் ஆட்சேபிக்கப்படாமல் இருந்த ஸ்வீகாரத்தைப் பிற்பாடு ஆட்சேபித்து வியாச்சியஞ்செய்யக்கூடாது. (கஅருகூ ஙப-நம்-சகூ.)

சஉ. தேஹவியோகமாகிற ஒரு ஹிந்துமதஸ்தனுக்குப் புருஷப்பிரஜையிருந்தால் அவன் ஸ்வீகாரத்துக்கு அநுக்ஞைகொடுக்கக்கூடாது. (ஷை..)

சஙூ. ஒரு ஹிந்து விதவையின் ஜீவியகாலபரியந்தம் ஆஸ்திகளை அநுபவிக்க அவள் பாத்தியஸ்தியாயிருப்பதால் அவளால் செய்யப்

பட்ட ஸ்வீகாரத்தை ரத்துசெய்யவேண்டுமென்றும் அவள் வே ஆஸ்தியை அநுபவிக்கக்கூடாதென்றும் அவள் புருஷனுடைய விபக்த தாயாதியினல் செய்யப்படும் வியாச்சியம் நிருபயோகம். (கஅசஙூ ஙரு-நம்-கஅ.)

சச. பர்த்தா பிராண அபாவம் அடைந்து கள-ஙர வனையில் பத்னி புத்திரஸ்வீகாரஞ் செய்யாமலிருந்து பிற்பாடு செய்துகொண்டால் அந்தஸ்வீகாரத்துக்குப் பர்த்தாவினுடைய அநுமதியிலலென்பது ஸ்பஷ்டம். அவ்வளவுகாலத்துக்குமுன் பர்த்தா அநுமதி கொடுத்தபோது கூட இருந்த சாட்சிகள் இன்னுமொன்று பத்னி ஏற பகப்படுத்திச்சொல்வது மஹாதுர்லபமானதால் அந்த விஷயத்தில் அவளுடைய வார்த்தை அப்பிரமாணமென்பது பிரசந்நம். (கஅசஙூ ஙரு-நம்-ககூள-ககூஅ-ப-உசூசூ.)

சஙு. ஸ்வீகர்த்தாவுக்கும் ஜாகபிதாவுக்கும் புத்திரனனது வியா மூஷியாயணன் என்பவனுடைய ஸ்வீகாரமானது இந்தக் கலியுக தர்மத்துக்கு ஒத்ததல்ல. (கஅஙுசூ ஙரு-நம்-கஙு-ப-அக.)

அங்கீகாரவிபரீதம்-சூ-அ-க0.. ...	பாத்தியம்-உ0-சக-சகூ .....
சித்தாந்தமும் தீர்ப்பும்-கூஉ.....	மரணசாஸநம்-க.....

இவைகளைப்பார்க்க.

கூளரமிராசு.

க. யாதொரு இடத்தில் வேறொருவரும் கூளரஞ்செய்யக்கூடாதென்றும் அந்த இடத்தில் எப்போதும் கூளரஞ்செய்யும்படியான மிராசு பாத்தியம் தனக்குமட்டும் இருப்பதாகவும் ஒருவன் வழக்குச்செய்தால் அந்தவழக்கு செல்லாது. (கஅசச ஙரு-நம்-சூச.)

தரிசு.

பட்டா-க.....	மிராசுதாரும் புறக்குடியும்-ள-
ஜமீன்தார்-உச	உஉ-உங-உசூ-கூஙு..... .....

இவைகளைப்பார்க்க.

தர்மகர்த்தா.

க. சரங்கம் தர்மகர்த்தாவான முதற்பிரதிவாதி அந்த உத்தியோகத்தைத் தனக்குக் கொடுத்துவிடுவதாகப் பிரதிக்கினை செய்ததாக

வும் கலெக்ட்டரான உ-ம் பிரதிவாதி அதற்கு விக்கினஞ்செய்வ தால் அந்த உத்தியோகங் கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாச் சியஞ்செய்தான். ஷ கோவிலுக்கு நி-தர்மகர்த்தர்கள் நியமிக்கப் பட்டி அவர்கள் மாறிமாறி வருஷத்துக்கு ஒருவராக வேலை பார்க் கிறதென்றும் அவர்களில் ஒருவருடையவேலை காலியானல் இதர தர்மகர்த்தர்கள் அந்த வேலைக்கு வேறே யானையாவது நியமகஞ் செய்கிறதென்றும் கலெக்ட்டரால் பிறப்பிக்கப்பட்ட உக்கும்நாமா விற் கண்டிருப்பதால் அதற்கு விரோதமாய் வாதியை முதற்பிரதி வாதிமட்டில் நியமித்தது செல்லாதென்று வாதி வழக்கு தொடுக்கப்பட்டது. (கஅசுஂ0ஹ)-நம்-கசூ-கஅசுகஹப-ப-கஉஉ.)

உ. கோயிலின் சொத்தைகட்டிக் கோயிலின் பாத்தியத்தைக் காட்டித் தர்மகர்த்தா வியாச்சியஞ்செய்யவேண்டுமே அல்லாமல் அந்தச் சொத்து அவருடைய ஸ்வாதீனம்போல் பாவனைசெய்து அவர் வழக்காடக்கூடாது. (கஅருஇ ஹப-நம்-சஅ-கஅருசு ஹப-ப-உ0சு.)

.ஆலயம்-க0-கசூ-சஅ-கரு.

இவைகளோப்பார்க்க.

தர்மசத்திரம்.

க. ஒரு மண்டபத்தின் தர்மவிசாரணையை நடத்தும்படி பிரதி வாதியுடையை சகோதரன் வாதிக்கு அதிகாரப்பத்திரங் கொடுத் தாகவும் அந்த மண்டபவிசாரணையில் பிரதிவாதி பிரவேசிக்காமல் இருக்கும்படி தீர்ப்புச்செய்யவேண்டுமென்றும் வாதிவழக்கிட்டான். ஷ மண்டபம் பிரதிவாதிக்கும் அவருடைய இறந்துபோன சகோ தரருக்கும் பொதுவான பூர்வீகஸ்திதியானதினாலும் அதற்காக வா தியிடத்தில் பிரதிவாதியுடைய சகோதரன் யாதொரு தொகை யும் பற்றிக்கொள்ளாமல் தர்மவிசாரணை நடப்பிக்கமட்டும் வாதிக் கு அதிகாரங் கொடுத்திருப்பதிலாலும் பிரதிவாதியின் சகோதரன் இறந்தபிறகு அந்த அதிகாரப்பத்திரஞ் செல்லாதென்று வாதி வழக்குத் தள்ளப்பட்டது. (கஅசுஂ0ஹ)-நம்-ககூள-ப-உஅரு.)

தர்மவிதையம்-கூ-சு-சூ.

இவைகளோப்பார்க்க.

தர்மசாஸ்திரம்.

க. தர்மசாஸ்திர விஷயத்தைப்பற்றிப் பண்டிதனைக் கேட்கப் பட்ட கேள்வியில் வியாச்சிய விஷயமுழுதும் பூரணமாக அடங்கி யிருக்கவேண்டும். (கஅருஎவுப-நம்-சுஎள.)

உ. ஸ்வீகாரமுதலான விஷயங்களில் பண்டிதருடைய அபிப்பி ராயத்துக்கு விரோதமாகச் சதர்க்கோர்ட்டாரால் அடியிற்கண்ட நம் பர்களில் தீர்மானிக்கப்பட்டது. (கஅருருவுப-நம்-கசஉ-கஅருஅ வுப-நம்-கூகூ.)

ங. ஹிந்துக்களுடைய வியாச்சியங்களில் தர்மசாஸ்திரத்தைப் பற்றி மகமது சாஸ்திரக்கியனை அபிப்பிராயங் கேட்கக்கூடாது. (கஅருருவுப-நம்-உஉ.)

ச. சாஸ்திரவிஷய சம்பந்தமான வியாச்சியங்களில், கஅ0உவுப-கூ-வது சட்டம் கள-வது பிரிவில் சொல்லப்பட்ட மார்க்கத்தைக் கோர்ட்டார் அநுஷ்டித்துச் சாஸ்திரப்பிரதிஷ்டை செய்யவேண்டும். (கஅரு0வுப-நம்-சகூ.)

ரு. சாஸ்திரத்தைப்பற்றிப் பிரதிவாதி பேசினாலும் பேசாவிட்டா லும் சாஸ்திரப்பிரமாணத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டியது சத ர்க்கோர்ட்டாரவர்களுக்குக் கடன். (கஅருரவுப-நம்-சச.)

சுரு. சாஸ்திரத்தைப்பற்றிப் பிரதிவாதி சங்கித்தாலும் சங்கிக்கா விட்டாலும் அந்த விஷயத்தைப்பற்றித் தீர்க்காலோசனைசெய்து பரி ஷ்கரிக்கவேண்டியது கோர்ட்டாருடைய கடமை. (கஅருசவுப-நம்-சுகூ.)

எ. சென்னபட்டணத்தில் பிரவர்த்தியாயிருக்கிற தர்மசாஸ்தி ரத்துக்கும் பங்காளதேச சாஸ்திரத்துக்கும் விஸ்தாரம் பேதாபே தம் உண்டாயிருப்பதால் பங்காளதேசத்தின் சாஸ்திரம் சென்ன பட்டணத்துக்கு அநுபயோகம். சென்னபட்டணத்தில் எந்த விஷ யங்களிலும் சாஸ்திராநுஷ்டானம் முக்கியமாகவும் பங்காளத்தில் சில பிரகிருதங்களில் சாஸ்திரத்தைவிட தேசாசார அநுஷ்டானம் முக்கி யமாகவும் இருக்கின்றது. (கஅசு0வுப-நம்-கூ-ப-கூஅ.)

அங்கியமதப்பிரவேசம்-உ..... | கடன்பத்திரம்-எ-உகூ-உரு-உகூ.
கடன்-உ..... | கிராம உத்தியோகம்-ச.....

இவைகளைப்பார்க்க.

தர்மயாத்திரை.

க. தர்மயாத்திரிகன் அவனுடைய வருமானத்துக்காக வியாச்சியஞ் செய்யலாம். (கஅநிஙூஙுல-நம்-க.அ.)

தர்மவிதேயம்.

க. யாதொரு தர்மத்தை ஏற்படுத்தினவன் அந்தத் தர்மவிசாரணைக்கர்த்தன் அக்கிரமமாய் நடந்தால் அவன்மேலே கோர்ட்டில் வியாச்சியஞ்ஞ செய்யலாம். (கஅநினஙுல-நம்-கசo.)

உ. தர்மவிஷயங்களை ஏற்படுத்தினவன் தன்னுடைய பாத்தியஸ்தர்கள் அந்தத் தர்மகாரியங்களை மேல்விசாரணை செய்யலாமென்று உத்தரவு கொடுத்திருந்தால்மட்டும் அவர்கள் மேல்விசாரணை செய்யலாமே அல்லாமல் அப்படிப்பட்ட உத்தரவு இல்லாதவனாயில் அவர்கள் அந்தக்காரியங்களில் பிரவேசிக்கக்கூடாது. (கஅநிoஙுல-நம்-நிo.)

ஊ. தர்மசத்திரங்களுக்காக வைக்கப்பட்ட நிலத்தில் தன்னுடைய விகிதம் ஆயில் ஒருபங்கு கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டான். தர்மவிஷயத்துக்காக வைக்கப்பட்ட நிலம் பாகயோக்கியமானதல்லவென்றும் ஆதலால் அந்தத் தர்மவிஷயத்தில் வாதியின் பாகம், சுப்-க-க்குள்ள மேல்விசாரணையை அவன் நடப்பியிக்கலாமென்றும் அசல் அப்பீல்க்கோர்ட்டுகளில் நிர்மானிக்கப்பட்டது. வேறு நிலத்தில் வாதிக்கு எப்படிப் பாகங்கிடைக்கக்கூடாதோ அப்படியே அதின் மேல்விசாரணையிலும் அவனுக்குப் பாகங்கிடைக்கக்கூடாதென்று அவனுடைய வழக்கை முற்றிலும் சுருக்கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். (கஅசுoஙுல-நம்-கஙூo-ப-உசக.)

ரு. தர்மசத்திரங்களின் அக்தார் முதலான மிராசு உத்தியோகஸ்தர்கள் இறந்துபோனால் அந்த உத்தியோகங்கள் அவர்களுடைய பாத்தியஸ்தர்களுக்குக் கிடைக்கவேண்டியது நியாயம். (கஅநிஙூஙுல-நம்-ஙுச.)

ரி. கோவிலைச்சேர்ந்த அர்ச்சிட்ட மிராசும் புரோகித மிராசும் புருஷப்பிரஜைகள் இல்லாவிட்டால் ஸ்திரீகளைச்சேரும். அவர்கள் வேறொருவனைக்கொண்டு அந்த வேலைகளை நடப்பிக்கலாம். புருஷர்களே நடப்பிக்கவேண்டிய ஆசாரியபுருஷ மிராசு ஸ்திரீகளைச் சேரமாட்டாது. (கஅநிஙூஙுல-நம்-எச.)

சு. சத்திரத்தைச்சேர்ந்த அக்தார்முதலான மிராசு உத்தியோகங்கள் காலியானால் இறந்துபோனவனுடைய பெண்ஜாதிமுதலானஸ்திரீகளை அந்த உத்தியோகங்களில் நியமிக்கலாம். அந்தஸ்திரீகள் தங்களுக்குப் பதிலா யாளையாவது வைத்து வேலை நடப்பிக்கலாம். (கஅருருவுல-நம்-சுஎ.)

தாசி.

ஜீவநாம்சம்-சுஎ ..... | பாத்தியம்-சசு .....

இவைகளைப்பார்க்க.

தாநம்.

க. ஒருவனுடைய ஜீவகாலபரியந்தம் அவனுக்கு இலவசமாகச் சம்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறபட்சத்தில் அவன் அந்தியமடைந்திருந்தால் அந்தச்சம்பளங் கொடுக்கிறவன் அதை நிறுத்திவிடலாம். அவன் அதை நிறுத்தாமல் இருந்தாலுங்கூட ஷை சம்பளம் பெறுகிறவன் இறந்துபோனபிற்பாடு அவனுடைய பாத்தியஸ்தர்கள் அந்தச் சம்பளத்தைப்பற்றித் தொடரக்கூடாது. (கஅகசவுல நம்-உசு.)

உ. மகம்மது சாஸ்திரப்படி- ஒரு சொத்தைத் தாநம் பெறுகிறவன் அதைக் கைவசப்படுத்திக்கொண்டால்மட்டும் அந்தத் தாநம் பரிபூர்த்தியாகும். (கஅஉ0வுல-நம்-க.)

ங. தாநம் வாங்கினவனுடைய பாத்தியஸ்தர்களின் பிரஸ்தாபம் தாந சாஸநத்தில் இல்லாவிட்டால், தாநம் வாங்கினவனுடைய யாவத்ஜீவமட்டும் தாநம் வாங்கின ஸ்வத்தை அவன் அநுபவிக்கப் பாத்தியஸ்தனாயிருக்கிறான். (கஅக0வுல-நம்-உ.)

சு. தாநம் பெற்றவன் அவனுடைய சன்னதை ரெஜிஸ்டர் செய்யாமலிருப்பானாலல் அது அவனுக்கும் கவர்ன்மென்றுக்குஞ் சம்பந்தப்பட்ட விஷயமானதால் அதைக்கொண்டு தாநக்கர்த்தா அந்தத் தாநத்துக்கு யாதொருதோஷமுஞ் சொல்லக்கூடாது. (கஅகசூவுல-நம்-அ.)

ஙு. ஒருவனுக்கு ஏற்படுத்தப்பட்ட சம்பளமானது அவனுக்கும் அவனுடைய சந்ததிகளுக்குங் கொடுக்கப்படுமென்று தாநசாஸநந்

தில் எழுதப்படாமல் இருந்தால் அவன் இறந்துபோனஉடனே அந்தச்சம்பளம் நின்றுபோகுந்தக்கதாயிருக்கின்றது. அவன் இறந்துபோனபின்பு அவனுடைய பெண்சாதிக்கும் புத்திரனுக்கும் சிலகாலம்வரையில் அந்தச் சம்பளங் கொடுக்கப்பட்டாலுங்கூட அதைக் கொடுக்கிறவனுக்கு இஷ்டம் இல்லாதபோது அதை நிறுத்திவிட அதிகாரமுள்ளவனாயிருக்கிறான். (களரி ஷரப-நம்-கூ.)

கூ. ஒருவனுக்கு ஒருபொருளைக் கொடுத்துவிட்டதாகத் தாசாஸனத்தில் கண்டிருந்தாலும், அதை அவன் பெற்றுக்கொள்ளவில்லையென்பதற்கு நிதரிசனமாயிருந்தாலும், தாசாஸனத்தின்படி அதை அவன் கைவசப்படுத்திக்கொண்டதாகவே நிச்சயிக்கவேண்டும். (களரி ஷரப-நம்-க.)

எ. ஒருவன் கன்னைகயில் இருக்கிற சொத்துடனேகூட இல்லாத சொத்தையுங் கலந்து தாரஞ்செய்தனைக்கொண்டு அவன்னைகயில் இருக்கிறசொத்தின் விஷயத்தில் அந்தத் தானத்துக்கு யாதொரு களங்கமும் உண்டாகமாட்டாது. (ஷ.)

அ. விதிக பூர்வமான சாஸநப்படி ஒரு சொத்தை ஒருவனுக்குப் பூரணமாய்த் தாரஞ்செய்துவிட்டால் பிற்பாடு அந்தத்தாரத்தை மாற்றக்கூடாது. (களரினஷரப-நம்- க்அருஅஷரப-ப-ரூக.)

கூ. ஒரு ஸ்திரிக்கு அவளுடைய புருஷன் இடத்தில் கிடைத்த ஜங்கமஸ்திரிகளைப் பாத்தியஸ்தர்களுடைய சம்மதம் இல்லாமல் அவள் யாருக்காவது தாரஞ்செய்யலாம். ஆனல் ஸ்தாவரசொத்தைப் பாத்தியஸ்தர்களுடைய சம்மதம் இல்லாமல் அவள் யதேச்சாதாரஞ் செய்யக்கூடாது. (களரிஅஷரப-நம்-கசூக-ப-உஉ0.)

க0. ஒற்றி கிரயமுதலான பராதீனங்கள் செய்யக்கூடாதென்கிற சங்கேதத்துடன் ஒருவன் தன்னுடைய நிலத்தை வேறொருவனுக்குத் தாரஞ்செய்கிறபட்சத்தில், அந்தத்தாரம் வாங்கினவன் நிர்வம்சமானபிற்பாடு தாரதாரிகாரியின் குடும்பத்தை அந்தநிலம் மறுபடியுஞ் சேரத்தக்கதானபடியால், அதைத் தாரம்வாங்கினவன் யதேஷ்டவிநியோகஞ் செய்யக்கூடாது. அவன் பட்ட கடனுக்காகவும் அதைக் கோர்ட்டார் ஜப்திபோடக்கூடாது. (களரிக0ஷரப-நம்-சூ-ப-களரி.)

கக. அ-என்பவன் அவனுடைய நிலத்தைப்பற்றி வியாச்சியஞ் செய்யவேண்டியதற்காக அந்தநிலத்தை இ-என்பவனுக்கு மேடோ

வர் செய்துக்கொடுத்தான். இ-என்பவன் அதில் பாதியை வைத்துக் கொண்டு மற்றப்பாதியை அ-என்பவனுக்குக் கொடுத்துவிட்டது போலத் தாநப்பத்திரிகை செய்துக்கொடுத்தான். ஷ நிலம் அ-என் பவனுக்கே ஸ்வந்தமானதிலும் வியாச்சியஞ் செய்வதற்காகமாத் திரம் ஷ நிலம் இ-என்பவனுக்கு மேடோவர் செய்யப்பட்டதிலு லும் அந்தநிலத்தைச் சாஸ்திரப்படி அ-என்பவனுடைய ஸ்வாதீநப் படுத்தாமல் தாநசாஸநமட்டும் இ-என்பவன் எழுதிக்கொடுத்திரு ந்தபோதிலும் அந்தத் தாநம் நிஷ்களங்கமானதென்று ஸ்தாபிக்கப் பட்டது. (கஅநஅஹ்ல-நம்-உச-ப-கூள.)

கஉ. தாநஞ் செய்யப்பட்டசொத்தைத் தாநம் வாங்குநிறவன் கே ட்கும்போது விடுகிறதென்கிற நிபந்தனையுடன் தாநஞ் செய்யப் பட்டால், அந்தத் தானத்தை நிராகரிக்கும்படியான பாத்தியமும் இருப்பதால் அது நிரமமான தாநம் அல்ல. (கஅநளஹ்ல-நம்-கஉக-கஅநஅஹ்ல-ப-உச.)

கஊ. மநுமக்கத்தாய சாஸ்திரப்படி தாநஞ்செய்யப்பட்ட சொத் தை உடனே கொடுத்துவிடவேண்டியது தாநபூர்த்திக்கு முக்கியம். (கஅருருஹ்ல-நம்-கஉரு.)

கச. தாநஞ்செய்கிறவனுடைய முக்கியபாகஸதர்களுடைய சம் மதம் இல்லாமல் செய்யப்படுகிற தாநம் மநுமக்கந்தாய சாஸ்திரப் படி செல்லாது. (கஅருருஹ்ல-நம்-கரூக.)

கரு. தன்னுடைய ஸ்தாவரஸ்வத்தை வேறொருவனுக்குத் தா நஞ்செய்ய விருப்பம் உள்ளவன் தாநசாஸநத்துக்குப்பதிலாய், தொ கை பற்றிக்கொண்டதுபோல் தொகை பற்றிக்கொள்ளாமலே கிரய சாஸந வக்கணையாக எழுதிக்கொடுத்தாலும் அந்தத்தாநம் செல் லுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. (கஅருஙஹ்ல-நம்-ருசூ.)

ஙூஉ. ஒரு பூஸ்திதியை முன்னேர்கள் காள்முதல் அநுபவிக்கிற பிரதிவாதிகளை அப்புறப்படுத்தவேண்டுமென்று வியாச்சியங்கொ ண்டுவருகிற வாதியானவன் தன்னுடைய பாத்தியத்தையும் பிரதி வாதிகள் அந்தநிலத்தைத் தன்னிடத்தில் பெற்றுக்கொண்டதையும் ருசுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறன். பிரதிவாதிகள் முன்னே ர்கள் காலமுதல் அநுபவிப்பதாக ருஜு-வாகிறபட்சத்தில் அந்தப் பிரதிவாதிகளில் ஒருவன் அந்த நிலத்தைப்பற்றி வாதிக்குக் குத்த கைச்சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதாக நிரூபிக்கப்பட்டாலுங்கூட அது வாதியின் கட்சியை ஸ்தாபிக்கப் போதுமானதல்ல. (கஅசு0 வரு)-நம்-கசுரு)-ப-உஅச.)

ஙூங. அ-என்பவன் கவர்ன்மென்றரிடத்தில் சில நிலத்தைச் சா குபடி செய்வதாக ஒப்புக்கொண்டு சிலகாலம் அநுபவித்துப் பிற்பா

டு விட்டுவிட்டான். அதை ரிவினியூ அதிகாரஸ்தர்களால் க-என்ப வனுக்குக் கொடுக்கப்பட்டபிற்பாடு, அ-என்பவனுக்கு அந்த நிலத் தில் யாதொரு பாத்தியமும் இல்லை. அவன் அந்த நிலத்தை அநு பவித்தகாலத்தில் அதைப் பந்தகமாய் வைத்துக் கடன்வாங்கி யிரு ந்தாலுங்கூட அந்தக் கடனுக்கு ஷை நிலம் பாத்தியப்படமாட்டாது. (கஅருஅவஙப-நம்-நுநு-சுசு-கஅசுo வஙப-நம்-கூள-ப-உoo.)

கூச. கூவஙப-காலம் ஒரு நிலத்தைப் பயிரிட்டு அநுபவிக்கிற குடியானவனை ரிவினியூ அதிகாரஸ்தர்கள் அந்த நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தக்கூடாது. அவனை அப்புறப்படுத்தவேண்டுமென் று விரும்புகிற கட்சிக்காரன் அவன்மேல் கிரம வியாச்சியம் செ ய்யவேண்டும். (கஅசுo வஙப-நம்-நுகூ-ப-உகo.)

கூரு. ஒரு குடியானவன் அவனுடைய நிலத்தை அநேகவஙப-கா லம் சாகுபடிசெய்யாமல் போட்டுவிட்டால் கலெக்ட்டருடைய யுக் தப்படி அந்த நிலத்தை அவனுக்காவது அல்லது வேறையாருக்கா வது கொடுத்துவிடலாம். (கஅசுo வஙப-நம்-கூசு-ப-உசுரு.)

கூசு. பிரதிவாதிகள் ஒவ்வொருவனும் வெவ்வேறே பாத்தியங்க ளின்மேல் தனித்தனியே அநுபவிக்கிற நிலங்களைப்பற்றித் தனித் தனியே வாதி வியாச்சியம் செய்யவேண்டுமே அல்லாமல் அவர் கள்எல்லானையுஞ் சேர்த்து ஒரே வியாச்சியம் செய்யக்கூடாது. (கஅருருவஙப-நம்-கசகூ-கஅருசுவஙப-நம்-கசக.)

கூள. மிராசுதாருக்குக் கொடுக்கவேண்டிய பகுதியைக் கொடுக் கத்தப்பிப்போகிற புறக்குடி அவன் குடியிருக்கிற மனையைவிட்டுவி டவேண்டும். (கஅருசுவஙப-நம்-கூஉ.)

கூஅ. மிராசுதாருக்கு மனையைவிட்டுவிடுகிற குடியானவன் அதி ன்மேல் அவன் கட்டியிருக்கிற வீட்டினுடைய தளவாடசாமான் களை யெடுத்துக்கொள்ளலாம். (கஅருசுவஙப-நம்-கூகூ.)

கூகூ. குத்தகைச் சீட்டில் குத்தகையின் கால நிஷ்கரினை இல் லாமல் வருஷாந்தரப்பகுதியை நாலுகெடுவில்கொடுக்கிறதென்று நிபந்தனைகண்டிருந்தவிஷயத்தில், மிராசுதாருக்கு இஷ்டம் உள்ள மட்டும் அந்தக்குத்தகை நிலத்திருக்கத்தக்கதென்றும் அவனுக்கு இஷ்டம் இல்லாதவனாயில் அந்தக் குத்தகை நிஷ்பலிதமாகத்தக்க தென்றும் நிச்சயிக்கப்பட்டது. (கஅருசுவஙப-நம்-சக.)

சஂ. புறக்குடிமேல் மிராசுதாரால் செய்யப்பட்ட வழக்கில் புறக்குடியானவன், கூ-வது மநுஷனுடைய பாத்தியத்தைப்பற்றிப் பேசக்கூடாது. (கஅருசவூ-நம்-சூக.)

சக. மிராசுதாருடைய புறக்குடியிடத்தில் உட்குத்தகை ஒப்புக்கொண்டவனை மிராசுதார் அப்புறப்படுத்தலாம். (கஅருஅவூ-நம்-கஉ.)

சஉ. மிராசு நிலத்தைக் கிரயம் வாங்கினவன் காசாவர்க்கக்குடியை அஸ்வாதீனப்படுத்தி அவன் வசத்திலிருக்கிற நிலத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளலாம். (கஅருஅவூ-நம்-சூ0.)

சங. மிராசுதார்மட்டும் நிலத்தை அநுபவிக்கிற புறக்குடியை அப்புறப்படுத்தலாமே அல்லாமல் ஒரு புறக்குடி அவனுக்குச் சமானமான மற்றொரு புறக்குடியை அப்புறப்படுத்தக்கூடாது. (கஅருருவூ-நம்-கசருரு.)

சச. மிராசுதார்களில் சிலர் மற்றவர்களுடைய சம்மதம் இல்லாமல் சாகுபடிக்காக நிலங்களை ஒப்புக்கொள்ளலாம். (கஅருகூவூ-நம்-ச.)

சரு. ஒரு புறக்குடியிடத்தில் உட்குத்தகை ஒப்புக்கொண்டவன் அந்தப் புறக்குடிக்குமட்டும் உத்தரவாதியேதவிர மிராசுதாருக்கு உத்தரவாதியல்ல. (கஅரு0வூ-நம் - உச - கஅருசவூ-நம்-ருகூ-கஅருஅவூ-நம்-சள.)

சசூ. விவாதநிலத்தின் குடிவாரபாத்தியம் தங்களுக்குச் சொந்தமென்றும் மேல்வாரபாத்தியமட்டும் பிரதிவாதிகளுக்குச் சொந்தமென்றும் வாதிகள் செய்தவழக்கை ஸ்தாபித்துத் தீர்மானஞ்செய்யப்பட்டது. (கஅசூ0வூ-நம்-ருசூச-கஅசூகவூ-ப-கககூ.)

சள. சாசுவதக் குத்தகை எழுத்துமூலமாக இருக்கவேண்டும். (கஅருஙவூ-நம்-க0உ.)

சஅ. கிராமத்தின் சகல மிராசு ஸ்வதந்தரங்களைப்பற்றி ஒரு மிராசுதார்மட்டும் வியாச்சியம் செய்யக்கூடாது. (கஅகஙவூ-நம்-ஙூ.)

சகூ. நிலத்தின்பேரில் யாதொருவனுக்கு ஏற்பட்டிருக்கிற மிராசு ஹஜொன்கிறவருமானத்தைத் தள்ளுபடிசெய்யக் கவரன்மென்றுருக்கு அதிகாரம் இல்லை. (கஅருருவூ-நம்-கூரு.)

இo. தன்னிடத்தில் நிலத்தைக்குத்தகைவாங்கி அநுபவிக்கிற புறக்குடியை அப்புறப்படுத்தி நிலத்தைத் தன்னுடைய ஸ்வாதீனப்படுத்தவேண்டுமென்று மிராசுதார் வியாஜீயஞ்செய்து அந்தப்படிமெய்ப்பித்தால், அவன் பட்சம் கோர்ட்டார் தீர்ப்புச்செய்யவேண்டுமேதவிர அந்த நிலத்துக்கு, கூ-வது மநுஷன் பாத்தியஸ்தனுவென்பதைப்பறறி அந்த வியாஜீயத்தில் விமரிசைசெய்யவேண்டியதில்லை. அந்த வியாஜியத்தில் ஷை கூ-வது மநுஷன் பிரதிவாதியாயிருந்தாலுங்கூட அவனுடைய பாத்தியத்துக்கு வாதிபட்சம் செய்யப்பட்ட தீர்ப்பினல் பாதகம் இல்லை. அவனுடைய பாத்தியத்தைப்பற்றி அவன் வேறே வியாச்சியம் செய்துகொள்ளலாம். (கஅருஅவ-நம்-கoo-ப - உகஉ - கஅருகூவ - நம்-கoகூ-கஅசூoவ - நம்-கஉஉ-கஅசூoவ-ப-கஅ-கஉஉ.)

இக. கலெக்ட்டரிடத்தில் நிலத்தைச் சாகுபடிக்காகப் பலபேர் ஒப்புக்கொண்டு பிற்பாடு அவர்களிற் சிலர்மட்டும் அந்த நிலத்தைவிட்டுவிடுகிறபட்சத்தில் அதனல் மற்றவர்களுடைய பாத்தியத்துக்கு ஹானியில்லை. (கஅருஅவ-நம்-கஉo.)

அநுபவம்-ரு-கஉ.....	பகுதி-க.....
காசாவர்க்கம்-க-உ.....	வட்டி-கசூ.....
கால நிர்ணயம்-எ-சஅ.....	

இவைகளைப்பார்க்க.

மிராசுபதிவு.

க. சர்க்காருக்குத் தீர்வைகொடுக்கிற நிலத்திற்குக் கிரயம்வாங்கினவன் பெயரால் மிராசு தாக்கலாகாமலிருந்தாலுங்கூட அந்தக் கிரயத்துக்குப் பங்கம் உண்டாகமாட்டாது. (ச-பு-கஅஙஉவ) செப்டெம்பர்மீ களஉ.)

உ. மிராசுபதிவைக்கொண்டுமட்டும் ஒருவனுடைய பாத்தியத்துக்குச் ஸாதகமாவது பாதகமாவது உண்டாகமாட்டாது. (கஅருசவ-நம்-கஙூ.)

ஙூ. ஒருவன் அநேகவருஷமாக அநுபவித்துவருகிற நிலத்துக்கு வேறொரு அந்நியன்பெயரால் மிராசு தாக்கலாயிருக்கிற ஏக ஆகாரத்தைக்கொண்டு அந்த அந்நியன்பட்சம் கோர்ட்டார் தீர்ப்புச் செய்யக்கூடாது. (கஅருசுவ-நம்-கoஎ.)

சு. மிராசுபதிவுமட்டும் ஜமீன் பாத்தியத்தை ஸ்தாபிக்கிறதற்கு எவ்வளவும் போதாது. (கஅஉஎஙு)-நம்-உ.)

ரு. ஒருவன்பெயரால் நிலத்துக்கு மிராசு பதியப்பட்டிருந்தபோதிலும், அந்தப்படி நாமமாத்திரமாகப் பதியப்பட்டிருப்பதாகவும் அவன் யதார்த்தமான ஸ்வான் அல்லவென்றும் வாசாசாட்சியத்தைக்கொண்டும் இதரமான ஹேதுக்களைக்கொண்டும் கோர்ட்டார் சித்தாந்தநிர்ணயம் செய்யலாம். கிஸ்தி பாக்கிக்காகச் சர்க்காரால் வரவழைக்கப்படும்படியான சங்கட நிவாரணார்த்தமாக ஸ்வான் காரன் வேறொருவன்பெயரால் வியாஜத்துக்கு மிராசு பதியவைப்பது சஹஜமானதால் பாத்தியநிதரிசந விஷயத்தில் மிராசுபதிவு கேவலம் அசாதகம். (கஅருஅஙு - நம் - கருகூ - கஅருகூஙு-ப-உஉகூ.)

அநுபவம்-கஙூ..... | பாகம்-உகூ.....
காலநிர்ணயம்-ஙூள..... |

இவைகளைப்பார்க்க.

முட்டா.

க. யதார்த்தமான மிராசுதாருக்கும் புறக்குடிக்கும் உண்டாகிற வியாஜியத்தைமட்டும் கஅஉஉஙு) ரு-வது சட்டப்படி ரிவினியூ அதிகாரஸ்தர்கள் அங்கீகரிக்கலாமேதவிர, அந்த மிராசுதாரின் பாத்தியமாவது புறக்குடியின் பாத்தியமாவது ஆட்சேபாருடமாயிருந்தால் அப்போர்ப்பட்டவழக்குக் கிரமமான கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படவேண்டும். ஒரு புறக்குடியின் பாத்தியத்தை முட்டாதார் அங்கீகரிக்காமல் இருந்தால் அந்த முட்டாதாரிடத்தில் தனக்குப் பட்டா கிடைக்கவேண்டுமென்று அந்தப்புறக்குடி ஷை சட்டப்படி ரிவினியூ அதிகாரஸ்தர்களிடத்தில் வியாச்சியம் செய்யக்கூடாது. (கஅசுஐஙு)-நம்-ருசகூ-கஅசுஙுகஙு)-ப-கூஅ.)

உ. முட்டா பூர்வீக ஜமீன்தாரியா யிராதபடியால் முட்டா பாக யோக்கியமானது தான். (கஅருஉஙு)-நம்-சச.)

ஙூ. ஜமீன்தார் கிரயத்துக்குவாங்கின முட்டா பாகார்ஹமானது தான். (கஅசசுஙு) - நம்-உ0-கஅசஅஙு)-நம்-சஅ-கஅருளஙு)-நம்-க0உ.)

ச. மூட்டாளைச் சேர்ந்த நிலம் தோட்டமாக உபயோகப்படுமாலல் கழஅஉவுல ஈஎ-வது சட்டம் கரு-வது பிரிவுப்படி நடப்பிக்கப்படவேண்டுமே அல்லாமல் அந்த நிலத்தைப் புஞ்சையாக எண்ணக்கூடாது.

சாட்சியம்-அ..... | ஜமீன்தார்-கள.....

இவைகளைப்பார்க்க.

மூட்டாதார்.

க. தன்னுடைய மூட்டாவுக்குட்பட்ட நிலத்துக்குத் தீர்வை ஏற்படுத்த மூட்டாதார் நிஸ்ஸந்தேஹமான பாத்தியத்தைக் கொண்டிருக்கிறான். (கழருஅஉவுல-ஈம்-கழசூ-ப-உசள.)

உ. எந்த நிலத்தின் தீர்வையானது கவர்ன்மெண்டு அதிகாரஸ்தர்களின் கர்த்தவ்வியத்துக்கு உட்பட்டிருக்கின்றதோ அந்த நிலத்தின் தீர்வை ஏற்பாட்டைப்பற்றி ரிவினியூபோர்டாருடைய உத்தரவின் மேற்பிறந்த உக்கும் ஈமாவானது மூட்டாதானைப் பங்கப்படுத்த மாட்டாதானதால் அந்த உக்கும் ஈமாவின் நிபந்தனையை மூட்டாதார் லட்சியஞ் செய்யவேண்டியதில்லை. (கழருஅஉவுல-ஈம்-களச-கழருகூவுல-ப-ஈடஅ.)

முத்திரைக்கடிதம்.

க. அங்கியராஜ்யாங்கத்திற் பிறந்த ஆதாரவுகளுக்கு முத்திரையைப் பற்றின சட்டங்கள் உபயோகம் அல்ல. (கழஉஅஉவுல்-ஈம்-ஈ.)

உ. பூர்வார்ஜிதத்தில் தன் பாகத்துக்காக வியாஜ்யஞ் செய்த பிறகு பாகஸ்தர்களில் ஒருவன் இறந்துபோய் வாதிக்கு அதிகபாகங் கிடைக்கவேண்டியிருந்தால், அந்த வியாஜ்யத்திலே அவன் ஜாஸ்தியான முத்திரைக்காகிதந் தாக்கல்செய்யும்படி கோர்ட்டார் உத்தரவு கொடுக்கவேண்டுமே அல்லாமல் அந்த நிமித்தத்தைக் கொண்டு அவனுடைய வியாச்சியத்தைத் தள்ளக்கூடாது.(கழருஅஉவுல-ஈம்-கழ-ப-கஅஈ.)

ஊ. வாதியினுடைய தாவாவுக்குச் சரிக்கட்டி வியாஜ்யத்தின் பெறுமானம் நிஷ்காரணமே செய்யப்படவேண்டியதேயல்லாமல், பிரதிவாதியின் தஸ்தாவேஜுகள் நிஷ்பலமாய்ப்போனால் வாதி எவ்வள

வுக்குப் பாத்தியஸ்தனுவாலே அதின்பேரில் பெறுமானம் ஏற்படுத்தக்கூடாது. (கஅருஅஙூ-நம்-கஙூ0-ப-கசூச.)

ச. வாதி போதுமான முத்திரைக்காகிதம் கொடுக்காவிட்டால் அந்தக்குறைவைப் பூரணஞ் செய்யும்படி அவனுக்குக் கோர்ட்டார் உத்தரவு கொடுக்கவேண்டியதே அல்லாமல், அதற்காக அவனுடைய வியாஜியத்தைத் தள்ளக்கூடாது. எந்த ஸ்வத்து கிடைக்கவேண்டுமென்று வாதி தொடருகிறானே அந்த ஸ்வத்துக்குமட்டும் அவன் பெறுமானங்கட்டி முத்திரைக்கடிதங் கொடுக்கவேண்டும். (கஅருஅஙூ-நம்-கஙூஅ-ப-களஉ.)

அப்பீல்-ரு-க0-கஙூ-கச..... | பாப்பர்-கூ.....
காஜி-சு..... |

இவைகளைப்பார்க்க.

மௌவாத்தியம்.

கிராமப்பிரதட்சணம் சு-வது விதியைப்பார்க்க.

மேன்காவல்.

க. மேன்காவல் வேலைபார்க்கிறவனைத் தள்ளுபடிசெய்ய ஜமீன்தாருக்கு அதிகாரம் உண்டு. ஆனல் அந்தவேலைக்கு ஜமீன்தார் வேறொருவனை நியமிக்கவேண்டுமே அல்லாது அவரே அந்த வேலையை நடப்பிக்கக்கூடாது. (கஅகஙஙூ-நம்-க0.)

மோசம்.

க. பிரதிவாதிகளுடைய தகப்பனல் எழுதிக்கொடுக்கப்பட்ட பங்கப பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வாதி தொடர்ந்தான். ஷே பத்திரத்தின் உண்மையை ஒப்புக்கொண்டு முதற் பிரதிவாதியும் அதை ஆட்சேபித்து கூ-ம் பிரதிவாதியும் எதிர்வழக்காடினர்கள். ஷே பத்திரம் அநிஜமென்றும் வாதியு முதற்பிரதிவாதியும் சபட்சமாயிருப்பதாகவும் ருஜுவானபடியால் அந்தப் பொய்யான பத்திரத்தை ஒப்புக்கொள்ளுகிற முதற் பிரதிவாதியைக்கூட அதின் தொகைக்கு உத்தரவாதப்படுத்தக்கூடாதென்று வாதியின் வழக்கு அடியோடே தள்ளப்பட்டது. (கஅருசூஙூ-நம்-கருகூ-கஅசூ0ஙூ-ப-சூ.)

உ. உ-ம் பிரதிவாதிக்கு ஸ்வந்தமான பண்டகசாலையை ஈடுகாட்டி அவன் தனக்குப் பந்தகபத்திரம் எழுதிக்கொடுத்திருப்பதாகவும், அந்தப் பண்டகசாலையை முதற்பிரதிவாதிக்குக் கிடைக்கவேண்டிய தீர்ப்பின் தொகைக்காக ஜப்தி செய்யப்பட்டிருப்பதினாலே அந்தப் பண்டகசாலையின்பேரில் தனக்குத் தீர்கை கிடைக்கவேண்டுமென்றும் வாதி வியாஜியம்செய்தான். தன்னுடைய தீர்ப்பின் தொகையை மோசஞ்செய்வதற்காக வாதியும் உ-ம் பிரதிவாதியும் ஒன்றுசேர்ந்து விவாதபத்திரத்தைக் கற்பித்திருப்பதாக முதற் பிரதிவாதி வியவகரித்தான். உ-ம் பிரதிவாதி விவாதபத்திரத்தின் உண்மையை ஒப்புக்கொண்டான். முதற்பிரதிவாதியையும் பண்டகசாலையையும் நீக்கி உ-ம் பிரதிவாதியைமட்டும் வாதி வழக்குக்குப் பாத்தியப்படுத்தி அசல்த்தீர்ப்பு செய்யப்பட்டது. அதன்பேரில் வாதி அப்பீல் செய்துகொண்டான். விவாதபத்திரம் பொய்யானதென்று ருஜு-வாயிருப்பதால் அதன் உண்மையை ஒப்புக்கொள்ளுகிற உ-ம் பிரதிவாதியைக்கூட அதின் தொகைக்குப் பாத்தியப்படுத்தக்கூடாதென்று அப்பீல்க்கோர்ட்டார் வாதியினுடைய வழக்கை அடியோடே தள்ளினார்கள். வாதிசெய்த அப்பீலில் ஷெ பத்திரத்தின் உண்மையைப்பற்றி விவாதம் இல்லாமல் இருந்தபோதிலும் கற்பனையென்று ஸ்தாபிக்கப்பட்ட ஷெ பத்திரத்தை ஒருவிதத்திலும் உறுதிப்படுத்தக்கூடாதென்று அப்பீல்க்கோர்ட்டார் செய்த தீர்மானம் சரியானதென்று வாதியின் விசேஷ அப்பீலைச் சதர்க்கோர்ட்டார் தள்ளுபடிசெய்தார்கள். (கஅருகூஙு)-ஙம்-கஅஉ-கஅகூ0ஙு)-ப-கச.)

ஊ. பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பந்தகப்பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென்று வாதிசெய்தவழக்கில் க-உ-ங்-ச பிரதிவாதிகள் எதிர்வழக்காடாமல் சும்மா இருந்துவிட்டார்கள். தன்னுடைய நிலத்தை அபஹரிக்கவேண்டியதற்காக வாதியும் க-உ-கூ-ச பிரதிவாதிகளும் ஒன்றுசேர்ந்து விவாதபத்திரத்தை அபாண்டமாய்ச் சிருஷ்டித்திருப்பதாக ஙு-ம் பிரதிவாதி அறுவாதித்தான். வாதிபட்சத்தில் அசல்த்தீர்ப்புச் செய்யப்பட்டது. ஙு-ம் பிரதிவாதி செய்த அப்பீலில் வாதிவழக்கு அப்பீல்க்கோர்ட்டாரால் தள்ளப்பட்டது. ஙு-ம் பிரதிவாதியைத்தவிர மற்றப் பிரதிவாதிகள் அப்பீல் செய்யாவிட்டபோதிலும், விவாதபத்திரம் அகாத கற்பிதமென்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அதின் தொகைக்கு அப்பீல்

செய்யாத பிரதிவாதிகளைக்கூட உத்தரவாதப்படுத்தக்கூடாதென்று அப்பீல்க்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயம் சரியானதென்று சதர்க்கோர்ட்டார் அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. (கஅருசூ (வரு)-நம்-கள அ-கஅசூ0(வரு)-ப-ஈ௨.)

ச. வாதிவழக்குக்கு ஆதாரமான பத்திரம் சந்தேஹாஸ்பதமானதென்று கோர்ட்டாருக்கு அபிப்பிராயமாகிறபட்சத்தில் எதிர் வழக்காடாமல் இருந்துவிட்ட பிரதிவாதிகளைக்கூட அந்தப் பத்திரத்தின் தொகைக்குப் பாதியப்படுத்தித் தீர்ப்புச்செய்யக்கூடாது. (கஅசூ0(வரு)-நம்-கஅ-ப-ககச.)

ஞ. ஒரு பத்திரம் கபடமாய்ப் பிறந்ததாக ருஜுவால் அது முத்திரைக்காகிதத்தின்மேல் எழுதப்பட்டு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலுங்கூட அந்தப்பத்திரத்தைக் கோர்ட்டார் ஊர்ஜிதப்படுத்தக்கூடாது. (கஅசூ0(வரு)-ப-உருரு.)

சூ. பிரதிவாதியை ஈடுவது மனுஷன் மோசஞ்செய்தான் என்கிற காரணத்தினால் வாதி வழக்குக்குத் தோஷாரோபணம் செய்யக்கூடாது. (கஅருஅவரு-நம்-கருரு-கஅருகூவரு-ப-உசூ.)

எ. எந்த மனுஷனை மோசஞ்செய்வதற்காக வாதியின் வழக்கு வஞ்சகமாய்ச் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்தமனுஷனை அந்தவழக்கில் சாட்சியாய் விசாரிக்கப்பட்டு வாதி வழக்கைப்பற்றி அவன் யாதொரு ஆட்சேபமுஞ் சொல்லாமல் இருந்தால், கோர்ட்டார் அந்த வியாஜியத்தைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடாது. அந்த வியாஜியத்தில் உபயவாதிகளுக்கும் உண்டாயிருக்கிற வியவகார விஷயங்களைப்பற்றிமட்டும் கோர்ட்டார் விசாரணை செய்து தீர்மானம் செய்யவேண்டும். (கஅருஅவரு-நம்-கஅஉ-ப-உசக.)

அ. வாதியின் பாகஸ்தனை ஈடும் பிரதிவாதிக்குப் புதையல் அகப்பட்டு அதை அவன் மற்றொரு பாகஸ்தனை முதற்பிரதிவாதியிடத்திற் கொடுத்ததாகவும் அதில் தன்னுடைய அம்சங் கிடைக்கவேண்டுமென்றும் வாதி தொடர்ந்தான். வாதியின் தாவா முதலாவது பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டது. வாதி பிரியாதிற்கண்ட சங்கதிகளை ஈடும் பிரதிவாதி பூரணமாயொப்புக்கொண்டான். வாதியும் ஈடும் பிரதிவாதியும் ஏகத்துவமாய்க்கூடித் தர்வியாஜியம் செய்திருப்பதாகப் பிரத்தியட்சமாய் வெளிப்பட்டபடியால் வாதி

யின் தாவானவை ஒப்புக்கொள்ளுகிற கூடம் பிரதிவாதியைக்கூடப் பாத்தியப்படுத்தக்கூடாதென்று வாதிவழக்கு ஸ்ர்வ பிரதிகூலஞ் செய்யப்பட்டது. (கஅசுஂவரு-நம்-கஉள்-ப.கசுஂ)

காலநிர்ணயம் சஉ-வது விதியைப்பார்க்க.

யாசனை.

க. யாசனையானது யாருடைய நிலத்தில் பிடிக்கப்பட்டதோ அவனுக்கு ஸ்வந்தமே அல்லாமல் அதை எவன் பிடித்தானே அவனுக்கு அந்த யாசனை ஸ்வந்தமாகமாட்டாது. (கஅசஅவ்ப-நம்-கருச-கஅருஂவப-ப-கள-கஅருளவரப-நம்-களச-கஅருஅவப-ப-கஉசு.)

யுத்தப்பிரமாணசட்டம்.

க. யுத்தப்பிரமாணசட்டம் எந்த இடத்தில் பிரசுரஞ்செய்யப்படுகிறதோ அந்த இடத்தில் வேறே யாதொரு கோர்ட்டாருடைய அதிகாரமும் செல்லாது. அந்தச்சட்டம் ஊர்ஜிதமாயிருக்கிறகாலத்தில் அந்தச்சட்டப்படி தகுந்த அதிகாரம்பெற்ற அதிகாரியினால் நடத்தப்பட்ட செய்கைகளைப்பற்றிக் கோர்ட்டுகளில் வியாஜியம் வாங்கக்கூடாது. (கஅஂளவரூநம்-க.)

யூசியன்.

க. ஒரு ஈசோப்பியனுக்கும் ஹிந்துமத ஸ்திரிக்கும் விவாஹம் இல்லாமல் பிறந்த புத்திரர்கள் தாயினுடைய மதானுசாரிகளாக இருந்தால் அவர்கள் ஹிந்து தர்மசாஸ்திர விதிக்குட்பட்டவர்களே. தகப்பனுடைய மரணசாஸனமூலமாக அவர்களுக்குக் கிடைத்த ஸ்திதி பொதுவான ஸ்திதியாயிருக்கின்றது. அவர்களில் ஒருவன் இறந்துபோனால் அவ ஸ்திதி மற்றச்சகோதரர்களைச்சேருமே அல்லாது இறந்தவனுடைய பத்னியைச் சேராது. (கஅசசுவப-நம்-சூ-கஅருசுவப-நம்-கசசு-கஅருஅவப-நம்-கஙூ.)

உ. யூசியருக்குப் பிரத்தியேகமான நியாயப்பிரமாண சாஸ்திரம் இல்லை. அவர்களுடைய சாதாரண வழக்கங்களையாவது அல்லது வியாச்சியத்துக்கு வருகிறவர்களுடைய குடும்ப வழக்கங்களையாவது சாட்சிகளால் அறிந்துகொண்டு தீர்ப்பிரகாரம் தீர்மானஞ் செய்யவேண்டும். (கஅருஅவப-நம்-கஅள-கஅருகூவப-ப-கஉஙு.)

கூ. நிஸ்ஸங்கஸிதமான சுத்த ஹிந்துக்கள் வஸ்திரம் நடைபாவனை முதலான விஷயங்களில் யூரோசியர்களுடைய ஜாதி ஒழுங்குகளை ஆசரித்தாலுங்கூடப் பாத்தியக் கிரமவிஷயங்களில் அவர்கள் ஹிந்து சாஸ்திரவிதிக்கு உட்பட்டவர்களே. (ஷை-நம்.)

ராஜஸ்வதந்தரம்.

க. ஜமீன்தாரிமுதலான பூஸ்திதிகள் ஒற்றிபெற்றவன் அநுபோகத்தில் இருக்கும்போது ஒற்றிவைத்தவனும் அவனுடைய பாத்தியஸ்தர்களும் இறந்துபோயுல் ஒற்றித்தொகையைக்கொடுத்து ஷை நிலத்தை மீட்டுகொள்ள ராஜாக்களுக்குப் பாத்தியம் இல்லை. (கஅருளவு)-நம் கoகூ-கஙூசூ-கஅசூoவு)-ப-உகசூ.)

உ. ஒருவனுடைய சொத்து வேறொருவனுடைய அடைக்கலத்தில் இருக்கும்போது அந்த சொத்துக்குப் பாத்தியஸ்தன் இறந்துபோயுல் அந்தச் சொத்தின்மேல் ராஜாக்களுக்குப் பாத்தியம் இல்லை. (ஷை.)

ங. தாயாதிகள் முதலான பந்துக்களுடைய சம்மதம் இல்லாமல் ஒரு விதந்து பூஸ்திதியைப் பராதீனம் செய்யக்கூடாதென்று தர்ம சாஸ்திரத்தில் விதிக்கபட்டிருந்தபோதிலும, ராஜாங்கத்தார் ஷை விதந்துவுக்குப் பந்துவாயிராதபடியால் ஷை பராதீனத்தைப்பற்றி ஆட்சேபிக்கவும் அந்த ஸ்வத்துக்குப பாத்தியங்கொண்டாடவும ராஜாங்கத்தாருக்குச் சாஸ்திரப்படி அதிகாரம் இல்லை. (ஷை.)

ச. கண்ணடதேசத்தில் தரிசு நிலங்களும் நிர்வம்சமாயிறந்துபோனவர்களுடைய ஸ்திதிகளும் கவர்ன்மென்றாருக்குப் பாத்தியமே தவிர வேறே நிலம் பாத்தியம இல்லை. (கஅஙகவு-நம்-கூ.)

ராஜிநாமா.

க. கட்சிக்காரர்கள் வியாஜியவிஷயத்தைப்பற்றிச் சமாதானமாகயாதொரு கிரமமான ஏற்பாடுசெய்துகொண்டால், அதைக் கோர்ட்டார் தடுக்கக்கூடாது. கட்சிக்காரர்கள் ஒரு வியாஜியத்தைச் சமாதானமாய்த் தீர்த்துக்கொள்ள விரும்பினுல் அந்த வியாஜியத்தில் சமாதானமில்லாமல் நடவடிக்கை நடப்பிக்கும்படி அவர்களைக் கோர்ட்டார் பலவந்தம் பண்ணக்கூடாது. (ச-பு-கஅஙகவு)-ஆகஸ்டுமீ களவ.)

உ. ஒரு வியாஜியத்தில் வாதியும் சில பிரதிவாதிகளுமட்டும் ராஜியாய்ப்போகலாம். மற்றப் பிரதிவாதிகள் சம்பந்தப்பட்டவரையில் அந்த வியாஜியத்தைக் கோர்ட்டார் விசாரித்துத் தீர்மானம் செய்யலாம். (ச-பு-கஅஉஎவ)-ஜூலைமீ கoஉ, கஅருகவ)-ச-தி-ப-க.)

ஊ. கட்சிக்காரர்களாவது அவர்களுடைய வக்கீல்களாவது ராஜிநாமாவைக் கோர்ட்டில் கொடுத்து அது தங்களுடைய பூர்ணசம்மதத்துடன் பிறந்ததென்று தெரியப்படுத்திக்கொண்டால்மட்டும் அந்த ராஜிநாமாவைக் கோர்ட்டார் அங்கீகரித்துத் தாக்கல் செய்துகொள்ளலாம். (கஅஊஅவ)-நம்-ச.)

ச. கடனைப்பற்றிப் பிறக்கப்பட்ட ராஜிநாமாவானது கோர்ட்டாருடைய தீர்ப்புக்குச் சமானமாயிருப்பதால் அந்த ராஜிநாமா தாககலானபிற்பாடு ஷை கடனைப்பற்றிக் கோர்ட்டார் சந்தேஹிக்கக்கூடாது. (ச-பு-கஅருசவ)-ஏப்பிரல்மீ கoஉ.)

எ. நிஜவேற்றுங்காலத்தில் சந்தேஹிக்கும்படியான விதமாய் விவரமில்லாமல் எழுதப்பட்டிருக்கிற ராஜிநாமாவைக் கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது. (ச-பு-கஅசஊவ)-ஜூன்மீ கஉஉ.)

ஏ. வியாஜியத்திற்குச் சம்பந்தப்படாத நாதாபாத்தியத்தைக் கண்டெழுதப்பட்டிருக்கிற ராஜிநாமாவைக் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளக்கூடாது. (சதர் லெற்றர். கஅஊசுவ)-மார்ச்சுமீ ஊகஉ.)

ஐ. வியாஜியத்தில் கட்சிக்காரனுயிராதவனல் செய்துகொடுக்கப்பட்ட ராஜிநாமாவை ஏற்றுக்கொள்ளக்கூடாது. (கஅருகவ)-பகஉள.)

கக. கட்சிக்காரர்களால் செய்துகொள்ளப்பட்ட ராஜிநாமா நியாயவிரோதமாயிருப்பதாகப் பிரத்தியட்சமாய்த் தெரியவந்தால் கோர்ட்டார் அதை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடலாம். (ச-பு-கஅருக-வரு-நவம்பர்மீ கஉஉ.)

கஉ. கவர்ன்மென்றுக்கும் தீர்வை செலுத்தவேண்டியதற்கும், நிலத்தைச் சிலகாலம் அநுபவிக்கவேண்டியதற்கும், ராஜிநாமாவில் நிபந்தனைகள் கண்டிருந்தால், அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவது கோர்ட்டாருக்கு அசக்தியமானதால் அந்த நிபந்தனைகள் அடங்கிய ராஜிநாமாவைக் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளக்கூடாது. (ச-பு-கஅருஎ வரு-நவம்பர்மீ ககூஉ.)

கஙு. ஒரு வியாஜ்யத்தில் ஸ்வத்தை அடையவேண்டிய வாதி ஒருவரையிருக்க அவரை அல்லாமல் மற்றொரு வாதியால் செய்துகொள்ளப்பட்ட ராஜிநாமா வியர்த்தமே. (கஅருகூவரு-நம்-அக-ப-ககூஙு.)

கச. ஒரு ராஜிநாமா கோர்ட்டில் தாக்கலான பிற்பாடு கட்சிக்காரர்களில் ஒருவன் புத்திக்குறைவினால் அதற்குத் தான் சம்மதித்ததாக சூட்சேபித்தால் அந்த நிபந்தியத்தைத்தள்ளிவிட்டோ கோர்ட்டார் ராஜிநாமாவை ரத்துச் செய்யக்கூடாது. (ச-பு-கஅசகூவரு-ஆகஸ்மீ உஎஉ.)

கஎ. ஒரு ராஜிநாமா மோசமாய்ப் பிறந்ததாகத் தீர்க்கமாய் நிதர்சனமாயில்லாமட்டும் அதை ரத்துச்செய்யலாமெதவிர கேவலம் சந்தேகத்தின்மேல் அதை ரத்துச்செய்யக்கூடாது. (கஅசசவரு-நம்-அன.)

கசூ. கோர்ட்டில் தாக்கலான ராஜிநாமாவின் நிபந்தனைகளை வேறுபடுத்தவேண்டுமென்று உபயகட்சிக்காரர்களும் அபேட்சித்தாலுங்கூடக் கோர்ட்டாருடைய உத்தரவை மீறி அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் வேறு நிபந்தனைகளை வேறுபடுத்தக்கூடாது. (ச-பு-கஅசசூவரு-பிப்பிரவரிமீ உகூஉ.)

களு. ஒரு ராஜிநாமாவின் தாற்பரியத்தைப்பற்றிக் கட்சிக்காரர்களுக்குள் விவாதம் உண்டானால் கோர்ட்டார் அவர்களை வரவழைத்து விசாரணைசெய்து அந்த ராஜிநாமாவினுடைய உண்மையான அர்த்தம் இன்னதென்று நிச்சயிக்கலாம். (ச-பு-கஅசஅவரு-செப்டெம்பர்மீ கஅஉ)

கஎ. நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ராஜிநாமாவில் சொத்தின்விவரமும் மதிப்பும் சொத்து இன்னார் வசத்தில் இருக்கிறதென்பதும் தெளிவாய்ச் சொல்லப்படாமல் இருந்தால் அந்த விஷயங்களைப்பற்றிக் கோர்ட்டார் ருஜுவினங்கலாம். (ச-பு-கஎஞச (ஙா)-அக்டோபர்மீ உ0ஏ.)

ககூ. கோர்ட்டில் கிரமமாய்த் தாக்கலான ராஜிநாமாவை ரத்துச் செய்யவேண்டியதற்காக வியாஜியம் வந்திருக்கிறபட்சத்தில், அந்த ராஜிநாமாவை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளுகிற கட்சிக் காரனிடத்தில் கோர்ட்டார் ஜாமீன்வாங்கிக்கொண்டு அந்த ராஜிநாமாவை நிறைவேற்றலாம். (ச-பு-கஎசூ(ஙா) அக்டோபர்மீ உசஏ.)

உ0. ஒரு வியாஜியத்தின் கட்சிக்காரர்களில் சிலரால்மட்டும் செய்துகொள்ளப்பட்ட ராஜிநாமாவிற் சேராத கட்சிக்காரன் அந்த விவாத ஸ்திதியைப்பற்றி நூதனவியாஜியம் செய்துகொள்ளலாம். (கஎருகூஙா-நம்-ருசூ-கஎசூ0ஙா-ப-க0ச.)

உக. யாதொரு சட்டப்பிரகாரம் நியமிக்கப்படாத பஞ்சாயக்தார் முன்பாகக் கொடுக்கப்படுகிற ராஜிநாமா செல்லாது. அதில் அதில் சொல்லப்படுகிற சங்கதிகளைக் கட்சிக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக எண்ணவேண்டும். (கஎசூ0ஙா-நம்-ககூச-ப-ககூஅ.)

உஉ. ராஜிநாமா செய்துகொண்ட கட்சிக்காரர்கள் அதனிடத்து ஜாப்பிரகாரம் நடக்கப் பாத்தியப்பட்டிருக்கிறார்கள். (கஎருஅஙா-நம்-ககஙூ-ப-உசஙூ.)

உங. சொத்து விவரம் இல்லாத மூன்றின ராஜிநாமாவைப்பார்க்கிலும் சொத்து விவரங்கண்ட பிந்தின ராஜிநாமா உத்தேஷ்டமாகவும் அநுஷ்டிக்கப்படவேண்டியதாகவும் இருக்கின்றது. (கஎருகூஙா-நம்-சஙூசூ.)

உச. ஒரு வியாஜியத்தில் வாதியும் முதற்பிரதிவாதியுமட்டும் ராஜிநாமா செய்துகொண்டபிற்பாடு அந்த ராஜிநாமாவை முதற்பிரதிவாதி ஆட்சேபித்தால், அந்த ராஜிநாமா உண்மையானதென்றும் உ-ம் பிரதிவாதியின் சம்மதத்தின்மேல் அது பிறந்ததாகவும் பூரணமாய் ருஜுவாகிறபட்சத்தில், அந்த ராஜிநாமாவினிபந்தனைப் பிர

காரம் அந்த வியாஜ்யத்தில் கோர்ட்டார் தீர்ப்புச்செய்யலாம். (கஅருகூஏநு-நம்-கூசூ-ப-கஎசூ.)

உரு. ஒருவன் கட்சிக்காரனுபிராத வியாஜ்யத்திற் பிறந்த ராஜிநாமாவினல் அவனுக்குப் பாதகம் உண்டாகமாட்டாது. (கஅகூக ஏரு)-நம்-கூ-ப-ககசஅ.)

அநுகூல விபரீதம்-உக.....	சித்தாந்தமும் தீர்ப்பும்-சஅ.....
சாட்சியம்-று-கூஅ.....	

இவைகளைப்பார்க்க.

ரூஙூ.

சாட்சியத்தைப்பார்க்க.

ரெஜிஸ்டர்.

க. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவின் உண்மை கோர்ட்டாருக்குத் திர்ப்பாகும்படி ஸ்தாபிக்கப்பட்டால்மடடும் அந்த ஆதாரவை ரெஜிஸ்டர் செயயப்படாத ஆதாரவைபபார்க்கிலும் விசேஷமாக எண்ணலாம். (கஅருகூஏநு-நம-உஉஅ-கஅசூ0ஏநு-ப-எ0.)

உ. கஅசுகூஏரு) கசூ-வது ஆக்ட்டுப்படி ரெஜிஸ்டர் செய்யப்படாத ஒற்றிபத்திரமானது அதற்குபபிற்பாடு பிறந்த கிரயசாஸனத்தினல் ரத்தாகமாட்டாது. (கஅறுபஏநு-நம்-கூ0)

கூ. கஅ0உஏரு) கூக-வது சட்டம கசூ-வது பிரகரணப்படி ரெஜிஸ்டர் செய்யப்படாத இறும் சன்னது எவ்வளவும் செல்லாது. அது ஒரு கோர்ட்டாரால ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலுங்கூட இதர கோர்ட்டார் அதை அபதார்த்தமென்றே நிகிர்ஷடம் செய்யவேண்டும். (கஅருகூஏநு-நம-கூசூ.)

சாட்சியம்-ச0-வது விதியைப்பார்க்க.

லஞ்சம்.

க. ஒரு கோர்ட்டில் நடக்கிற வியாஜியவிஷயத்திலாவது அல்லது தீர்மானிக்கப்பட்ட வியாஜியத்திலாவது அந்தக்கோர்ட்டி னியாயாதிபதி லஞ்சம்வாங்கினலும், அல்லது அவருடைய உத்தியோக

பலத்தினால் அக்கிரமமான பிரயோஜனங்களைச் சம்பாதித்தாலும், கஅ0உவது சூ-வது சட்டம் அ-வது பிரிவு உபயோகமேதவிர, அந்த நியாயாதிபதி ஒரு ராஜாவுக்குப் பட்டமாகிறவிஷயத்தில் வேண்டிய கிருஷிகளைச் செய்தால் அந்த விஷயத்துக்கு வேறு சட்டம் உபயுக்தம் அல்ல. (கஅகஉவது-நம்-ஆக.)

கடன்பத்திரம்-ககூ.....	பஞ்சாயத்து-சு-க0.....
காரியஸ்தன்-எ.....	மாநகரம்-உ.....

இவைகளைப்பார்க்க.

வக்கீல்கள்.

க. கவர்ன்மென்று வக்கீலைத்தவிர மற்றவக்கீல்கள் வகாலத்து தாக்கல் செய்யாமல் யாதொரு வியாஜியம் முதலான எந்த விஷயங்களிலாவது பேசக்கூடாது.

உ. தகுந்த அதிகாரம்பெற்ற வக்கீல் என்கிற சப்தத்துக்குக் கிரமமாய் நியமிக்கப்பட்ட வக்கீல் என்று அர்த்தமாகிறது. அந்த வக்கீலைத்தவிர முக்தியார்நாமாமூலமாய் வியாஜியம் நடப்பிக்கக்கூடாது. (கஅருஅவது-நம்-கச-பி அ0.)

ஊ. ஒரு கட்சிக்காரன் ஒன்றுக்கிகான்று சம்பந்தமான பல வியாஜியங்களில் ஒரேவக்கீலை நியமித்துக்கொண்டபோதிலும் ஒவ்வொரு வியாஜியத்திலும் அந்த வக்கீலுக்குத் தனித்தனியே வகாலத்துநாமா கொடுக்கவேண்டும்.

சு. ஒவ்வொரு வகாலத்துநாமாவும் கட்சிக்காரன்பெயரால் எழுதப்பட்டு ஒரு சீவில் அதிகாரியின் முன்பாக அதில் அந்தக்கட்சிக்காரன் கையெழுத்துவைத்து அந்த அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

எ. கட்சிக்காரன் வியாதிமுதலான காரணங்களால் கோர்ட்டுக்கு வரக்கூடாமலிருக்கும்போது வகாலத்துநாமாவில் சாட்சி போட்டவர்கள் சீவில் அதிகாரிமுன்பாக ஆஜராகி அதைப்பற்றி ருஜூச் சொல்லவேண்டும். (சு-பு-கஅருஅவது டிசம்பர்மீ கஉ.)

ஏ. வக்கீலின் பெயரை வகாலத்தில் எழுதப்படாமலிருந்தால் அந்த வகாலத்துநாமாவை யாதொரு அதிகாரியும் உறுதிப்படுத்தக்கூடாது. (ஷ.)

எ. வகாலத்துநாமாவை அங்கிகரித்துக்கொண்டதாக வக்கீலின் ஸ்வஹஸ்தலிகிதமாக அதின்மேல் எழுதியிருந்தால்மட்டும் அதைக் கோர்ட்டார் அங்கிகரித்துத் தாக்கல்செய்துகொள்ளலாம்.

அ. கட்சிக்காரன் ஒரு வக்கீல நியமித்துக்கொண்டபிற்பாடு இன்னமும் அதிகவக்கீல்களை வைத்துக்கொள்ளவேண்டியிருந்தால் முந்தின வகாலத்துநாமாவுக்குப் பதிலாய் எல்லா வக்கீல்கள் பெயருக்கும் முதல்வகாலத்துநாமா எழுதிக்கொடுக்கலாம். அல்லது அதிகமாய் நியமிக்கப்படுகிற வக்கீலாருக்கு அந்தக் கட்சிக்காரன் தனிமையில் ஒரு வகாலத்துநாமாவாவது எழுதிக்கொடுக்கலாம். (ச-பு-கஅருகூவு ஜ்ஞலாட் உரை.)

கூ. ஒரு கட்சிக்காரன் தனக்காகப் பணம்வாங்கவேண்டியதற்காக ஒரு வக்கீலுக்கு வகாலத்தும் கொடுக்கவேண்டியிருந்தால் அந்த விவரத்தை வெளிப்படையாய்க்கண்டி வகாலத்துநாமாக் கொடுக்கவேண்டும். (ச-பு-கஅருகூவு ஜ்ஞன்ாட் உரை.)

கஎ. ஒரு வியாஜ்யத்தில் ஒரு கட்சிக்காரன் இடத்தில் வகாலத்துப்பெற்ற வக்கீல் பிற்பாடி அதேவிஷயம் விசாரணைக்கு வருமாறல் வேறு கட்சிக்காரனுடைய எதிரிபிடத்திலும் வேறு வக்கீல் வகாலத்துநாமா பெற்றுக்கொள்ளத் தண்டமில்லை. (ச-பு-கஅருகூவு)-ஈவம்டாட்ர் நிஉ.)

கக. ஒரு வியாஜ்யத்தில் ஒரு கட்சிக்காரனுக்காக ஒருவன் வக்கீலாயிருந்தபோதிலும் அந்த வியாஜ்யத்தில்பாவனைபிற்பாடி நிஜமாவேறுவியாஜ்யத்தில் செய்யப்பட்ட உத்தரவின்மேல் அப்பீல் செய்யப்படுமாறல் அந்த அப்பீலில் புதிதாய் வகாலத்துநாமா தாக்கல்செய்யாமல் அந்த வக்கீல் வேறு கட்சிக்காரனுக்காகப் பேசக்கூடாது. (ச-பு-கஅருகூ0வு ஜ்ஞகஸ்நிட்ர் கஎஉ.)

கஉ. பிரதிவாதியினுடைய வக்கீல் உத்தரவு வாங்கிக்கொண்டு ஆஜர் இல்லாமல் இருக்குங்காலத்தில் வியாச்சியத்தை ஒரு கட்சியாய்க் கோர்ட்டார் தீர்மானிக்கக்கூடாது. (கஅருகூவு-நம்-சுருப-கஉஎ.)

கங. முக்கிய காரணங்கள் இருக்குமாறல் ஒரு கட்சிக்காரனுடைய வக்கீல் வேறொரு வக்கீலினுடைய ஸஹாயத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கோர்ட்டார் உத்தரவுகொடுக்கலாம். அப்படிப்பட்ட விஷயத்தில் கோர்ட்டாருடைய யுக்தப்படி வே உ-வக்கீல்

களும் பேசவேண்டியவர்களே தவிரக் கட்சிக்காரனுடைய வக்கீலுக்குப்பதிலாய் மற்றொரு வக்கீல்மட்டும் பேசக்கூடாது.

கச. சதர்க்கோர்ட்டு வக்கீல்களுக்குக் கீழ்க்கோர்ட்டில் பேசப் பாத்தியமில்லை. கீழ்க்கோர்ட்டு ஜட்ஜ் உத்தரவு கொடுத்தால்மட்டும் அவர்கள் அந்தக்கோர்ட்டில் பேசலாம். (ச-பு-க அருசுவரு மார்ச் சுபீ நூடை)

கரு. சீவில்க்கோர்ட்டு வக்கீல்கள் அந்தக்கோர்ட்டுக்குக் கீழ்ப் பட்ட சபார்டினேட் ஜட்ஜ் பிரின்சிப்பால் சதராமீன் சதராமீன் இவர் களுடைய கோர்ட்டுகளிலும் பேசலாம். (ச-பு-க அசாநூவரு ஆக ஸ்டிபீ உகடை.)

ககூ. ஒரு வியாஜ்யத்தில் ஒரு கட்சிக்காரனால் நியமிக்கப்பட்ட வக்கீலினுடைய கடமை அந்த வியாஜ்யம் தீர்ப்பானவுடனே முடி ந்துபோய்விடும். பிற்பாடு அந்தக் கட்சிக்காரனுடைய உத்தரவு இல் லாமல் புதர் விசாரிணைக்காக மனுக்கொடுத்துப் பேசவேண்டியது அந்த வக்கீலின் கடமையல்ல. ஆனல் அந்த வக்கீலுக்கு இஷ்ட மிருந்தால் நூதனமான வகாலத்துநாமா இல்லாமலே அவர் பேச லாம். புதர் விசாரணைக்காக யாதொரு முயற்சிசெய்த வக்கீல் அந்த வியாஜ்யத்தின் விசாரணைக்காலத்திலும் கூடஇருக்கவேண்டியது. அவருடைய கடமையாயிருக்கின்றது.

கள. ஆறுவாரத்துக்கு அதிகமாக யாதொரு வக்கீல் உத்தரவு பெற்றுக்கொண்டால் அவர் இல்லாதகாலத்தில் விசாரணையாகத் தக்க வியாஜ்யங்களில் பேசவேண்டியதற்காகக் கட்சிக்காரர்கள் வேறே வக்கில்களை நியமித்துக்கொள்ளும்படி அந்தவக்கீல் ஜாக்கி ரதைச் செய்யவேண்டும்.

கஎ. வியாஜ்யங்களின் அசல் அடுக்குகளை வக்கீல்கள் வாசித் துப்பார்க்கும்படி கோர்ட்டார் இடங்கொடுக்கக்கூடாது. ஆனல் வேண்டிய தஸ்தவேஜுகளுக்கு அவர்கள் நகல்பெற்றுக்கொள்ள லாம்.

ககூ. விசாரணைக்காலத்தில் வக்கீல் பேசவேண்டிய விஷயங்களை யெல்லாம் அவர் கோர்ட்டாருக்குச் சொல்லவேண்டுமேயல்லாமல் எதிர்கட்சி வக்கீலுக்குச் சொல்லக்கூடாது.

உ0. உபயவாதிகளுக்கும் வக்கீல்கள் இருக்கிறபட்சத்தில் வாதி அல்லது அப்பீல் வாதியினுடைய வக்கீல் முந்திக் கட்சிப்பேசவே

ண்டும். அசல் பிரதிவாதி அல்லது அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் அதற்கு மறுமொழி சொல்லவேண்டும். பிற்பாடு அசல்வாதி அல்லது அப்பீல்வாதியின் வக்கீல் அதற்குப் பிறகு உத்தரஞ் சொல்லலாம்.

உக. உபயவாதிகளுடைய வக்கீல்களும் பேசினபிற்பாடு கோர்ட்டாரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குமட்டும் அவர்கள் உத்தரவு சொல்லவேண்டியதேதவிர வேறே யாதொரு வார்த்தைகளையும் பேசக்கூடாது. தீர்ப்பானபிற்பாடு எந்த நிமித்தத்தைப்பற்றியும் தீர்ப்புச்செய்யப்பட்ட விஷயத்தைப்பற்றி ஒரு வக்கீலும் பேசக்கூடாது.

உஉ. வக்கீல் நியமித்துக்கொண்ட கட்சிக்காரன் அந்த வகாலத்தைத் தள்ளிக்கொள்ளாதவரையில் அவன் ஸ்வயமாய்க் கோர்ட்டில் பேசக்கூடாது. (ச-பு-கஎஉகஅரு) மாச்சுபீ கறை.)

உங. கட்சிக்காரனுக்கு நிற்றம் இல்லாதபோது வக்கீல் வேண்டியதில்லையென்று தள்ளிக்கொள்ளலாம். அப்படித் தள்ளிக்கொள்வதற்குக் கட்சிக்காரன் காரணம் சொல்லவேண்டியதில்லை. (ச-பு-கஎசஊரு) ஈவம்பர்பீ கஙை.)

உச. வகாலத்துக்கொடுத்த கட்சிக்காரன் இறந்துபோனால் உடனே அந்த வகாலத்து ரத்தாய்விடும். (ச-பு-கஎஅஎரு) மாச்சுபீ உஉஅ.)

உற. சட்டத்தில் யிதிக்கப்பட்ட நிரமமான பீசுக்குமேல் அதிகப்பீசு கொடுத்துப்போ கோர்ட்டார் உத்தரவு கொடுக்கக்கூடாது. ஆனால் அந்த அதிகப்பீசைப்பற்றிக் கட்சிக்காரனுக்கும் வக்கீலுக்கும் உடன்படிக்கை நடந்திருந்தால் அதைப்பற்றி வக்கீல் நிரமவியாஜியம் செய்துகொள்ளலாம். (சதுர்-லெற்றர்-கஎசஎரு)-ஜநவரிபீ எஅ. ச-பு-கஎசஎரு) நவம்பர்பீ உஅஅ.)

உசூ. வக்கீலின் பீசைப்பற்றிக் கட்சிக்காரன் செய்யும் உடன்படிக்கை விநதரூபமாயிருக்கவேண்டியது அகத்தியம் அல்ல. (கஎசூஅரு-நம்-கஅள-ப-கஎசூ.)

உள. எதிர்கட்சிக்காரனுடைய விவரபத்திரிகைகள் கொடுக்கப்படுகிறதற்குமுன் வாதி தன்னுடைய வியாஜியத்தைத் தள்ளிக்கொண்டாலுங்கூட வாதியினுடைய விவரபத்திரிகைகளைத் தாக்கல்

செய்த வக்கீலுக்குச் சட்டப்படி பாதிப்பீசு கிடைக்கவேண்டும். (கஅருஅவரு)-நம்-சருக-கஅருகூவரு)-ப-உச.)

உஅ. வக்கீலின் அசட்டையினாலே கட்சிக்காரனுக்கு நேரிட்ட நஷ்டத்தைக்குறித்து அவன் நியமவழக்குச் செய்துகொள்ளலாம். (சதர்-லெற்றர்-கஅருஅவரு) மார்ச்சுமீ சவ.)

உக. வக்கீல்களின் பெரிதான அஜாக்கிரதைக்காக அவர்கள்மேல் கட்சிக்காரன் வியாஜியஞ்செய்யலாம். (கஅளவரு - நம் - கூ-ப-கருo.)

கூo. வியாஜியங்களை நடப்பிக்கமாட்டேனென்று வக்கீல்கள் நிராகரித்ததைப்பற்றியும் அவர்கள் மனப்பூர்வமாய்க் காலதாமசஞ் செய்ததைப்பற்றியும் தர் அபிப்பிராயஞ்சொல்லி மோசஞ்செய்த தைப்பற்றியும் கட்சிக்காரர்கள் மனுவாலமாகக் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் நியமவியாஜியஞ் செய்யா தவனையில் அவர்களுக்கு நஷ்டம் கிடைக்கமாட்டாது. (சு-பு-கஅசoவரு) நவம்பர்மீ கசூவ.)

கூக. கஅகசூவரு-கச-வது சட்டம் கo-வது பிரிவு முதலாவது உட்பிரிவுப்படி சதர்க்கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தாமல் வக்கீலை அந்த உத்தியோகத்தில் இருந்து சஸ்பெண்ட் கள்ளிவிடலாம். (சு-பு-கஅசூகவரு-மார்ச்சுமீ கவ.)

கூஉ. தாழ்ந்த கோர்ட்டாராள் தள்ளப்பட்ட வக்கீல்கள் செய்துகொள்ளும் அப்பீல்கள் சீனில் ஜட்ஜ் மூலமாக அனுப்பப்படவேண்டும். கோர்ட்டில் பிரசித்தமாக யாதொரு விசாரணையும் இல்லாமல் சதர்க்கோர்ட்டார் அந்த அப்பீல்களின்மேல் நியமமான உத்தரவு செய்வார்கள். (சு-பு-கஅருஅவரு ஜூனீமீ கூவ.)

கூக. பாப்பர் வாதிகூட வக்கீலுக்குத் தருந்த முத்திரைக்காகி தத்தின்மேல் வகாலத்துநாமாக் கொடுக்கவேண்டியது அவசரம். வகாலத்துநாமா பெறுத வக்கீலுக்கு கஅகசூவரு) கச-வது சட்டம் உரு-வது பிரிவுப்படி பீசு கிடைக்கமாட்டாது. (கஅருஉவரு)-நம்-கஉ.)

கூச. ஜீவநாம்ச வியாஜியங்களில் வாதி கேட்கப்பட்ட ஒரு வருஷத்திய ஜீவநாம்சத்தின்மேல் வக்கீல்பீசு நிஷ்கர்ஷை செய்ய வேண்டும். (கஅருகவரு)-நம்-அக.)

கூரு. கஅகஅவரு) எ-வது சட்டப்பிடி அபிப்பிராயமட்டுங் கொடுத்த வக்கீலுக்கு, கஅகசூவரு) கச-வது சட்டம் உo-வது பிரிவிற்

கண்ட பிரதிபலன்மட்டும் கிடைக்குமேதவிர அதற்குமேல் அதிகத் தொகை கிடைக்கமாட்டாது. (கஅநிஉவப-நம்-கஉ.)

கூசு. கஅசாசுவரு க-வது அந்த்ட்டு உண்டாகிறதற்குமுன் பீசைப் பற்றி வக்கீலும் கட்சிக்காரரும் அந்தரங்கத்தில் எற்பாடு செய்து கொள்ளக்கூடாதானபடியால் அந்த ஏற்பாட்டின் அதிகாரத்தினால் வக்கீல் செய்யும் வியாஜ்யியம் செல்லாது. (கஅநிஉவர-நம்-கஉ.)

கூஎ. பிரதிவாதி செய்யவேண்டியிருந்த சில வியாச்சியங்களின் பொறுப்புக்காக அவன் தன்னிடத்தில் கடன்வாங்கினதாகவும் அந்தத் தொகையும் வட்டியும் கிடைக்கவேண்டுமென்றும் வாதி வழக்கிட்டான். விவாத பத்திரம் கற்பனையென்று பிரதிவாதியால் அட்சேபிக்கப்பட்டது. வாதியின் மைத்துனரான கோர்ட்டு வக்கீல் முன்பாக, வெ பத்திரம் பிறந்ததாகவும் உடனே வியாச்சியங்கள் செய்யவேண்டியதற்காக வெ வக்கீலுக்குப் பிரதிவாதி வகாலத்து நாமா கொடுத்ததாகவும் ரூ-வான நந்தவிர அந்த வியாஜ்யியங்களில் பிரதிவாதிக்குக் கிடைக்கும்படி நிற்பதான தொகையைக்கொண்டு வாதியின் கட்சிக்காரர் பிரதிவாதி கொடுக்கிறதென்றும் இனிமேலும் பிரதிவாதி வேறே வியாஜ்யியங்கள் செய்யவேண்டியிருந்தால் அதற்காகவும் வாதியிடத்தில் அவன் கடன்வாங்கிக்கொண்டி அந்த வியாஜ்யியங்களையும் வாதிமூலமாகவே பெற்றுதென்றும் விவாத பத்திரத்தில் நிபந்தனை கையிடப்பட்டிருந்தது. வாதியின் மைத்துனனான வெ வக்கீலுக்கு சன்மானமாகப் பிரதிவாதிக்கு வாதி மேலேகையிட்டபடி கடன்கொடுத்ததாகப் பிரகாசமானபடியாலும் கடன்கொடுக்கிறதென்றும் கோர்ட்டு வக்கீலும் சேர்ந்து வியாஜ்யிக்காரர்களுக்கு உதவிசெய்வது இங்கிலீஷ் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட மெயிண்டினன்ஸ் என்கிற வியாஜ்ய ஸஹாயதோஷத்துக்குட்பட்டதானதாலும் வாதிவழக்குச்செல்லாதென்று தள்ளப்பட்டது. (கஅநிகூவர-நம்-கஉகூ.)

கூஅ. ஒரு தினத்தில் விசாரணைக்காகக் குறிக்கப்பட்ட வியாஜ்யியங்களில் பாரிஸ்ட்டர்கள் அட்டார்னிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆரம்பத்திலும் அதற்குப்பிற்பாடி வக்கீல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் அதற்குப்பிற்பாடி வக்கீல்கள் இல்லாமல்

கட்சிக்காரர்கள் ஸ்வயமே சம்பந்தப்பட்ட விஷயங்களையும் விசாரணை செய்யவேண்டும். ஆனல் அந்தத்தினத்துக்கு முன்னமே விசாரணையாகாமல் நிறுத்தப்பட்டிருக்கிற மியாஜியங்கள் இருந்தால் அவைகளை மற்றவேலை துவக்குகிறதற்குமுன் விசாரிக்கவேண்டும்.

சுகூ. தாழ்ந்த கோர்ட்டில் பேசுகிற சதர்க்கோர்ட்டு வக்கில் தேச பாஷை தெரிந்தவராகவும் எதிர்கட்சி வக்கில் இங்கிலீஷ் தெரியாதவராகவும் இருந்தால் அந்தச் சதர்க்கோர்ட்டு வக்கில் கோர்ட்டாருடைய பகிரங்கமான உத்தரவில்லாமல் இங்கிலீஷ்பாஷையில் பேசக்கூடாது. (ச-பு-கஅருஅவரு-ஏப்பிரல்மீ உகஉ.)

சுo. கீழ்க்கோர்ட்டு நியாயாதிபதியின் ஸ்வபாஷை இங்கிலீஷ் பாஷையாயிருந்தால் அந்தப்பாஷையில் அந்தக்கோர்ட்டார் இடத்தில் பாரிஸ்டர்களும் அட்டார்னிகளும் பேசலாம். எதிர்கட்சி வக்கீல் இங்கிலீஷ் தெரியாதவராயிருந்தால் அவருக்கு ஷை இங்கிலீஷ் நியாயவாதத்தை வியாக்கியானம்செய்யும்படி நியாயாதிபதி திட்டம் செய்யவேண்டும். (ச-பு-கஅருஅவரு ஜூலைமீ உஉஉ.)

சுக. வக்கில்கள் அவர்களுடைய கட்சிக்காரர்கள் பட்சமாக வாக்குதாட்டியாய்ப் பேசினல் அவர்கள் அபபாடப்பேசக்கூடாதென்று கோர்ட்டார் அநியாயமாக அவர்களைக் கண்டிக்கக்கூடாது. (ச-பு-கஅகஉவரு நவம்பர்மீ சுஎ.)

சுஉ. வக்கில்கள் தகுந்த யோக்கியர்களைத் தங்கள் குமாஸ்தாக்களாக நியமித்துக்கொண்டு அந்தக்குமாஸ்தாக்கள் கட்சிக்காரர்களிடத்தில் பணம் பறிக்காதபடி வக்கில்கள் அவர்களாற் கூடிய உபாயங்களைச் செய்யவேண்டும்.

சுங. வக்கீலின் குமாஸ்தா எந்த நிமித்தத்தைப்பற்றியும் கோர்ட்டைத்தவிர வேறே எந்த அறையிலும் நுழையக்கூடாது. அந்தக் குமாஸ்தா கோர்ட்டில் வக்கிலினுடைய மேஜைக்குச் சமீபமாகவும் நெருங்கிவரக்கூடாது. ஆனல் வக்கீல் கூப்பிட்டாலும் அல்லது வக்கீல் இடத்தில் தஸ்தாவேஜுகள் கொடுக்கவேண்டியிருந்தாலும் அப்போதுமட்டும் ஷை குமாஸ்தா வக்கீலிடத்தில் வரலாம்.

சுச. பீசுக்காக வியாச்சியம்செய்த வக்கில் அந்தப்பீசு கிடைக்க

வேண்டியதை ருஜுப்படுத்தவேண்டுமேதவிர அந்தப்பீசு செல்லாய்விட்டதாகப் பிரதிவாதி ருஜுப்பிக்கத் தப்பிப்போனதைக்கொண்டு வெடி வக்கீல் கட்சிக்கு யாதொருசாதகமும் உண்டாகமாட்டாது. (கஅருசுவ்ப-ச-தீ-ப-சங.)

கட்சி-ரு.....	செலவு-சு-கஉ-கங-கச-கரு-ககு-
கவர்ன்மென்று வக்கீல்-கூ.....	கள-கஅ.....
சாம்பர்ட்டி-ரு.....	பாப்பர்-அ.....
	புகர்விமரிசை-ச.....

இவைகளைப்பார்க்க.

வடகலை.

ஆலயம் ச-வது விதியைப்பார்க்க.

வட்டி.

க. ஒருவன் ஒற்றிவாங்கி அநுபவிக்கிற ஸ்வத்தின் வருமானம் கிரமமான வட்டிக்குக் குறைவாயிருந்தால் அந்த வருமானத்தில் அசல்தொகையைக் கழிக்கக்கூடாது. வட்டிக்குப்பதிலாய் நிலத்தின் வருமானத்தை அநுபவிக்கிறவன் அந்த வருமானம் கிரமமானவட்டிக்குக் குறைந்திருந்தாலுங்கூட, அந்த வருமானத்துக்கு மேல் அதிகவட்டி கிடைக்கவேண்டுமென்று தொடரக்கூடாது. (கஅசளவ்)-நம்-சூ0.)

உ. பத்திரத்தின்தொகையைக்கொடுக்கும்படி பிரதிவாதியை வாதி கேட்கவில்லை என்கிறநியாயத்தினால் பத்திரத்திற்கண்ட வட்டியை நீக்கித் தீர்ப்புச்செய்வது நியாயமம். (கஅசஅவ்ப-நம்-சச.)

ங. பத்திரத்தில் வட்டிகாணுமல் இருந்தபோதிலும், கஅஙசூவ்ப ஙஉ-வது ஆக்ட்டுப்படி வட்டி கொடுக்கும்படியாவது அல்லது வட்டியைத் தள்ளியாவது கோர்ட்டார் யுக்தப்பிரகாரம் தீர்ப்புச்செய்யலாம். (கஅருகவ்ப-நம்-அங-கஅருஉவ்ப-நம்-க.)

ச. வட்டிசேர்ந்து அசலானதொகைக்குப் புதுப்பத்திரம் பிறந்திருந்தால் அந்தத்தொகைக்கு வட்டி கிடைக்கவேண்டியதுதான்.

(கஅஉசஎவ)-நம்-உ - கஅருஉவப-நம்-க - கஅருஙவப - நம்-ருங - கஅசஅ0வ)-நம்-எகரு-கஅசஅகவப-ப-கூஎ.)

ரு. வாதி பிரியாதில் வட்டிகேட்காமலே பிசகாய் விட்டுவிட்டான். பிரியாதின் தலைக்காகிதக்கிரயம் அசலுக்கும் வட்டிக்கும் சரிக்கட்டியிருந்ததால் வாதிக்கு வட்டியும் கிடைக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅருஙவப-நம்-கூ0)

கூ. அ-என்பவன் இ-என்பவனுக்குக் கொடுக்கவேண்டியகடனை உ-என்பவனுடைய தலைடியிலில் கொடுக்கத் தாமசப்பட்டபடியால் உ-என்பவன் இ-என்பவனுக்கு வட்டி கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. (கஅஉரு வப)-நம்-அ.)

எ. வட்டிக்குவட்டி கொடுக்கும்படி தீர்மானிக்கக் கூடாது. (கஅருஅவ)-நம்-ஙஅ.)

அ. வட்டிகண்ட பத்திரத்திற்காகச் செலுத்தப்படும் தொகைகள், வரவேண்டிய வட்டிக்குமேல் அதிகப்படாமல் இருந்தால், அந்தத் தொகைகளை வட்டிக்காக வரவுவைக்கவேண்டிய அல்லாமல் அசலுக்காக வரவுவைக்கக்கூடாது. ஆனால் பத்திரில் அசலுக்காகவே வரவுவைக்கிறதென்று நிபந்தனை குறிப்பிட்டிருந்தால் அந்தப்படி அநுஷ்டானம் செய்யவேண்டும். (கஅஉஅவப-நம்-உ-கஅசஅவ)-நம்-கஅ.)

கூ. வட்டிசெல்லாமல் பாக்கியிருந்தால்மட்டும் அசலுக்கு மேற்பட்ட வட்டி கொடுக்கும்படி தீர்ப்புச்செய்யக்கூடாது. ஆனால் வட்டிக்காகத் தொகை செல்லாயிருந்தால் அந்தச் செல்லாதொகைக்குமேல் அதிகமாக அசலுக்குச் சரியானவட்டி கொடுக்கும்படி தீர்மானிக்கலாம். (கஅசஅவ)-நம்-கஅ.)

க0. வியாஜியாரம்டகாலம்வரையில் தனது விருணத்துக்குமேல் வட்டி கொடுக்கக்கூடாதென்றும், வியாஜியத்தீதுதிக்குப் பிற்பாடு அசலுக்குமட்டும் வட்டி கொடுக்கும்படியாகவும் தீர்மானிக்கப்பட்டது. (கஅருஅவ)-நம்-களஉ.)

கக. அ-என்பவன் செய்த வியாஜிய நிமித்தம் இ-என்பவன் உ-என்பவனுக்குக் கொடுக்கவேண்டியகடன் செலுத்தப்படாமல் தாமசப்பட்டபோதிலும் அப்படித் தாமசப்பட்டகாலத்துக்குள்ள வட்டிக்கு அ-என்பவனைப் பாத்தியப்படுத்தக்கூடாது. (கஅருஅவ)-ப-கூஎ.)

கஉ. தனது விருணைத்திற்குமேல் வட்டி கொடுக்கக்கூடாதென்கிற விதி கூட்டுவியாபாரத்தில் சேரிட்ட கடன்களுக்குக்கூட உபயோகமானதுதான். (கஅரு0வரு0-நம்-சு0.)

கஊ. அநுபோகஞ் ஏற்றிக்காரனுக்குக் கிடைக்கப்பட்ட வருமானம் பத்திரத்திற்கண்ட கிரமமான வட்டிக்குக் குறைவாயிருந்தால் அந்த வருமானத்தை வட்டிக்காகமட்டும் வரவுவைக்கவேண்டும். அந்த வருமானத்துக்கு எதிர்வாட்டியும் இல்லை. கிரமமானவட்டிக்குமேல் அதிகவருமானம் ஏற்றிக்காரனுக்குக் கிடைத்தால்மட்டும் அதை அசலுக்காகவும் வரவுவைக்கலாம். (கஅசஎவ-நம்-சுக.)

கஎ. வாதி ஒருநிர்ப்பணைக் கிரயம்வாங்கி அதை நிரூபிக்கும்படி வியாஜ்ஜியம்பண்ணிக்கொண்டான். அந்தக்நிர்ப்பின்தொகை முன்னமே சொல்லுபடியானதாகப் பிரதிவாதிகள் சொன்ன ஆட்சேபம் பொய்யானதென்று நிஷ்கர்ஷம் செய்யப்பட்டது. பிரதிவாதிகளுடைய தராட்சேபனையில் சேரிட்ட காலதாமசத்திற்கு வட்டி கொடுக்கவேண்டுமென்று வாதி வியாஜ்யம்பண்ணினான். வாதி எங்கந்தர்ப்பணைக் கிரயம்வாங்கினதை அந்தந்நிர்ப்பில் வட்டிகாணுமல் இருந்துவருகிறபடியால் பிரதிவாதிகளுடைய விருப்பம் ஆட்சேபனையில் நிர்ப்பு நிரூபிக்கும்படி காமசப்பட்டகலெந்திற்கு அவர்கள் வாதிக்கு வட்டி கொடுக்கும்படி நிர்மானிக்கப்பட்டது. (கஅசூஅவ-நம்-கூ-ப-கஅசூ.)

கஏ. கோர்ட்டார் யுக்தப்படி வட்டி கொடுக்கும்படி தீர்ப்புச் செய்யும் அல்லது வட்டியைத் தள்ளிவிடும் அவர்களுக்கு அதி காரம் உண்டாயிருப்பதால் அந்தவிஷயத்தில் ஒரு கோர்ட்டார் செய்த நிர்மானத்தை விசேஷ அப்பீலில் மாற்றக்கூடாது. (கஅசூ0வரு)-நம்-கஉ0-ப-உஉஅ.)

கஐ. மிராசுதார்களுக்குக் கிடைக்கவேண்டிய வாரம் பகுதிமுதலான வருமானங்களின் பாக்கிக்கு வட்டி கிடைக்கவேண்டியது நியாயந்தான். (கஅசுகூவரு)-நம்-க.)

கக. பத்திரத்திற்கண்ட குறைவானவட்டி கெடுவின்காலம்வரையில்மாத்திரம் உபயோகமானதால், கெடுவில் வாதிக்குப் பிரதிவாதி தொகை செலுத்தத்தப்பிப்போகிறபட்சத்தில், வழக்கப்படி கிரமமானவட்டி வாதிக்குக் கிடைக்கவேண்டியது நியாயம். (கஅசுக வரு)-நம்-கூ-ப-கஙூச.)

கஅ. வட்டியைப்பற்றி உபயவாதிகளும் ஏற்பாடுசெய்துகொள்ளாமல் இருந்தபோதிலும் கஅருருவு) உஅ-வது ஆக்ட்டு உ-வது பிரிவுப்படி வாதிக்குப் பிரதிவாதி வட்டி கொடுக்கும்படி கோட்டார் தீர்மானம்செய்யலாம். (கஅருகூவு)-நம்-அக-ப-கசூஉ.)

ஜீவநாம்சம் ச-வது விதியைப்பார்க்க.

வலங்கை இடங்கை.

ஜாதி க-வது விதியைப்பார்க்க.

வழக்கு.

பிரியாதைப்பார்க்க.

வழிப்பாதை.

க. நடக்கிற வழிப்பாதையை அனைடத்தவன்மேல் அதனைப் அது சௌக்கியத்தை அனைடந்தவன் வியாஜ்யம் செய்யலாம். (கஅருஅவு-ப-கருரு.)

உ. சுஉ-வருஷகாலம் சகலஜனங்களுக்கும் வழிப்பாதையாக உபயோகப்படுகிறநிலம் தனக்குப் பூர்வீகமென்று எவனுவது வியாஜ்யம்செய்தால் செல்லாது. (கஅருகூவு)-நம்-கஙூ-ப-உசூஉ.)

ங. ஒருவன் சங்கீதமேளவாத்திய கோலாஹலனுய், சிஷியகோஷ்டீசமேதனுய், வாகனருடனுய்த் தெருவீதியில் போவதற்கு யாதொரு ஆடங்கம் இல்லை. அவன் சில வருஷகாலம் ஒரு தெருவீதி வழியாய்ப் போகாவிட்டபோதிலும் அவனுக்கு இஷ்டமானபோது நிர்விக்நமாய் அவன் அந்தவீதிவழியாய்ச் சாரிபோகலாம். (கஅருஎவு)-நம்-கசக.)

ச. பொதுவான சந்தின் பாத்தியத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியதற்காக நிராடங்கமாக யாதொருவன் வியாஜ்யம் கொண்டுவரலாம். (ஷை.)

வளர்ப்புப்புத்திரன்.

பாத்தியம் கஎ-வது விதியைப்பார்க்க.

வாதம்.

கூட்சியைப்பார்க்க.

வாய்க்கால்.

க. பிரதிவாதியின் வாய்க்கால் மண்ணை அவன் வாதி வாய்க்கா லில் போடாதபடி தடைசெய்யவேண்டுமென்று வாதி வழக்கிட் டான். தன்னுடைய வாய்க்கால் ஓரமாக வாதி வாய்க்கால் வெட்டி யிருப்பதால் அவனுடைய வாய்க்காலில் தன்னுடைய வாய்க்கால் மண்ணைக்கொட்டும்படி சம்பவித்திருப்பதாகவும் மண்கொட்ட அ தைத்தவிர வேறே ஸ்தாநம் இல்லையென்றும் பிரதிவாதி சம்வாதித் தான். அந்தக்கட்சி தர்க்கட்சியென்றும் பிரதிவாதி அவனுடைய வாய்க்காலில் மண்ணைக் கொட்டிக்கொள்ளவேண்டுமென்றும் தீர் மானிக்கப்பட்டது. (கஅருசுஅவ-நம்-கடக-ப-உகள.)

அப்பீல்-நி-வது விதியைப்பார்க்க.

விசாரணைக்கர்த்தன்.

க. ஜாமீன்தாரி முதலான ஸ்திதிகளை மேல்விசாரணைசெய்கிறவன் அந்த ஸ்திதிகளின்மேல் பொருத்திருக்கிற நியாயமான கடன்களை ஒப்புக்கொண்டு தொகை செலுத்தினால்மட்டும் செல்லுமேதவிரக் காலாதிக் கிரமணதோஷத்தினால் பிடிக்கப்பட்டு ஜீவலயமாய்ப் போன கடன்களுக்காக வேறே விசாரணைக்கர்த்தன் தொகைசெலுத்தி அனைகள் உற்பத்திக்கும்படிசெய்ய அவனுக்கு அதிகாரம் இல்லை. அவனுடைய அவ்விதமான செய்கையினால் வேறே கடன்களுக்குப் பிராதீவம் உண்டாகமாட்டாது. (கஅருசவ-நம்-கூக.)

உ. தகுமான வயதில்லாத பாலனுடைய ஸ்வத்தை மேல் விசா ரணைசெய்கிறவன் அந்த ஸ்வத்தின் வருமானத்துக்குள்ளடங்கிச் செலவுசெய்யவேண்டும். (கஅசளவ-நம்-நிகூ.)

ஈ. விசாரணைக்கர்த்தன் பாலனுடைய ஸ்வத்தை விருதாவாய் விநியோகம் செய்தாலும் அல்லது அந்தப்பாலன் வியர்த்தச்செலவு செய்யும்படி விசாரணைக்கர்த்தன் இடங்கொடுத்தாலும், அதுமூல

மாக விசாரணைக்கர்த்தனுக்கு நேரிட்ட செலவு தொகை மறுபடியும் அவனுக்குக் கிடைக்கமாட்டாது. (கஅசளவுநம்-நம்-நுசு.)

குடும்பவிசாரணை-ச ..... | சாட்சியம்-ச ....

இவைகளைப்பார்க்க.

விசேஷ அப்பீல்.

க. விவாத நிலம் நூறும் நிலமானதால் அது கோர்ட்டாருடைய அதிகாரத்துக்கு உட்பட்டதல்லவென்று விசேஷ அப்பீல் மனுவில் பிரதிவாதிகள் ஆட்சேபித்தார்கள். அந்த ஆட்சேபனை தாழ்ந்த கோர்ட்டுகளில் சொல்லப்படாதபடியாலும் சுவர்மென்முறால் கொடுக்கப்பட்ட நிலம் என்பதை வாதி ஒப்புக்கொள்ளாதபடியாலும் பிரதிவாதிகளின் ஷ ஆட்சேபம் செல்லாதென்று நிச்சயிக்கப்பட்டது. (கஅநகவ)-நம்-ககo-கஅஉo(வ)-ப-சஉ.)

உ. ஒருதரம் பாகம் நடந்து ரத்தாய்ப்போனதால் அவிபக்த குடும்பஸ்திதியில் பாகம் பிரிக்கவேண்டுமென்று வாதி செய்த வழக்கில் அவன் கேட்டுக்கொள்ளுறபடி பூர்வபாகம் பிரிக்கத்தக்கதில்லையென்று கீழான கோர்ட்டுகளில் நிர்மானிக்கப்பட்டபின்பு, ஒருதரம் நடந்து ரத்தாய்ப்போனதாக வாதி பிரியாதிருக்கவேண்டபடி கவிதாயகப்படி ஸ்திதி பிரிக்கவேண்டுமென்று அவன் விசேஷ அப்பீலில் பேசக்கூடாது. (கஅநகவ)-நம்-நுக-கஅசo(வ)-ப-நுச.)

ங. அசல் அப்பீல்க்கோர்ட்டுகளில் பேசப்படாதபடியும் அந்தக் கோர்ட்டுகளில் கொடுக்கப்பட்ட வியவகாரப்பத்திரிகைகளுக்கு சேர் விரோதமுமான சட்சியை விசேஷ அப்பீலில் சொல்லக்கூடாது. (கஅசo(வ)-நம்-ஙக-சo-நo-எஉ-ப-கஉங-கஙஅ-உoக.)

ச. வாதி கட்சியை ருஜுப்படுத்தும்படி அசல்க்கோர்ட்டார் அவனுக்குப் பைண்டு கொடுக்கவில்லையென்பதை அவன் அப்பீல்க் கோர்ட்டில் விக்ஞாபிக்கவேண்டும். அப்பீல்க்கோர்ட்டில் அவன் தெரியப்படுத்தத்தப்பிப்போனால் விசேஷ அப்பீலில் ஷ ஆட்சேபனையை வாதி தெரியப்படுத்தக்கூடாது. (கஅசo(வ)-நம்-ஙக-ப-கஉங.)

ஞ. வேறொரு வியாஜியத்தில் தாக்கலாயிருக்கிற தஸ்தாவேஜின் ஆதாரத்தைக்கொண்டு அசல்க்கோர்ட்டார் ஒரு வியாஜியத்தில் தீர்

மானம் செய்திருந்து அதைப்பற்றிப் பிரதிவாதி அப்பீல்க்கோர்ட்டில் ஆட்சேபிக்கத் தப்பிப்போய்விட்டால் அந்த ஆட்சேபனையை விசேஷ அப்பீலில் அங்கீகரிக்கக்கூடாது. (க அகூ0வ(நி)-ந்ம்-க0நி-ப-கசக.)

ஈ. பிரதிவாதிகளில் ஒருவனைப் பாத்தியப்படுத்தாமல் அசல்க் கோர்ட்டார் நீக்கிவிட்டதைப்பற்றி வாதி அப்பீலில் ஆட்சேபிக்கத் தப்பிப்போனால், விசேஷ அப்பீலில் அவன் அந்த ஆட்சேபனையைச் சொல்லக்கூடாது. (க அகூ0வ(நி)-ந்ம்-கஉள-ப-ககூ0.)

அபராதம்-உ-ப	செலவு-உள ....
அப்பில்-ஈ	புகர்விமரிசை-கூ ....
ஈரயம்-கஉ	வட்டி-க(நி) .....

இவைகளைப்பார்க்க.

விபக்தர்கள்.

கடன்-க(நி)	ஸ்ரீவராம்சம்-உஉ .....
கடன் பத்திரம்-ஈக	

இவைகளைப்பார்க்க.

விபாகம்.

பாகத்தைப்பார்க்க.

வியவகாரபாத்திய விக்கிரயதோஷம்.

சாம்பர்ட்டியைப்பார்க்க.

வியாயம்.

பிரியாதைப்பார்க்க.

விவாஹம்.

க. ஒரு சூத்திரன் கல்லியாணம் செய்துகொள்ளுகிற ஸ்திரீயினுடைய மாதா பிதாக்களுக்கு யாதொன்றும் கொடாமல் அவன்

பிராம்மியவிவாஹம் செய்துகொள்ளலாம். (கஅருஅவுவ - நம்-கசுஙூ-கஅருசுவுவ-ப-சச.)

உ. சூத்திரர்களுக்குள் நடக்கிற விவாஹங்கள் ஆசுரவிவாஹங்கள் அல்லவென்று ஸ்தாபிக்கப்படுகிறவனாயில் அவைகள் ஆசுரவிவாஹங்களென்றே ஊஹிக்கப்படவேண்டும். (கஅருசுவுவ-நம்-கசஅ.)

ஊ. புருஷனுடைய சபிண்டாள் பத்திநிக்கும் சபிண்டாளா யிருக்கிறார்கள். (ஷை.)

ச. முதற்பிரதிவாதியின் மகளை வாதிக்கு விவாஹம்செய்வதாக முதற்பிரதிவாதி வாக்குதத்தம்செய்ததனால் முதற்பிரதிவாதிக்குத் தான் சில பெருமதிகள் கொடுத்ததாகவும் பிற்பாடு முதற்பிரதிவாதி அவனுடையமகளை ச-ம் பிரதிவாதிக்கு விவாஹம்செய்துவிட்டதால் ஷை பெருமதிகளின் கிரயம்மிடைக்கவேண்டுமென்றும் வாதிவழக்கிட்டான். முகூர்த்தத்தினத்தில் கல்லியாணவீட்டுக்கு வாதிபோகாமல் இருந்துவிட்டதாகவும் அதனால் ஷை நிச்சிதார்த்தம் தவறிப்போனதாகவும் ருஜு-வானதால் வாதிக்கு ஷை தொகை கிடைக்கமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. (கஅசுஂவுவ.)

ஹிந்துக்கள்.

அங்கிய மதப்பிரவேசம்-உ..... | குடும்பவிசாரணை-ங.....

இவைகளைப்பார்க்க.

முற்றிற்று.